# இல்வாழ்க்கை

டாக்டர்
மா. இராசமாணிக்கனர்

# இல்வாழ்க்கை

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனுர்
M.A., L.T., M.O.L., Ph.D.
தமிழ்த்துறைத்தலைவர், தியாகராசர் கல்லூரி,
மதுரை.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1

முதற் பதிப்பு—அக்டோபர், 1957

முழுவுரிமை ஆசிரியருக்கே.

விலை ரூ. 3·00

Kabeer Printing Works, Madras (3665)

# முகவுரை

இல்வாழ்க்கை என்னும் பெயர்கொண்டு வெளிவரும் இந்நூல், தமிழ் நூல்களேயும் நாட்டு நடப்புக்களேயும் குடும்ப அநுபவத்தையும் அடிப்படையாகக்கொண்டு எழுதப் பெற்றது.

தமிழ்மக்கள் சங்ககாலத்தில் எவ்வாறு இல்வாழ்க்கை நடத்தினர், இடைக்காலத்தில் எப்படி இல்லறம் நடத்தினர், பிற்காலத்தில் எங்ஙனம் இல்வாழ்க்கை நடத்தினர், மக்கட்பேற்றைப் பற்றித் தமிழ் நூல்கள் கூறும் செய்திகள் யாவை என்பன தமிழ் நூல்களேக் கொண்டு இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இன்பத்தைத் தரவேண்டும் இல்வாழ்க்கை என்னென்ன காரணங்களால் இருண்ட வாழ்க்கையாக மாறுகின்றது என்பதை நாட்டு நடப்புக்களேக் கொண்டு ஐந்தாம் பகுதி விளக்குகிறது. கணவனும் மனேவியும் இல்வாழ்க்கையை எவ்வாறு இன்ப வாழ்க்கையாக மாற்ற முடியும் என்பதை ஆரும் பகுதி அழகுறத் தெரிவிக்கின்றது.

ஆணும் பெண்ணும் இணேந்து வாழும் வாழ்க்கையே இல்வாழ்க்கை. அவ்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இருத்தல் வேண்டும் என்பதை விரும்பாதார் இரார். அங்ஙனம் விரும்புவோர்க்கு இந்நூல் நன்னூலாகும்.

மா. இராசமாணிக்கனர்

# உள்ளுறை


பக்கம்

I. இல்வாழ்க்கை—சங்ககாலம்
1. சங்ககாலக் கல்விநிலை ... 1
2. களவு மணம் ... 8
3. கற்பு மணம் ... 15
4. வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை ... 24
5. கண்ணகி இல்வாழ்க்கை ... 42
6. ஆதிரை ,, ... 53

II. இடைக்காலம்
1. வளையாபதி முதலியவற்றில் இல்வாழ்க்கை ... 58
2. பெருங்கதையில் இல்வாழ்க்கை ... 61
3. நாயன்மார் இல்வாழ்க்கை ... 68
4. சிந்தாமணியில் இல்வாழ்க்கை ... 82
5. பின்னூல்களில் இல்வாழ்க்கை ... 89
(1) யசோதர காவியம்
(2) கம்பராமாயணம்

III. பிற்காலம்
1. திருவிளையாடற் புராணத்தில் இல்வாழ்க்கை ... 98
2. வில்லிபாரதத்தில் இல்வாழ்க்கை ... 103
3. பிற்கால நூல்களில் இல்வாழ்க்கை ... 114

IV. கற்புடை மகளிர் ... 124

V. மக்கட்பேறு ... 128

VI. இருண்ட இல்வாழ்க்கை ... 137

VII. இன்ப வாழ்க்கை ... 175

# இல்வாழ்க்கை

# I. சங்க காலம்
(கி. மு. 300—கி. பி. 300)

## 1. சங்ககாலக் கல்விநிலை

**சங்க நூல்கள்**

இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் சங்காலத் தமிழகம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அக்காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தரால் ஆளப்பட்டு வந்தது. இம்மூவேந்தர்க்கு உட்பட்ட குறுநில மன்னர் ஆங்காங்கு இருந்து தத்தமக்குரிய குறுநிலப் பகுதிகளை ஆண்டுவந்தனர். அப்பரந்துபட்ட காலத்தில் எண்ணிறந்த புலவர் பாடிய பாடல்கள் பலவாகும்; செய்த நூல்கள் பல. அவற்றுள் அழிந்தன போக, எஞ்சி இருப்பன **சங்கநூல்கள்** என்று இக்காலத்தில் கூறப்பெறுகின்றன. அவை தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன.

**தொல்காப்பியம்** என்பது பெரிய இலக்கண நூல்; ஏறத்தாழ 1600 சூத்திரங்கள் கொண்டது; எழுத்து—சொல்—பொருள் என்ற மூன்று பிரிவுகளைப் பற்றிப் பேசுவது. பொருள் என்னும் பிரிவில் இல்வாழ்க்கை பற்றிப் பேசப்படுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் 'பொருள்' என்னும் பிரிவில் பேசப்படுகின்றன.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்

பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத் தொகை நூல்கள். இவற்றுள் ஒவ்வொன்றும் புலவர் பலரால் பாடப்பெற்ற பாக்களைக் கொண்டது. இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங் குறுநூறு, அகநானூறு, கலித்தொகை என்பன இல்வாழ்க்கை பற்றிய நூல்கள். சங்ககாலத் தமிழர் எவ் வாறு மணந்து கொண்டனர், எங்ஙனம் இல்வாழ்க்கையை நடத்தினர் என்பன போன்ற செய்திகளை இந்நூற் பாக்கள் தெளிவுறுத்தும்.

சேரநாட்டு இளவரசரும் துறவியுமாகிய **இளங்கோ வடிகள்** என்பவர் கி. பி. 2-ஆம் நூற்ருண்டில் **சிலப் பதிகாரம்** என்ற காவியத்தை இயற்றினர். அக்காவியத் தலைவியாகிய **கண்ணகி** நடத்திய இல்வாழ்க்கையும் அவளது கற்பின் சிறப்பும் அந்நூலிற் பரக்கக் காணலாம். அதே நூற்ருண்டில் **மணிமேகலை** என்னும் காவியம் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர் என்பவ ரால் பாடப்பெற்றது. அதனிலும் இல்வாழ்க்கை பற்றிய செய்திகள் பேசப்படுகின்றன.

சங்ககாலத்தில் செய்யப்பெற்ற **திருக்குறள்** ஈடும் எடுப்பும் இல்லாதது. இது மனிதனது வாழ்க்கைக்கு அடிப்படையான நூல்; பிறந்த ஒருவர் கல்விகற்றல், அலுவல் பரர்த்தல், இல்வாழ்க்கை நடத்தல், சமுதாயத் திற் பழகுதல், அறநெறியில் நடத்தல் முதலிய வாழ்க் கைக்கு இன்றியமையாத எல்லாவற்றைப் பற்றியும் பேசுவது. இந்நூற் செய்திகள் எல்லா நாட்டவர்க்கும் உரியவை. அதனற்ருன் இந்நூல் பலநாட்டு மொழி களிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த வாழ்க்கை நூலைச் செய்தவர் **திரு வள்ளுவர்** என்ற பெரியார். இந்நூலின் சிறப்பினை நன்குணர்ந்தே காலஞ்சென்ற **பாரதியார்,**

> " வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு "

என்று போற்றுவாராயினர். இப்பெரு நூலிலும் "இல்லற வியல்" என்னும் தலைப்பில் பல அதிகாரங்கள் இல்வாழ்க் கையைப் பற்றிப் பேசுகின்றன.

இதுகாறும் கூறப்பெற்ற சங்க நூல்களில் உள்ள இல் வாழ்க்கை பற்றிய செய்திகளை ஒவ்வொன்றாகக் காண் போம். இவற்றைக் காண்பதற்கு முன்பு, சங்ககாலத் தமிழகத்தில் கல்வி எவ்வாறு பரவியிருந்தது என்பதை இங்கு அறிதல் நலம்.

### கல்வி பற்றி நெடுஞ்செழியன்

பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலன் காலத்தவன்; பெரும்புலவன்; சிறந்த ஒழுக்கம் உடையவன். அவன் கல்வியின் இன்றியமையாத நிலையை நன்கு உணர்ந் திருந்தான்.

"ஒரு தாய் தான் பெற்ற மக்கள் பலருள்ளும் கல்வியாற் சிறந்தவனையே பெரிதும் விரும்புவாள். ஒரு குடும்பத்தில் பலர் இருப்பினும் அவருள் கல்வியாற் சிறந்தவனையே அரசனும் அறிவுரை கேட்க அழைப்பான். சமுதாயத்தில் கல்வியாற் சிறந்தவன் தாழ்ந்தவனாக இருப்பினும், சமுதாயத்தில் உயர்ந்தவர், அத்தாழ்ந்தவ னிடமே யோசனை கேட்பர். ஆதலால் ஒவ்வொருவரும் எப்பாடு பட்டாயினும் கல்வி கற்றல் நல்லது," என்பது நெடுஞ்செழியன் வாசகம். இதனால் தெரிவது யாது? கற்றவன் வீட்டிலும் சமுதாயத்திலும் நாட்டிலும் போற்றப் படுவான் என்பதே நெடுஞ்செழியன் கருத்தாகும். இங் ஙனம் கல்வியின் தேவையை வற்புறுத்திய தமிழ் வேந்தர் ஆட்சியில் கல்விக்குறை ஏற்பட இடமில்லை அன்றோ?

### சங்ககாலக் கல்வி

இன்று கிடைத்துள்ள சங்கப் பாக்களைப் பாடிய புலவர் ஏறத்தாழ நானூற்றுவராவர். இன்றுள்ள இலக்கண நூல்களுள் காலத்தால் பழமை வாய்ந்தது **தொல்காப்பியம்.** அஃது ஏறத்தாழ 2,300 ஆண்டுகட்கு

முற்பட்டது. அதனைச் செய்த தொல்காப்பியர் தம் சம காலத்தவராகவும் தமக்கு முற்பட்டவராகவும் இலக்கண ஆசிரியர் பலர் இருந்தமையைப் பல இடங்களில் குறித்துள்ளார். இதனை நோக்க, தொல்காப்பியருக்கு முன்னரே இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர்—அவர் காலத்திலும் பலர் இருந்தனர்—இலக்கண நூல்களும் பல இருந்தன— என்னும் உண்மை வெளிப்படுகின்றது.

தொல்காப்பியத்திற்கு அடுத்தது திருக்குறள். இஃது எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் பாடல்கள் பலவற்றுக்குக் காலத்தால் முற்பட்டது. இதனைச் செய்த திருவள்ளுவர் கல்வியை நன்கு வற்புறுத்தியுள்ளார்; கேள்வி அறிவையும் நன்கு வற்புறுத்தியுள்ளார்.

" நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு "

என்னும் குறளால் தம் காலத்தில் நூல்கள் பல இருந்தன என்பதையும், அவற்றைப் படிப்பவர் பலர் இருந்தனர் என்பதையும் மறைமுகமாகக் குறித்துள்ளதைக் காணலாம். ஒருவன் சாந்துணையும் கற்கவேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.

திருவள்ளுவர், பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற பெருமக்களது அறிவுரையால் சங்ககாலத் தமிழகம் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியது. சேர, சோழ, பாண்டியர் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர்; இயற்றமிழில் வல்ல புலவரையும் இசைத் தமிழில் வல்ல பாணரையும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரையும் தம் உயிர் போலப் பாதுகாத்து முத்தமிழையும் முறையாக வளர்த்தனர். தொண்டைமான் இளந்திரையன் போன்ற சிற்றரசர் முறையாகக் கற்றுத் தமிழ் புலமை பெற்றனர்; தம்மை நாடி வந்த முத்தமிழ் வாணர்க்குப் பொன்னையும் பொருளையும் வழங்கி மகிழ்ந்தனர்.

நெல், வரகு, சாமை முதலிய தானிய வகைகளை

விற்று வந்த கூலவாணிகரும், மருத்துவத்தொழில் செய்து வந்தவரும், பொன் வாணிகரும், கொல்லத் தொழிலில் ஈடுபட்டவரும் பிறரும் பைந்தமிழைப் பாங்குறக் கற்றுக் கவிபுனையும் ஆற்றலும் காவியம் செய்யும் வன்மையும் பெற்றுத் திகழ்ந்தனர்; மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர், மருத்துவன் தாமோதரனர், கொல்லன் அழிசி முதலிய சங்ககாலப் புலவர் பெயர்களே இவ்வுண்மையை எடுத்துக்காட்டும்.

### சங்ககாலப் பெண் கல்வி

சமுதாயத்தில் ஆடவர் மட்டும் படித்திருப்பின் பயனில்லை. ஆடவர் பெண்டிர் ஆகிய இருதிறத்தாரும் சேர்ந்ததே சமுதாயம். இருபாலரும் சேர்ந்து நடத்துவதே வாழ்க்கை. இவருள் ஒருவர் கல்வியால் அறிவு விளக்கம் பெற்று, மற்றவர் கல்வி கல்லாதிருப்பின், இவ்விருவரும் சேர்ந்து நடத்தும் வாழ்க்கை துன்ப வாழ்க்கையாகவே காட்சி அளிக்கும். இருவரும் கல்வியால் அறிவு விளக்கம் பெற்று நடத்தும் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக விளக்கமுறும்.

சங்ககாலத் தமிழ் மக்கள் இவ்வுண்மைய்யை நன்குணர்ந்தவர்; ஆதலின் தம் பெண்டிரை நன்கு கல்வி கற்க விட்டனர். இன்றுள்ள உயர்ந்த சாதிகளும் தாழ்ந்த சாதிகளும் சங்ககாலத்தில் இல்லை. அக்காலத்தில் மக்களாய்ப் பிறந்தவர் அனைவரும் சமவுரிமையோடு சமுதாயத்தில் பழகி வாழ்ந்தனர். ஆதலால் எல்லோரும் கல்வி கற்க வசதியிருந்தது. அவ்வசதியால் அரசமாதேவி முதல் குறப்பெண் ஈருகச் சமுதாயத்தில் இருந்த எல்லாப் பெண்களும் எவ்வித வேறுபாடுமின்றிக் கல்வி கற்றனர்.

பாண்டியன் பட்டத்தரசி, பாரி என்ற சிற்றரசன் பெண்கள், குயத்தி, குறத்தி, பாடினி, வேட்டுவச்சி முதலிய பல நிலைப் பெண்மகளிரும் செய்யுள் புனைந்து

சிறப்புப்பெற்றனர் என்பது சங்கப் பாக்களால் அறியக் கிடக்கிறது. மறவர்குலப் பெண்கள் பாடிய பாக்கள் பல. வளமனையைக் காத்த காவற் பெண்டின் பாடல் உள்ளத்தை உருக்குவதாகும் :

"எனது சிறிய வீட்டிலுள்ள தூணைப்பற்றிக் கொண்டு, 'உன் மகன் எங்கே சென்றிருக்கிறான்?' என்று கேட்கின்றாய். புலி இருந்து சென்ற குகையைப்போல அவனைப் பெற்ற வயிறு இது. அவன் போர்க்களத்தில் காணப்படுவான்," என்னும் கருத்துப்படக் காவற் பெண்டு பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் காணப் படுகின்றது. இப்பாடலைக்கொண்டு, அப்பெருமகளது புலமைத்திறனையும் வீரவுணர்ச்சியையும் நன்கு உணர லாம் அல்லவா ?

**ஔவையார்** என்ற பாண்மகளார் அதியமான் நெடு மானஞ்சி என்ற சிற்றரசனிடம் அவைப்புலவராக இருந் தார். அவர் அவனுடன் போர்க்களம் சென்று, அவனுக்கு வேண்டும்பொழுது அறிவுரையும் வீரவுணர்ச்சியும் ஊட்டினார் ; அவன் பொருட்டுக் காஞ்சியை ஆண்ட தொண்டைமானிடம் அரசியல் தூதராகச் சென்று இரு வருக்கும் நடக்க இருந்த போரைத் தடுத்தார். நிறைமதி யுடைய பெண்மணிகள் அரசியல் வானத்திலும் கொலு வீற்றிருந்தனர் என்பதைத் தெரியப்படுத்த இவ்வரலாறு சான்றாகும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இலக் கணம் ஐவகைப்படும். இவற்றுள் யாப்பு (செய்யுள்) இலக்கணம் செய்தல் கடினமானது. இச்செய்யுள் இலக்கண நூல்களைப் பெண்பாற் புலவர் இருவர் சங்க காலத்திற் செய்து பாராட்டுப்பெற்றனர். ஒருவர் **பெருங் காக்கை பாடினியார்** ; மற்றவர் **சிறு காக்கை பாடினி யார்**. பெருங்காக்கை பாடினியார் தொல்காப்பியர் காலத் தில் வாழ்ந்த பெருமாட்டியார். "தொல்காப்பியர் முத லான ஒரு சார் ஆசிரியர் இங்ஙனம் கூறுவர். பெருங்

காக்கை பாடினியார் முதலிய மற்ருெரு சார் ஆசிரியர் இங்ஙனம் கூறுவர்,'' என்று உரையிற் காணப்படுதலால், பெருங்காக்கை பாடினியார் இலக்கண உலகத்தில் பெற்றிருந்த சிறப்பை நாம் எளிதில் உணரலாம். உலகத்தில் இன்று பேசப்படும் மூவாயிரத்துச் சில்லறை மொழிகளில் யாப்பிலக்கணம் செய்த பெண்பாற் புலவரைக் காண்பது அருமையிலும் அருமை!

சங்ககாலப் பெண்கள் உலகம் கல்வி கேள்விகளினுல் சிறந்து விளங்கியது என்பதற்குச் சங்க நூல்களில் பல சான்றுகள் உண்டு. புலமை பெற்ற பெண்மணிகள் தமிழகம் முழுவதையும் சுற்றித் திரிந்தனர்; நெடுநில மன்னரையும் குறுநில மன்னரையும் நேரிற் கண்டு, தமது புலமைத்திறனுல் அவர்களை மகிழ்வித்தனர்; மன்னர் அப் பெருமாட்டிகளுக்குச் சரியாசனம் அளித்துச் சிறப்பித்தனர்; பொன்னையும் பொருளையும் வழங்கி மகிழ்ந்தனர். இப்பெண்பாற் புலவருள் ஒருவர் கொற்கையைச் சூழ்ந்த மாறோக்கம் என்ற நாட்டினர்; நப்பசலையார் என்ற பெயரினர். அப்பெருமாட்டியார் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவராக இருந்தும், பல நாடுகளுக்குச் சென்றவர்; அரசர் பலரால் நன்மதிப்புப் பெற்றவர். இத்தகைய பெருமாட்டிகள் பலர் வாழ்ந்த காரணத்தால்தான் சங்ககாலம், தமிழக வரலாற்றில், '**பொற்காலம்**' எனப் பொலிவு பெற்றது. தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழரோடு தமிழராய் வாழ்ந்த சேர, சோழ, பாண்டியராட்சியில் தமிழ் சிறந்து விளங்கியது. தமிழர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். இச்சிறப்புடைய மக்களது காதல் மணம் பற்றிய விவரங்களை அடுத்துக் காண்போம்.

# 2. களவு மணம்

**ஐந்திணை**

பண்டைத்தமிழர் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்திருந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காடு சூழ்ந்த இடமும் முல்லை; வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்; மழை வளம் அற்றுப் பயிர் பச்சைகள் தோன்ருத இடம் பாலை.

**காதல் தோற்றம்**

குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர் குறவர். தினை முதலிய தானியங்களைப் பயிராக்குதல், வேட்டையாடுதல் இவர் தம் தொழில். தினைக் கதிர்கள் விலங்குகளாலும் பறவைகளாலும் அழிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளக் குறப் பெண்கள் பயிர்க்கொல்லைகளில் காவல் காப்பது வழக்கம். இங்ஙனம் காவல் காக்கும் பெண்கள் மணமாகாதவர்கள். அவர்கள் சுனையில் நீராடுவர், பலவகை மலர்களைப் பறித்தல், அவற்றை மாலைகளாகத் தொடுத்தல், ஆடல் பாடல்களில் ஈடுபடுதல்—இவற்றைச் செய்துகொண்டே தினைப் புனத்தைக் காவல் காப்பர். பக்கத்து மலை நாட்டு இளைஞன் ஒருவன் மான் வேட்டையாடிக்கொண்டு, அந்த மானைத் தேடிக்கொண்டே அம்மகளிர் விளையாடும் இடத்திற்கு வருவான்; தான் விரட்டி வந்த மானை அவர்கள் பார்த்ததுண்டோ என்று கேட்பான்; அப்பொழுது தலைவியை உற்று நோக்குவான். அன்று முதல் தலைவியைப் பார்க்க அடிக்கடி அங்கு வருவான். நாளடைவில் அவர்களிடையே காதல் வளரும்.

சில இடங்களில் வேறு விதமாகவும் காதல் தோன்றி வளரும். தலைவி வேங்கை மரத்தின் உயர்ந்த கிளையில் நன்ருக மலர்ந்துள்ள மலர்களைப் பறிக்க விரும்புவாள்.

அவளுடன் இருக்கும் பிற பெண்கள் அவற்றைப் பறிக்க இயலாது விழிப்பர். அவ்வமயம் அங்கு ஓர் இளவல் தோன்றுவான்; அவர்களது மனக்கவலையை அறிந்து, உடனே மரத்தின்மீது பாய்ந்து ஏறுவான்; தலைவி விரும்பிய மலர்களைப் பறித்துக் கீழே வருவான்; அவற்றை அன்போடு தலைவியிடம் கொடுப்பான். தலைவி நன்றியறிதற் குறிப்புடன் தலைவனை நோக்குவாள். இருவர் விழிகளும் சந்திக்கும். பின்பு நாள்தோறும் அந்த இளைஞன் அவ்விடத்திற்கு வந்து தலைவியை மகிழ்விப்பான். இது **பூத்தரு புணர்ச்சி** எனப்படும்.

தலைவி தன் தோழியரோடு சுனையில் நீராடுவாள்; கால் வழுக்கிச் சுனையில் விழுந்து விடுவாள். உடனே பெண்கள் அலறுவார்கள். அங்கு வேட்டையாட வந்த இளைஞன் அவ்வலறலைக் கேட்டு அங்குத் தோன்றுவான்; சுனையிற் குதித்துத் தலைவியை மீட்பான். தலைவி தன் உயிரைக் காத்த அவ்வீரனையே மணக்க உறுதி கொள்வாள். அன்றுமுதல் அவர்களிடையே காதல் தோன்றி வளரும். இது **புனல் தரு புணர்ச்சி** எனப்படும்.

தலைவி தன் தோழியரோடு மலர்க்காக்களில் விளையாடுவாள். அவ்வமயம் மதம் பிடித்த யானை ஒன்று காட்டை அலைக்கழித்துக்கொண்டு அங்கு வரும். அதனைக் கண்ட தலைவி அலறுவாள்; செய்வகை தோன்றாது கண்ணீர் வடிப்பாள். அவ்வமயம் அங்கு வேட்டையாட வந்த இளைஞன் ஒருவன் கையில் வேலோடு தோன்றுவான்; தன் இடக்கையால் தலைவியைத் தழுவிக்கொண்டு, வலக்கையிலுள்ள வேலை யானையின் துதிக்கையிற் குத்துவான். குத்துப்பட்ட இடத்திலிருந்து குருதி வெளிப்பட்டு இளைஞன்மீது படும். தலைவியின் மையுண்ட கண்களிலிருந்து வடியும் கரிய நீர் இளைஞனின் இடப்பக்கமும், யானையின் செந்நீர் இளைஞனின் வலப்பக்கமும் காட்சியளிக்கும். இடப்பக்கத்தில் தலைவியைத் தாங்கியும் வலக்கையில் சூலத்தைத் தாங்கியும் உள்ள அவ்விளைஞன்,

இடப்பக்கத்தில் உமாதேவியைத் தாங்கியுள்ள சிவ பெருமானைப் போலக் காட்சியளிப்பான். இங்ஙனம் தன் உயிரைக் காத்த அவ்விளைஞனிடம் தலைவி அன்பு செலுத்துதல் இயற்கைதானே! அன்று முதல் அவன் அவளது மனக்கோவிலில் இடம் பெறுவான். காதல் அரும்பி வளரும். இங்ஙனம் யானை தலைவனையும் தலைவியையும் கூட்டுவிக்கும் புணர்ச்சி **களிறு தரு புணர்ச்சி** எனப்படும்.

**பாங்கன்**

இங்ஙனம் ஏதோ ஒரு காரணத்தால் குறிஞ்சி நிலக் கூட்டுறவு உண்டாகும். தலைவன் தன் உயிர்த்தோழ னிடம் இக்கூட்டுறவைத் தெரிவிப்பான். அப்பாங்கன் தலைவன் சொன்ன வழியே சென்று தினைப்புனத்தை அடைவான்; தன்னைப் பிறர் காண முடியாத ஓர் இடத் தில் இருந்துகொண்டு, தலைவியையும் அவள் தோழியரை யும் காண்பான்; தன் தோழனுக்கு ஏற்ற துணைவிதானா— ஒத்த கல்வி, ஒத்த பண்பு, முதலியன தலைவியிடம் இருக்கின்றனவா என்பதை ஆராய்வான்; தலைவி தோழிய ரோடு பேசுவதைக்கொண்டு இவற்றை உணர்வான்; பின்பு தன் நண்பனிடம் சென்று தலைவியின் சிறப் பியல்புகளைக் கூறிப் பாராட்டுவான்.

**பாங்கியின் துணை**

தலைமைத் தோழிக்குப் 'பாங்கி' என்பது பெயர். தலைவியை நாள்தோறும் கண்டு அவளுடன் பழக விரும் பும் தலைவன், தலைமைத் தோழியின் (பாங்கியின்) உதவி யைப் பெற விரும்புவான்; அவளிடம் சென்று தன் குறையை விண்ணப்பம் செய்வான். அவள் முதலில் இணங்காதவள் போல நடிப்பாள்; அவன் மெய்யாகவே தலைவியை உளமாரக் காதலிக்கிறானா என்பதை ஆராய்ந்து அறிவாள்; அவன் மெய்யாகவே தலைவியைக் காதலிக்

கிருன்—அவள் இல்லாமல் இவன் வாழான் என்பதை நன்கு அறிந்தவுடன் தலைவியை அவனோடு கூட்டுறவு கொள்ள விடுவாள்.

இவ்வாறு நடைபெறும் குறிஞ்சி நிலக் கூட்டுறவு தலைவி—தலைவன்—தோழி—பாங்கன் ஆகியவருள்ளேயே மறைவாக வைக்கப்படும். பிறர் எவருக்கும் இஃது அறிவிக்கப்படாது. தினைக்கதிர்கள் முற்றும் வரை தலைவன் நாள்தோறும் பகற்பொழுதில் தினைப்புனத்தை அடுத்த பொதும்பரில் வந்து செல்வான். அவன் வந்து காத்திருத்தலை அறிந்ததும் தோழி, 'மலர் கொய்யச் செல்வோம்' என்று சொல்லித் தலைவியைத் தனியே அழைத்துச் சென்று பொதும்பரில் விட்டுவிடுவாள்; தலைவன் சென்ற பிறகு தலைவியைப் பொதும்பரிலிருந்து அழைத்து வருவாள். 'தினைக்கதிர்கள் முற்றிவிட்டன. இனித் தலைவிக்கு இங்கு வேலையில்லை. அவள் வீட்டில் வைக்கப்படுவாள். நீ இங்கு வருவது போல அங்கு வருதல் இயலாது. ஆகையால் உன் வீட்டாரை அனுப்பி மணம் பேசச்சொல்வது நல்லது,' என்று தோழி தலைவனுக்கு அறிவுறுத்துவாள். தலைவன் அவள் அறிவுரைப்படி மணம் பேசத் தலைவி வீட்டிற்கு ஆட்களை அனுப்புவான்.

சில சமயங்களில் தவிர்க்க முடியாத காரணங்களால் மணப்பேச்சுத் தொடங்கப் பெருது. தலைவி வீட்டில் இருப்பாள். அவளைக் காணமுடியாமல் தலைவன் தவிப்பான்; தோழியின் உதவிபெற்று இரவு நேரங்களில் தலைவியைச் சந்திப்பான்; இரவில் அவன் வரும் காட்டு வழியில் உண்டாகும் ஏதங்களைத் தோழி குறிப்பிட்டு, விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துவாள். தலைவன் தான் வந்ததற்கு அடையாளமாகத் தலைவியின் வீட்டருகில் உள்ள குளத்தில் கல் எறிவான். அவ்வோசை கேட்டதும் தோழி தலைவியை அழைத்துக் கொண்டு வெளியில் வருவாள். சில சமயங்களில் மரங்களிலுள்ள பழங்கள் நீரில் விழுந்து ஓசை செய்யும்.

அதனைத் தலைவன் வருகையை உணர்த்தும் ஓசை என்று தவருக நினைந்த தலைவி, வெளியில் வந்து பார்ப்பாள்; தலைவனைக் காணுது ஏமாறுவாள். இஃது ' அல்ல குறி ' எனப்படும்.

இங்ஙனம் இரவு நேரங்களில் தலைவன் வரும்பொழுது சில சமயங்களில் நாய் குரைக்கும். சில நேரங்களில் ஊர்க்காவலர் எதிர்ப்படுவர்; சில வேளைகளில் தலைவியின் தாய் விழித்துக்கொண்டிருப்பாள். இத்தகைய இடையூறுகளால் தலைவி தலைவனைச் சந்தித்தல் முடியாமற் போதலும் உண்டு. இங்ஙனம் இரவு நேரங்களில் அயலூர் இளைஞன் ஒருவன் தலைவியைக் காண வந்து போதலை ஊரார் அறியும் வாய்ப்பும் உண்டாகிவிடும். அவர்கள் இரகசியமாக இதுபற்றிப் பேசிக்கொள்வர். இஃது **' அம்பல் '** எனப்படும். இம்மறை பலர்க்கு வெளிப்படுதலும் உண்டு. அப்பொழுது இஃது ' அலர் ' எனப்படும். அம்பலும் அலரும் உண்டான பிறகு தலைவியை விரைந்து மணக்கும்படி தோழி தலைவனை வற்புறுத்துவாள். பின்பு திருமணம் நடைபெறுவதுண்டு.

## அறத்தொடு நிற்றல்

வீட்டில் வைக்கப்பெற்ற தலைவி முன்போலத் தலைவனைக் காணப் பெருமையால், நாளடைவில் மெலிவடைவாள்; உணவும் உறக்கமும் இன்றி வாடுவாள். பேயின் சேட்டை என்று கருதித் தாய், வேலனை அழைத்து வெறியாடச் செய்வாள். அப்பொழுது ஆடு பலியிடப் பெறும். தோழி, " தலைவி பேயால் பீடிக்கப்பட்டவள் அல்லள். ஆட்டுப் பலி அவள் நோயை நீக்காது," என்று கூறித்தடுத்துவிடுவாள்; தலைவனுக்கும் தலைவிக்கும் நட்பு உண்டான காரணத்தை நன்ருக விளக்குவாள். இதனை அறிந்த செவிலித்தாய் நற்ருய்க்கு (தலைவியின் தாய்க்கு) அறிவிப்பாள்; நற்ருய் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தெரிவிப்பாள். தலைவியின் விருப்பம் போல

மணம் முடித்தலே ஏற்றது என்று கருதி, அனைவரும் மணம் முடிப்பர்.

**உடன்போக்கு**

தலைவிக்குப் பெற்றோர் தாமாகவே ஒரு மணமகனைத் தேடினாலும், அல்லது பிறர் தாமாகவே வந்து மணம் பேசினாலும், தோழி தலைவனை நள்ளிரவில் வரவழைப்பாள்; நடைபெறும் செயல்களை விளங்கவுரைத்து, உடனே தலைவியை அழைத்துக்கொண்டு செல்லும்படி வற்புறுத்துவாள்; தலைவியின் இரு கைகளையும் தலைவன் கைகளில் வைத்து, "இன்று போல் இவளை என்றும் கவனித்துக் கொள். முதுமையிலும் இவளைக் கைவிடாதே," என்று கூறித் தலைவியை அவனிடம் ஒப்புவிப்பாள். இஃது 'ஓம்படை' என்று பெயர் பெறும். பின்பு தலைவனும் தலைவியும் ஒருவரும் அறியாத நிலையில் ஊரைவிட்டு அகன்றுவிடுவர்.

**திருமணம்**

தலைவி தலைவனோடு ஓடிவிட்டாள் என்பதை அறிந்த செவிலித்தாயும் நற்றாயும் புலம்புவர். தலைவியின் தந்தையும் தமையன்மாரும் தலைவியைத் தேடிச் சென்று அவர்கள் போக்கினைத் தடுப்பர். அப்போது தலைவி தலைவனைச் சார்ந்து நிற்பாள். அதனால் தலைவியின் உள்ளக் கருத்து உணர்த்தப்பெறும். இனிச் செயற்பாலது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்த பெண்வீட்டார், தலைவியையும் தலைவனையும் அழைத்து வருவர்; தமது இல்லத்தில் மணம் முடிப்பர். சில சமயங்களில் பெண்வீட்டார் தடுப்பதற்கு முன்பே அவர் கண்களிற் படாமல் தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று மணம் செய்து கொள்ளுதலும் உண்டு. இங்ஙனம் தலைவன் வீட்டில் திருமணம் நடந்த பின்பு தலைவியின் வீட்டார் மண வரிசையோடு தலைவன் வீட்டிற்குச்சென்று உறவு கொண்டாடுதலும் உண்டு.

**அன்பு வாழ்க்கை**

இங்ஙனம் ஒருவனும் ஒருத்தியும் தம்முள் தாமே எதிர்ப்பட்டு உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டு, மறைவாகப் பழகி வருதல் **களவு மணம்** எனப் பெயர் பெறும். பலர் அறிய மணம் செய்து வாழும் வாழ்க்கை **கற்பு மணம்** எனப் பெயர் பெறும். களவு நடந்த பின்பே கற்பு நடைபெறுதல் வேண்டும் என்பது பண்டைப் புலவர் குறிக்கோள். கணவனும் மனைவியுமாக வாழக்கூடிய இருவர், பிறர் இடையூறு இல்லாமல் தம்முள் தாமே ஒருவரையொருவர் நன்கு அறிந்து திருமணத் திற்கு உடன்படுதல் வேண்டும். இவ்வாறு உடன்பட்டு மணந்துகொள்ளும் வாழ்க்கையே அன்பை அடிப்படை யாகக் கொண்டு விளங்கும் என்பது அறிஞர் கருத்து; அதனாற்றான் இம்முறைக்கு 'அன்பின் ஐந்திணை' எனப் பெயரிட்டனர்.

நகரங்களிலும் பேரூர்களிலும் தலைவன் தலைவியர் நாள்தோறும் ஒருவரையொருவர் சந்திக்க இயலாது. ஆயினும் ஒருவரையொருவர் சில சமயங்களில் பார்க்க லாம்; கல்வி முதலிய நற்பண்புகளை அறிந்தார் கூறக் கேட்கலாம்; கேட்டு, ஒருவரையொருவர் விரும்பலாம்; அவ்விருப்பத்தின் பயனாய் அவ்விருவரும் ஒருவரை யொருவர் மணக்க உறுதி கொள்ளலாம். இங்ஙனம் இருவரும் உள்ளத்தால் கொள்ளும் உறவும் களவு மணம் என்றே பெயர்பெறும். இதனை **உள்ளப் புணர்ச்சி** என்று கூறலாம். இதுவே இன்றும் நகரங்களில் பெருவழக் குடையது. இதுவும் அன்பை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

# 3. கற்பு மணம்

**சங்ககாலத் திருமணம்**

இக்காலத் திருமணத்தில் செய்யப்படும் பலவகைச் சடங்குகள் சங்ககாலத் திருமணத்தில் இல்லை. அகநானூற்றில் 86-ஆம் செய்யுளும் 136-ஆம் செய்யுளும் இரண்டு திருமணங்களைக் கூறுவன. அவற்றுள் 86-ஆம் பாடல் பின்வரும் செய்திகளைத் தெரிவிக்கின்றது :

(1) மணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து நடைபெற்றது ; (2) மணப்பந்தலின் கீழ் மணல் பரப்பப்பெற்று விளக்கு வைக்கப்பட்டது ; (3) இளங்காலைப் போதில், திங்கள் உரோகிணியுடன் கூடிய நல்லோரையில், முது பெண்டிர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் ஏந்திவந்தனர் ; (4) அந்நீர்க் குடங்களில் மலரும் நெல்லும் தூவிப் பிள்ளை பெற்ற வாழ்வரசியர் நால்வர் மணமகளை, "கற்பு நெறியினின்றும் வழுவாமல் பல நலங்களைச் செய்து கணவன் விரும்பத்தக்க மனைவி ஆகுக", என்று வாழ்த்தி மணநீராட்டினர். இவற்றுடன் வதுவை நன்மணம் கழிந்தது.

செய்யுள்-136 கீழ்வரும் விவரங்களைத் தருகின்றது : (1) இறைச்சி கலந்து ஆக்கப்பெற்ற வெண்சோற்று விருந்து நடைபெற்றது ; (2) திங்கள் உரோகிணியைக் கூடிய நல்லோரையில், மணமனை அலங்கரிக்கப்பட்டு இறைவழிபாடு நடைபெற்றது ; (3) மணமுழவும் முரசமும் முழங்கின ; (4) தலைவிக்கு மணநீராட்டு நடைபெற்றது ; (5) வாகையிலை அறுகின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப்பெற்ற வெண்ணூல் தலைவிக்குக் காப்பாகச் சூட்டப்பட்டது ; (6) தமர் தலைவிக்குத் தூய வுடைகளை அணிவித்தனர் ; (7) தமர் தலைவிக்குப் பல அணிகளை அணிவித்து, அங்ஙனம் அணிவித்ததால் உண்டான வியர்வையை ஆற்றினர். இவ்வளவே மணச் செய்திகளாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்விரண்டு திருமணச் சடங்குகளிலும் மண மக்கட்கு மண நீராட்டுதலே சிறப்புச் சடங்காக இருத்தல் காணத்தக்கது. பலர் அறிய விருந்து நடத்தி, மணமகளை நீராட்டிப் புத்தாடை உடுத்து அணிகலன்கள் அணிவித்து, மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் உட்காரவைத்துப் பலர் அறியச் செய்தலே திருமண வினையாக அக்காலத்தில் இருந்தது என்பது இவற்றால் அறியலாகும். "இவற்றுள், (1) எரி வளர்த்தல் இல்லை; (2) தீவலம் வருதல் இல்லை; (3) தட்சிணை பெறப் புரோகிதர் இல்லை. **இவை முற்றும் தமிழர்க்கே உரிய திருமணங்களாகும்,"** என்று காலஞ் சென்ற வரலாற்றுப் பேராசிரியரான திரு. பி. டி. சீநிவாச ஐயங்கார் அவர்கள் தாம் வரைந்த "தமிழர் வரலாறு" (பக். 80) என்னும் ஆங்கில ஆராய்ச்சி நூலில் கூறியிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது.

**கண்ணகி திருமணம்**

கண்ணகி திருமணம் பற்றிக்கூறும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப்பாடலில் கீழ்வரும் திருமணச்செய்திகள் இடம் பெற்றுள்ளன: (1) திருமணப் பந்தலில் (சந்திரனும் உரோகிணியும் கூடிய நல்லோரையில்) மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடக் கோவலன் கண்ணகியுடன் தீ வலஞ் செய்தான்; (2) பெண்டிர் பலர் வாசனைப் பொருள்களை ஏந்தி நின்றனர்; சிலர் உரையால் வாழ்த்தினர்; சிலர் மலர்களை ஏந்தி நின்றனர்; சிலர் பாட்டால் வாழ்த்தினர்; சிலர் பலவகைச் சாந்துகளை ஏந்தி நின்றனர்; வேறு சிலர் நறும்புகைப் பொருள்களைத் தாங்கி நின்றனர்; மற்றுஞ் சிலர் மாலைகளை ஏந்தி நின்றனர்; சிலர் பலவகைச் சுண்ணங்களை ஏந்தி நின்றனர்; சிலர் விளக்குகளையும், வேறு சிலர் கலங்களையும், மற்றுஞ் சிலர் முளைப் பாலிகையையும் ஏந்தி நின்றனர்; (3) கொடி போன்ற மகளிர், "இக்கண்ணகி தன் தலைவனைப் பிரியாதவள் ஆகுக; இவள் காதலனும் இவளைத் தழுவிய கை நெகிழா

மல் சேர்ந்திருப்பாளுக ; இருவர் அன்பும் தீதற்று விளங் குக,'' என்று தம் வழிபடு கடவுளை வணங்கினர் ; சிலர் மலர்களைத் தூவினர்.

இத் திருமணத்தில், அகநானூற்றுத் திருமணங்களில் குறிக்கப்படாத மாமுது பார்ப்பான் மறைவழி காட்டலும், தீவலம் வருதலும், பாலிகை முதலியன மகளிர் ஏந்தி நிற்றலும் புதியனவாக வந்திருத்தல் காண்க. இவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தகுந்தது, கோவலன் கண்ணகியின் கையைப் பற்றித் (பாணிக்கிரகணம்) தீவலம் வருதல் இவ்வாறு கோவலன் கண்ணகியின் கையைப் பற்றியிருந் தமையே சிறப்புடையது என்பது, "கவவுக்கை ஞெகிழா மல்'' என்னும் மங்கல மகளிர் வாழ்த்தால் வலியுறும். இத்திருமணத்தில் கோவலன் கண்ணகியின் கையைப் பற்றிய வண்ணம், "தீவலம் செய்தகைக் கண்டவர் நோன்பு செய்தாராயினர்'' என்று இளங்கோவடிகள் கூறுதலால், பாணிக்கிரகணமே கண்ணகியின் திருமணத் தில் சிறப்புடைச் சடங்காக இருந்தமை தெளியலாம்.

சங்ககால முற்பகுதியில் பிராமணர் செல்வாக்குத் தமிழர் திருமணத்தில் இடம் பெறவில்லை என்பது அகநா னூற்றுப் பாக்களால் அறியலாம். சங்ககாலப் பிற்பகுதி யில் (கி. பி. 2-ஆம் நூற்றுண்டு) தமிழர் திருமணத்தில் பிராமணர் செல்வாக்கு நுழைந்துவிட்டது என்பதைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. கோவலனும் கண்ணகி யும் சமணர் ஆதலால், அவர்தம் திருமணத்தில் இடங் கொண்ட மாமுது பார்ப்பான் சமணன் என்று கூறுவாரும் உளர்.

## தொகை நூல்களில் இல்வாழ்க்கை

தலைவனும் தலைவியும் காதலால் கட்டுண்டு மணந்து கொண்டவராதலின், ஒருவரையொருவர் நன்குணர்ந்தே இல்லறத்தை நடத்தி வந்தனர் ; ஒரு பசுவிற்கு இரண்டு கொம்புகள் இருத்தல் போல உயிர் ஒன்றும் உடல் இரண்டு

மாக வாழ்ந்தனர். அவர்களது இல்வாழ்க்கையைக் கண்டு மகிழத் தலைவியை வளர்த்த செவிலித்தாய் வருவது வழக்கம். ‘ தலைவனுக்கு இந்தக் கறி விருப்பமானது— இதனை இவ்வாறு சமைக்க வேண்டும்,’ என்று தலைவி மிகுந்த அன்போடு சமையல் செய்வதைச் செவிலி கண்டு மகிழ்ச்சி அடைவாள். தலைவி, தலைவன் வந்ததும், அவனை அன்போடு உண்பிப்பதைக் கண்ட செவிலி பூரிப்படைவாள். தலைவன், தலைவியின் சமையலைப் பாராட்டுவான். அதுகேட்டுத் தலைவி நாணத்தால் தலை குனிவாள். செவிலி அக்காட்சியைக் கண்டு அகமகிழ்வாள். “இரண்டு தலைகளையுடைய ஒரு பறவையைப் போலத் தலைவனும் தலைவியும் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக வாழ்கின்றனர்,” என்று செவிலி தன் ஊருக்குச் சென்று நற்றாயிடம் நவில்வாள். அதுகேட்ட நற்றாய் தன்மகளைப்பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

## பலவகைப் பிரிவுகள்

இல்வாழ்க்கை நடைபெறும் பொழுது தலைவன் தலைவியைவிட்டுப் பல சமயங்களில் பிரிதல் நேரிடும். அவன் உயர் படிப்பிற்காகப் பிரிவான் ; தான் பார்க்கும் அலுவல் காரணமாகப் பிரிவான்; பிறரைச் சமாதானம் செய்விக்கப் பிரிவான் ; தூது காரணமாகப் பிரிவான். பொருளீட்டும் காரணமாகவும் பிரிவு ஏற்படும். கணவனையே உயிரெனக் கருதும் மனைவிக்கு இப்பிரிவுகளெல்லாம் துன்பத்தையே தருதல் இயல்பன்றோ? ஆயினும் சிறந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகள் ஆதலின், தலைவி, தலைவன் வரும் வரையில் ஆற்றி இருப்பாள். ஒவ்வொரு பிரிவிற்கும் காலவரையறை உண்டு. அதுகாறும் தலைவி பொறுமையோடு காத்திருப்பாள் ; பிரிந்து மீளும் தலைவனைக் காணும்போது, கதிரவனைக் கண்டு மலரும் தாமரை மலர் போல் தலைவியின் அகமும் முகமும் மலரும். அவள் அவனை விழிகளால் பருகி வரவேற்பாள்.

உண்மைக் காதலர் அன்பை யாரே அளந்து கூற முடியும்!

**பரத்தையிற் பிரிவு**

ஆடல் பாடல்களில் வல்ல பொது மகளிர் எந்தச் சமுதாயத்திலும் உண்டு. அவர்தம் ஆடல் பாடல்களிலும் ஒப்பனையிலும் அறிவைப் பறிகொடுத்த ஆடவர், தம் மனைவியரை மறந்து தகாத ஒழுக்கத்தில் ஈடுபடுவர். மாதவியை விரும்பிய கோவலன் கண்ணகியை மறந்தாற் போலத் தலைவன் தலைவியை மறந்து பரத்தையை நயத்தலும் உண்டு. இத்தீய பழக்கம் பண்டைய நாகரிக நாடுகள் எல்லாவற்றிலும் இருந்து வந்தது. அக்காலச் சமுதாயம் இதனை அநுமதித்தது. ஆயின், ஒவ்வொரு தலைவனும் இவ்வாறு பரத்தையோடு வாழ்ந்தான் என எண்ணுதல் தவறு. மன அடக்கம் அற்றவரும் செல்வச் செருக்கு மிக்கவரும் ஆகிய சிலரே இத்தீய வழக்கத்திற்கு ஆளாயினர். எனினும், இதற்குச் சமுதாயம் ஒப்புதல் தந்த காரணத்தால், புலவர்கள் அகப்பொருள் இலக்கணத்தில் இதற்கு இடங்கொடுத்தனர்.

முதற் பகுதியிற் கூறப்பெற்ற ஐந்து நிலங்களில் பரத்தையர் இருந்தனர் என்று கொள்ள இடமில்லை. வயிற்றுப் பிழைப்புப் பற்றியே ஓயாது உழைக்கும் குறிஞ்சி நிலத்தில் பரத்தையர்க்கு இடமில்லை. புல்வெளிகளில் ஆடுமாடுகளை மேய்த்துத் திரியும் முல்லை நில மக்களிடத்தும் பரத்தையர் வாழ இடமில்லை. திரைகடலோடி உயிருக்குத் துணிந்து அலைந்து மீன்பிடித்து வாழும் நெய்தல் நில மக்களிடத்தும், மழையும் விளை நிலமும் அற்ற பாலையிடத்தும் பரத்தையர் வாழ இடமில்லை. எனவே, ஆறுமாதம் வயல் வேலை—ஆறுமாதம் ஓய்வு—கவலையற்ற உணவு உடைய மருத நிலமே பரத்தையர் வாழ ஏற்ற இடமாகும். நிலக்கிழார்களே பொழுது போக்குக்காக இப்பரத்தையரிடம் அடிக்கடி செல்வது

வழக்கம். இவர்தம் தவருன ஒழுக்கத்தால் மனைவியர் மனவருத்தமும் கோபமும் கொள்வர். இதற்கு 'ஊடல்' என்பது பெயர். இவ்வூடல் மருதத்திணைக்கே உரியது என்று இலக்கணம் கூறுகிறது.

தான் உளமார விரும்பி மணந்துகொண்ட கணவனுதலால் தலைவி அவன் மனம் நோகும்படி கடிய சொற்களைச் சொல்லாள். அவனும் தான் செய்தது தவறு என்பதை நன்கறிவான்; அத்தவருன ஒழுக்கத்திலிருந்து மீள வேண்டும் என்று ஒரு சமயம் விரும்புவான்; உள்ள வுறுதி இல்லாத காரணத்தால் மீண்டும் பரத்தையர் வீடு செல்வான்; மனைவியின் முகவாட்டத்தைக் கண்டு அவளைத் தெளிவிப்பதற்காக, தான் பரத்தையிற் பிரிய வில்லை என்று சத்தியம் செய்வான்; தான் மார்பில் அணிந்துள்ள சந்தனம் பரத்தை பூசிய சந்தனம் அன்று என்பான்.

அறிவும் திருவும் பொறுமையும் உடைய மனைவி இவற்றைக் கேட்டு நகைப்பாள். தலைவன் தலைவியை மகிழ்விக்க நெருங்குவான். அவள் விலகி நின்று, "தைமாதக் குளத்தில் கணக்கற்றவர் நீராடுவர். நின் பரத்தை மார்பு அக் குளம் போன்றது. பலர் அம்மார்பில் தோய்வர். அதனில் தோய்ந்த நினது மார்புடன் என்னை நெருங்காதே," [1] என்று அறிவுறுத்துவாள். பரத்தையின் மார்பு "தைத்திங்கள் தண்கயம்" போன்றது என்று தலைவி கூறியது, பரத்தையின் ஒழுக்கக் கேட்டினை நன்கு விளக்குவதாகும். அத்தகைய பரத்தையிடம் தலைவன் பழகுதல் பெருந்தவறு—பல நோய்களுக்கு இடமுண்டு என்பதை அறிவிற் சிறந்த அம்மாதரசி நயமாக எடுத்துக் கூறும் திறன் எண்ணிக் களிக்கத்தகும். நல்லறிவுடைய

---

[1] "தைஇத் திங்கள் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பு"
—ஐங்குறுநூறு, 84.

தலைவன் இதனை நன்குணர்ந்து பரத்தமை வாழ்க்கையினின்று விலகுவான்.

மனத்திண்மை இல்லாத தலைவன் தனது இழிதொழிலில் தொடர்ந்து வாழ்வான். தான் செய்தது தவறு என்று உணர்ந்த காரணத்தால், பரத்தையர் உறவு தனக்கு இல்லை என்று பொய் பேசுவான். அறிவுடைய மனைவி தன் மனவருத்தத்தை அகத்து அடக்கி, புன்முறுவலைத் தோற்றுவித்து, "ஞாயிற்றின் ஒளியைக் குடை மறைத்தல் இயலுமா? நீ பரத்தையர் வீடு செல்வது பலருக்கும் தெரியுமே! உனது சொல்லால் உனது செயலை மறைத்தல் இயலாது. அறிவற்ற சிறுமதியாளர் செயலை நீ செய்வது தகாது. உன்னைப் பார்க்கும் அறிஞர் நகைப்பர்," என்று நயம்பட நவில்வாள்.[2] இந்நல்லுரையால் திருத்தம் பெறும் தலைவனும் உண்டு. திருத்தம் பெருமல் தீய வழியைத் தொடர்வோனும் உண்டு.

தலைவன் என்றேனும் மனம் திரும்பி வீடு வருவான், மீண்டும் இல்லறம் நல்லறமாகும் என்னும் நம்பிக்கையோடு தலைவி தன் இல்லறக் கடமைகளில் வழுவாது நடப்பாள். தலைவன் சில சமயங்களில் வீட்டிற்கு வருவான். தலைவியின் தோழிகளைப் பார்த்து, "யான் இல்லாதபோது தலைவியும் நீங்களும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்பான்.

தோழியர்கள், "'வயல் விளைவதாக; எளியவர் வந்து உணவு பெறுக,' என்று தலைவி கூறினள். நாங்கள், 'இத்தகைய நல்ல தலைவியிடம் தலைவன் மனம் பொருந்தி வாழும் வாழ்க்கை சிறப்பதாகுக' என்று கடவுளை

---

[2] "மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந!
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்ற தொளியே!"
"சிறுவரின் இனைய செய்தி
நகாரோ பெரும!நிற் கண்டிசி னோரே"
—ஐங்குறுநூறு, 71, 85.

வேண்டினேம்,'' என்று அவன் உள்ளம் உருகும்படி உரைப்பர்.[3]

திருத்தம் பெருது கணவன் தொடர்ந்து பரத்தையர் வாழ்வில் பற்று வைத்திருப்பின், மனைவி மனக்கலக்கம் மிகுதியும் அடைவாள். உணவு உண்ணவரும் தலைவன், தன் தவறுதான் அவளது வாட்டத்திற்குக் காரணம் என்பதை நன்கு அறிவான்; ஆயினும், அவ்ள் நலிவிற்குக் காரணம் கேட்பான். அப்போதும் அவள் சீருமல் அமைதியோடு அகங்குழைய அவனைப் பார்த்து, "இப் பிறப்பில் யான் உன்னேடு தொடர்ந்து வாழும் வாழ்வு பெறவில்லை; மறுபிறப்பிலேனும் உன்னுடன் தொடர்ந்து வாழும் வாழ்க்கை கிடைக்குமோ என்று கவலைப்படுகிறேன்,'' என்று நயம்பட மொழிவாள்.[4] இவ்வுருக்க மொழியைக் கேட்டு உள்ளம் திரும்பும் தலைவனும் உண்டு.

மனமாற்றம் பெருத ஒழுக்கம் கெட்ட தலைவன் தன் மனைவியின் மனவாட்டத்தை முகவாட்டத்தால் உணர்ந்தும், ஏதும் அறியாதவன்போல அவளது வாட்டத்திற்குக் காரணம் கேட்பான். அவள் புன்முறுவலோடு, "பெருமானே, உன்னேடு வாழப் பெருத யான் இருந்து பயன் என்ன? யான் இறப்பதே நலம். இறந்து வேறு பிறவி எடுப்பேனுயின், உன்னைப் பற்றிய நினைவு தொடர்ந்து இருக்குமோ என்று அஞ்சுகிறேன். அந்த

---

[3] "விளைக வயலே வருக இரவலர்
எனவேட் டோளே யாயே; யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டோமே.''
—*ஐங்குறுநூறு*, 2.

[4] "இம்மை மாறி மறுமை எய்தினும்
நீயா கியரெங் கணவனை;
யானு கியர்நின் நெஞ்சுநேர் பவளே.''

அச்சத்தாற்றான் சாவாமல் இருக்கிறேன்,"[5] என்று கூறுவாள். இவளது உள்ள நிலையைக் கண்ட அறிவுடைய ஆடவன் திருந்தாமலா இருப்பான்!

தலைவன் பரத்தை வீடு சென்றிருக்கும்போது தலைவனது தவறான ஒழுக்கத்தை நினைந்து நினைந்து தலைவி வருந்துவாள்; "இன்று தலைவன் வந்தவுடன் அவனைக் கடிந்து திருத்த வேண்டும்" என்று தோழியிடம் கூறுவாள். அச்சமயத்தில் தலைவன் வந்துவிடுவான். அவனைக் கண்டவுடன் தன் மனக்கவலையெல்லாம் ஒழிந்ததாக எண்ணித் தலைவி மட்டற்ற மகிழ்ச்சி அடைவாள்; அவனுக்கு வேண்டும் பணிவிடைகளைக் குறைவின்றிச் செய்வாள். அவன் அவளைப் பாராட்டிவிட்டுப் பரத்தையர் வீடு செல்வான்.

இவ்வளவையும் பார்த்து நிற்கும் தோழி தலைவியை நோக்கி, "கணவனைக் காணாதபோது வீரம் பேசினாய்! கணவனைக் கண்டவுன் நின் சீற்றம் அடங்கி விட்டது ஏன்?" என்று கேட்பாள். நாணம் கொண்ட தலைவி தோழியை அன்போடு நோக்கி, "கண்ணாடி இல்லாதபோது மைதீட்டும் கோலின்மீது கண் பார்வை விழும். மையைக் கோலில் தடவி மைதீட்டக் கண்ணாடியைப் பார்க்கும்பொழுது, கண்ணின் பார்வை கோல்மேல் விழாது; கண்ணாடிமீது விழும். அதுபோலக் கணவன் இல்லாதபோது அவன் செய்த தவறுகள் மட்டும் என் நினைவிற்கு வருகின்றன. அவன் வந்தவுடன் அந் நினைவுகள் மறந்து விடுகின்றன. நான் என்ன செய்வேன்!" என்று நாணிக் கூறுவாள்.[6]

---

5 "சாதல் அஞ்சேன்; அஞ்சுவல் சாவில்
பிறப்புப்பிறி தாகுவ தாயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே"

—நற்றிணை

6 "எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் வந்த விடத்து."

—குறள்

**ஊடலும் கூடலும்**

தலைவன் தன் தவருன ஒழுக்கத்தில் இருக்கும் பொழுது மனைவியின் ஊடலைத் தீர்க்கப் பலரை ஏவுவான். எவர் கூற்றையும் தலைவி ஏலாள். விருந்தினர் வரும் பொழுது தலைவி, அவர்களுக்கு உண்மை தெரியலாகாது என்னும் கருத்தால் அவர்கள் காணத் தலைவனேடு பேசி மகிழ்வாள்; தலைவனுடைய பெற்ருேர் அல்லது தன்னுடைய பெற்ருேர் வரும்போதும் இவ்வாறு நடந்து கொள்வாள். தலைவன் விளையாடிக்கொண்டிருக்கும் தன் மகனை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தவுடன் அவளது ஊடல் மறையும்.

**முடிவுரை**

இவ்வாறு தலைவன்—தலைவி வாழ்க்கையில் பரத்தையர் நுழைதல் சிறுபான்மையேயாகும். ஆயின், இச்சிறுபான்மையும் வெறுக்கத்தக்கதே. உள்ளன்பு கொண்டு ஒருவரையொருவர் உறவாடி மணந்துகொள்ளும் வாழ்க்கையில் பரத்தமை நுழைதல் இழிவாகும். அது நுழையாமற் காத்தலே பண்புடையாளர் செயலாகும்.

# 4. வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை

வாழ்க்கை நெறி பொருந்தத் திருவள்ளுவர் **இல்லறவியல்** என்னும் தலைப்பில் இல்வாழ்க்கைக்குரிய செய்திகளை இருபது அதிகாரங்களால் கூறுகின்ருர். இல்வாழ்க்கையின் இலக்கணம், வாழ்க்கைத் துணைவியின் இலக்கணம், மக்கட்பேறு, இல்லறத்தார்க்கு இருக்க வேண்டும் அன்புடைமை, விருந்தோம்பல் பண்பு, இனியவை கூறும் இயல்பு, செய்ந்நன்றியறிதல், அறத்தில் வழுவாது நடுநிற்றல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, பொருமை கொள்ளா

திருத்தல், பிறர் பொருளை வவ்வக் கருதாமை, புறங் கூறுமை, பயனற்ற சொற்களைச் சொல்லாமை, தீய வற்றைச் செய்வதற்கு அஞ்சுதல், உலகநடையை அறிந்து நடத்தல், ஈகைக்குணம், இவ்வனைத்துப் பண்பு களாலும் இறவாத புகழ் பெறுதல் என்பன வள்ளுவரால் முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. இல்வாழ்க்கை வாழும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இவையனைத்தும் தேவை என்பது வள்ளுவர் கருத்து. உண்மையும் அதுவேயாகும். இனி, இவ்வொவ்வொன்றனைப் பற்றியும் வள்ளுவர் கூறுவதைக் காண்போம் :

**வாழ்க்கைத்துணை நலம்**

'உன்னை மணந்துகொண்ட கணவனையே பற்றுக் கோடாகக்கொண்டு அவன் விரும்பும் முறையில் இல் லறத்தை நடத்துவாயாக', என்று மணநாள் அன்று பெரியோர் **கற்பித்த** முறைப்படி நடப்பவள் '**கற்புடை யாள்**' எனப்படுவாள். அக்கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துக்கொண்டு, தன் கணவனையும் உணவு முதலியவற்ருல் பேணி, இருவரிடத்தும் புகழ் நீங்காமல் காத்து, நற்குண நற்செய்கைகளில் வழுவாமல் இருப் பவளே **பெண்** என்று சொல்லப்படுவாள். அவள் கணவனது வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்து வாள்; துறந்தவரைப் பாதுகாத்தலும், விருந்தினரை உப சரித்தலும், வறியவரிடம் அருளோடு நடந்து கொள்ளு தலும் அவளுடைய நற்குணங்களாகும். வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தலும் சமையல் தொழில் திறமையும் உலகநடைக்கு ஏற்ப நடத் தலும் அவளுடைய நற்செயல்களாகும். இவை அமையப் பெருத மனைவி இருக்கும் வீடு, எவ்வளவு செல்வம் இருந் தாலும் பிற சிறப்புக்கள் இருந்தாலும் வீடாகக் கருதப் படாது. மேலே சொல்லப்பெற்ற நற்குணங்களையும் நற் செயல்களையும் உடைய மனைவி இருக்கும் வீடு பொருள்

வசதி அற்றதாயினும், இன்பம் தரும் இனிய வீடாகக் கருதப்படும். கற்பு என்னும் திண்மையை உடைய மனைவியைப் பெற்றவனே பேறு பெற்றவன். அவனே பிற போகபாக்கியங்களைப் பெற்றவனைவிடச் சிறந்தவனுவான். கற்புடைய மனைவியைப் பெற்றவன் சமுதாயத்தில் சிங்க ஏறு போலப் பெருமித நடை நடப்பான். அஃதாவது, கணவன், மனைவியின் நற்குண நற்செயல்களாற்ருன் இல்லற இன்பம் துய்த்துச் சமுதாயத்தின் பாராட்டைப் பெறுவான் என்பது. மனைவியினது சிறப்பே கணவனுக்கு மங்கலத்தைத் தரும். இச்சீரிய பண்புநலம் வாய்ந்த மனைவிக்கு அவளது உள்ள உறுதியே காவலாகும். இத்தகைய மனையாளைப் பெற்றவன் பேறு பெற்றவனுவான்.

### மக்கட் பேறு

சிறந்த மனைவாழ்க்கைக்கு மக்கட்பேறே மிக்க அழகாகும். அம்மக்களைக் கல்வி கேள்வி ஒழுக்கம் இவற்ருல் சிறக்கச் செய்து சான்ருேர் அவையில் முன்வரிசையில் இருக்கச் செய்தலே பெற்ருேர் கடமையாகும். தன் மகன் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்தவன் என்று பிறரால் புகழப்படும்பொழுது தாய், அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள். மக்களது அறிவுடைமை சமுதாயத்திற்குப் பயன்படும். ஆதலால் அவர்களை அறிவுடையவர்களாகச் செய்யும் பெற்ருேர் அம்மக்களுக்கும் சமுதாயத்திற்கும் ஒருங்கே தொண்டு செய்தவராவர். பெற்ருேரால் நன்முறையில் வளர்க்கப்படும் மக்கள், 'இவர்களைப்பெற இவர் பெற்ருேர் எத்தவத்தைச் செய்தனரோ!' என்று பாராட்டத்தகும் முறையில் அறிவுத்துறையில் முன்னணியில் நிற்கவேண்டும். அறிவறிந்த மக்கள் பெற்ருேர்க்குச் செய்யும் கடமை இதுவேயாகும்.

குழந்தைகள் வாழ்க்கையை வளப்படுத்தும் விளக்

கங்கள் ஆவர். அவர்கள் பெற்றோர் உண்ணும்பொழுது அவ்வுணவுப் பொருள்களைத் தம் சிறு கைகளால் துழாவுவர். அங்ஙனம் துழாவப்பெற்ற உணவுப் பொருள்கள் அன்பு மிகுதியால் அமிழ்தினும் மிக்க சுவையைத் தரும். குழந்தையின் உடம்பைத் தீண்டுவது பெற்றோர் உடம்பிற்கு இன்பத்தைத் தரும்; அவர்தம் சொற்களைக் கேட்பது செவிக்கு இன்பத்தைக் கொடுக்கும். மக்களின் மழலைச் சொற்கள் குழலிசையைவிட - யாழிசையைவிட இனியவையாக இருக்கும். இத்தகைய மக்களைப் பெற்ற வீடு இன்பம் தரும் இனிய வீடாகும்.

### அன்புடைமை

அன்பு என்பது மனைவி, மக்கள், உற்றார், பெற்றார் முதலியவர்மீது செல்லும் பிரியம். பின்பு அது படிப்படியாக வளர்ந்து அனைவர்பாலும் செல்லவல்லது. வாழ்வரசியாக இருக்கும் மனைவிமீது கணவனுக்கு அன்பு இல்லையாயின், இல்வாழ்க்கை பழுதுபடும். அவ்வாறே கணவன்மீது மனைவிக்கு அன்பு இல்லையாயின், இல்வாழ்க்கை நரகவாழ்க்கையாகும். ஆதலின் இல்வாழ்க்கைக்கு **அன்பு** அடிப்படையாகும். அன்பு கணவனையும் மனைவியையும் முதலில் பிணிக்கின்றது ; பின்பு குழந்தைகளையும் பிணிக்கின்றது. அன்பு இருக்கும் இடத்தில் இன்பம் குடியிருக்கும். அன்பு என்னும் நற்பண்பையுடையவர் தந்நலம் விரும்பும் கீழ்மக்களாக இரார். அன்புடையவர் சொல்லாலும் பொருளாலும் உடம்பாலும் பிறர்க்கு உதவுவர். முதலில் உற்றார் உறவினரிடம் செல்லும் அன்பு, பின்பு அயலாரிடத்தும் விரும்பிச் செல்லும். அப்பொழுதுதான் அவனுக்குப் பகைவரும் அயலாரும் இரார். இவ்வுலகத்தில் இல்வாழ்க்கையில் நின்று இன்பம் நுகர்ந்து இல்லறத்தால் அடையும் சிறப்பு அன்பின் பயன் என்று அறிஞர் அறைவர். அறத்திற்கு மட்டும் அன்பு துணையாவதன்று; தீயவினை நல்லவனுக்கவும் அன்பு

பயன்படும். மனத்தில் அன்பில்லாத ஒருவர் இல்லறத்தில் இருந்து வாழ்தல், வலிய பாலைநிலத்தில் பட்டுக்கிடக்கும் மரம் தளிர்ப்பது போன்றதாகும். சுருங்கக்கூறின், அன்புடைய உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்பும் தோலும் போர்த்த உடம்பாகும்.

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் இல்வாழ்க்கையின் உயிர் நாடியாகும். விருந்து - புதுமை. விருந்தினர் - புதியவர்; தாம் முன்னர் அறியாதவர். ஏழைகள், நன்னிலையில் இருந்து கெட்டவர், ஊர் விட்டு ஊர் வந்தவர், இவர் போன்றுர் பிறரும் விருந்தினர் எனப்படுவர். இவர்களை உபசரித்து உண்பித்தல் இல்வாழ்வார் கடமையாகும். இவர்கள் தன் வீட்டுத் திண்ணையில் இருக்க, ஒருவன் தான்மட்டும் உண்ணுதல் அறமாகாது. தன்னை நோக்கிவரும் விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனது இல்வாழ்க்கை சிறப்படையுமேயன்றிச் சீர்கெடாது. விருந்தினர் உள்ளம் குளிர உணவளிப்பவன் வேள்வி செய்து பெறவேண்டும் பயன் ஒன்றுமில்லை. பொருளுடையவர் விருந்தோம்பலைப் பாதுகாக்க வேண்டும். பொருளிருந்தும் அறிவில்லாதவர் விருந்தோம்பலைக் கைவிடுவார். அனிச்சப்பூ மோப்பக் குழையும்; அதுபோல உபசரிப்போர் முகம் வேறுபடின் விருந்தினர் மனவாட்டமடைவர். ஆதலால் இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர் அகமும் முகமும் மலரத் தம்மால் இயலும் வரையில் விருந்தினரை உபசரித்தல் நல்லது.

## இனியவை கூறல்

இல்வாழ்வார்க்கு அடுத்து இருக்கவேண்டும் பண்பு இனியவை கூறல் என்பது. கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும், இவ்விருவரும் பிள்ளைகளிடமும் இனிய சொற்களைப் பேசுவராயின், இல்லத்தில் இன்பம்

நிறைந்திருக்கும். இப்பண்பு இல்லறத்தாரிடம் வளரு மாயின், விருந்தினரிடமும் பிறரிடமும் இனிய சொற் களையே பேசுவர். பிறர்க்கு இனிமை தராத சொற்கள் காய் போன்றவை; இனிமை தரும் சொற்கள் கனி போன்றவை. நமக்குக் காய் வேண்டுமா? கனி வேண்டுமா? கனியை விரும்புவதுதான் அறிவுடைமை. அதுபோல இனிய சொற்களைப் பேசுதல் இல்லறத்தார் கடமையாகும். முகமலர்ச்சியோடு இனிமையாகப் பேசு பவர் பொருளுதவி செய்யாவிடினும், வறியவர் ஆறுத லோடு அவர்களை வாழ்த்திச் செல்வர். ஒருவரைக்கண்ட பொழுதே அவரை முகமலர்ச்சியோடு நோக்கி இனிய சொற்களாற் பேசுவதே அறம் என்று அறிஞர் கூறு கின்றனர். எல்லோரிடமும் இன்பத்தை உண்டாக்கும் இனிய சொற்களைப் பேசுவோர்க்குத் துன்பம் தொடராது. எல்லோரிடத்திலும் பணிவும் இனிய சொற்களைச் சொல்லு தலும் உடைய ஒருவர்க்கு வேறு சிறப்புத் தேவையில்லை. பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து இனிய முறையில் சொல்லுவோர்க்கு நன்மையே வரும். பிறர் மனத்தை வருத்தாத இனிய சொல், அதனைச் சொல்வோனுக்கு இம்மையிலும் மறுமை யிலும் இன்பத்தைத் தரும். இங்ஙனம் இனியவைகூறல் எல்லோர்க்கும் இன்பத்தைத் தந்து தன்னையும் உயர்த்து வதை அறிந்தும், ஒருவன் வன்சொற்களைப் பேசுவது அறிவுடைமையாகாது அன்றோ? எனவே, இல்லறம் நல் லறமாக் வேண்டுமாயின், இனிய சொற்கள் இன்றியமை யாதவை. சமுதாயத்தில் நல்லவர் என்று பெயர் எடுக்க வேண்டுமாயின், இனிய சொற்கள் தேவைப்படுவனவே யாகும்.

**செய்ந்நன்றியறிதல்**

செய்ந்நன்றியறிதல் என்பது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழு

வாது நடத்துவோர்க்கு இந்நற்பண்பு இருத்தல் வேண்டும். ஆதலின் அறிவிற் சிறந்த திருவள்ளுவர் இனியவை கூறலை அடுத்து இதனைக் கூறியுள்ளார்.

தனக்கு முன்பு ஓர் உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் பிறருக்கு உதவிசெய்கிறான். அவ்வுதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்பது வள்ளுவர் கருத்து. அதனால் அவர், ஒருவனுக்குத் தாங்கமுடியாத துன்பம் வந்தபொழுது ஒருவன் செய்த உதவி, தன்னை நோக்கச் சிறியதாய் இருந்தாலும், அக்காலத்தை நோக்க நிலவுலகத்தைவிட மிகப் பெரியதாகும் என்கிறார். இவர்க்கு இது செய்தால் நாம் இன்ன பயனைப் பெறலாம் என்பதை எண்ணாதவராய்ச் செய்த உதவியை ஆராயின், அதன் நன்மை கடலினும் பெரிது என்று கூறலாம். தக்க காலத்திற் செய்த உதவி தினையளவாக இருப்பினும், அறிவுடையோர் அதனைப் பனையளவாகக்கொண்டு பாராட்டுவர். துன்பக்காலத்தில் இங்ஙனம் உதவி செய்பவரது நட்பை விடலாகாது; அதனை என்றும் நினைப்பது நல்லோரது கடமை. ஒருவன் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறப்பது நல்லது; ஆனால் ஒருவன் செய்த நன்மையை மறப்பது அறமாகாது. தனக்கு முன்பு ஒரு முறை நன்மை செய்தவன் பின்பு மிகக்கொடிய செயலைச் செய்தானாயினும், அவன் முன்பு செய்த நன்மையை எண்ணிப் பின்பு செய்த தீமையை மறத்தலே பெருந்தன்மை. பசுவின் காம்பை அறுத்தல், மகளிர் கருவினைச் சிதைத்தல் முதலிய கொடுமைகளைச் செய்வோருக்குக் கழுவாய் உண்டு. ஆயின், ஒருவர் செய்த நன்றியை மறந்தவற்குக் கழுவாய் இல்லை. ஆதலால் ஒருவன் செய்த உதவியை மறவாது போற்றுவதே மாண்புடையது.

### நடுவுநிலைமை

பகைவர், நண்பர், அயலார், நமக்கு உதவி செய்தவர் என்ற எத்திறத்தாரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமையே நடுவுநிலைமை என்பது. ஒருவன் பகைவன், அயலான், நண்பன், தனக்கு உதவிசெய்தவன் என்னும் இவரிடம் நடுவுநிலைமையிலிருந்து தவருது நடத்தலே அறம் என்று சொல்லலாம். நடுவுநிலைமை உடையவன் அறநெறி தவறி வாழான். ஆதலால் அறநெறியில் நடப்பதால் வரும் புகழ் அவன் இறந்த பின்பும் நிலைத்து நிற்கும். எனவே, தனக்குச் சுயநன்மை இருப்பதாயினும், நடுவுநிலையிலிருந்து தவறுவதால் வரும் செல்வத்தை விரும்பாதிருத்தலே அறமாகும். மனத்தின்கண் நடுவுநிலையிலிருந்து பிறழாமையே சான்றோர்க்கு அழகாகும். முன்னே தான் சமனாக நின்று, பின் தன்னிடம் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாம்போல நடுவுநிலையிலிருந்து ஒரு பக்கத்தும் சாயாமை கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்த பெருமக்கட்கு அழகாகும்.

### அடக்கமுடைமை

மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் தீயநெறியிற் செல்லாமல் அடங்குதல் உடையராய் இருத்தல் அடக்கமுடைமை எனப்படும். பகைவர் செய்த குற்றத்தை நிறுக்கும் உணர்ச்சியோடு தாம் செய்த குற்றத்தையும் நிறுக்கின்ற நடுவுநிலைமையையுடையவர் அடக்கத்தை அணிகலனாகக் கொண்டவராவர். அடக்கம் ஒருவனைத் தேவர் உலகத்து உய்க்கும்; அடங்காமை நரகத்தில் தள்ளும். அஃதாவது, அடக்கமுடையவன் இன்பத்தைத் துய்ப்பான், அடங்காதவன் துன்பத்தை நுகர்வான் என்பது பொருள். மனம் ஒன்றை எண்ணும்; அவ்வெண்ணம் சொல்லாகத் தோன்றும்; உடல் தொழிற் படும்போது அவ்வெண்ணம் செயலின் உருவத்தை

அடையும். எனவே, செயலுக்கு மனமே முதற்காரணமாக அமைகின்றது. ஆதலால் மன அடக்கம் உடையவன் மொழி அடக்கம் உடையவனுவான்; செயல் அடக்கம் உடையவனும் ஆவான்.

அடக்கமே பெறுதற்கரிய செல்வம். அதனை உறுதிப் பொருளாகக்கொண்டு அழியாமற் காப்பவனே அறிஞன். அவ்வடக்கம் அறிஞரால் அறியப்பட்டு அவனுக்கு உயர்வைத் தரும். இல்வாழ்க்கை ஆகிய தன் நெறியி லிருந்து வேறுபடாது நின்று அடங்கியவனது உயர்ச்சி, மலையின் உயர்ச்சியைவிட மிகப்பெரிதாகும். பெருமித மின்றி அடங்குதல் எல்லோருக்கும் நல்லது; செல்வர் அடங்கியிருத்தல் மேலும் சிறப்புடையது. ஆமை தன் ஐந்து உறுப்புக்களையும் அடக்குதல்போல் ஐம்பொறிகளை யும் தீயநெறிகளிற் செல்லாமல் நடத்துபவன் மிகச் சிறந்தவன். ஒருவன் எதனைக் காக்க முடியாவிடினும் நாவைமட்டும் காத்தல் சிறந்தது; அதனைக் காவானுயின் சொற்குற்றத்தால் துன்புறுவான். ஒருவனையொருவன் தீயினுற் சுட்டபுண் உடம்பில் இருக்கும்; மனத்தில் பதியாது; ஆனுல், நாவினுல் சுடப்பட்ட வடு மனத்திற் பதிந்துவிடும்; அது என்றும் ஆருது. ஆதலால் மனத் தில் கோபம் தோன்ருமல் ஒவ்வொருவரும் காக்க வேண்டும்.

## ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் ஒவ்வொருவருக்கும் சிறப்பினைத் தரும். ஆதலால் அஃது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்பட வேண்டுவதாகும். மனிதன் நேர்மையான வாழ்க்கைக் குரிய பாதையிற் செல்லுதலே ஒழுக்கம் என்பது. அப்பாதையினின்றும் வழுவுவானேயாயின், அவன் கீழ் மகனுகக் கருதப்படுவான். ஆதலின் ஒழுக்கத்தினை எதனுலும் அழிவுபடாமல் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் தவறியவன் இழிபிறப்பாளனுய்க் கருதப்

படுவான். பொருண்மையுடையவன் வாழ்க்கையில் முன்னேற மாட்டான்; அவனைப்போலவே ஒழுக்கமில்லாதவனும் சமுதாயத்தில் மதிப்பைப் பெறமாட்டான். ஒழுக்க முடைமைக்கு மனவுறுதி வேண்டும். மனவுறுதி இல்லா தார் ஒழுக்கமுடையவராய் இருத்தல் அரிதாகும். நல்ல ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் அமைந்து இருமையி லும் இன்பம் பயக்கும்; தீய ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையிலும் துன்பம் பயக்கும். ஒழுக்க முடையவர் மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லார். கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்த பெருமக்களது ஒழுக்க நெறியைப் பின்பற்றி நடவாதவர், பல நூல்களைக் கற்றவராயினும் அறிவற்றவர் என்றே அறிஞரால் கருதப்படுவர்.

### பிறனில் விழையாமை

காம மயக்கத்தால் பிறனது மனையாளை விரும் பாமையே 'பிறனில் விழையாமை' என்பது. ஒழுக்க முடையவரே இங்ஙனம் விழையார். இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஒருவன் நண்பர் பலரைப் பெற்றிருப்பான். அவன் அவர்தம் ஒழுக்கத்தை ஐயுறுமல் தன் வீட்டில் அவர்களைப் பழகவிடுவான். அத்தகைய நிலையில் அவனது இல்லாளை விரும்பும் நண்பர் தீநெறிப்பட்டவரே ஆவர். அத்தகையோர் இறந்தாரேயாவர் என்பது வள்ளுவர் கருத்து. எத்துணைப் பெருமையுடையவ ராயினும் பிறன் மனைவியை விரும்புவோர் அற்பராய்க் கருதப்படுவர்; இந்திரனைப்போல எல்லாப் பெருமைகளை யும் இழந்து சிறுமை அடைவர்; என்றும் நிலைநிற்கும் குடிப்பழியினையும் அடைவர். பகை, பாவம், அச்சம், குடிப்பழி என்னும் நான்கு குற்றங்களும் அவரை விட்டு அகலா. பிறன் மனைவியை உள்ளத்தாலும் நினை யாதவனே பேராண்மையுடைய ஆண்மகன். அவனே

அறனுடையவன்; ஒழுக்கமும் உடையவன் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

### பொறையுடைமை

ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது அறியாமையாலோ ஒருவன் தனக்குத் தீமை செய்த போது, தானும் அவனுக்குத் தீமை செய்யாது பொறுத் திருத்தல் பொறையுடைமை எனப்படும். நெறியல்லாத வற்றைச் செய்தவனையும் பொறுக்கவேண்டுவதே பெருந் தன்மை. தன்னைத் தோண்டுபவரையும் நிலம் தாங்கி நிற்கிறது. அதுபோலத் தன்னை அவமதிப்பவரைப் பொறுத்தல் மிகச்சிறந்த அறமாகும். ஒருவன் செய்த பிழையைப் பொறுத்தல் நல்லது. ஆனால் அப்பிழை செய்யப்பட்டபொழுதே அதனை மறந்துவிடுதல் அப்பொறு மையிலும் நல்லதாகும். அறிவின்மையால் தீமை செய்ப வரைப் பொறுத்தல் 'வன்மையுள் வன்மை' என்று சொல்லலாம். பொறுமையைக் கைவிடாதவன் 'சான் றோன்' என்று போற்றப்படுவான். பிறர் தனக்குச் செய்யும் தவறுகளைப் பொறுப்பவனை அறிவுடையோர் பொன்போல் பாராட்டுவர். தமக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தவர் ஒருநாளை இன்பமே அடைவர். ஆயின், தீங்கு செய்தவனைப் பொறுத்தவர் உலகம் உள்ளளவும் புகழ் பெறுவர். மனச் செருக்கால் தன்னிடம் தீயவற்றைச் செய்தாரைத் தான் தனது பொறுமையால் வெல்லுதலே சிறப்பாகும். நன்னெறியற்ற தீயவர் சொற்களைப் பொறுப்பவர், இல்வாழ்க்கையில் இருப்பினும், முற்றும் துறந்த முனிவரைப்போன்ற தூய்மை உடையவராவர்.

### பொறாமைப் படாதிருத்தல்

பொறாமை என்பது மனிதனது உயர்ச்சியைக் கெடுக்கும்; ஊக்கத்தைச் சிதைக்கும்; உழைப்பைப் பாதிக்கும். இல்லறத்தான் இத்தீய குணத்தால் பீடிக்கப்

படுவனுயின், அவனுடைய உயர்ச்சி, ஊக்கம், உழைப்பு என்னும் மூன்றும் கெட்டுவிடும். இவை காரணமாக அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் அனைத்தும் கெட நேரிடும்; இல்லறம் நல்லறமாகத் திகழாது. ஆதலின் பொறாமை என்னும் தீய பண்புக்கு ஆட்படாமல் ஒவ்வொரு இல்லறத்தானும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒருவனது ஆக்கத்தினையும் முற்போக்கினையும் கண்டு தானும் அவ்வாறு ஆக்கம் பெறுதல் வேண்டும், முற்போக்கு அடைதல் வேண்டும் என்று எண்ணுபவன் ஊக்கம் பெறுவான் ; ஊக்கத்திற்கு ஏற்ப உழைப்பான் ; அதனுல் ஆக்கம் பெறுவான். இவற்றிற்கு மாருகப் பொறாமைப்படுபவன் தன்னைத்தானே அழித்துக் கொள்பவனுவான் ; அதனுல் தானும் கெடுவதன்றித் தன்னைச் சார்ந்தாரையும் கெடச் செய்வான். பொறாமைப் பேயால் பற்றிக்கொள்ளப்பட்ட ஒருவன் இம்மையில் மன அமைதியை இழப்பான்; அதனுல் வாழ்வையும் இழப்பான். பொறாமைப்பட்டு உலகில் பெருமையடைந்தவன் ஒருவனும் இல்லை ; அவ்வாறே பொறாமைப்படாததால் சிறுமையடைந்தவனும் இல்லை. எக்காரணம் கொண்டேனும் பிறரது ஆக்கம் கண்டு பொறாமைப்படுதல் தீயது.

**வெஃகாமை**

பிறர்க்கு உரிய பொருளை வவ்வக் கருதாமையே 'வெஃகாமை' எனப்படும். பிறரது பொருளைக் கண்டவுடன் அது தன்னிடம் இல்லையே என்று பொறாமைப் படுதல் தவறு ; அதனை அபகரித்துக்கொள்ளக் கருதுதல் அதனினும் தவறு. இச்செயல் ஒருவனது குடியைக் கெடுப்பதோடு, பல குற்றங்களுக்கும் அவனை ஆட்படுத்தி விடும். அறநெறியிற் செல்பவர் பிறர் பொருளை வவ்வி, அதனுல் வரும் நிலையற்ற இன்பத்தை விரும்பமாட்டார் ; தம் வறுமையைப் போக்கப் பிறர்பொருளை விரும்பார். பல நூல்களைக் கற்றும் பிறர் பொருளை அபகரிக்க எண்ணு

வோர் கற்றறி மூடரேயாவர். அருளாகிய அறத்தை விரும்பி, அதற்கு வழியாகிய இல்லறத்தில் இருப்பவன், பிறர் பொருளை வவ்விக் குற்றப்படுதல் தவறு. பிறர் பொருளை வவ்வி அதனால் வரும் ஆக்கத்தை விரும்பின், அவ்வாக்கம் நற்பயன் விளைவியாது. வவ்வியோன் மனச் சான்றே அவன் உள்ளத்தைச் சுட்டுக்கொண்டிருக்கும். பிறர்பொருளை வவ்வ நினையாதவனே ஆக்கம் பெறுவான்.

**புறங்கூறாமை**

ஒருவன் இல்லாத இடத்தில் அவனை இகழ்ந்து பேசா திருத்தலே ‘புறங்கூறாமை’ எனப்படும். ஒருவன் அறம் என்று சொல்லப்படுவதைச் செய்யாமல் தீமை தரத்தக்க செயல்களைச் செய்வானாயினும், பிறனைப் புறங்கூறாமல் இருப்பின், உலகத்தாரால் பாராட்டப்படுவான். அறம் என்பது ஒன்றில்லை என்று வாதிட்டு, அதன் மேல் பாவங் களைச் செய்வதைவிட, ஒருவனை இல்லாத இடத்தில் இகழ்ந் துரைத்து நேரிற் கண்டவுடன் பொய்நட்புக் கொள்ளுதல் கொடிய தீமையாகும். இவ்வாறு செய்வதைவிட ஒருவன் இறந்துபடுதல் நல்லது. ஒருவன் எதிரில் கண்ணோட்டம் இல்லாமல் அவனைக் கடிந்து பேசலாம்; ஆயின், அவன் இல்லாதபோது அவனைப்பற்றித் தவறான சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது. புறங்கூறுவோன் அறத்தை அவமதிப்பவனாவான். கூடி மகிழும்படி இனிய சொற் களைச் சொல்லி அயலாரோடு நட்புக்கொள்ள அறியா தவரே புறங்கூறித் தம் சுற்றத்தாரையும் பிரியும்படி செய்வர். தம் உற்றார் உறவினரது குற்றத்தை அவர் இல்லாத பொழுது தூற்றும் இயல்புடையார், பிறரிடம் என்னதான் செய்யார்! புறங்கூறுவோன் நிலத்திற்குச் சுமை போன்றவன். பிறரைப் புறங்கூறுவோர், புறங்கூற லாகிய தமது குற்றத்தை எண்ணிப்பார்ப்பின், புறங் கூறார். இத்தகைய அறிவு பெறுவதே ஒவ்வொருவரது கடமையாகும்.

## பயனில சொல்லாமை

தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்களுள் ஒன்றும் தராத சொற்களைச் சொல்லாதிருத்தலே 'பயனில சொல்லாமை' எனப்படும். பொய், கோள் சொல்லுதல், கடுஞ்சொல் கூறல், பயனில சொல்லுதல் என்பன வாக்கின்கண் நிகழும் குற்றங்கள். இவற்றுள் கோள்சொல்லுதல் புறங்கூறாமையால் விலக்கப்பட்டது; கடுஞ்சொல் இனியவை கூறலால் விலக்கப்பட்டது. பொய் ஆங்காங்குக் கடியப்பட்டது. எனவே, பயனில சொல் இங்கு வற்புறுத்தப்படுகின்றது.

அறிவுடையவர் பலரும் கேட்டு வெறுக்கும்படி பயனற்ற சொற்களைச் சொல்லுபவன் எல்லோராலும் இகழப்படுவான். பயனற்ற பொருள்களை விரித்துரைக்கும் ஒருவனை நெறியற்றவன் என்று உலகம் இகழும். ஒருவன் பண்பற்ற சொற்களைப் பலரிடைச் சொல்லுவானாயின், அப்பலரும் அவன்மீது வைத்திருந்த மதிப்பை விட்டு விடுவர். பயனில்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுபவனை 'மகன்' என்று சொல்லலாகாது; மக்களுள் 'பதர்' என்று சொல்ல வேண்டும். சான்றோராயினும் அறத்தொடு படாத சொற்களைச் சொல்லுதல் குற்றமேயாகும். சிறந்த அறிவும் ஒழுக்கமும் உடைய பெருமக்கள் பயனற்ற சொற்களைச் சொல்லார். சொற்களில் கேட்பாருக்குப் பயன்தரத்தகும் சொற்களைப் பேசவேண்டும்; பயன் தராத சொற்களை விட்டொழித்தல் வேண்டும்.

## தீவினை அச்சம்

தீய காரியங்களைச் செய்வதற்கு அஞ்சுதலே 'தீவினையச்சம்' எனப்படும். இதனால் உடம்பால் நிகழும் தீச்செயல்கள் எல்லாவற்றையும் தொகுத்து வள்ளுவர் விளக்குகின்றார். தனக்கு இன்பத்தைத் தரும் என்று எண்ணி ஒருவன் செய்யும் தீயசெயல்கள் அவனுக்குத் துன்பம் பயத்தலையே காண்கிறோம். ஆதலால் அவற்றைச்

செய்ய ஒவ்வொருவரும் அஞ்சுதல் வேண்டும். தம் பகைவரிடத்தும் தீயசெயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்த அறிவு என்று அறிஞர் அறைவர். பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை எண்ணுகின்றவனுக்கு அறக் கடவுள் கேடு செய்யும். தன் வறுமை நீங்குவதற்காகப் பிறர்க்குத் தீமை செய்யும் ஒருவனை வறுமை பற்றிக் கொள்ளுமே தவிர, விட்டு நீங்காது. பிறர்க்குச் செய்யும் கேடுகள் பின் வந்து நம்மை வருத்தும். தீவினையாகிய பகை மிகக் கொடியது. தன் நல்வாழ்வை விரும்பும் ஒருவன் பிறர்க்குத் தீமை செய்வதிலிருந்து விலகுதல் வேண்டும்.

இவ்வதிகாரம் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமை யாதது. பிறர் வாழ்வதைப் பொருது சிலர் அவர்க்குப் பலகேடுகளைச் செய்தலைக் காண்கிறோம். இங்ஙனம் கேடு செய்பவர் என்ன பயனை அடைகின்றனர்? நல்லறிவுடைய பலராலும் இழித்துரைக்கப்படுகின்றனர்; அதுகாறும் தாம் பெற்றிருந்த மதிப்பை இழந்து மானம் இழந்து வெட்கப்படுகின்றனர். நாம் இதனைச் சமுதாயத்தில் கண்கூடாகக் காண்கின்றோம். மனிதன் எதை விதைக் கிறானோ அதையே அறுவடை செய்கிறான். அதுபோலப் பிறர்க்குத் தீமை செய்பவன் தன்னை அறியாமல் தனக்கே தீமை செய்துகொள்கிறான். பிறன் கேடு தன் கேடு ஆகிறது. இந்த உண்மையை உணர்ந்து இல் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் பிறர்க்குத் தீமை செய்தலை மனத்தாலும் நினைத்தல் ஆகாது.

## ஒப்புரவு அறிதல்

உலகநடையினை அறிந்து—உயர்ந்தோர் செல்லும் நெறியினை அறிந்து—தாமும் அந்நெறியிற் செல்லுதலே ஒப்புரவு அறிதல் எனப்படும். அஃதாவது, பயன் கருதாது பொது நலத்திற்குரியவற்றைச் செய்தலே ஒப்புர வறிதல் எனப்படும். வள்ளுவர் இதுவரையில் மனம்,

மொழி, மெய்களால் விலக்க வேண்டுவனவற்றைக் கூறி யுள்ளார்; இங்குச் செய்யத் தகுவனவற்றைக் கூறுகின்றார். மேகங்கள் உலக உயிர்களுக்கு நீரை உதவுகின்றன. ஆயின், உயிர்கள் அம்மேகங்களுக்கு ஏதேனும் கைம்மாறு செய்கின்றனவா? இல்லை. அங்ஙனம் கைம்மாறு செய்யா திருப்பினும், மேகங்கள் தம் கடமையைச் செய்கின்றன. அவ்வாறே சமுதாய நலங்களுள், எவ்விதப் பயனையும் எதிர்பாராமல் இல்வாழ்வான் சில கடமைகளைச் செய்தல் வேண்டும்.

இங்ஙனம் சான்றோர் செய்த நல்லவற்றைச் செய்ப வன் உயிரோடு வாழ்பவனாவான்; இங்ஙனம் செய்யாத வன் இறந்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான். ஊருணி யில் உள்ள நீர் ஊர் மக்கள் எல்லோருக்கும் பயன்படு கிறது. அதுபோல உலக நடை அறிந்த அறிஞனது செல்வம் பலர்க்கும் பயன்படுதல் வேண்டும். ஊர் நடுவில் இனிய பழங்களைக் கொண்ட மரம் இருப்பின், அப்பழங் கள் ஊர் மக்களுக்குப் பயன்படும். அதுபோல விரிந்த மனப்போக்குடையவனது செல்வம் ஊர் மக்கள் நலத்திற் குப் பயன்படும். அச்செல்வம் தன்னை உடையானது பரந்த நோக்கால் ஊராருக்குப் பயன்படும்; மருத்துவ மனையாகவும், படிப்பகமாகவும், பள்ளியாகவும், உணவு விடுதியாகவும், பிறவாறாகவும் உருவெடுத்துப் பயன் தரும். இங்ஙனம் சமுதாய நலத்திற்குச் செலவிடுபவனே 'ஒப்புரவாளன்' எனப்படுவான். பொது நலத்திற்குத் தாம் செய்யத் தகுவனவற்றை அறிந்த அறிவுடையார், தமது செல்வம் சுருங்கிய காலத்திலும் பொது நன்மைக் குரியவற்றைச் செய்யத் தயங்கார். பொதுநலத் தொண் டால் ஒருவனது செல்வம் அழிந்துவிடும் என்றாலும், அவன் துணிந்து பொதுநலத் தொண்டு செய்வதே வர வேற்கத் தக்கது என்பது வள்ளுவர் கருத்து.

இல்லறத்தான் ஒருவன் தன் உழைப்பால் பெரும் செல்வத்தை ஈட்டுகிறான். அவன் அதனைத் தன் குடும்ப

அளவில் மட்டும் வைத்திருப்பின், 'சுயநலப் பேயன்' என்று உலகத்தாரால் இகழப்படுவான். அவன் ஈட்டும் பொருள் சமுதாயத்திலிருந்து வரும் செல்வமேயாகும். ஆதலால் தன் வாழ்வுக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு எஞ்சிய பொருளைச் சமுதாய நலனுக்கே செல விடுதல் நேர்மை. இச்சீரிய முறையினை அறிந்தே, அமெரிக்கக் கோடீசுவரர்கள் அறநிலயங்களை ஏற்படுத்தி, உலக நாடுகளில் எல்லாம் அறச் செயல்களைச் செய்து வருகின்றனர். இத்தகுதி உடைய செயலால் அவர்தம் புகழுடம்பு என்றும் நிலைத்திருக்க வழி உண்டாகிறது. நம் நாட்டிலும் **பச்சையப்ப முதலியார், இராசா. சர். அண்ணுமலைச் செட்டியார், டாக்டர். அழகப்பச் செட்டியார், மதுரைக் கருமுத்து. தியாகராசச் செட்டி யார்** போன்ற பெருமக்கள் சமுதாயத்திற்குப் பயன் பெறும் வகையில் பல அறங்களைச் செய்துள்ளனர். செல் வத்தில் இவரினும் குறைந்தவர் தத்தம் வசதிக்கேற்ற முறையில் சமுதாயத்திற்குப் பயன்படுதல் வேண்டும். இஃது ஒவ்வோர் இல்வாழ்வாரது சிறந்த கடமையாகும்.

**ஈகை**

நம்மிடம் ஏற்ற வறியவருக்கு 'இல்லை' என்று சொல் லாமற் கொடுத்தலே 'ஈகை' என்று சொல்லப்படும். ஒரு பொருளும் இல்லாதவனுக்கு அவர் வேண்டியது ஒன் றைக் கொடுப்பதே உண்மையில் 'ஈகை' எனப்படும்; பிறவகைக் கொடைகள் பயன் கருதிச் செய்வனவாகும். பிறரிடம் கைநீட்டி ஒன்றைப் பெறுதல் மேலுலகத்திற்கு நல்லது என்று கூறுதல் தீது; வறியவர்க்குக் கொடுப்ப வர்க்கு மேல் உலகம் இல்லை என்று சொல்லினும், ஏழை கட்கு உதவுவதே நல்லது. ஒருவன் 'இல்லை' என்று நம் மிடம் வந்து இரக்கும்போது, நாமும் 'இல்லை' என்று சொல்லுதல் தவறு; அவனுக்கு உதவுதலே அறம். ஏழை களது மிக்க பசியைத் தீர்ப்பது அறம். அங்ஙனம் செய்

யின், தனது மேல் உலக வாழ்க்கை என்னும் பயிர்க்கு ஒருவன் வித்திட்டது போலாகும்.

ஏழைகட்கு வழங்கி அவர்கள் மகிழ்வதைக் கண்டு தாம் மகிழ்தலே செல்வர் கடமையாகும். இங்ஙனம் செய்யாதவன் பொருளை வைத்து இழக்கும் வன்கண்ணன் ஆவான். வறியவர்க்குக் கொடாமல் தானே தனித்து உண்ணுதல், பிறரிடம் சென்று இரத்தலினும் இழிவானது. சாவு போன்ற கொடியது ஒன்றில்லை; வறியவர்க்கு ஒன்று கொடுக்க முடியாதபோது சாதல் இனிமை பயக்கும். அஃதாவது, இறப்பவனுக்குக் கொடுக்க முடியாத நிலை ஒருவனுக்கு ஏற்படுமாயின், அந்நிலையில் அவன் வாழ்தலைவிட இறத்தலே நல்லது. ஏழை எளியவர்க்கு உதவும் மனப்பான்மை இல்லாதவன் சமுதாயத்தில் இருப்பதைவிட இறந்துபடுதல் நல்லது என்பது வள்ளுவர் கருத்து.

### புகழ்

வறியவர்க்கு வழங்கலும் அதனால் புகழ் உண்டாக வாழ்தலும் 'வாழ்க்கை' எனப்படும். அப்புகழைத் தவிர மனிதன் பெறத்தக்கது வேறொன்றுமில்லை. வறுமையால் இறப்பார்க்குக் கொடுப்பதால் வரும் புகழே உலகத்தில் நிலைத்து நிற்பது. அத்தகையவன் அனைவராலும் வரவேற்கப்படுவான். ஈகையாற் புகழ் எய்தாதவனை மக்கள் இழித்துப் பேசுவர். ஈகையால் வரும் புகழ் பெறுதவரை, அவர் மறைந்த பிறகும் உலகத்தார் இகழ்ந்து பேசுவர். ஆதலால் தம்மிடம் வசை உண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவர்.

### இல்வாழ்க்கை

இங்ஙனம் வாழ்க்கைத் துணைநலம் முதலாகப் புகழ் ஈருக உள்ள அறநெறிகளிற் பிழையாமல் இல்வாழ்க்கை நடத்துபவரே இல்வாழ்க்கையால் வரும் பயனை அடைபவ

ராவர். மனைவியோடு இல்வாழ்க்கையில் இருப்பவனே சுற்றத்தாரால் துறக்கப்பட்டவருக்கும், வறியவர்க்கும், நாதியற்றவர்க்கும் துணையாவான். இம்மூவகையாரையும் காத்தல் அவன் கடமையாகின்றது. குடியில் தோன்றி இறந்த முன்னோரை நினைவு கூர்தல் இல்லறத்தானது கடமை; தனக்கு வாழ்வளித்த இறைவனைப் போற்றுதல் இல்லறத்தான் கடமை; தன் வீடு தேடிவரும் புதியவர்க்கு உதவுவதும் அவனது கடமை. தன்னினும் எளியராய்த் தன் உதவி தேடிவரும் உறவினர்க்கு உதவலும் அவன் கடமையாகும். இல்வாழ்வான் இக்கடமைகளிலிருந்து தவறலாகாது. இவற்றிற்கு அன்பு அடிப்படையாகும். அன்பு இல்வாழ்க்கையின் பண்பாகும்; அறவுணர்ச்சி இல்வாழ்க்கையின் பயனாகும். இவற்றை உணர்ந்து செயலாற்றுவோர் இல்லற இன்பத்தைக் குறைவின்றி அடைவர். இத்தகைய இல்வாழ்க்கை தவவாழ்வினும் சிறந்தது.

சமுதாய வாழ்விற்கு இல்வாழ்க்கையே அடிப்படை. இதுவே அறநூல்களால் சிறப்பித்துச் சொல்லப்படுவது. மேற்சொன்ன நெறிகளில் தவறாது இல்லறத்தில் வாழ்பவன் இந்நிலவுலகில் வாழ்பவனேயாயினும், மேல் உலகில் வாழும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்.

“ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.”

## 5. கண்ணகி இல்வாழ்க்கை

### கோவலன்—கண்ணகி திருமணம்

கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் கோவலன் கண்ணகி வரலாறு நிகழ்ந்தது. அப்பொழுது சோழநாட்டின் சிறந்த துறைமுகப் பட்டினமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளக்கமுற்றிருந்தது. உள்நாட்டு வாணிகத்தாலும் கடல் வாணிகத்தாலும் அப்பெருநகரம் செல்வ நகரமாகத் திகழ்ந்தது.

அந்நகரில் பெருங்குடி வணிகர் பலர் வாழ்ந்தனர். அவருள் **மாசாத்துவான், மாநாய்கன்** என்ற வணிகர் இருவரும் குறிக்கத் தக்கவர். மாசாத்துவான் மகன் கோவலன்; மாநாய்கன் மகள் கண்ணகி ; இருவரும் திருமணத்திற்கு முன்பு ஒருவரையொருவர் அறிந்திருந்தனர் ; ஒருவர் குணநலன்களை மற்றவர் தெரிந்திருந்தனர். கோவலனையே மணக்க வேண்டுமென்று கண்ணகி உறுதி பூண்டாள். இருவருக்கும் திருமணம் திருவுடன் தீர்ந்தேறியது.

**தனி வாழ்க்கை**

மணம் செய்துகொண்ட மகன் தன் மனைவியுடன் தனி மனையிலிருந்து இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது இன்று மேனுடுகளில் காணப்படும் வழக்கமாகும். இளங் காதலர்கள் எவ்விதத் தடங்கலும் இல்லாமல்—எவரது இடையீடும் இல்லாமல்—இன்பமாக வாழவேண்டும் என்பதே இத்தனி வாழ்க்கையின் முதல் நோக்கமாகும். மேலும், வரவுக்கேற்ற செலவு செய்யும் பயிற்சி அவ்விளங் காதலர்க்கு அமையவேண்டும் என்பது மற்ருெரு நோக்கமாகும். இத்தகைய தனிவாழ்க்கை முறை கோவலன் மரபினரான நகரத்துச் செட்டிமார்களிடம் இன்றும் இருந்து வருதல் கண்கூடு. ஒரே வீட்டில் தந்தையும் தாயும் வேறு குடித்தனம் நடத்துவர் ; மணம் செய்துகொண்ட மகன் தன் மனைவியோடு தனிக் குடித்தனம் நடத்துவன். ஒவ்வொருவருடைய வரவு செலவும் தனித்தனியாகக் கணக்கிடப் பெறும். இவ்வகையால் மணமகளுக்குத் தனிக் குடும்பம் நடத்த உரிமை வழங்கப்படுகிறது. தனது முழுப் பொறுப்பில் குடும்பம் நடத்த வேண்டும் என்னும் கவலை அவளுக்கு உண்டாகும். தன் குடும்பம்—தன் வீடு—தன் பொறுப்பு என்னும் எண்ணங்களே அவள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றன. புதிய இல்லத்திற்குத் தானே அரசி என்னும் எண்ணம் அவளை மகிழ்விக்கிறது.

கணவனும் மனைவியும் பிறர் இடையீடு இல்லாமல் நெருங்கிப் பழக வாய்ப்பு உண்டாகிறது. தனக்குக் குடும்ப வுரிமை அளித்த மாமன் மாமியரை மணமகள் வாழ்த்துவாள். அவர்களிடம் அவளுக்குத் தனி மதிப்பும் தனி அன்பும் உண்டாகும்.

ஒரே குடும்பத்தில் நாள்தோறும் மாமனும் மாமியாரும் இருக்க, இவர்களிடம் நெருக்குண்டு வாழும்போது அவள் உரிமை அற்ற நிலையில் உள்ளமுடைவாள்; தன் விருப்பம் போல எதனையும் உண்டு மகிழமுடியாமல் தவிப்பாள்; பலர் முன்னிலையில் கணவனை நெருங்கிப் பேச—ஆவல் இருந்தும்—அஞ்சுவாள். இவ்விடையூறுகளை நினைக்கும் போது, தன் மாமனாரையும் மாமியாரையும் வெறுப்பாள். அவ்வெறுப்பு அவளை அறியாது வளரும். இத்தொல்லைகள் யாவும் தனிக்குடும்ப வாழ்க்கையில் ஏற்படா. மணமகள் மாமனார் மாமியார்மீது தனிமதிப்புக் காட்டுவாள்; தனி அன்பு செலுத்துவாள். அவர்களும் அவ்வப்போது மகன் இல்லத்திற்கு வந்து நலன் விசாரித்து நன்முறையிற் செல்லலாம். உறவு நன்முறையிலேயே தொடர்ந்து இருக்கும். முடிமன்னன் வயது வந்த மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி, அவனுக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்குதல் போல, அறிவுடைய தாய் தந்தையர், மணம் செய்துகொண்ட மகனைத் தனிவீட்டில் வைத்தலே நேர்மையாகும்.

### தனி மனைவாழ்க்கை

இம்முறைப்படியே கோவலன் பெற்றோர் கோவலனையும் கண்ணகியையும் தனிமனையிற் குடியேற்றினர். அம் மனையில் எல்லாப் பொருள்களும் நிரம்பியிருந்தன. செல்வச் சீமானது இல்லத்தில் என்ன குறை இருக்கப் போகிறது! இருவரும் மேல்மாடியில் இருந்த நிலா முற்றத்தில் இன்பமாகப் பொழுது போக்கினர். செல்வக் குமரியாய் வளர்ந்த கண்ணகி எல்லா அணிகளையும்

அழகுற அணிந்து விளங்கினுள். இயற்கையழகு நிறைந்த தன் மனைவிக்குச் செயற்கையழகு தேவையில்லை—எனவே, அணிகளால் அவள் அழகு பெறவில்லை என்பது கோவலனது வாதம். "இவற்ருல் நீ பெறத்தக்க அழகு ஒன்றும் இல்லை. இவை மிகையே," என்று கோவலன் கூறினுன் :

> "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
> காசறு விரையே! கரும்பே தேனே!
> அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
> பெருகுடி வாணிகன் பெருமட மகளே!
> மலையிடைப் பிறவா மணியே! என்கோ!
> அலையிடைப் பிறவா அமிழ்தே! என்கோ!
> யாழிடைப் பிறவா இசையே! என்கோ!
> தாழிருங் கூந்தல் தையால்! நின்னை,"

என்று பலவாறு அவள் நலத்தைப் பாராட்டிச் சுவைத் தான். இவ்வாறு சில ஆண்டுகள் அவ்விருவரும் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக இல்லற இன்பம் துய்த்தனர். கோவலன்—கண்ணகி இல்லற வாழ்க்கையை மேலும் நன் கறிய விரும்புவோர், சிலப்பதிகாரம் மனையறம் படுத்த காதையை ஊன்றிப் படிப்பாராக. அக்காதையின் அடியில் வரும் அடிகளது வெண்பாவினுல் காதலரது ஒன்று கலந்த வாழ்க்கை நன்கு வெளியாதல் காண்க :

> "தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனஒருவர்
> காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
> தொலையாத இன்பமெலாம் துன்னினுர் மண்மேல்
> நிலையாமை கண்டவர்போல் நின்று."

## மாதவியின் கூட்டுறவு

கோவலன் இசைக் கலையில் பண்பட்டவன்; ஆடற் கலையில் அன்புடையவன்; சுருங்கக்கூறின், கலை யுணர்ச்சி மிக்கவன். அவன் ஆடல் பாடல்களிலும் அழகிலும் சோழநாட்டின் தலைமணியாக விளங்கிய

**மாதவி** என்னும் நாடக மடந்தையை நயந்தான்; நயந்து, அன்றுமுதல் கண்ணகியை மறந்தான்; மாதவியின் வீடே கதியென்று கிடந்தான். மாதவி பரத்தையர் மரபில் வந்தவளாயினும், ஒருவனுக்கே உரிமை பூண்ட காமக் கிழத்தி போலக் கோவலனிடமே உண்மை அன்போடு பழகி வந்தாள்.

கோவலன் பிரிவால் கண்ணகி அடைந்த துயரம் அளவிடற்கரியது. கணவன் இல்லாதபொழுது கற்புடை மங்கையர் தம்மை ஆடை அணிகளால் அழகு செய்து கொள்ளார். அம்முறைக்கு ஏற்பவே, கண்ணகி தன்னை அழகு செய்து கொள்ளவில்லை. அவளது கூந்தல் நெய்யை மறந்தது; நெற்றி திலகத்தை மறந்தது; விழிகள் தூக்கத்தை மறந்தன; கை முதலியவை நகைகளை மறந்தன. அவளது புன்முறுவலைக் கோவலன் இழந்தான். அடிக்கடி கோவலனால் பாராட்டப்பெற்ற இயற்கை அழகுடன் மட்டும் கண்ணகி தனித்திருந்தாள். அவளது துன்பநிலையைக் கண்டு ஆறுதல் கூற மாமனாரும் மாமியாரும் வருவர். ஆயின், அவர்கள் ஒன்றும் கூற முடியாதபடி, கண்ணகி மலர்ந்த முகத்துடன் அவர்களை வரவேற்பது வழக்கம். அவளது பாராட்டத்தகும் பண்பைக் கண்டு மாமனாரும் மாமியாரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைவர்; ஆனால் அதே சமயத்தில், கோவலனது அறியாமையை எண்ணி மனம் புண்படுவர்.

கோவலன் தன் செல்வமனைத்தையும் மாதவி பொருட்டுச் செலவிட்டான்; பின்பு கண்ணகி வைத்திருந்த நகைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக விற்றுத் தொலைத்தான். இவ்வளவிற்கும் கண்ணகி அவனைக் கடிந்துகொள்ளவில்லை; தன் விருப்பம்போல் நடக்கும்படி அவனை விட்டு விட்டாள்.

**கோவலன் மீட்சி**

கோவலனுக்கும் மாதவிக்கும் **மணிமேகலை** என்ற பெண் குழந்தை பிறந்தது. இந்திர விழாவின் கடைசியில் கடற்கரையில் கோவலனும் மாதவியும் யாழ் வாசித்துக்கொண்டே பாடினர். கோவலன் பாடிய பாடல், அவன் வேறு ஒருத்தியை விரும்பியதைப் போலக் காணப்பட்டது. மாதவி இதற்கேற்றாற் போன்றதொரு எதிர்ப்பாட்டைப் பாடினாள். அவள் வேறொருவன்பால் நாட்டமுடையாள் என்று கோவலன் தவறாக உணர்ந்தான்; உடனே அவளை விட்டுப் புறப்பட்டான். தன் தனி மனையை நோக்கி நடந்தான்.

**கற்புடை மடந்தை**

தான் தன் கணவனுடன் வேற்றூர்க்குச் சென்றதாகவும், அங்குக் கணவனுக்கு நீக்கமுடியாத துன்பம் உண்டானதாகவும், அவ்வூர் அரசனிடம் தான் சென்று வழக்குரைத்ததாகவும் கண்ணகி ஒரு கனவு கண்டாள்; அதனைத் தன் பார்ப்பனத் தோழியான தேவந்தியிடம் கூறினாள். அத்தோழி, "நமது கடற்கரையில் இருக்கும் திருக்குளத்தில் நீராடி மன்மதனை வேண்டினால், நீ கணவனோடு பொருந்திய வாழ்க்கையை அடைவாய்," என்றாள். கண்ணகி நகைத்து, "அங்ஙனம் செய்தல் நற்குடியிற் பிறந்த பெண்களுக்குப் பெருமையன்று," என்று சுருக்கமாக விடையிறுத்தாள். அவ்வமயம் அவள் எதிரில் கோவலன் தோன்றினான்.

"குன்றுபோல் உயர்ந்திருந்த செல்வம் அனைத்தையும் மாதவியின் பொருட்டுத் தொலைத்தேன்; அவள் மெய்யன்புடையவள் என்று எண்ணி ஏமாந்தேன். எனது செயல் எனக்கு நாணத்தைத் தருகின்றது," என்று கூறித் தலைகுனிந்தான். இங்ஙனம் அவன் பலமுறை வந்து கூறிக் கண்ணகியிடம் பல நகைகளைப் பெற்றுச் சென்றவனாதலால், கண்ணகி, வழக்கம்போல் தன்னிடம்

நகை கேட்க வந்திருக்கிருன் என்று நினைத்தாள்; அதனுல், "என் காற் சிலம்புகள் இருக்கின்றன. அவற்றைக் கொள்க," என்று சுருங்கக் கூறினுள்.

இவ்விடை கோவலனுக்குப் புதிய எண்ணத்தை உண்டாக்கியது. அஃதாவது, கண்ணகி தருவதாகச் சொன்ன காற்சிலம்பைப் புதிய ஊரில் விற்று, வரும் முதலைக்கொண்டு வாணிகம் நடத்தலாம் என்பது. அவன் தன் அகமுடையாளை நோக்கி, "நாம் மதுரை செல்வோம்; சிலம்பை விற்றுவரும் பணத்தைக்கொண்டு வாணிகம் செய்து வாழ்வோம். நீயும் என்னுடன் வா," என்று கூறினுன். அந்த யோசனைக்குக் கண்ணகி மன மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டாள்.

'தன்னை அதுகாறும் மறந்திருந்த கணவன் புதிய ஊருக்கு அழைக்கின்ருன்; அங்குத் தன்னை வைத்துக் கொண்டு ஒழுங்காகக் குடித்தனம் நடத்துவான் என்பது என்ன உறுதி? திண்ணிய மனவலிமை அற்ற அவனை நம்பித் தன் உற்ருர் பெற்ருரை விட்டுத் தான் எவ்வாறு செல்வது?' என்பன போன்றவை கண்ணகி மனத்தைக் கலக்கவில்லை. கணவன் விருப்பப்படி நடப்பது தன் கடமை என்பதை உறுதியாக எண்ணிய அவள், கணவன் அழைத்தவுடன் அவனுடன் செல்ல ஒருப்பட்டாள். இஃது அவளது தூய கற்பின் திறத்தைக் கவினுறக் காட்டுகின்றதன்ருே?

## வழிநடைச் செலவு

அன்று நள்ளிரவில் கோவலனும் கண்ணகியும் எவருக்கும் தெரிவியாமல் சோணுட்டுத் தலைநகரை விட்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டனர். செல்வத்திற் பிறந்து செல்வத்தில் வளர்ந்து செல்வச் சீமாஞக வாழ்ந்த கோவலன், தனது கூடா ஒழுக்கத்தால் குன்று போல் உயர்ந்திருந்த செல்வத்தை ஒழித்து ஏழையாஞன். மரத்தைச் சார்ந்து வாழும் கொடிபோல அவனைப் பின்

பற்றியே வாழவேண்டிய கண்ணகி, தன் நகைகளை யெல்லாம் இழந்து எளியவளானாள். கோவலனுக்குச் செல்வம் அழிந்தும் மான வுணர்ச்சி அழியவில்லை. அதனால் எவருக்கும் தெரிவியாமல் நள்ளிரவில் வேற்றூர் செல்லப் புறப்பட்டான். தன் தந்தை எவ்வளவு பெரிய செல்வனாயினும் தனக்குத் துணையாவான் கணவனே-இன் பத்திலும் துன்பத்திலும் அவனோடு பொருந்தி வாழ்தலே தன்னுடைய கடமை - என்பதை நன்கு உணர்ந்த கண்ணகி, கணவனை நிழல் போலப் பின்தொடர்ந்தாள். அதுகாறும் வெளியில் நடந்தறியாத அவளது மெல்லிய அடிகள் தனிவழியிற் சென்றன. தன் கணவன் தன்னை நாடி வந்துவிட்டான் என்ற ஒன்றே அவள் துன்பத்தைக் களைந்தது; துணிந்து வழிநடக்கச் செய்தது.

அவ்விருவரும் வழியில் கவுந்தியடிகள் என்னும் சமண சமயப் பெண் துறவியாரைச் சந்தித்தனர். அவ்வம்மையாரும் அவர்களோடு மதுரைக்குப் புறப் பட்டார். கோவலன் தான் இழைத்த தவறுகளையெல்லாம் தாயிடம் சேய் முறையிடுதல் போல அடிகளிடம் முறை யிட்டான். ஒருவன் தான் செய்த தவறுகளுக்காக வருந்துவானாயின், சீர்படுவது திண்ணம். ஆதலால் அடிகள் அவனுக்கு நல்வாழ்த்துக் கூறினார்; கண்ண கியின் நற்பண்புகளை நேரிற் கண்டு உள்ளம் குழைந்தார்; கோவலன் மனம் ஆறுதல் அடையும்படி நளன் முதலி யோரது துன்ப வரலாற்றை விளக்கினார். இங்ஙனம் பலவாறு பேசிக்கொண்டு மூவரும் பீடு மிக்க மாடமது ரையை அடைந்தனர்.

## ஆயர்பாடியில் கண்ணகி

கவுந்தியடிகள் **மாதரி** என்னும் இடைக்குல மடந் தையை அழைத்து, "இவ்விருவரும் பூம்புகார் நகரைச் சேர்ந்த பெருங்குடி வணிக மரபினர். இவர்கள் மதுரை வணிகரை அடையும்வரை நின் பாதுகாப்பில் இருக்கக்

கடவர். நீ இவர்களை அடைக்கலமாக ஏற்றுக்கொள். அடைக்கலம் காத்தோர் நற்பயன் பெறுவர்,'' என்று கூறினர். மாதரி அவ்விருவரையும் அழைத்துச் சென்று ஒரு தனி வீட்டில் குடி வைத்தாள்; சமையலுக்கு வேண்டிய புதிய மட்கலங்கள், புதிய காய்கறிகள் முதலிய வற்றை உதவினாள். மாதரியின் மகளான ஐயை கண்ணகிக்கு உதவியாக இருந்தாள். கண்ணகி பேரார்வத்துடன் சமையல் செய்தாள்; இலை போடுவதற்குரிய இடத்தைத் தூய்மை செய்து இலை போட்டு உணவைப் படைத்தாள். கோவலன் மட்டற்ற மகிழ்ச்சியோடு உணவருந்தினான். பின்பு கண்ணகி வெற்றிலையும் பாக்கும் கொணர்ந்து கொடுத்தாள்.

## உள்ளத்தை உருக்கும் உரையாடல்

தாம்பூலம் தரித்துக்கொண்ட கோவலனது உள்ளத்தில் எண்ண அலைகள் பாய்ந்தன. தன்னை அதுகாறும் புறக்கணித்த கணவனிடம் கண்ணகி காட்டிய அன்பு அவனது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவன் உள்ளம் உருகிய நிலையில் கண்ணகியைத் தன் பக்கத்தில் அமரச் செய்து, ''நடத்தற்கு அரிய நெடுவழியில் நீ நடந்து வந்தது என் உள்ளத்தை உருக்குகிறது. நம் பெற்றோர் நம்மைக் காணாது எப்பாடு படுகின்றனரோ! நாம் இங்கு வந்தது மாயத்தாலோ, அல்லது வல்வினையாலோ! எனக்கு ஒன்றும் புரியவில்லை. யான் பலவகைக் கீழ்மக்களோடு வீண் பொழுது போக்கினேன்; கூடா ஒழுக்கத்தில் பணத்தைப் பாழாக்கினேன்; தாய் தந்தையர்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளில் தவறினேன்; சிறிய வயதிலே பெரிய அறிவினையுடைய உனது வாழ்க்கையையும் கெடுத்தேன். இத்தகைய யான் 'புறப்படு' என்று சொன்னவுடன், ஒரு வார்த்தையும் பேசாமல் புறப்பட்டு வந்தாய். உன்னை எவ்வாறு பாராட்டுவேன்!'' என்று கூறி வருந்தினான்.

அவனுடைய கனிவு மொழிகளைக் கேட்ட கண்ணகி, "நீர் இல்லாமையால் அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், விருந்து எதிர் போற்றலும் யான் இழந்திருந்தேன். அடிக்கடி உம் தாய் தந்தையர் என்னைப் பார்க்க வந்தனர்; எனது பொறுமையைப் பாராட்டினர். யான் நீர் இல்லாத வருத்தத்தைக் காட்டிக் கொள்ளாமல், முகமலர்ச்சியோடு இருந்தேன். யான் பொய்யான முகமலர்ச்சியுடன் இருந்தேன் என்பதை அவர்கள் அறிந்து வருந்தினர். அவர்கள் வருந்தும்படி உமது ஒழுக்கம் இருந்தது. உம்மிடம் வைத்த அன்பு மாருத நிலையில் இருத்தலால், உம்முடன் புறப்பட்டு வந்தேன்," என்று கூறினாள்.

அவளது விடை கோவலன் உள்ளத்தைக் குளிர்வித்தது. அவனுடைய அகமும் முகமும் மலர்ந்தன. அவன்,

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங்கு என்துயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி"

என்று பலபடப் பாராட்டினான்; "நின் சிலம்புகளுள் ஒன்றை எடுத்துச் சென்று யான் விற்று வருவேன். நீ கவலைப்படாமல் இரு," என்று கூறி அகன்றான்.

### கோவலன் கொலை

கோவலன் முன்பு தவறு செய்தது உண்மையே; ஆயின், பின்பு அதனை எண்ணி எண்ணி மனம் வருந்தினான்; தான் செய்த தவற்றைத் தன் மனைவியிடமும் கூறி வருந்தினான். கவுந்தியடிகளிடமும் கூறித் துன்புற்றான். இவற்றால் அவனது மனமாசு நீங்கியது; இனியேனும்

கண்ணகியோடு நல்வாழ்வு வாழலாம் என்று நம்பினான். அவளும் அப்படியே நம்பினாள். ஆனால் இருவர் நோக்க மும் நிறைவேறவில்லை. மதுரைப் பொற்கொல்லன் சூழ்ச் சியால் கோவலன் பாண்டிமாதேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் என்று கருதப்பட்டுக் கொலை செய்யப் பட்டான்.

**வீரபத்தினி**

பெண்களுக்கு இயற்கையாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்கள் உண்டென்று புலவர் புகல்வர். ஆயின், சந்தர்ப்பம் வரும் பொழுது, அடக் கத்தையே அணிகலனாகக் கொண்ட பத்தினி - வீரப் பத்தினியாக மாறுதல் இயல்பு. அஃதாவது, தேவைப் படும் பொழுது பெண்மை ஆண்மையாக மாறுகிறது என்னலாம். தன் கணவனைப் பாண்டியன் கொல்வித்தது தவறு என்பதை நன்குணர்ந்த கண்ணகி, அதனை அம்பலப்படுத்த எண்ணினாள்; தலைவிரி கோலத்துடன் கண்ணீரும் கம்பலையுமாக மாட மதுரைத் தெருக்களைச் சுற்றிவந்தாள்; "பாண்டியன் தவறிழைத்தான். குற்ற மற்ற என் கணவன் கொல்லப்பட்டான்," என்பதை வாயால் பறையறைந்தாள். அவளது சோகக் காட்சியைக் கண்டு மாநகரத்தார் கண் கலங்கினர். கண்ணகி வெட் டுண்ட தன் கணவனது உடலத்தைத் தழுவினாள்; பின்பு அரண்மனையை அடைந்தாள்; ஒற்றைச் சிலம்புடனும், தலைவிரி கோலத்துடனும், விழிநீர்வார அரண்மனைக் காவலனுக்குமுன் காட்சியளித்தாள். அரண்மனைக் காவலன் அவளது கோர உருவத்தைக் கண்டு கதி கலங்கினான்.

"அறிவு கெட்ட பாண்டியனது அரண்மனைக் காவலனே, 'உன்னைப் பார்க்க ஒற்றைச் சிலம்புடன் ஒருத்தி வந்திருக்கிறாள்' என்று அரசன் முன் சென்று தெரிவி", என்று கூறினாள். காவலன் அலறி அடித்துக்

கொண்டு பாண்டியனிடம் ஓடினுன் ; மன்னனை வணங்கி, " வந்திருப்பவள் காளிபோன்ற நிலையில் காணப்படுகின் ருள். ஆயினும் அவள் மானிடப் பெண்ணே ", என்று தொடங்கி, அவளது சோக நிலையை வருணித்தான். " அவளை வரவிடு ", என்று மன்னன் கூற, கண்ணகி பாண்டியன் முன் தோன்றினுள் ; தன் மாமனர் பெயரை யும் கணவன் பெயரையும், சோழ மன்னரது நீதி தவருத ஆட்சியையும் கூறினுள் ; தன் சிலம்பை உடைத்துத் தன் கணவன் குற்றமற்றவன் என்பதை மெய்ப்பித்தாள். அவ் வளவில் பழிக்கு அஞ்சிய பாண்டியன் அரியாசனத்தி லிருந்து கீழே விழுந்து மாண்டான். கோப்பெருந்தேவி யும் குலைந்து நடுங்கி உயிர் நீத்தாள்.

### அறியத்தகுவன

கண்ணகி வரலாற்ருல் தமிழ்ப் பெண்கள் அறியத் தகுவன யாவை? கணவன் தவறு செய்யினும் மனைவி தன் கடமையிலிருந்து பிறழலாகாது, அவன் நல்லறிவு பெற ஆவன செய்தல் வேண்டும், இன்பத்தில் கணவனேடு வாழ்வது போலவே துன்பத்திலும் அவனேடு வாழ்தல் வேண்டும், தன் தாய்தந்தையர் செல்வராக இருப் பினும் கணவனது வீடே தனக்கு நிலையான வாழிடம் என்னும் கருத்து வேண்டும், அவனை இன்புறுத்துவதே தான் இன்புற வழி என்பதை அறிதல் வேண்டும்.... இவைபோன்ற சீரிய கருத்துக்கள் இப்பெருமாட்டியின் வரலாற்றிலிருந்து அறியக் கிடக்கின்றன.

## 6. ஆதிரை வாழ்க்கை

### மணிமேகலை

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணி மேகலை. கோவலன் மதுரையில் கொலையுண்டதை அறிந்த மாதவி உலகப்பற்றை ஒழித்துப் பௌத்த சமயத்தைச்

சார்ந்தாள்; தன் தவமகளான மணிமேகலையை அந் நெறிப்படுத்த விரும்பினாள். அறவண அடிகள் என்னும் பௌத்த துறவி அவர்களுக்குப் பௌத்த அறங்களை அறிவுறுத்திவந்தார். மணிபல்லவம் என்ற தீவில் இருந்த பொய்கையிலிருந்து அமுதசுரபி என்ற பிச்சைப் பாத் திரம் வெளிப்பட்டது. மணிமேகலை அதன் உதவியால் குருடர், செவிடர், முடவர் முதலியோர்க்கு உணவு படைக்க விரும்பினாள். அப்பிச்சைப் பாத்திரத்தில் சிறந்த பத்தினி ஒருத்தி முதன்முதலாக உணவிட்டால், அவ்வுணவு எடுக்க எடுக்கக் குறையாது வளரும் என்பதை அறிந்தோர் அறைந்தனர். சிறந்த பத்தினியை எங்கே தேடுவது என்ற கேள்வி எழுந்தது. காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கை, காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து வந்த வணிகர்குலப் பெண்மணியான ஆதிரை என்பவளே சிறந்த பத்தினி. அவளே இவ்வமுதசுரபியில் முதன்முதலாக அன்னமிடத் தகுதியுடையவள்'', என்று கூறினாள். ஆதிரை என்னும் மாபத்தினியின் வரலாற்றை யும் அக்காயசண்டிகை மணிமேகலைக்கு உரைத்தாள்.

## ஆதிரை வரலாறு

ஆதிரை வணிகர் குலக்கொழுந்து. அவள் கணவன் செல்வத்திற் சிறந்தவன். அவன் மணம் செய்துகொண்ட பின் சில ஆண்டுகள் வரையில் இல்வாழ்க்கையில் நெறி பிறழாது வாழ்ந்து வந்தான். பின்பு தீயவர் சேர்க்கையால் இல்வாழ்க்கை நெறியினின்றும் பிறழ்ந்தான்; பலவகை மாயங்களில் வல்ல பொதுப் பெண்டிர் சேர்க்கையில் திளைத்தான். அவனுடன் பழகிவந்த பரத்தை அவன் செல்வம் முழுவதையும் கவர்ந்து கொண்டாள். அதற்குப் பிறகே அவனுக்கு அறிவு தோன்றியது. தான் அதுகாறும் செய்துவந்தது இல்வாழ்க்கைக்குப் புறம்பானது என் பதைக் கைப்பொருள் இழந்த பின்பே உணர்ந்தான். பொருள் இழந்த பின்பு அறிவு பெற்ற அவன், தனது

தகாத செயலுக்கு நாணினன்; கடல் கடந்து சென்று, வாணிகம் புரிந்து, பொருளீட்டி வந்து, முன்போல இல் வாழ்க்கை நடத்த விரும்பினன்; தன் உற்றார் உறவின ரான வணிகரோடு சேர்ந்து கடல் கடந்து அயல்நாடு நோக்கிச் சென்றான். அவன் பெயர் சாதுவன் என்பது.

சாதுவன் தன்னைவிட்டுப் பரத்தையரிடம் வாழ்ந்த போது, ஆதிரை, கோவலனைப் பிரிந்த கண்ணகியைப் போலவே தனிமையில் வருந்தினாள்; அவள் தன்னை ஆடை அணிகளால் அழகு செய்துகொள்ளவில்லை; என் றேனும் ஒருநாள் தன் கணவன் தன்னை நாடியே வருவான் என்று நம்பிக் காத்திருந்தாள். அவள் கணவ னது தவருன செயலுக்காக அவனைக் கடியவில்லை; பொறுமையையே அணிகலனாகக் கொண்டிருந்தாள். 'பொறுமை கடலிற் பெரிது', 'பொறுத்தார் பூமியாள் வார்' என்ற முதுமொழிகளை அவள் நம்பினாள். அவள் நம்பிக்கையும் வீண் போகவில்லை. பரத்தையிடம் தன் செல்வம் முழுவதையும் இழந்த சாதுவன், கண்ணகியை நாடிவந்த கோவலனைப்போல, ஆதிரையை நாடிவந்தான். அவள் முன்போலவே அவனிடம் அன்பு காட்டினாள். "என்ன இருப்பினும் மணந்த மனைவி மனைவிதான். பரத்தை அவளுக்கு இணையாகாள்", என்பதைச் சாது வன் உணர்ந்தான்; அவளிடம் விடைபெற்றுக் கப்பலேறி வாணிகம் செய்யச் சென்றான்.

## நடுக்கடலில் விபத்து

சாதுவன் சென்ற கப்பல் நடுக்கடலில் புயற்காற்றில் அகப்பட்டும் பாறையில் மோதுண்டும் கவிழ்ந்தது. சாது வன் முதலியோர் உடைந்த பாய்மரத்துண்டுகளைப் பற்றிக் கொண்டு கடலில் மூழ்கினர். ஒரு சிலர் பலநாள் கடலில் வருந்திக் கரை சேர்ந்தனர். சாதுவன் வேறொருபால் நீந்திச் சென்று நாகர் வாழ்ந்துவந்த தீவை அடைந்தான்.

## ஆதிரையின் கற்பு

உயிர் பிழைத்துக் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்த ஒரு சில வணிகர் ஆதிரையைக் கண்டு, அவள் கணவன் கடலுக்கு இரையானன் என்று கூறினர். உடனே அம்மாபத்தினி, "கடல் வாணிகத்தால் வாழ்க்கை வள முறும் என்று நம்பினேனே! எனது நம்பிக்கையில் மண் விழுந்ததே! என் உயிர் அனைய கணவன் இறந்தபிறகு யான்மட்டும் உயிர்வாழ்தலில் என்ன பயன்? யானும் இறத்தலே ஏற்புடையது," என்று அழுது புலம்பினள்; பலரும் காணச் சுடுகாடு சென்றாள்; அங்குத் தீயை வளர்த்தாள்; அத்தீயில் விழுந்தாள். கொழுந்துவிட்டு எரிந்த தீ அவளுக்குத் தாமரை மலராகக் காட்சியளித்தது. அத்தீ அவளைச் சுடவில்லை; "தீயும் தீண்டா தீவினை யாட்டியேன் யான்" என்று கூறி வருந்தினள். அப் பொழுது, "ஆதிரை, நின் கணவன் இறக்கவில்லை. அவன் நாகர் வாழும் தீவில் நலமே இருக்கிறான். ஆதலால் உன்னைத் தீ சுடவில்லை," என்று ஒரு குரல் எழுந்தது. ஆதிரை அதுகேட்டு அகமகிழ்ந்து, தன் கணவன் வரும் வரையில் வழிமேல் விழிவைத்து, அவனது வரவை எதிர் நோக்கியிருந்தாள்.

## நாகர் தீவில் சாதுவன்

சாதுவன் நாகர் மொழியை நன்கு அறிந்தவன். நாகர் ஆடையற்றவர்; அநாகரிகர்; மனிதரைக் கொன்று உண்பவர். சாதுவன் நாகர் மொழியைப் பேசியதால் உயிர் பிழைத்தான். அவன் நாகர் தலைவனுக்கு நல்லுரை களை வழங்கினன்; கள் குடித்தல் தீது என்றும், புலால் உண்ணுதல் தீயது என்றும் உயிரைக் கொல்லுதல் பாவம் என்றும் விளங்க வுரைத்தான். நாகர் தலைவன் சாதுவன் அறிவுரையால் நல்லறிவு பெற்றான்; தான் அதுவரையில் சேர்த்து வைத்திருந்த பெருஞ் செல்வத்தைச் சாதுவ

னுக்கு வழங்கினான்; அங்கு வந்த ஒரு கப்பலில் அவனை ஏற்றிக் காவிரிப்பூம் பட்டினத்திற்கு அனுப்பினான்.

### ஆதிரை இல்வாழ்க்கை

கடலில் வீழ்ந்து இறந்தான் என்று நம்பப்பெற்ற சாதுவன், பெருஞ் செல்வத்தோடு வந்ததைக் கண்ட வணிகர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். அவனது வரவை எதிர்நோக்கியிருந்த மனைவி, அவன் வருகையைக் கண்டு, உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகைக் கடல் பெருக, மகிழ்ச்சிக் கண்ணீர் ததும்ப, அவனை வரவேற்றாள். சாதுவன் நாகர் தலைவன் கொடுத்த செல்வத்தை வைத்துக்கொண்டு உள்ளூரிலேயே வாணிகத்தைப் பெருக்கி வளமாக வாழத் தலைப்பட்டான்; தன் தீயபண்புகளை ஒழித்துத் தன் ஆருயிர் மனைவியின் அன்பு வளர்ப்பில் தங்கினான். அந்நிலையில்தான் அவர் தம் இல்வாழ்க்கை கண்டோர் மகிழத்தக்க நல்வாழ்க்கையாக விளங்கியது.

# II. இடைக்காலம்
(கி. பி. 300—1300)

## 1. வளையாபதி முதலியவற்றில் இல்வாழ்க்கை

### வளையாபதி

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டல கேசி, வளையாபதி என்பன பெருங்காப்பியங்கள். இவற்றுள் ஒன்றுன வளையாபதியுள் சிறந்த முறையில் இல்வாழ்க்கை நடத்தும் கணவன்—மனைவியைப்பற்றி அதன் ஆசிரியர் கூறியிருப்பது காண்க :

" இல்லறத்தில் ஈடுபட்டுள்ள மனையாளுடன் சிறந்த முறையில் இல்லறம் நடத்தினல் ஊராரும் நாட்டாரும் அவர்களைப் பாராட்டி மகிழ்வர் ; அவர்கள் மேல் உலகம் செல்லும்போது விண்ணவர் அவர்களைச் சிறப்போடு வரவேற்பர்."

### நாலடியார்

நாலடியார், நான்மணிக்கடிகை, அறநெறிச்சாரம் முதலிய பதினெட்டு நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று பெயர் பெறும். இவற்றுள் திருக்குறள் ஒழிந்த பதினேழு நூல்களும் ஏறத்தாழக் கி. பி. 300 முதல் 700-க்கு உட்பட்ட காலத்தில் செய்யப்பெற்றவை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அவற்றுள் நாலடியார் என்பது சமண முனிவரால் செய்யப்பெற்றது. இந்நூல் இல்லறத்திலுள்ள கற்புடை மகளிரின் இயல்பினைக் கீழ் வருமாறு கூறுகின்றது :

" இல்லற ஒழுக்கம் என்பது அறவோர்க்கு அளித்

தல், விருந்து புறந்தருதல் முதலியன செய்தல். வீடு பயக்கும் அருள்நெறிக்குக் காரணமாய்ப் பொருள்களில் பற்றின்றி நின்று உலகில் அறம் வளர்க்கும் பயிற்சியே இல்லறத்தில் நிகழ்தற்குரியது. ஆதலால் ஒரு பயனும் கருதாமல் விருந்தினரை உபசரித்தல் கற்புடை மகளிர் கடமையாகும்.

"இல்லறத்தில் வறுமை குடிகொண்டிருப்பினும், கற்புடை மகளிர் விருந்தோம்பலைக் கைவிடார். விருந்தோம்பும் இயல்பே இல்வாழ்க்கைக்குச் சிறப்பளிப்பது. வீடு நாலாப் பக்கமும் இடிந்தும் மிகவும் சிறியதாயும், எப்பக்கமும் கூரை பழுதுற்று ஒழுக்குடையதாய் இருப்பினும், உயர்ந்த இல்லற ஒழுக்கங்களில் திறமையுடையவளாய் ஊரார் புகழ்ந்தேத்தும் சிறப்புடைய மனைவி அமர்ந்திருக்கும் வீடே 'வீடு' என்று சொல்லப்படும். அஃதாவது, செல்வம் முதலியவற்றைவிட இல்லக்கிழத்தியின் நற்குணமே இல்வாழ்க்கைக்கு முதன்மையானது என்பது.

"உண்மையான வாழ்க்கைத் துணைவி பார்வைக்கு இனிய இயற்கையழகை உடையவள்; தன் காதலன் விருப்பப்படி செயற்கைக் கோலங்கள் செய்து கொள்வாள்; தனது கற்பு ஒழுக்கச் சிறப்பினால் ஊராரால் மதிக்கப் படுவாள்; தன் கணவன்பால் மதிப்பு உடையவள்; காலம் அறிந்து ஊடுபவள்; இன்பம் விளைக்கும் மென்மையான மொழிகளை உடையவள்.

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்—உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்."

"நாணம் முதலிய பெண் தன்மைகளையுடைய கற்புடையவள் பெற்றுள்ள அழகு முதலிய நலங்கள், இயற்கை நூல் உணர்வு உடையவன் கற்ற கல்வியறிவை ஒத்திருக்கும்; இயற்கையில் கொடைக்குணம் உடையவ

னிடம் சிறப்படைகின்ற செல்வத்தை ஒத்திருக்கும்; சிறந்த வாட்பயிற்சி வல்லவன் கையில் விளங்கும் கூரிய வாட்படையை ஒத்திருக்கும்.

"குணங்களாற் சிறப்புற்ற இல்லாளைப் பெறுதவன் வீடு—மேகங்கள் தவழும் உயர்ந்த மாளிகையாய், சிறப் பமைந்த பாதுகாப்பு உடையதாய், ஒளிவிளக்குகள் நிறைந்ததாய் இருப்பினும், பயன்படாது. அது கண் கொண்டு பார்த்தற்கு இயலாத கொடிய காடு என்றே சொல்லத்தகும். அஃதாவது, **மனைக்கு விளக்காகிய மங்கை நல்லாள் இல்லாத வீடு கொடிய காட்டுக்குச் சமம்** என்பதாம்."

**நான்மணிக்கடிகை**

"கல்வியறிவு இல்லாதவர்களுக்கு அவர் வாயிற் பிறக்கும் சொல்லே அழிவைத் தரும்; வாழை மரத்துக்கு அஃது ஈனும் குலையே யமனாகும்; தீயவை செய்பவர்க்கு அறக்கடவுளே யமனாகும்; வீட்டில் இருந்துகொண்டு மறைவாய் ஒழுக்கம் கெட நடக்கும் மனைவி கணவனுக்கு எமனாவாள்.

"உலக மக்களுக்கு மழையில்லாமல் நன்மையில்லை; அம்மழையும் தவம் செய்வார் இல்லாத இடத்தில் பெய்வ தில்லை; அத்தவம் நெறியுடைய அரசன் இல்லாத நாட்டில் நிகழாது; அரசன் இல்வாழ்வான் இல்லையாயின் இல்லை. இல்வாழ்வார் இருப்பின் அரசன் இருப்பான். அரசன் நல்லவனாயின் நாட்டில் தவம் முதலிய நல்லவை நடை பெறும். இந்நல்லவற்றால் நாட்டில் மழை பெய்யும் என்பது கருத்து. எனவே, **இல்வாழ்க்கையே உலக நடப்புக்கு அடிப்படை** என்பது நாலடியார் கருத்தாதல் அறிக.

**அறநெறிச்சாரம்**

"ஏழைகட்கு உணவிட்டு, பிறன் மனைவியை விழையாமல், பொய்நீக்கி, கொல்லாமை காத்து, தம்மால்

இயலும் உதவியைப் பிறருக்குச் செய்து வாழ்வதே **இல்வாழ்க்கையின் இயல்பாகும்.**

"விருந்தினரைப் பேணாமலும், வாழ்க்கையில் முயற்சியை மேற்கொள்ளாமலும், தக்கவரைப் போற்றாமலும், இல்வாழ்க்கையில் இருந்துகொண்டே அறிவினை வளர்க்காமலும் தீய வினைகளை மேற்கொள்ளுதலும் உடையவனது இல்வாழ்க்கை இருள் படிந்துவிடும்.

"கணவனும் மனைவியும் கருத்து ஒத்தவராய் இல்வாழ்க்கையை நடத்திச் செல்லாவிடில், இல்வாழ்க்கை என்னும் சக்கரம் குறித்த இடம் நோக்கிச் செல்லாது தடைப்படும்.

"நல்வினைகளைச் செய்துகொண்டு தன் வீடு தேடி வரும் விருந்தினரைக் காத்து நிற்பவனது மனைவாழ்க்கை தவத்தினும் உயர்ந்தது; கணவன் கருத்துக்கு மாறுபடப் பேசாமல் விருந்தினரை உபசரித்து இல்வாழ்க்கை நடத்துபவள் **சிறந்த வாழ்வரசியாவாள்.**

"கணவனது குறிப்பறிந்து நடத்தல், நாணம் உடைமை, கண்டனவற்றை விரும்பாமை, கணவன் வெறுப்பனவற்றைச் செய்யாமை, கோபம் கொள்ளாமை என்னும் பண்புகளைப் பெற்று இருப்பவளே **பெண்** என்று சொல்லப்படுவாள்.

"கணவனை வழிபடுபவளாய் வாழ்க்கையை நடத்தி, கோபம் கொள்ளாமல், கணவன் விரும்பியவற்றைச் செய்து, எதிர்பேசாமல் பணிவோடு இல்வாழ்க்கை நடத்துபவளைக் கணவன் பாராட்டி மகிழ்வான்."

## 2. பெருங்கதையில் இல்வாழ்க்கை

### பெருங்கதை

வட இந்திய நாடுகளில் வத்தவ நாடு என்பது ஒன்று. அதன் தலைநகர் கோசாம்பி. உதயணன் வத்தவ நாட்டு அரசன். இவன் கல்வி கேள்விகளிலும் உடலழகிலும்

பலகலைப் பயிற்சியிலும் சிறந்தவன். இவன் வாசவதத்தை, பதுமாவதி, மானனீகை, விரிசிகை என்னும் அரசர் மகளிர் நால்வரை மணந்தான். இவன் வரலாறு கூறும் பெருங்கதை கொங்குவேள் என்பவரால் கி. பி. ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டிருக் கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். இது சமண சமயச் சார்புடைய காவியம்.

ஒருவன் ஒருத்திக்கு மேற்பட்ட பெண்கள் பலரை மணந்து வருதல் இன்றும் வழக்கத்தில் இருக்கிறது. இது தீயதே ஆயினும், சமுதாயத்தில் நாட்பட்ட வழக்கமாக வந்துவிட்டதால், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது; இன்றைய சமுதாயத்தில் இவ்வழக்கம் சிறு வரவிற்றே என்னலாம். சிறு வரவிற்றே ஆயினும், ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்ட பலரும் ஒன்றுபட்ட உள்ளத்தினராய் வாழ்ந்தால் தான், அவர்களுக்கும் அவர்களை மணந்து கொண்ட கணவனுக்கும் இல்வாழ்க்கையில் இன்பம் உண்டாகும். அத்தகையோர் எங்ஙனம் வாழவேண்டும், அவர்களை மணந்துகொண்ட கணவன் மனைவியரை எவ்வாறு நடத்த வேண்டும், உண்மைப் பத்தினி எவ்வாறு நடந்துகொள் வாள் என்பவற்றை அறிய இப்பெருங் காவியம் துணை செய்கிறது. அத்தகைய இடங்களை மட்டும் இங்குக் காட்டுதல் பொருத்தமாகும்.

### மணமகன் தகுதி

வாசவதத்தை உதயணனையே மணக்க விரும்பினாள். இதனை அறியாத அரசர் பலர் அவளை மணக்க அவள் தந்தையிடம் பேச்சு நிகழ்த்தினர். இதனை அறிந்த வாசவதத்தை மனம் வருந்தினாள். அப்பொழுது அவளது செவிலித் தாயாகிய சாங்கியத்தாய் என்பவள், "உன் தந்தையின் கருத்தை யான் அறிவேன்;

" இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்

தேசத் தமைதியும் ஆசில் சூழ்ச்சியோ(டு)
எண்வகை நிறைந்த நன்மகற் கல்லது
மகட்கொடை நேரார் மதியோர் ஆதலின்,"

இக்குணங்கள் நிறைந்த உதயணனுக்கே உன்னை மணம் செய்விக்க எண்ணியிருக்கிருன்,'' என்று கூறினுள். இதனுல் அரசர் குல மகளிரை மணக்க விரும்புவோர் தகுதி குறித்தவாறு காண்க. இத்தகுதிகளைப் பிறர்க்கும் கொள்ளுதல் தவருகாது.

**மனைவியின் ஊடல்**

ஒரு சோலையில் உதயணன் இருந்தபொழுது அரச முனிவரின் மகளாகிய விரிசிகை என்பவள் பல மலர்களைக் கொண்டுவந்து உதயணனிடம் கொடுத்து, அவற்றை மாலையாகக் கட்டித்தரும்படி வேண்டினுள். உதயணன் அவ்வாறே செய்து கொடுத்தான். ஆனுல் அதனைத் தலையில் வைத்துக்கொள்ள அவளுக்குத் தெரியவில்லை. அப்பொழுது உதயணன் அவளைத் தன் மடிமீது வைத்து அழகு செய்து அவளைப் போகும்படி விடுத்தான். அவன் மனைவியான வாசவதத்தை அதனைக் கண்டு கடுங்கோபம் கொண்டாள். உதயணன் நடந்ததைச் சொல்லி அவளை அமைதிப்படுத்தினுன்.

தன் கணவன் மற்றொரு பெண்ணைத் தொடுதலை எந்த மனைவியும் பொருள். தன் மனைவிக்கு மற்ருேர் ஆடவன் அழகு செய்வதை எந்த ஆடவனும் பொருன் அல்லவா? அதுபோலவே இதனையும் எண்ணி, ஆடவர் நடந்து கொள்ள வேண்டும். இல்வாழ்க்கையில் இத்தகைய மனக் கசப்பு உண்டாகாமல் பார்த்துக்கொள்வதே நல்ல ஆடவர் கடமையாகும்.

**உண்மைக் கணவன்**

உதயணன் அரச அலுவலைக் கவனியாமல் வாசவதத்தையுடனேயே எப்பொழுதும் இருப்பதைக்

கண்ட அமைச்சனுன யூகி, வாசவதத்தையைத் தனியே அழைத்து, செய்தியைக் கூறி, அவளைச் சிறிது காலம் மறைந்திருக்கச் சொன்னான். நாட்டு நலனையும் கணவன் நல்வழிப்படுதலையும் விரும்பிய வாசவதத்தை அமைச்சன் யோசனைக்கு இணங்கினாள். அரண்மனைக்குத் தீ வைத்து விட்டு, வாசவதத்தை தீயில் அகப்பட்டு மாண்டாள் என்று யூகியின் நண்பர்கள் கூறி, உதயணனை நம்பச் செய்தனர்.

உதயணன் வாசவதத்தையை உளமார நேசித்தவன். ஆதலால் அவன் அவள் இறந்தாள் என்பதைக் கேட்ட வுடன் அடியற்ற மரம் போலக் கீழே விழுந்தான்; அவளு டைய நகைகளைப் பார்த்துப் புலம்பினான்; பித்துப் பிடித் தவன் போல் ஆனான்; அவள் இல்லாமல் வாழ முடியாத வன் ஆனான். வாசவதத்தையின் நற்பண்புகளே உதயணனை இவ்வாறு வருந்துமாறு செய்தன. இவ்வாறு **கணவனது உள்ளத்தைக் கவர்பவளே வாழ்வரசி ஆவாள்.**

**கற்புடைய மனைவி**

'இறந்தவரை எழுப்பும் ஆற்றல் பெற்ற முனிவர் ஒருவர் இருக்கிறார். அவரைக்கொண்டு வாசவதத்தையை எழுப்பலாம்,' என்று நண்பர்கள் கூறியதைக் கேட்ட உதயணன், தன் நண்பர்களோடு அம்முனிவர் இருந்த நாட்டை அடைந்தான்; அந்நாட்டு அரசனது தங்கை பதுமாவதியைக் கண்டான்; அவள் வாசவதத்தை போலவே இருந்ததைக் கண்டு காதல்கொண்டான்; இறுதியில் அவளை மணந்துகொண்டான்; ஆயினும், இறந்த வாசவதத்தையை மறக்கவில்லை; அவளை எண்ணி எண்ணிப் புலம்பினான்; அவள் வாசித்து வந்த யாழைத் தழுவித்தழுவிப் புலம்பினான்.

ஓர் இரவு அவன் யாழைத் தழுவிக்கொண்டு உறக்கத் தில் புலம்பிக்கொண்டிருந்தபோது, அவன் நண்பர்கள்

வாசவதத்தையை அழைத்துச் சென்று காட்டினர். அவனது புலம்பலைக் கேட்ட அவள், "என் உயிர்த்துணைவன் நனவிலும் இவ்வாறுதான் என்னை நினைந்து புலம்புகின்றானோ? கற்புடைய மகள் கணவனையே தெய்வமாகக் கொண்டவள். அவளைப் பிரிந்த கணவன் இவ்வாறு நினைந்து வருந்துதல் இயல்பு என்று நூல்கள் கூறுகின்றன. அக்கூற்று உண்மை என்பதை நான் இன்றுதான் நேரிற் கண்டேன்," என்று கண்ணீர் விட்டுக்கூறி அவனைத் தொழுதாள்.

மறுநாள் அவனை நேரிற் கண்டபொழுது, "உம்மைப் பிரிவதால் உமக்கு நன்மை உண்டாகும் என்று அமைச்சர் அழுத்தமாகக் கூறியதால்தான் நான் உம்மை விட்டுப் பிரிந்தேன்," என்று கூறிக் கைகுவித்துத் தன் கூந்தல் அவன் காலில் புரளவும் கண்ணீர் அவன் புறஅடியை நனைக்கவும் வணங்கினாள்.

தான் இல்லாத பொழுது தன் கணவன் பதுமாவதியை மணந்துகொண்டான் என்பதை வாசவதத்தை அறிந்தாள். பதுமாவதி வாசவதத்தையை மிக்க பணிவோடு வந்து வணங்கினாள். வாசவதத்தை அவளைத் தழுவி எடுத்து, "கற்பில் இன்னும் மேம்படுவாயாக," என்று ஆசி கூறி மகிழ்ந்தாள். பின்பு இருவரும் ஒரே தாமரை மலரில் இலக்குமிகள் இருப்பதுபோல ஒரு கட்டில் மேல் அமர்ந்திருந்தனர்.

உதயணன் பதுமாவதியை நோக்கி, "வாசவதத்தையுடன் நீ ஒரு கலத்திலேயே உண்ணவேண்டும்," என்று சொன்னான். அப்பெருங் குணக்கிழத்தி அவனை வணங்கி, "அடிகளே, பாராட்டத்தகும் கற்பினையுடைய எமது பெருமகளோடு (வாசவதத்தையோடு) பிரிந்திருந்த கால அளவு நீர் சேர்ந்து வாழவேண்டும். நீர் எனக்கு இவ் வரத்தைத் தருதல் வேண்டும்,

பெருந்தகு கற்பினெம் பெருமகள் தன்னொடு
பிரிந்த திங்கள் எல்லாம் பிரியாது

ஒருங்கவண் உறைதல் வேண்டுவல் அடிகள் !
அவ்வரம் அருளித் தருதல் என்குறை ''

என்று வேண்டினுள். உதயணன் அவளது உயர்ந்த மனப்போக்கைப் பாராட்டி மகிழ்ந்தான். மனைவியர் இருவரும் மன வேறுபாடு அற்றவராய்க் கணவனை இன்புறுத்துவதிலேயே கருத்தினராய் இருந்தனர்.

மனைவியர் இருவர் வாழும் மனையில் இத்தகைய கருத்து ஒருமைப்பாடு காண்பது இக்காலத்தில் அருமையாக இருக்கின்றது. மனவேறுபட்டால் மனைவியர் இருவரும் துன்புறுகின்றனர்; தனித்தனிக் குடும்பம் நடத்துகின்றனர். கணவன் இரண்டு வீடுகட்கும் சென்று இடர்ப்படுகின்ருன்; இருவருள் தன்னை மகிழ்விப்பவளிடமே தங்கி விடுகிருன். இதனுல் மற்ருெருத்தி துன்புறுகிருள். மனைவியர் இருவரும் ஒத்த உள்ளத்தவராய்க் கணவன் நலத்தையும் குடும்ப நலத்தையும் கருத்திற் கொண்டு நடப்பின், அவர்தம் இல்வாழ்க்கை மிக்க சிறப்படையும். அவர்கள் வாசவதத்தையும் பதுமாவதியும் போல இன்புற்று வாழ்வர்.

## மூன்ரும் மனைவி

உதயணன் மனைவியர் இருவரும் வாழ்ந்த அந்தப்புரத்தில் பந்தாட்டம் நிகழ்ந்தது. பணிப்பெண்கள் பலர் பந்தடித்தனர். மானனீகை என்ற பணிப்பெண் அனைவரும் பாராட்டத்தகும் முறையில் பந்தடித்தாள். அவள் கோசல நாட்டு அரசன் மகள்; மணம் ஆகாதவள். அவள் நாடு பகை அரசனுல் கொள்ளப்பட்ட பொழுது அவளும் பிற பெண்களும் வெற்றிபெற்ற அரசனது அரண்மனையில் பணிப் பெண்களாக்கப்பட்டனர். உதயணன் நண்பர், அவ்வெற்றிபெற்ற அரசனை வென்றவுடன் அம் மகளிர் அனைவரும் அரண்மனைக்குக் கொண்டுவரப் பட்டனர். எனவே, வாசவதத்தையிடம் பணிப்பெண்

ஞை இருந்த மானனீகை கோசல அரசன் மகளாவாள். ஆயின், இந்த உண்மை ஒருவருக்கும் தெரியாது.

உண்மை உணராத அந்நிலையில் அவளது பந்தடிக்கும் ஆற்றலையும் பேரழகையும் கண்டு உதயணன் அவள் மீது காதல் கொண்டான்; இரவில் அவளைச் சந்தித்து வந்தான். இதனை அறிந்த வாசவதத்தை கணவனைக் கடிந்தாள்; மானனீகையை வருத்தத் தொடங்கினாள்; ஆயின், அவள் கோசலத்து அரசன் மகள் என்பதை அறிந்தவுடன் மிக்க மரியாதையோடு நடந்துகொண்டாள்; பதுமாவதியைக் கொண்டு மானனீகைக்குத் திருமணக் கோலம் செய்வித்தாள்; தானே முன்னின்று தன் கணவனுக்கு அவளைத் திருமணம் செய்வித்தாள். இச்செயல் வாசவதத்தையின் பெருந்தன்மையைக் காட்டுகின்றதன்றோ?

## நான்காம் மனைவி

தன்னை மடிமீது வைத்து மலர்அழகு செய்த நாள் முதல் விரிசிகை என்ற முனிவர் மகள் உதயணனையே மணந்துகொள்ள விரும்பினாள். அவளது தந்தையான அரசமுனிவர் உதயணனிடம் வந்து இதனைத் தெரிவித்தார். உதயணன் இச்செய்தியை வாசவதத்தைக்கு அறிவித்தான். வாசவதத்தை விரிசிகை நிகழ்ச்சியை முன்னரே அறிந்தவள் ஆதலால் மகிழ்ச்சியோடு அந்த மணத்திற்கு உடன்பட்டாள். திருமணம் மிக்க சிறப்பாக நடைபெற்றது.

## முடிவுரை

உதயணன் தன் முதல் மனைவிக்குக் கொடுத்து வந்த மரியாதை கவனிக்கத் தக்கது. அதற்கு ஏற்ப அம்முதல் மனையும் நடந்துகொண்டது பாராட்டத் தக்கது. மற்ற மனைவியரும் அம்முதல் மனைவியை உள்ளன்போடு தம் தமக்கையாக எண்ணி வந்தமையும் அறியற்பாலன.

இத்தகைய குண நலன்கள் மனைவியரிடம் பொருந்தி இருப்பின், அவர்களை மணந்துகொண்ட கணவன் பேரின்ப வாழ்க்கை வாழ்கின்றான் என்று கூறுவதில் தவறில்லையன்றோ?

## 3. நாயன்மார் இல்வாழ்க்கை
### (கி. பி. 300—900)

**சமய காலம்**

ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 900 வரை தமிழகத்தில் பல்லவர் பேரரசராக இருந்தனர். அக்காலத்தில் சோழர் சிற்றரசராக இருந்தனர்; பாண்டியர் தம்மாட்சி பெற்று விளங்கினர். சேரரும் தமது நாட்டைத் தாமே ஆண்டுவந்தனர். சேர நாட்டிற்கு வடக்கே கங்கரும் கதம்பரும் சாளுக்கியரும் ஆண்டு வந்தனர். தமிழ் நாட்டில் சமணமும் பௌத்தமும் சைவமும் வைணவமும் சமயப்போர் நிகழ்த்தின. சைவர் சமணத்தையும் பௌத்தத்தையும் எதிர்த்துப் பிரசாரம் செய்தனர். வைணவரும் சமணத்தையும் பௌத்தத்தையும் எதிர்த்தனர். வடநாட்டுச் சமயங்களான சமணமும் பௌத்தமும் தம்முள்ளேயே ஒன்றையொன்று தாக்கிக்கொண்டன.

வடக்கே இருந்துவந்த வைதிக சமயம் தமிழ் நாட்டிலிருந்த சைவ வைணவங்களோடு இணைந்தது. இதனால் வைதிக நெறியினரான பிராமணரும் சைவ வைணவ சமயங்களிற் கலந்தனர். இவர்கள் கூட்டுறவால் சைவம் 'வைதிகச் சைவநெறி' என்றும், வைணவம் 'வைதிக வைணவ நெறி' என்றும் புதிய பெயர்கள் பெற்றன. இக் கூட்டுறவால் சைவ வைணவ சமயங்களில் பிரமாணர் செல்வாக்குப் பெற்றனர்; வடமொழியும் சமயத்துறையில் செல்வாக்குப் பெற்றது. சாதி வேறுபாடுகளைக் கவனியாத சமணத்தையும் பௌத்தத்தையும் எதிர்த்த சைவ வைணவர்கள், பல்லவர் காலத்தில் சாதி வேறுபாடுகளை

வற்புறுத்தவில்லை. சைவர் அனைவரும் ஒரு நிலையிலேயே நடத்தப்பட்டனர். இந்த ஒருமைப்பாட்டாலும் சமண பௌத்த சமயங்களில் ஏற்பட்ட குறைகளாலும், சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் தம் செல்வாக்கை இழந்துவிட்டன. சைவமும் வைணவமும் கட்டுப் பாடுள்ள சமயங்களாக வளர்ந்தன. இந்த வளர்ச்சியை நாயன்மார் வரலாறுகளைக் கூறும் பெரிய புராணத்தி லிருந்து நன்கு அறியலாம்.

நாயன்மாருள் பிராமணர் பலர்; வேளாளர் பலர்; அரசர் சிலர்; சிற்றரசர் சிலர்; சேனைத்தலைவர் சிலர்; வணிகர் சிலர்; வேட்கோவர், சலவைத் தொழிலாளர் முதலிய பலதொழில் மாந்தரும் பக்திச் சிறப்பால் நாயன் மாராக இடம் பெற்றுள்ளனர். பிற்காலத்தில் உண்டான சாதி வேறுபாடுகள் பல்லவர் காலத்தில் மிகுதியாக இல்லை யாதலால், முன் சொல்லப்பட்டவாறு, சைவர் ஏறத்தாழ ஓரினத்தவராகவே கருதப்பட்டனர் என்னலாம்.

நாயன்மார் சைவசமயப்பற்று மிக்கவர்; உயிரை இழந்தும் சைவக்கொள்கைகளை நிலைநாட்டுபவர்; அவர் களைப் பின்பற்றியே அவர்தம் மனைவியர் வாழ்ந்து வந்தனர். இதனால் நாயன்மார் இல்வாழ்க்கை சமய வாழ்க்கையாகவே அமைந்திருந்தது என்னலாம். நாயன் மார் வரலாறுகளிலிருந்து அவர்தம் இல்வாழ்க்கைச் சிறப்பினை நாம் ஒருவாறு அறியலாம். அவற்றில் கூறப் படும் செய்திகளை நன்கு ஆய்ந்து, இக்கால நிலைக்கு ஏற்றவற்றை மட்டும் கொள்ளுவதே கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

### அப்பூதி அடிகள்

இவர் சோழநாட்டில் திங்களூர் என்ற ஊரில் வாழ்ந்த பிராமணர்; மனைவியோடும் பிள்ளைகளோடும் வாழ்ந்தவர்; முதலில் சமண சமயத்திலிருந்து பின்பு சைவ சமயத்திற்கு மாறி, நாடெங்கும் சைவசமயப் பிரசாரம் செய்துவந்த

திருநாவுக்கரசர் என்ற வேளாளரிடம் அளவற்ற பக்தி கொண்டவர்; அதனால் தம் பிள்ளைகளுக்கும் வீட்டிலிருந்த எல்லாப் பொருள்களுக்கும் 'திருநாவுக்கரசன்' என்ற பெயரைச் சூட்டி வழங்கியவர்; தாம் வைத்து நடத்திய தண்ணீர்ப் பந்தலுக்கும் அப்பெயரையே வழங்கினர். இவர் திருநாவுக்கரசரை நேரிற் காணுமலேயே அவரது புகழைக் கேள்வியுற்று இவ்வளவையும் செய்தவர். இவர் ஒருமுறை அப்பெரியாரை நேரிற் காணும் பேறு பெற்றுர்; மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்; ஆடினுர்; பாடினுர். தம் மனைவி மக்களுடன் வந்து அவருடைய பாதங்களை நீரால் விளக்கினுர்; அந்நீரைத் தம்மீதும் தம் குடும்பத்தினர் மீதும் தெளித்துக்கொண்டார்; தாமும் குடித்தார்; குடும்பத்தினரையும் குடிக்கச் செய்தார்.

திருநாவுக்கரசருக்கு அவர் வீட்டில் உணவு தயாரிக்கப் பட்டது. மூத்த மகன் வாழை இலை அரிந்து வரத் தோட் டத்திற்குச் சென்றுன். மரத்திலிருந்த விடநாகம் அவனைத் தீண்டியது. அவன் இலையை அறுத்துக் கொண்டு ஓடோடி வந்து வீழ்ந்து இறந்தான். 'மைந்தன் இறந்ததைத் தெரிந்தால், அடியவர் உண்ணமாட்டார்; அடியவர் நமது வீட்டில் உண்ணும் பேற்றை நாம் இழந்து விடுவோம். ஆதலால் இதனை அவர் அறியாதபடி செய் வதே நல்லது,' என்று எண்ணிய பெற்றோர், இறந்த மைந்தனை ஒரு பாயில் சுற்றிக் கொல்லைப்புறத்தில் வைத்துவிட்டு, அடியவர்க்கு உணவு படைக்கத் தொடங் கினர். அடியவர் உண்மையை உணர்ந்து சிவபெருமான் மீது பதிகம் பாடினுர். இறந்த மைந்தன் எழுந்தான். பின்பு அனைவரும் அடியவரோடு அமர்ந்து உண்டனர் என்பது வரலாறு.

அந்தணர் விருப்பப்படியெல்லாம் அவர் மனைவி நடந்துகொண்டதாற்றுன் அப்பூதி என்ற அந்தணர் 'அடிகள்' ஆனுர்; நாயன்மாருள் ஒருவராக அவரைச் சைவ வுலகம் போற்றியது. அப்பூதியின் மனைவி ஏறு

மாருக நடந்திருப்பாளாயின், அவரது சைவக் கொள்கைகள் பயன் பெற்றிரா. எனவே, அப்பூதி 'அடிகள்' ஆனமைக்கும், வீடு சிவமணம் கமழும் வீடாக இருந்தமைக்கும் அப்பூதி அடிகளின் மனைவியே சிறந்த காரணமாவாள். கணவனோடு கருத்தால் ஒன்றுபட்ட இத்தகைய மனைவி இருக்கும் இல்லந்தான் இன்பம் தரும் இல்லம் என்பதற்கு இவ்வரலாறு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### அமர்நீதி நாயனார்

இவர் வணிகர் மரபினர்; பழையாறை என்னும் ஊரினர். விழாக் காலங்களில் சிவனடியார்க்கு உணவு படைப்பதை இவர் திருப்பணியாகக் கொண்டவர். இவரது மனைவியாரும் இவர் கருத்துப்படி நடந்துவந்தார். ஒரு நாள் சிவபெருமான் சிவனடியாராக மாறி வந்து, தமது கோவணத் துணியை இவரிடம் கொடுத்து, வைத்திருக்கும் படி கூறி அகன்றார். அடியவரைச் சோதிக்க விரும்பிய இறைவன், அக்கோவணத்துணியை மறையும்படி செய்து, அதனையே திருப்பித் தரும்படி வற்புறுத்தினார்.

வணிகர், அடியவர் கொடுத்தது எவ்வாறோ மறைந்து விட்டது என்றும், அதற்குப் பதிலாக எது வேண்டு மாயினும் தருவதாகவும் கூறினர். அடியார் தாம் வைத்திருந்த கோவணத்துணியை ஒரு தராசுத் தட்டில் வைத்து, அதன் எடைக்குச் சமமான பொருள்களைத் தரும்படி கூறினார். வணிகர் இசைந்து, தம் வீட்டு எல்லாப்பொருள்களையும் மற்றொரு தட்டில் வைத்தார்; ஆயினும் அத்தட்டுக் கோவணத்தட்டோடு சமமாக நிற்கவில்லை. வணிகர் சிவபெருமானை வேண்டிக்கொண்டு தட்டில் ஏறினார். அவர் மனைவியாரும் கைக்குழந்தையுடன் தட்டில் ஏறினார். அப்பொழுதுதான் இரண்டு தட்டுகளும் சமமாக நின்றன என்பது வரலாறு. 'அரசன் எவ்வழி, அவ்வழிக் குடிகள்' என்பது பழமொழி.

'கணவன் எவ்வழி, அவ்வழி மனைவி' என்பதை நாயன்மார் வரலாறுகள் வற்புறுத்துகின்றன.

## இளையான்குடி மாற நாயனார்

சோழ நாட்டில் இளையான்குடி என்பது ஓரூர். அதனில் மாறர் என்னும் வேளாளர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியார் கணவர் கருத்தறிந்து நடப்பவர். சிவனடியாரை உண்பித்தலே அவ்விருவர்தம் தொழிலாக இருந்தது. இதனால் குடும்பத்தில் வரவர வறுமை மிகுந்தது. ஆயினும், அடியாரை உண்பிப்பதில் அவர்கள் தவறவில்லை. அவ்விருவரும் தாம் பட்டினி இருந்தேனும் அடியாரை உண்பித்து வந்தனர்.

ஓர் இரவு நல்ல மழை பெய்தது. சிவபெருமான் ஓர் அடியவராக மழையில் நனைந்துகொண்டு வந்தார். உடனே மாறர் அவரது ஈரத்தைப் போக்கினார். அவரை உண்பிக்க வீட்டில் அரிசியில்லை. என்ன செய்வது என்பது தோன்றாமல் மாறர் விழித்தார். உடனே அவரது மனைவியார், "இன்று காலையில் நமது வயலில் விதைத்த நெல்லைப் பொறுக்கிக் கொண்டுவாருங்கள். சமையல் செய்வோம்" என்றனர். மாறர் அகமிக மகிழ்ந்து, மழை பெய்து கொண்டிருந்த அந்த நேரத்தில் வயலுக்குச் சென்றார். காரிருள் கப்பிக்கொண்டிருந்தது. அந்த இருளில் மாறர் அரும்பாடுபட்டு நெல் மணிகளைச் சேர்த்தார்; அவற்றை வீடு கொணர்ந்தார். அம்மையார் வீட்டுக் கூரையிலிருந்த கழிகளை எடுத்து நெருப்பை உண்டாக்கினார்; முளைவிட்டிருந்த நெல் மணிகளை வறுத்தார்; அவற்றைக் குற்றி அரிசியாக்கிச் சமைத்தார்; தோட்டத்தில் முளைத்திருந்த கீரையைப் பறித்துவந்து கறியாக்கினார். எங்ஙனமேனும் அடியவரை உண்பிக்க முடிந்ததே என்று எண்ணி இருவரும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தனர் என்பது வரலாறு.

" பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டாகில்
எத்தாலும் கூடி வாழலாம் "

என்னும் மூதுரைக்கு இவ்வரலாறு ஏற்ற சான்ருகு மன்ருே?

## ஏயர்கோன் கலிக்காம நாயனர்

இவர் வேளாளர்; சோழர் சேனைத்தலைவர். இவரது மாமனர் மானக்கஞ்சாற நாயனர். கலிக்காமருக்குத் திருமணம் நடக்கும்பொழுது, மணப்பெண் கூந்தல் ஒப்பனையோடு மணவறைக்கு வந்தாள். சிவபெருமான் ஒரு சிவனடியாராக வந்து மணப்பெண்ணின் கூந்தலைக் கேட்டார். உடனே தந்தையார் மணப்பெண்ணின் கூந்தலை அரிந்து கொடுத்தார். சிவனடியார்க்குச் செய்யும் தொண்டு சிவபெருமானுக்குச் செய்யும் தொண்டாகும் என்பது அக்கால அடியாரது நம்பிக்கை. அந்நம்பிக்கையில் வளர்ந்த பெண்மணியாதலால் மணமகளும் தன் கூந்தலை அரிய இசைந்தாள்; மணமகனும் எதிர்த்துப் பேசாமல் இருந்துவிட்டார்.

இத்தகைய சைவக் குடும்பத்தில் பிறந்து சைவக் குடும்பத்தில் புகுந்த மானக்கஞ்சாறர் மகள் சிவநெறி வழுவாது, கணவன் கருத்தறிந்து, அறம்பல புரிந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தாள்.

அக்காலத்தில் வாழ்ந்த சுந்தரர் தேவாரம் பாடிய மூவருள் ஒருவராவர். அவர் தம் மனைவியாரான பரவையார் தம்மீது கொண்ட கோபத்தைத் தீர்க்கும்படி சிவபெருமானைத் தூது விடுத்தார். இதனை அறிந்த கலிக்காமர் மிக்க சீற்றம் கொண்டர்; சுந்தரரை வெறுத்தார். சிவபெருமான் ஏவலால் சுந்தரர் கலிக்காமரோடு நட்புக்கொள்ள அவர் ஊருக்கு வந்தார். கலிக்காமருக்குச் சூலைநோய் கண்டது. அவர் வலி தாங்காது துன்புற்ருர்; அவ்வமயம் சுந்தரர் தம்மை நோக்கிவருவதை அறிந்தார். அவரைக் காண்பதைவிட இறப்பதே நல்லது என்று

எண்ணிய கலிக்காமர், தம் உடைவாளால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வீழ்ந்தார். அவ்வமயம் சுந்தரர் வருவது உணர்த்தப்பட்டது.

சுந்தரர் தம் கணவரால் வெறுக்கப்பட்டவர் ஆயினும், சிறந்த சிவனடியார் என்பதை உணர்ந்திருந்த கலிக்காமர் மனைவி, அவரை வரவேற்க விரும்பினாள்; கணவன் வீழ்ந்த காரணத்தால், வேறு ஆடவரையும் பெண்டிரையும் அனுப்பி அவரை வரவேற்கச் செய்தாள்; கணவர் விருப்பத்திற்கு மாறாகத் தான் எதிர்செல்லுதல் தவறாத லால், அவள் சுந்தரை வரவேற்கச் செல்லவில்லை; வீட்டி னுள் வந்த சுந்தரரையும் பிறரைக்கொண்டே வரவேற்றாள். பின்பு சுந்தரர் கலிக்காமரைத் தழுவ, அவரும் உடல்நலம் பெற்றனர்—பின்பு இருவரும் நண்பராயினர் என்பது வரலாறு.

தம் வீடுதேடி வந்தவர் தம் கணவரால் வெறுக்கப் பட்டவர் எனினும், சிவனடியார் என்ற காரணத்தால் கலிக்காமர் மனைவி அவருக்கு வரவேற்பு அளித்தாள்; கணவர் கருத்தறியாது தான் எதிர்சென்று வரவேற்றல் முறையாகாது ஆதலால் அவ்வம்மை வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் அவ்வம்மை அளித்த வரவேற்பே நாயன்மார் இருவரையும் நண்பராக்கியது. இத்தகைய அறிவுநலம் வாழ்வரசியர்க்கு இன்றியமை யாதது அல்லவா?

## காரைக்கால் அம்மையார்

தஞ்சை மாவட்டத்தில் காரைக்கால் என்பது ஓர் ஊர். அதே மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம் பல்லவர் காலத் தில் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது. சீனர் முதலிய கீழ்நாட்டவர் பல்லவநாட்டுடன் வாணிகம் நடத்தி வந்தனர். அவ்வாணிகத்தால் வளம்பெற்ற வணிகர் குடும்பங்கள் பல நாகப்பட்டினத்தில் வாழ்ந்தன. அக் காலத்தில் காரைக்கால் கடல் வாணிகத்தில் சிறந்

திருந்தது. அங்கு வாழ்ந்த செல்வ வணிகர் குடும்பம் ஒன்றில் **புனிதவதியார்** என்ற பெண்மணியார் பிறந்து வளர்ந்தார். அவருடைய பெற்ருேர் சிவநெறியினர். ஆதலால் புனிதவதியாரும் இளமை முதற்கொண்டே சிவநெறியிற் சிறந்து விளங்கிஞர்; சிவபூசை செய்வதிலும் சிவனடியாரை உபசரிப்பதிலும் சிறப்புற்ருர். அவருக்கும் நாகைவணிகன் ஒருவனுக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் காரைக்காலிலேயே தனிக் குடும்பம் நடத்தலாயினர்.

புனிதவதியாரின் கணவஞன **பரமதத்தன்** கடையில் தங்கி வாணிகம் செய்துவந்தபோது, ஒருநாள் ஒருவர் இரண்டு மாம்பழங்களைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தார். அவன் அவற்றைத் தன் வீட்டிற்கு அனுப்பிஞன். அவ்வமயம் ஓர் அடியார் அம்மையார் இல்லத்திற்கு வந்தார். அம்மையார் அவ்வடியாருக்கு அமுது படைத்தார்; கணவன் அனுப்பிய இரண்டு மாம்பழங்களில் ஒன்றை அவருக்கு வைத்தார்.

பின்பு கணவன் வந்து உணவுண்டான். அப்பொழுது எஞ்சி இருந்த மாம்பழம் அவனுக்குப் படைக்கப் பட்டது. அது சுவை மிக்கதாக இருந்ததால் மற்ருென்றையும் உண்ண அவாவிஞன். அம்மையார் திடுக்கிட்டு விழித்தார்; அறையினுள் சென்று கண்கலங்கிச் சிவபெருமானை வேண்டிஞர். இறைவன் திருவருளால் ஒரு மாம்பழம் அவர் கைக்கு வந்தது. அம்மையார் அகமகிழ்ந்து அதனை எடுத்துச் சென்று கணவன் இலையில் வைத்தார். வணிகன் அதனை உண்டான். அது முன் தின்ற பழத்தைவிடச் சுவையில் மிகுந்திருந்தது. அதஞல் அவன் அம்மையாரை நோக்கி, "இது நான் அனுப்பிய மாம்பழம் அன்று. இது பெறுதற்கு அரியது. நீ இதனை எவ்வாறு பெற்ருய்?" என்று கேட்டான். அம்மையார் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு கூறிஞர். கணவன் அதனை நம்பவில்லை; "இது சிவன்

திருவருளாயின், அவன் அருளால் மேலும் ஒரு கனியை வருவி,'' என்றான். புனிதவதியார் அறையுட் சென்று இறைவனை வேண்டினர். திருவருளால் ஒரு மாங்கனி அவர் கையில் வந்தடைந்தது. அவர் அதனைக் கொண்டு வந்து தம் கணவன் கையிற் கொடுத்தனர். அவன் வியப்புடன் அதனை வாங்கினான்; ஆயின் அது திடீரென்று மறைந்துவிட்டது.

அதனைக்கண்ட பரமதத்தன் அஞ்சினான்; புனிதவதியாரைத் தெய்வப் பிறவியாகக் கருதினான்; அன்று முதல் அவரோடு தொடர்பின்றி வாழலானான்; பரமதத்தன் வேற்றூர் சென்று தனக்கேற்ற வேறொரு பெண்ணை மணந்து வாழ்வதே தக்கது என்று எண்ணினான்; அதனால் பாண்டிய நாடு சென்று வாணிகம் செய்தான்; அந்நாட்டு வணிகர்குல மங்கை ஒருத்தியை மணந்து வாழலானான். காலப்போக்கில் அவர்களுக்குப் பெண் குழந்தை பிறந்தது. பரமதத்தன் அதற்குப் புனிதவதி என்ற தன் முதல் மனைவியின் பெயரை இட்டு வழங்கினான்.

கணவன் தன்னைத் துறந்தபோதிலும் புனிதவதியார் அவனையே நினைந்து வருந்தினர்; அவன் பாண்டிய நாட்டில் வேறுமணம் செய்துகொண்டு வாழ்கிறான் என்பதைக் கேள்வியுற்றார்; தம் உறவினருடன் அவனைச் சென்று காணப் புறப்பட்டார். அம்மையார் வருவதைக் கேள்வியுற்ற பரமதத்தன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் எதிர்கொண்டு ஓடினான்; அம்மையார் பாதங்களைப் பணிந்தான்; தன் மனைவியையும் குழந்தையையும் பணியச்செய்தான்; உடன் வந்தோரை நோக்கி, "இவர் என் மனைவியார் அல்லர்; தெய்வத்தன்மை வாய்ந்த பெண்மணியார். என் குழந்தைக்கு இவரது பெயரையே இட்டிருக்கிறேன். தொழத்தக்கவராதலால் நான் இவரை வணங்கினேன். நீங்களும் வணங்குங்கள்,'' என்று கூறினான்.

அம்மையாருடன் வந்த உறவினர் விழித்தனர். அம்மையார் மனம் வருந்தினர்; "எல்லாம் இறைவன் செயல்" என்று எண்ணினர்; "இக்கணவனுக்காக இதுகாறும் என் இளமைப்பருவத்தைக் காத்துவந்தேன். இவனால் விரும்பப்படாத இந்த உடல் இனிக் கெட்டொழிவதாக," என்று வருந்திக் கூறினர்; இறைவனை வேண்டிப் பேய்வடிவம் கொண்டார்; அதன் பின்பு பற்பல சிவத்தளிகளைத் தரிசித்து, பக்திப் பாடல்களைப் பாடி, இறைவன் திருவடி - நீழலை அடைந்தார் என்று பெரிய புராணம் பேசுகின்றது.

அம்மையார் வரலாறு பெண்படைத்த பெற்றோருக்கு நல்ல படிப்பினை நல்குவதாகும். பூசையுணர்வும் பக்தியும் உடைய பெண்ணை, அவை இரண்டும் இல்லாத ஒருவனுக்கு மணம் செய்து தந்ததால் பெண்ணின் வாழ்க்கையே பாழாயிற்று என்பதை இவ்வரலாறு உணர்த்துகின்றது. "ஒத்த பண்பும்" பார்த்து மணம் செய்வித்தல் வேண்டும் என்ற சங்ககால வழக்கு இடைக்காலத்தில் கெட்டுவிட்டதால், புனிதவதியாரின் இல்வாழ்க்கை நல் வாழ்க்கையாக நடைபெறவில்லை என்பது அறியத்தக்கது. **ஒத்த பண்புடையவர்க்கே திருமணம் செய்வித்தல் வேண்டும்** என்பது இங்கு நன்கு அறியத்தகும் உண்மையாகும்.

### சிறுத்தொண்ட நாயனர்

இவர் முதலாம் நரசிம்மவர்மனிடம் படைத் தலைவராக இருந்தவர்; இரண்டாம் புலிகேசியைத் துரத்திச்சென்று, அவன் தலைநகரான வாதாபியை அழித்தவர்; பல்லவனால் சிறப்பிக்கப்பட்டவர். இவர் பதவியிலிருந்து விலகிய பின்பு, திருவாரூர்க்கு அருகிலுள்ள திருச்செங்காட்டங்குடியில் குடியேறினர்; அங்குக் கணபதி ஈசுவரம் என்ற கோவிலைக் கட்டினர்.

சிறுத்தொண்டர் நாள்தோறும் சிவனடியார் ஒரு

வர்க்கு உணவு அளிப்பது வழக்கம். அடியார் உண்ட பிறகே தாமும் மனைவியாரும் உண்பர். அவரது மனைவி யார் பெயர் **வெண்காட்டு நங்கை** என்பது. அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர் ; கணவர் கருத்துக்கு ஏற்ப நடப்பவர். ஆதலால் அவர்தம் இல்லறம் நல்லற மாக நடைபெற்றுவந்தது. அவ்விருவருக்கும் **சீராளன்** என்ற மகன் பிறந்து வளர்ந்துவந்தான்.

ஒரு நாள் வடநாட்டுப் **பைரவர்** வேடத்தில் சிவ பெருமான் வந்தார் ; பிள்ளைக்கறி சமைத்துப் படைத் தால் உண்பதாகக் கூறினர். சிவனடியார் வேண்டுவது சிவன் வேண்டுவது போன்றது, அவர் விருப்பத்தை நிறைவேற்றுவது சிவனது விருப்பத்தை நிறைவேற்றுவது போன்றது என்ற நம்பிக்கை இருந்தகாலம் அதுவாத லால், சிறுத்தொண்டர் தம் மகனைக் கொல்லத் துணிந்தார். கணவன் வழி நிற்பது கற்புடை மனைவி கடமையாதலால் மனைவியார் கணவற்குத் துணை நின்றார். ஒருமனப் பட்டுத் தம் ஒரே மகனைக் கொன்று கறி சமைத்தனர் என்பது வரலாறு.

தாம் பெற்று வளர்த்த மகனைக் கொல்ல எந்தத் தாயும் விரும்பமாட்டாள். கொல்வதோடு அன்றி, கொன்ற மகனைக் கறி சமைப்பது என்பது நினைக்க இயலாத செயல். இத்தகைய செயலைத் தந்தை செய்யினும், தாய் செய்யத் துணிவது அருமையிலும் அருமை! '**கணவன் சொற்படி நடத்தலே மனைவியின் அறம்**' என்ற ஒரே கொள்கையைப் பின்பற்றித் திருவெண்காட்டு நங்கை இங்ஙனம் நடந்தார்-செயற்கரிய செயலைச் செய்தார் என்பது இங்கு அறியத்தகும்.

"வாளால் மகவரிந்து ஊட்டவல் லேன்அல்லன்" என்று **பட்டினத்தடிகள்** வியந்து பாராட்டியது, இச் செயற்கரிய செயலையே ஆகும்.

**சுந்தரர்**

**சுந்தரர்** திருநாவலூர்ச் சிவன் கோவில் குருக்கள் மகனூர்; திருவாரூர்ச் சிவன்கோவில் குருக்களுக்குப் பேரர். இவர் திருவாரூர்க் கோவிலில் ஆடல் பாடல்களை நிகழ்த்திவந்த **பரவையார்** என்னும் உருத்திர கணிகையைக் காதல் மணம் செய்து கொண்டார். இருவரும் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக வாழ்ந்துவந்தனர். சுந்தரர் இறைவன் உதவியை வேண்டும் பொழுது,

“ **பரவைக்கும்** எனக்கும் பற்றுய பெருமானே ” என்று இறைவனை விளிப்பது வழக்கம். தமது காதலி மீது இவ்வளவு பற்றுக்கொண்ட சுந்தரர், திருவொற்றியூர்க் கோவிலில் மலர்த் தொண்டு செய்து வந்த **சங்கிலியார்** என்ற வேளாளர் மகளை விரும்பி மணந்துகொண்டார். அவர் அதன் பிறகு சிவபெருமானைப் பாடும்போது,

“ **பரவைக்கும் சங்கிலிக்கும்** எனக்கும் பற்றுய பெருமானே !” என்று சிவபெருமானை விளிப்பது வழக்கம்.

சுந்தரர் இரண்டாம் திருமணம் செய்து கொண்டதை அறிந்த பரவையார் கடுங்கோபம் கொண்டார்; தம் இல்லம் நோக்கிவந்த சுந்தரரை வரவேற்க மறுத்தார்; சிவ பெருமான் இடையீட்டால் சமாதானம் ஏற்பட்டது. பின்பு பரவையார் சுந்தரரை வரவேற்றுச் சிறந்த முறையில் இல் வாழ்க்கையை நடத்தி வந்தார். சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனுரோடு திருவாரூர்க்கு வந்த பொழுது, பரவையார் மிக்க ஆடம்பரத்துடன் இருவரையும் வரவேற்று உபசரித்தார். சிவனடியார்களுள் சாதிபேதம் கவனிக்கலாகாது என்ற கொள்கை அழுத்தமாக நிலவி வந்த காலமாதலால், குருக்கள் மரபில் வந்த சுந்தரர் கணிகையர் மரபில் வந்த பரவையாரையும் வேளாளர் மரபில் வந்த சங்கிலியாரையும் மணந்து கொண்டார் என்பது இங்கு அறியத்தகும். இம்மூவரும் சிவநெறிச் செல்வர்களாதலின் எண்ணமும் செயலும் ஒத்தவராக இருந்தனர்.

## திருநீலகண்டர்

இவர் மட்பாண்டங்களைச் செய்து விற்றவர்; தில்லையில் வாழ்ந்தவர். இவரது மனைவியார் சிறந்த சைவப்பற்றுடையவர்; சிவநெறிச் செயல்களில் கணவரோடு ஒன்றுபட்டு உழைத்தவர்; ஆயின், தவறு கண்ட இடத்துக் கணவரைக் கண்டிக்கும் மனவலிமை பெற்றவர். திருநீலகண்டர் சிவனடியார்க்குத் திருஓடு செய்து தரும் திருப்பணியை மேற்கொண்டவர்.

திருநீலகண்டர் ஒரு நாள் பரத்தை ஒருத்தியின் வீட்டிற்குச் சென்று வந்தார். இதனை உணர்ந்த அவர் மனைவியார், சீற்றமும் வருத்தமும் கொண்டார்; "திருநீலகண்டத்தின் ஆணையாக என்னை நீர் தொடலாகாது," என்று கூறினர். தாம் செய்த தவற்றை உணர்ந்த திருநீலகண்டர் நாணினர்; அன்று முதல் மனைவியோடு உரையாடலின்றிக் காலம் கழித்தார். பின்னர்ச் சிவபெருமான் அடியவராக வந்து அவர்களை ஒன்று சேர்த்தனர் என்பது வரலாறு.

கணவன் இத்தகைய தவறு செய்யும் பொழுது, மனைவி தக்கவாறு அறிவுரை கூறித் திருத்துதல் நல்லது. ஆனல் திருநீலகண்டர் மனைவியைப்போல ஆணையிட்டுக் கணவனை வேறு பிரித்தல் அழகன்று.

## மங்கையர்க்கரசியார்

இவ்வம்மையார் சோழன் மகளார்; பாண்டியன் நெடுமாறனுக்கு மனைவியார். சோழர் வழிவழிச் சைவர். ஆதலால் இவ்வம்மையாரும் சிறந்த சிவபக்தராயிருந்தார். ஆனல் இவரை மணந்துகொண்ட பாண்டியன் சமண சமயச் சார்புடையவன். ஆயினும் மதுரை அரண்மனையில் அந்தப்புரத்தில் அம்மையார் தனியாகச் சிவபூசை செய்து வந்தார்; மதம் வேறுபட்டிருந்த கணவனை உள்ளன்போடு நேசித்து வந்தார். பாண்டியனும் தன் மனைவி

யின் சமயத்தில் குறுக்கிடவில்லை ; அவளைத் தன் ஆருயிர் மனைவியாகக் கருதி வந்தான்.

ஆயின், அவனைச் சைவனாக்க வேண்டுமென்பது அம்மையாரது குறிக்கோள். அம்மையாரின் அழைப்பின் மீது சைவ சமய குரவராகிய திருஞான சம்பந்தர் மதுரைக்கு வந்தார் ; அங்கு இருந்த சமணரை அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வென்றார் ; பாண்டியனது வெப்பு நோயை நீக்கினார். பாண்டியன் மனம் மாறிச் சைவனானான். அப்போது அம்மையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. இவ்வம்மையார் சம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு வரவழைத்திராவிடில், பாண்டியன் சைவனாகி யிரான்—பாண்டிய நாட்டில் சைவம் தழைத்திராது என்பதை உளங்கொண்டு,

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்," என்று சேக்கிழார் பெருமான் அம்மையாரை அகமகிழ்ந்து பாராட்டியுள்ளார்.

தாம் வற்புறுத்தாமல் சைவ சமயத்தின் பெருமையைக் கணவனுக்கு உணர்த்திய கற்புக்கரசியார் வரலாறு இது. கணவனும் மனைவியும் வெவ்வேறு சமயத்தவராய் இருத்தல், அவர்தம் இல்வாழ்க்கைக்கு இடையூறு இல்லை என்பதை இவ்வரலாறு வற்புறுத்துகின்றது ; ஒருவர் பின்பற்றும் சமயத்தின் சிறப்பை மற்றவர் உணர்ந்து சமய மாற்றம் கொள்ளுதலும் தவறாகாது என்பதையும் வலியுறுத்துகின்றது.

## முடிவுரை

நாயன்மார் வரலாறுகளிற் காணப்படும் தெய்வீக நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டு, மனிதப் பண்புக்கேற்ற நிகழ்ச்சிகளை மட்டும் வைத்து ஆராயின், அக்காலத்தில், காதல் திருமணம் வழக்கில் இருந்தது, கணவனும் மனைவியும் ஒருமனப்பட்டு இல்லற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வந்தனர், கணவன் தவறு செய்யின் மனைவி அவனுக்குத்

தக்கவாறு அறிவுறுத்தல் வழக்கம், கணவனும் மனைவியும் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்திருந்த போதிலும் இல் வாழ்க்கை நல்வாழ்க்கையாகவே நடைபெற்று வந்தது என்பன நன்கு விளங்கும் உண்மைகளாகும்.

## 4. சிந்தாமணியில் இல்வாழ்க்கை

**சீவகசிந்தாமணி**

இந்நூல் ஏறத்தாழக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் செய்யப்பட்டது. **சீவகன்** என்னும் வடநாட்டு மன்னனைப் பற்றிய வரலாறு இதில் கூறப்பட்டுள்ளது. வடமொழியில் உள்ள **சத்ரசூடாமணி, கத்திய சிந்தாமணி** என்னும் இரண்டு நூல்களைத் தழுவி இக்காவியம் செய்யப்பட்டது. தமிழில் விருத்தப்பாவால் இயன்ற முதல் பெருங் காவியம் இதுதான். இது காவிய இலக்கணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற நூல்.

இதன் கதாநாயகனை சீவகன் தன்னேரில்லாத் தலை வன். அவன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் எண்மரை மணந்துகொண்டவன். இவருள் காந்தருவதத்தை வித்தியாதர மகள்; கனகமாலை, இலக் கணை, பதுமை என்ற மூவரும் அரசர் மகளிர்; குணமாலை, கேமசரி, விமலை, சுரமஞ்சரி என்ற நால்வரும் வணிகர் மகளிர்.

எந்த நாட்டிலும் அரசர், பெண்கள் பலரை மணந்து வாழ்தல் தொன்றுதொட்ட வழக்கமாக இருந்து வந்திருக் கிறது. தமிழகத்திலும் இராசராசன் முதற் குலோத் துங்கன் போன்ருேர்க்கு மனைவியர் பலர் இருந்தமையைக் கல்வெட்டுக்களால் அறிகிருேம்; இன்னும் நம் நாட்டில் சுதேச மன்னர் மனைவியர் பலரோடு வாழ்தலைப் பார்க் கின்ருேம். இஃது உண்மையில் அருவக்கத் தக்கதாயினும்,

வாழையடி வாழையாக வந்துகொண்டிருக்கிறது என்பதனால் அமைதி பெறுகிறோம்.

## பெண்ணடிமை

இங்குச் சீவகன் மனைவியர் பலராயினும் அவர்கள் எவ்வாறு அவனோடு பழகிவந்தனர், அவர்தம் இயல்புகள் யாவை என்பனவற்றை அறிந்திருத்தல் நம் நாட்டு வாழ்வரசிகளின் கடமையாகும். சீவகன் யாழ் வெற்றியாலும், தன் கட்டழகாலும், கலைத்திறனாலும் இந்த எண்மரையும் மணந்துகொண்டான். அவன் முதலில் **காந்தருவதத்தை** என்ற வித்தியாதர மகளை யாழ் வாசித்தலில் வெற்றி பெற்று மணந்துகொண்டான்; அரசனது பட்டத்து யானையிடம் அகப்பட்டுகொண்ட **குணமாலை** என்னும் அழகியைக் காத்தான்; உறுதியற்ற மனநிலை உடையவன் ஆதலால் தன் மனைக்குச் சென்று அவள் உருவத்தை எழுதிப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது காந்தருவதத்தை அங்கு வந்தாள்; அவனது செயலைக் கண்டு சீற்றம் கொண்டாள். சீவகன் அவளது கோபத்தைப் போக்க ஏதோ சமாதானம் சொன்னான். அவள் சீற்றம் தணியாது சென்றுவிட்டாள். பின்பு சீவகன் இரவிற் சென்று பலவாறு சமாதானம் கூறி அவள் வருத்தத்தைப் போக்கினான்.

ஆடவர் இவ்வாறு ஒரு மனைவி இருக்கப் பலரையும் மணக்கலாம் என்று அக்காலச் சமுதாயம் இடந்தந்திருந்தது. பெண்கள் ஊடல்கொள்ளலும் அடங்கலுமே இயற்கையாக இருந்திருக்கின்றனர். அக்கால ஆடவர் சமுதாயத்தின் அடக்குமுறையை இது காட்டுகின்றது. ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற இழிநிலை இருந்தது. சமுதாயம் இங்ஙனம் அறநெறியிலிருந்து பிறழ்ந்து இருந்த காரணத்தாற்றான் பெண்கள் ஆடவர்தம் கைப்பாவைகளாக இருக்கவேண்டிய இழிநிலை ஏற்பட்டது.

**குணமாலை**

குணமாலை என்பவள் தன் பெயருக்கேற்ப உயர்ந்த குணம் படைத்தவள்; அறநெறி நின்ற அறிவினள்; பழி யஞ்சும் பண்பு மிகுந்தவள்; உள்ளத்தூய்மையும் செயல் தூய்மையும் உடையவள். அவள் யானையின் பிடியிலிருந்து தன் உயிரைக் காத்த சீவகனையே மணக்க விரும்பினாள். இதனை அறியாத பெற்றோர் அவளது மாமன் மகனுக்கு அவளை மணமுடிக்கக் கருதினர். சீவகன்பால் உண்மைக் காதல் கொண்ட குணமாலை, "யானைப் பிடியிலிருந்து என் உயிரைக் காத்த உத்தமனையே மணப்பேன்; இன்றேல் இறப்பேன்," என்றாள். அவளது மனவுறுதி கண்ட பெற்றோர் அவள் விருப்பப்படியே அவளைச் சீவகனுக்கு மணம் முடித்தனர்.

குணமாலையின் பெற்றோர் நமது பாராட்டுக்கு உரியவராவர். பெற்றோர் கடமை தம் மகளுக்கு ஒரு மணமகனைத் தேடவேண்டும் என்பதே. அதனால் அவர்கள் உறவினனை ஒருவனைத் தேர்ந்தெடுத்தனர்; ஆனால் தம் மகள் முன்னரே ஒருவனைத் தன் வாழ்க்கைத் துணைவனாகத் தேர்ந்தெடுத்துவிட்டாள் என்பதை அறிந்தவுடன், இக்காலப் பெற்றோர் சிலர்போலப் பிடிவாதம் செய்யாமல்—அதனால் பெண்ணின் வாழ்க்கையைக் குலைக்காமல்—அவளைச் சீவகனுக்கே மணம் முடித்து வைத்தது, அவர் தம் பரந்த அறிவினையும் தமது மகளது நல்வாழ்வில் கொண்டிருந்த உண்மைப் பற்றையும் நன்கு உணர்த்துகின்றது அல்லவா? இத்தகைய அறிவு சான்ற பெற்றோர் இருப்பின், பெண்களது காதல் வாழ்வு சிறப்படையும்.

**சுரமஞ்சரி**

சுரமஞ்சரி என்பவள் குணமாலையின் இயல்புக்கு நேர்மாறானவள்; அவள் பேரழகி; இசையில் ஈடுபாடு மிக்கவள்; சிறிது பிடிவாதமும் உடையவள்; தன்செயலே சிறந்தது என்று எண்ணும் தருக்குடையவள்; பின்

விளைவு கருதித் தக்கது செய்யும் திறமை இல்லாதவள்; அவசரப்பட்டுக் கோபிப்பவள்; திடீரென்று ஊடல் கொள் பவள். சீவகன் அவள் பாதங்களில் விழுந்து பணிவான்; "சிறியவர் செய்த தீமை பொறுப்பது பெரியவர் கடமை அன்றோ?" என்று கூறி அவள் கோபத்தை மாற்றுவான். இவ்வாறு மனைவி ஊடல் கொள்ளும்போது கணவன் அவள் காலடியில் விழுந்து வணங்குவது தவறன்று என்பது,

> "மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
> நினையும் காலைப் புலவியுள் உரிய"

என்னும் தொல்காப்பிய விதியால் அறியப்படுகிறது. இருப்பினும், சுரமஞ்சரியைப் போல் அடிக்கடி ஊடல் கொள்வதும் கணவனைப் பணியவைப்பதும் வாழ்வரசிக்கு ஏற்றதன்று.

**இலக்கணை**

இலக்கணை என்பவள் சீவகனுக்கு மாமன் மகள்; சீவகன் இறுதியில் மணந்துகொண்ட மனைவி; விரைவில் கோபம் கொள்ளும் இயல்பினள். சீவகன் ஒரு நாள் இலக்கணையின் அழகை உற்று நோக்கிக்கொண்டிருந் தான். அதனால் அவன் கண் கரிந்து நீர் சொரிந்தான். அது கண்ட இலக்கணை பிறமகளிரின் அழகோடு தன் அழகை ஒப்பு நோக்கி அவரை எண்ணி வருந்தினன் என்று தவருக நினைத்தாள்; நினைத்ததை வாய்விட்டுச் சொன்னுள். சீவகன் அவள் அடியில் விழுந்து உண்மை யைக் கூறினன். அப்பொழுதும் அவளது ஊடல் தீர வில்லை. அவ்விருவர் செயலையும் அங்கு வளர்ந்துவந்த கிளியும் பூவையும் கண்டு, "இலக்கணை இரும்பு மனம் படைத்தவள்; சீவகன் தவறிலன்; மனம் இரங்காத அவளை நாம் வேண்டிப் புலவித் தீரச்செய்வோம்," என்று தம்முள் பேசிக்கொண்டன. அப்போது பூவை கிளியை நோக்கி, "நாம் தலையிடின் இலக்கணை சினந்து நமக்கு உணவு

ஊட்டாள்,'' என்று கூறியது. கிளி, ''இலக்கணையின் செயல் கண்டு யான் உயிர் வாழேன்; தூக்குப் போட்டுக் கொண்டு மடிவேன்,'' என்று கூறியது. அதுகேட்ட இலக்கணை ஊடல் தீர்ந்து நகைத்தாள் என்பது வரலாறு.

பறவைகளின் பேச்சுக் கற்பனையாக இருப்பினும், இலக்கணை, பொருந்தாத இடங்களில் எல்லாம் சுரமஞ்சரியைப் போல ஊடல் கொண்டதும், கணவனை அடி வணங்கச் செய்ததும் அவளது பெண்மைக்கு ஏலாதவை என்று கொள்ளலாம். **விரைவில் வெகுளும் தன்மை வாழ்வரசிகளுக்கு இருத்தலாகாது.**

## வீட்டுலக இன்பம்

சீவகன் அரசனானபின்பு, தான் ஆங்காங்கு மணந்த மகளிரைத் தன்னிடம் வருவித்தான். அம்மனைவியர் ஒவ்வொருவரும் **மோட்ச உலகத்தைக் கண்டு இன்புற்றவர் போலச்** சீவகனைக் கண்டு இன்புற்றார் என்று ஆசிரியர் கூறுகின்றார். சீவகன் தன் மனைவியருடன் இன்புற்றிருந்தபோது, சீவகனும் அவன் மனைவியரும் **வீட்டுலகத்தில் இருப்பவர்** போல இன்பமாக விளையாடிக்கொண்டிருந்தனர் என்று செப்புகின்றார். இவற்றால் ஆசிரியர் உணர்த்தும் 'உண்மை யாது? **நன்மகளிரோடு கூடி வாழும் இன்பம் வீட்டுலக இன்பமாகும்** என்பது ஆசிரியர் கருத்து.

## கற்புடை மகளிர்

சிந்தாமணி ஆசிரியர் கற்புடை மகளிர் செயல்களைப் பல இடங்களில் உணர்த்திச் செல்கிறார். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்:

(1) ஆற்றில் பெருகிச் சென்றநீர் சிறிய கால்வாய்களின் வழியே சென்று, பரந்த வயல்களிற் பாய்ந்து அடங்கித் தெளிந்திருந்தது. கற்புடைய குலமகளிர் இல்வாழ்க்கையில் அடங்கித் தெளிவுபெற்றிருந்தாற்

போல—மேலே சொல்லப் பெற்ற நீர் அடங்கித் தெளிவு பெற்றிருந்தது என்று ஆசிரியர் கூறுகின்றார்.

(2) மலையினது திண்மை நற்குல மகளிரது கற்பின் திண்மையை ஒத்தது என்று பிறிதோரிடத்தில் ஆசிரியர் உரைக்கின்றார். இதனால் நன்மகளிரது கற்பின் உறுதியை ஆசிரியர் வியந்து பாராட்டுதல் காண்க.

(3) ஆண் குரங்கு ஒன்று தன் மந்தி காண வேறொரு மந்தியோடு இன்புற்றுப் பின்பு தன் மந்தியிடம் வந்தது. அப்போது அம்மந்தி,

> **“ பரத்தையர்த் தோய்ந்த மார்பம்**
> **பத்தினி மகளிர் தீண்டார் ;**
> திருத்தகைத் தன்று தெண்ணீர்
> ஆடிநீர் வம்மின் என்ன
> உரைத்தது ”

என்று ஆசிரியர் குறிக்கின்றார். முதல் இரண்டு வரிகள் அக்காலக் கற்புடை மகளிரது மன இயல்பை உணர்த்துகிறது.

(4) கற்புடை மகளிர் பிற ஆடவரின் அறிவு, ஆண்மை முதலியவற்றைக் கண்டு மகிழ்ந்து அவரை வாழ்த்துதல் மரபு. சீவகன் இலக்கணையை மணந்து உலாப் போந்தபோது, கற்புடை மகளிர் அவனைக் கண்டு மனம் மகிழ்ந்தனர்; “கடலால் சூழப்பெற்ற நிலம் இருக்குமளவும் நின் ஆயுள் வளர்வதாக!” என்று வாழ்த்திப் பூமழை பொழிந்தனர்.

(5) கற்புடை மகளிர் தம் கணவன் இறந்தவுடன் இறப்பர் ; அவன் தம்மை விட்டுப் பிரிந்தானாயின், மலரும் மங்கல அணிகளும் புனையார் ; கணவனைத் தவிர வேறு எத்தெய்வத்தையும் வழிபடார்.

> “ சாமெனிற் சாதல் நோதல்
> தன்னவன் தணந்த காலைப்
> பூமனும் புனைத லின்றிப்
> பொற்புடன் புலம்ப வைகிக்

காமனை என்றுஞ் சொல்லார்
கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார்
சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார்.''

**பிள்ளை வளர்ப்பு**

சீவகன் மனைவியர் பிள்ளைகளைப் பெற்றனர். அவர்கள் அப்பிள்ளைகளை எவ்வாறு நீராட்டினர், எவ்வாறு வளர்த்தனர் என்பதை ஆசிரியர் அழகுபடக் கூறுகின்ருர். அதனை வாழ்வரசிகள் தெரிந்துகொள்ளுதல் நல்லது. சீவகன் மனைவியர் தம் குழந்தைகளை நீராட்டினர்; மருந்து ஊட்டினர்; நா வழித்தனர்; மூக்கு உயர்த்திச் சீராட்டினர் என்பதைக் கீழ்வரும் செய்யுளில் ஆசிரியர் விளங்க உரைக்கின்ருர் :

'' காடி யாட்டித் தராய்ச்சாறுங்
கன்னல் மணியும் நறுநெய்யுங்
கூடச் செம்பொன் கொளத்தேய்த்துக்
கொண்டு நாளும் வாயுறீஇப்
பாடற் கினிய பகுவாயுங்
கண்ணும் பெருக உகிருறுத்தித்
தேடித் தீந்தேன் திப்பிலிதேய்த்
தண்ணு வுரிஞ்சி மூக்குயர்த்தார்.''

'' தாய்மார் குழந்தைகளைத் தம் மடியிற் கிடத்தித் தம் தொடையை அசைத்து உறங்க வைக்கின்றனர். அவர் போலவே நீரலைகள் தமது மடியாகிய தாமரைப் பூவில் அன்னப் பிள்ளையைக் கிடத்தி, அதனை அசைக்க, அப்பிள்ளை உறங்குகின்றது,'' என்பது ஆசிரியர் கூற்று. தாய்மார் குழந்தைகளை இவ்வாறு மடியிற் கிடத்தித் தொடையை அசைத்து உறங்க வைப்பதை நாம் இன்றும் ஒவ்வொரு வீட்டிலும் காண்கின்றோம். சிந்தாமணி ஆசிரியர் காலத்திலும் இவ்வழக்கம் இருந்து வந்தது என்பதை அறிய நமது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

" தாய்தன் கையின் மெல்லத் தண்ணென் குறங்கின் எறிய
ஆய்பொன் னமளித் துஞ்சும் அணியார் குழவி போலத்
தோயுந் திரைகள் அலைப்பத் தோடார் கமலப் பள்ளி
மேய வகையிற் றுஞ்சும் வெள்ளை யன்னங் காண்மின்."

# 5. பின்னூல்களில் இல்வாழ்க்கை

## (1) யசோதர காவியம் முதலியன

### காமத்தால் விளையும் கேடுகள்

இது சீவகசிந்தாமணிக்குப் பின்பு செய்யப் பெற்ற சமண காவியம். இதன்கண் காமத்தால் விளையும் கேட்டினையும் நல்லொழுக்கத்தின் இயல்பினையும் இரண்டு செய்யுட்கள் விளக்குகின்றன :

" இழிவான காம வேட்கை நெஞ்சில் நிகழும் எண்ணங்களைக் கெடுத்துவிடும் ; குடிப்பிறப்பு என்னும் குன்றம் இடிந்து தூளாகும்படி செய்யும் ; புகழைக் கெடுத்துப் பழியை வளர்க்கும் ; மானமாகிய உறுதி நிலையைத் தகர்த்துவிடும் ; ஆண்மையினையும் செல்வத்தினையும் அழித்துவிடும் ; மனத்தையும் கண் முதலிய பொறிகளையும் நிலை கலங்கச் செய்யும்."

" எண்ணம தலாமை பண்ணும் ;
இற்பிறப் பிடிய நூறும் ;
மண்ணியல் புகழை மாய்த்து
வருபழி வளர்க்கும் ; மானத்
திண்மையை யுடைக்கும் ; ஆண்மை
திருவொடு சிதைக்கும் ; சிந்தை
கண்ணொடு கலக்கும் மற்றிக்
கடைப்படு காமம் என்றான்."

### நல்லொழுக்கத்தின் இயல்பு

" உயிர்க் கொலை, பொய்யுரைத்தல், களவாடுதல், பிறன் மனைவியை விரும்புதல், பொருள்மேல் கடும் பற்று,

ஆகாதவை என்று சான்றோரால் விலக்கப்பட்ட புலால் உணவும், மது உண்டலும், கள் குடித்தலும் ஆகிய இவற்றை நீக்குதலே **ஒழுக்கம்**.

“பெருகிய கொலையும் பொய்யும் களவொடு பிறன்மனைக்கண்
தெரிவிலாச் செலவும் சிந்தை பொருள்வயிற் றிருகு பற்றும்
மருவிய மனத்து மீட்சி வதமிவை ஐந்தோ டொன்றி
ஒருவின புலைசு தேன்கள் ஒருவுதல் **ஒழுக்கம்** என்றான்.”

## (2) கம்ப ராமாயணத்தில் இல்வாழ்க்கை

### நன்மக்கட் பேறு

இராமனுக்குப் பட்டம் கட்ட விரும்பிய தசரதன் அவனை நோக்கி, “மகன் கல்வி கேள்விகளிற் சிறந்து, எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமாகி, நற்செயல் களைச் செய்து, சான்றோரால் புகழப் பெற்றுப் பெற்றோரை அகம் களிக்கச் செய்தலால், பெற்றோர் அம்மைந்தரால் இம்மை இன்பத்தை அடைவர்; அவன் நீர்க்கடன் முதலி யன செய்து பெற்றோரை நற்கதி அடைவிக்கிறான். இவ் வாறு பெற்றோரின் இம்மை இன்பத்திற்கும் மறுமை இன் பத்திற்கும் மைந்தன் காரணமாகின்றான் என்று பெரி யோர் கூறுவர்,” என்று கூறினான்.

“உரிமை மைந்தரைப் பெறுகின்ற(து) உறுதுயர் நீங்கி
இருமை யும்பிறக்கு(ம்) என்பது பெரியவர் இயற்கை.”
—**மந்திரப் படலம்**

இதனால் இல்வாழ்க்கைக்கு நன்மக்கட் பேறு இன்றி யமையாதது என்பது பெறப்படுகிறதன்றோ?

### கணவனும் மனைவியும்

தசரதன் இராமனுக்குப் பட்டம் கட்டுவதாகக் கூறி, தனது கருத்து நேர்மையானதா என்று அமைச்சரைக் கேட்டான். உடனே அமைச்சர், “இராமன் மனைவி யான சீதை பொறுமையில் நிலமகளினும் நல்லவள்; அழ

கில் இலக்குமியினும் நல்லவள் ; அறிவில் கலைமகளினும் நல்லவள் ; கற்பில் மலைமகளினும் நல்லவள் ; இவ்வாறு எல்லாப் பெண்களிடமும் உள்ள நற்பண்புகள் யாவும் ஒருங்கே பெற்றவள். இவளை மனைவியாகப் பெற்ற இராமன், சீதையின் அருள் நிறைந்த விழிகளைக் காட்டினும் நல்லவன். ஆதலால் கற்றவரும் கல்லாதவரும் தாம் பருகும் நீரினும் தமது உயிரினும் அவனையே உயர்ந்தவனாக விரும்புவர்,'' என்று மகிழ்ச்சியோடு கூறினர்.

நாட்டையாளும் அரசன் நல்லவனாய் இருக்கலாம் ; ஆனால் அரசியாகிய அவன் மனைவி நற்குணம் இல்லாதவளாய் இருப்பின், அரசன் மனம் திரியும் ; அதனால் நல்ல அரசாட்சி இல்லாது போகும் ; குடிகள் துன்புறுவர். அதனாற்றான் அமைச்சர் சீதையின் நற்பண்புகளை முதலில் கூறிப் பின்னரே இராமனது சிறப்பைக் கூறினர் என்று கொள்க. நாட்டுக்குக் கூறிய ஒழுங்கே வீட்டுக்கும் உரியதாகும். நாட்டை நன்முறையில் நடத்த அரசனும் அரசியும் நல்லவர்களாக இருத்தல் வேண்டும் ; அவ்வாறே இல்லறத்தை நடத்தக் கணவனும் மனைவியும் குணங்களாலும் செயல்களாலும் சிறந்தவர்களாகத் திகழ வேண்டும்.

## பிரிவு பொறாத காதலர்

இராமன் காடு செல்வதாகக் கூறியவுடன் சீதை தானும் உடன் வருவதாகக் கூறினள். இராமன் காட்டு வாழ்க்கையையும் துன்பநிலையையும் அவளுக்கு விளக்கினான். அது கேட்ட சீதை சினந்தாள். "இரக்கமற்ற மனத்தோடு என்னிடத்தில் விருப்பமில்லாமல் என்னை விட்டு நீங்கிச் செல்ல விரும்புகிறாய். உன் பிரிவு என்னும் வெப்பத்திற்கு முன்னே பிரளயகாலத்துச் சூரியன் சுடும் வெப்பம் எம்மாத்திரம்? நீ செல்லும் பெரிய காடு உனது பிரிவுத் துயரைவிடச் சுடும் தன்மையுடையதா?'' என்று

பதறிக் கேட்டாள். இராமன் அவளது உள்ள வுறுதியைப் பாராட்டி, உடன் அழைத்துச் சென்றான்.

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற பின்பு, இராமன் அவள் இருந்த இடத்திற்கு வந்தான்; அவள் இல்லாததைக் கண்டான். உயிர் தனக்குரிய உடம்பைப் பிரிந்து சென்று, மீண்டும் அவ்வுடம்பைக் குறிக்கொண்டு தேடிவந்து அதனைக் காணப்பெறாது நின்றாற்போல, இராமன் திகைத்து நின்றான். தனக்கு உதவுவதற்காக நிலத்தில் புதைத்து வைத்த, மிக்க செல்வத்தை, வஞ்சகன் புதைத்து வைத்த மண்ணோடு மறையும்படி எடுத்துக் கொள்ள, அதனை இழந்தவன் திகைப்படைந்து நிற்பான் அல்லவா? தான் வைத்துக்கொண்டு வாழ்வதற்கு வேறு ஒரு பொருளும் இல்லாத அவன் திகைப்பு அடைந்து நிற்பதில் வியப்பு ஒன்றுமில்லை அல்லவா? அவனைப் போலவே, சீதை மண்ணுடன் காணப்படாததை நோக்கி, இராமன் அவள் இல்லாமல் வாழமுடியாதவனாய்க் கலங்கி நின்றான் என்று கம்பர் கூறுகின்றார்.

"கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணா(து)
உய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் றானையும்
போன்றான்."

—சடாயு உயிர் நீத்த படலம்

இராமன், பொய்கையிலிருந்த அன்னம் தாமரை முதலியவற்றைக் கண்டு சீதையின் நினைவு தோன்றிப் புலம்பியதாகக் கம்பர் பல பாக்களில் குறித்துள்ளார்.

அசோக வனத்தில் சிறையிருந்த சீதை இராமனைத் தன் 'உயிர்க்கு இறைவன்' என்று பேசுகின்றாள் (உருக் காட்டுப் படலம், செ. 14.) "தமது மானத்துக்கு அவமானம் நேருமாயின், சிறந்த பத்தினிமார் கவரிமானைப் போலத் தமது உயிரை விடுவர். யான் அவ்வாறு விட

முடியவில்லையே!'' என்று சீதை வருந்தியதாகக் கம்பர் கூறுகிறார். (உருக்காட்டுப் படலம், செ. 19.)

சீதை அநுமானிடம் சொல்லிய சிறந்த செய்திகளில் இரண்டு குறிப்பிடத்தக்கன : அவற்றுள் ஒன்று அவர் தம் திருமண காலத்தில் இராமன் வாக்களித்த செய்தி; மற்றொன்று சீதையினது விருப்பம். (1) "மிதிலையில் வந்து என்னை மணம் செய்து கொண்ட அந்நாளில், '**இப்பிறப்பில் உன்னைத் தவிர வேறு ஒருத்தியை மனத்தினாலும் எண்ணேன்**' என்று அவர் வாக்குக் கொடுத்தார். நீ இதனை அவர் திருச்செவிகளில் சொல்வாயாக.''

"வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டேனென்ற செவ்வரந்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.''

—**சூளாமணிப் படலம்**

(2) "நான் அவரால் சிறை மீட்கப்படாமல் இந்த இலங்கையிலேயே இருந்து இறப்பேனாயினும், மற்றொரு பிறவி எடுத்து இவ்வுலகில் வந்து தோன்றி, அவரது திருமேனியையே தழுவும்படியான வரத்தைத் தரும்படி யான் வணங்கி வேண்டிக்கொண்டேன் என்பதை அவரிடம் விண்ணப்பிப்பாயாக.''

"ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதொர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு(து) என்று விளம்புவாய்.''

—**சூளாமணிப் படலம்**

இவ்விரண்டு வாசகங்களாலும் சீதை இராமன்பால் கொண்டிருந்த உண்மை அன்பினை நாம் உள்ளவாறு உணரலாம். இத்தகைய **உண்மை அன்பே** இல்வாழ்க்

கையில் ஈடுபட்டுள்ள கணவர் மனைவியரிடம் இருக்க வேண்டுவதாகும்.

**மனைவியின் மாண்பு**

சீதையின் நற்பண்புகள் அனைத்தையும் நன்கு அறிந்து சென்ற அநுமன் இராமனிடம் திரும்பிச் சென்று, அவளுடைய சிறப்பியல்புகளை உவகையோடு எடுத்து உரைத்தான். அவற்றுள் இரண்டொன்று காண்க :

"ஐயனே, யான் தொழத்தகும் தெய்வமாகிய பிராட்டி, உனது சிறந்த மனைவி என்னும் தகுதிக்கும், உன் தந்தையான தசரதனது சிறந்த மருமகள் என்னும் தகுதிக்கும், சனகனது சிறந்த மகள் என்னும் தகுதிக்கும் ஏற்பச் சிறப்புப் பெற்றுள்ளாள்..............நான் இலங்கையில் பிராட்டியைக் காணவில்லை; உயர் குடியிற் பிறத்தல் என்னும் பண்பும் சிறந்த பொறுமை என்னும் குணமும், கற்பு என்னும் பெயரையுடைய ஒரு பண்பும் ஒருங்கு கூடிக் கூத்தாடுவதைக் கண்டேன்."

"உன்பெருந் தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றுள்
என்பெருந் தெய்வம் ஐயா இன்னமும் கேட்டி என்பான்."

"விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப்(பு) என்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்."

—திருவடி தொழுத படலம்

அஃதாவது, 'சீதை ஒரு பெண்ணரசியாக மட்டும் இருக்கின்றாள் என்று கருத வேண்டா; உயர் குடிப் பிறப்பு, பொறுமை, கற்புநிலை என்பவற்றின் உருவமாகவும் இருக்கின்றாள்,' என்பது கருத்து. இங்ஙனம்

காண்போர் பாராட்டும் வகையில் இல்லக்கிழத்தியர் வாழ்தலே நலம். இத்தகைய வாழ்வரசியைப் பெற்ற கணவரே பேறு பெற்றவர்.

## தாரையின் இல்வாழ்க்கை

இராமனால் வாலி இறந்த பின்பு தாரை பல கூறிப் புலம்பியதாகக் கம்பர் தெரிவிக்கின்றார். அவளுடைய புலம்பற் சொற்களிலிருந்து அவள் நடத்திய இல்லறத்தை நாம் நன்கு அறியலாம்.

"மேன்மை பெற்ற **எனது அருமையான உயிர் போன்றவனே, எனது மனம் போன்றவனே, எனது தலைவனே,** மலைகள் போன்ற உன் தோள்களினிடையே நாள்தோறும் நான் தங்கி இருந்தேன்; அதனால் நான் இதுவரையில் கரையில்லாத துன்பக்கடலைக் கண்டதில்லை. இப்பொழுது அதனைக் காண அஞ்சுகின்றேன்.

"இதுவரையிலும் என்னோடு மாறுபடாத குணத்தை உடையவனே, உயிர் நீங்கி விட்டால் அதன் பின்பு உடல் மட்டும் பிழைத்திருக்குமோ? (உயிர் - கணவன்; உடல் - மனைவி). பெருமானே, பொய் பேசாத பெரியவனே, '**நீ எனது உயிர்**' என்று நீ வாழ்ந்தபோது சொல்லி வந்ததும் பொய்யாகுமோ? நான் உனது நெஞ்சில் இருந்தேன் என்பது மெய்யாயின், இராமனது கொடிய அம்பு உன்னைப் போலவே என்னையும் உண்மையாக உயிர் வாங்கியிருக்கும்; எனது நெஞ்சில் நீ இருந்தாய் என்பது உண்மையாயின், என்னைப் போலவே நீயும் உறுதியாகப் பிழைத்திருப்பாய்; இங்ஙனம் இல்லாமையால் நாம் இருவரும் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் இருக்கவில்லையோ!" (வாலி வதைப்படலம், செ. 4, 5, 9, 10.)

தாரையின் புலம்பலைக் கொண்டு, அவள் வாலியை உண்மையாக நேசித்தவள், அவனை உயிராகக் கருதியவள், வாலியும் அவளை உயிராகக் கருதியவன், இருவரும் நிறை

மனத்தவராய் இல்வாழ்க்கையை நடத்தி வந்தனர் என்னும் செய்திகளை அறியலாம்.

**மண்டோதரி மாண்பு**

மண்டோதரி இராவணன் மனைவி. அவள் மயன் என்னும் தெய்வத் தச்சனுக்கு மகள்; நற்குண நற்செயல்களால் சிறந்தவள். அவளை எல்லா மாதரும் போற்றிப் புகழ்ந்தனர். இராவணன் சீதையைச் சிறை செய்த பொழுதே அவள் இராவணனை எச்சரித்தாள்; அவனது தவறான செயலைக் கடிந்தாள்.

தன் மகனை மேகநாதன் இலக்குவன் கணைக்கு இலக்காகி இறந்தபோது அவள் அவனுடைய வீரச் செயல்களையெல்லாம் பாராட்டிப் புலம்பினாள்; அப்போது, "பிறன் மனைவியை விரும்பிய காரணத்தால் உன் கதியையே நாளை இலங்கை வேந்தன் அடைவான்," என்று வருவதை அறிந்து கூறினாள்:

"பஞ்செரி யுற்ற தென்ன அரக்கர்தம் பரவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்ட தில்லை
அஞ்சினேன் அஞ்சி னேன் அச் சீதையென் றமிழ்தில் தோய்த்த
நஞ்சினால் இலங்கை வேந்து நாளையித் தகையன் அன்றே."

—இராவணன் சோகப்படலம்

அறக்கற்பு வாய்ந்த மண்டோதரி கூறிய வண்ணமே அவள் கணவனை இராவணன் இராமன் கணைக்கு இலக்காகி மடிந்தான். மண்டோதரி "மரங்களும் மலைகளும் உருக வாய்திறந்து" புலம்பினாள்; "இராவணனது வரம் என்னும் பாற்கடலைச் சீதை என்னும் பிறை அழித்து விட்டது. யான் அன்றே கூறினேன். என்னுரை கேளாது இலங்கை வேந்தன் இறந்தான்," என்று அழுது புலம்பினாள். பின்பு எழுந்து இராவணனது ஒப்பற்ற மார்பைத் தன் தளிர்போன்ற கைகளால் தழுவித் தனித்து நின்று

உரக்கக் கூவிப் புலம்பிப் பெருமூச்சு விட்டாள். உடனே அவள் உயிர் பிரிந்தது.

## முடிவுரை

பிறன் மனைவியை விரும்புவோர் அழிவது திண்ணம் என்பதற்கு இராவணன் வரலாறு ஏற்ற சான்றாகும். கணவனது தவறான ஒழுக்கத்தைக் கற்புடைய மனைவி கண்டிப்பாள் என்பதற்கு மண்டோதரி ஏற்ற சான்றாவாள். இராவணனது தவறான செயலால் எத்துணையர் இறக்க வேண்டியவராயினர்! எத்துணைப் பெண்டிர் தமது இல் வாழ்க்கையைத் துறக்க வேண்டியவராயினர்! இராவண னுடைய பிற நலன்களெல்லாம் அவனது ஒரே தீய செய லால் சிறப் பிழந்தன என்னும் உண்மைகள் இங்கு அறி யற்பாலன. **ஒருத்தியோடு வாழ்தலுக்கு ஒப்பில்லை** என்பது இவ்வரலாற்றால் அறியப்படும்.

சூர்ப்பநகையின் தீய செயலால் இத்துணைத் துன்பங் களும் ஏற்பட்டன என்பதும் கவனிக்கத்தகும். சுருங்கக் கூறின், **நல்ல ஒழுக்க நெறியிலிருந்து மாறுவோர் அழிந்து படுவர், அவரால் அவர் மரபுக்கும் இழுக்கு நேரும்** என்பன இவ்வரலாறு உணர்த்தும் உண்மைகளாம். இல்வாழ்க்கையில் இருப்பவர் இவற்றை மனத்தில் இருத்தி நல்வாழ்வு வாழ்தல் வேண்டும்.

# III. பிற்காலம்
(கி. பி. 1300—1900)

## 1. திருவிளையாடற் புராணத்தில் இல்வாழ்க்கை

### திருவிளையாடற் புராணம்

சிவபெருமான் மதுரையில் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விரித்துக் கூறும் நூல் திருவிளையாடற் புராணம் என்பது. இப்பெயருடன் இரண்டு புராணங்கள் தமிழில் இருக்கின்றன. **நம்பி** என்பவர் செய்த திருவிளையாடற் புராணம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் **பரஞ்சோதி முனிவர்** மிகவும் விரிவான முறையில் திருவிளையாடற் புராணம் ஒன்றைப் பாடினார். இவர் நூற்பாக்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் பொருந்தி யவை ; படிக்கப்படிக்க இன்பம் பயப்பவை.

### கணவனே ஆசிரியன்

சிவபெருமான் வேதங்களின் உட்பொருளை உமா தேவியாருக்குக் **கற்பித்தார்** என்பது **திருவிளையாடற் புராணம் வலைவீசு படலத்தில்** கூறப்படுகிறது. இவ்வாறு வேறு புராணங்களிலும் பல சந்தர்ப்பங்களில் உமாதேவி யார்க்கு ஏற்பட்ட ஐயங்களைச் சிவபெருமான் போக்கி அருளினார் என்பது அறியப்படுகிறது. இதனால் அறியப் படுவது யாது? **கல்வி அறிவு இல்லாத மனைவியைக் கல்வி அறிவு உடையவளாகச் செய்வது கணவன் கடமை,** என்பது வற்புறுத்தப்படுகிறது ; இவ்வாறே சிறிது கற்ற மனைவியைப் பெரிது கற்றவளாகச் செய்ய வேண்டுவதும் கணவன் கடமை என்பது கூறாமற் கூறப்

படுகிறது ; மனைவியின் ஐயங்களைப் போக்க வேண்டுவது கணவனது கடமை. சுருங்கக் கூறின், **தன்னைப் போலத் தன் மனைவியையும் அறிவுடையவளாக்குவது கணவனது பொறுப்பாகும்.**

நமது தமிழ்ச் சமுதாயத்தில் படிக்கும் ஆண்கள் தொகை அதிகமாகும் ; பெண்கள் தொகை குறைவாகும். ஆதலால் படித்த ஒவ்வொரு ஆணுக்கும் படித்த பெண் கிடைப்பது அருமை. இதனை உளங் கொண்டு, படியாத - அல்லது - குறைந்த கல்வியுடைய மனைவி வாய்க்கப் பெற்ற படித்தவன், அவளைப் படிப்படியாகத் தன்னைப்போல் கல்வி கற்றவளாகச் செய்ய வேண்டுவது கடமையாகும். குழந்தைகளைப் பெறுகின்றவள் தாய் ; அவற்றை வளர்ப்பவளும் அவளே. இல்லறத்தை நல்லறமாகச் செய்பவளும் மனைவியே. ஆதலின் அவள் கற்றவளாக இருந்தாற்றான் வீட்டைச் சுகாதார முறையில் வைத்துக்கொள்ள இயலும் ; அவள் நல்ல முறையில் பிள்ளைகளை வளர்ப்பாள் ; குறிப்பிட்ட காலம் வரையில் தானே தனது பிள்ளைகளுக்கு ஆசிரியராக இருந்து சிறந்த முறையில் பாடம் கற்பிப்பாள் ; பிள்ளைகளின் அறிவு, ஒழுக்கம் முதலியவற்றை வளர்க்கக் கதைகளையும் நிகழ்ச்சிகளையும் சொல்லுவாள் ; இல்லத்து இராணியாக இருந்து, கொண்டவனைப் பேணி, பெற்ற பிள்ளைகளையும் பாதுகாத்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக இலங்கும்படி செய்வாள்.

கணவனும் மனைவியும் இல்வாழ்க்கை என்னும் வண்டியை நடத்திச் செல்லும் எருதுகள் போன்றவர். ஒருமாடு உயர்ந்தும் மற்றொன்று தாழ்ந்தும் இருப்பின், அல்லது ஒருமாடு வலிமையுடையதாயும் மற்றொன்று மெலிவு உடையதாயும் இருப்பின் - வண்டி ஒரு நிலையிற் செல்லாது. அதுபோலவே இல்வாழ்க்கை என்னும் வண்டியிற் பூட்டப் பெற்ற கணவனும் மனைவியும், சங்க காலச் சான்றோர் சொன்னபடி, ஏறத்தாழ ஒத்த கல்வியும்

ஒத்த பண்பும் உடையவராக இருத்தலே சிறப்புடையது. இங்ஙனம் இல்லாமையாற்றான் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் இல்லற வாழ்க்கை நல்லற வாழ்க்கையாக இல்லை. இவ்வவல நிலை மாறுதல் வேண்டும். நம்மைப் படைத்த இறைவனே தன்மனைவிக்கு ஆசிரியனாக இருந்து பலவற்றையும் உணர்த்தினான் என்னும் செய்தியை, ஒவ்வொரு கணவனும் மறவாது உள்ளத்து அமைக்க வேண்டுவதாகும்; அமைத்துத் தன் மனையாளைக் கல்வி அறிவு உடையவளாகச் செய்வது நன்று.

### மனைவியர் இருவர்

மதுரையில் ஒரு வணிகன் தன் மனைவி மக்களோடு வாழ்ந்து வந்தான். அவனது தாய்மாமன் வேறொரு பட்டினத்தில் சிறந்த செல்வனாக இருந்தான். அவனுக்குத் தவமகள் ஒருத்தி இருந்தாள். தந்தை அம்மகளைத் தன் தங்கை மகனுக்கே இரண்டாம் மனைவியாகக் கொடுக்க விரும்பினான். ஆனால் அத்திருமணத்திற்கு முன்பே தந்தை இறந்துவிட்டான். அவன் மனைவி உடன்கட்டை ஏறினாள்.

இச்செய்தியை அறிந்த மதுரை வணிகன் தன் தாய் மாமன் ஊருக்குச் சென்றான்; தன் மாமன் சேர்த்து வைத்திருந்த அளவற்ற செல்வத்தை எடுத்துக்கொண்டான். அவன் மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று மணந்து கொள்ள விரும்பிப் புறப்பட்டான்; வழியில் திருப்புறம்பியம் என்னும் ஊரில் ஓர் இரவு தங்கினான். அவனும் உடன் வந்தவரும் சிவன் கோவிலுக்கு எதிரில் இருந்த கிணற்றில் நீராடினர்; ஒரு **வன்னிமரத்தின்** கீழே உணவு சமைத்து உண்டனர்; பின்பு திருக்கோயில் வாயிலில் ஒரு படியின்மீது தலைவைத்து உறங்கினர்.

இங்ஙனம் உறங்கியபொழுது வணிகனை அரவு தீண்டியது. உடனே அவன் உயிர் துறந்தான். அவனுடன் வந்த ஆட்கள் அலறினர். அவனுடன் வந்த

மாமன் மகள் திகைத்துத் துடித்தாள்; மணம் நிகழாத தால் அவனது உடம்பைத் தீண்டாமல் பூங்கொடிபோல் ஒதுங்கி நின்று புலம்பலானாள்.

அவளது புலம்பல் அந்த இரவில் அவ்வூர் முழுமையும் கேட்டது. அன்றிரவு தம் அடியாருடன் அவ்வூர் மடத்தில் தங்கியிருந்த திருஞான சம்பந்தர் அப்பெண்ணின் புலம்பலைக் கேட்டு விரைந்து வந்தார்; நடந்ததை அறிந்து இரக்கம் கொண்டார்; அவ்விளம்பெண்ணுக்காக வணிகனை எழுப்ப விரும்பினார்; ஐந்தெழுத்தை ஓதி அருட்கண்ணால் நோக்கினார். கொடிய நஞ்சு நீங்கியது. வணிகன் உறங்கினவன் போல எழுந்தான். அங்கிருந்த அனைவரும் அவன் உயிர் பெற்றதற்கு மகிழ்ந்து, திருஞான சம்பந்தரைப் பலமுறை வணங்கி வாழ்த்தினர். அப்போது திருஞானசம்பந்தர் வணிகனைப் பார்த்து, "நின் மாமன் பெற்ற இப்பெண்மணி இன்பம் வந்த போதும் துன்பம் வந்தபோதும் உன்னைத் தொடாமல் விலகி நிற்பது திருமணம் ஆகாமையால் அன்றோ? இத்தகைய நல்லொழுக்கம் உடைய இப்பூங்கொடியை இப்பொழுதே மணம் முடித்துச் செல்வது நல்லது," என்றார். வணிகன், "எங்கள் மரபினரும் இல்லாமல் சான்றாயினாரும் இல்லாமல் மணம் முடிப்பது எவ்வாறு?" என்று கேட்டான். உடனே சம்பந்தர், "தன் மகளை உனக்கே தருவதாக உன் மாமன் தன் சுற்றத்தாரிடம் கூறியுள்ளான். மேலும் இத்திருமணத்திற்குச் சான்றாக இந்த **வன்னி மரமும் கிணறும் லிங்கமும்** ஒருங்கே உள்ளன. எனவே, எமது சொல் கடவாமல் இங்கே மணம் முடித்துச் செல்வாய்," என்று அன்போடு கூறினார். வணிகன் அவர் ஆணைப்படி அப்போதே தன் மாமன் மகளை மணம் செய்துகொண்டான்; பொழுது புலர்ந்தது; மதுரையை நோக்கிச் சென்றான்.

ஆண்டுகள் சில கடந்தன. ஒரு நாள் மூத்தவள் மைந்தர், இளையவள் சிறுவனை அடித்துவிட்டனர். அது

கண்ட இளையவள் மூத்தவள் மக்களைக் கடிந்தாள். மூத்தவள் இதை அறிந்து இளையவள்மேல் சீறினாள். "நீ எந்த ஊரோ, எந்த இனமோ, எவர் பெற்ற மகளோ, என் கணவனை எவர் முன்னிலையில் நீ திருமணம் செய்து கொண்டாய்? என் கணவன்மீது ஆசைப்பட்டு வந்தவள் தானே? காமக்கிழத்தியான உனக்கு வாய் ஏன்? என் கணவன் உன்னைத் தீமுன் மணந்ததற்குச் சான்று உண்டோ?" என்று கடிந்தாள்.

இளையவள் அச்சொற்களைக் கேட்டு நெருப்பிற்பட்ட புழுவெனத் துடித்தாள்; மதுரைச் சோமசுந்தரக் கடவுளை வேண்டினாள். இறைவன் திருவருளால் அவள் கூறிய வன்னியும் கிணறும் லிங்கமும் மதுரைத் திருக்கோயிலின் வடமேற்கு மூலையில் விரைந்து வந்து அமைந்தன. திருவருளால் இளையவள் இதனை உணர்ந்து, மூத்தாளையும் பிறரையும் அழைத்து வந்து மூன்றையும் காட்டினாள். மூத்தவள் வெட்கித் தலைகுனிந்தாள். உறவினரும் பிறரும் இளையவளது கற்பு மேம்பாட்டையும் தெய்வ பக்தியையும் மிக வியந்து பாராட்டினர். கணவன் முதல் மனைவியை வெறுத்து நீக்கிவிட்டான்.

அப்போது இளையவள் கணவனை வணங்கி, "இன்று எனது கற்பை நிலைநிறுத்தியவள் இவளே. ஆதலால் இவளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இவளும் யானும் உடலும் உயிரும்போல ஒன்றுபட்டு வாழ்வோம். நீ கவலையுற வேண்டா," என்று வேண்டிக்கொண்டாள். அன்று முதல் மூத்தவள் மனம் மாறி, இளையவளைத் தன் தங்கைபோல் மதித்து நடந்துவந்தாள். அன்று முதல் அவர்தம் இல்லறம் நல்லறமாக நடந்துவந்தது.

**படிப்பினை**

இவ்வரலாற்றில் மூத்தவளது கொடுமையும் இளையவளது பெருந்தன்மையும் பேசப்படுகின்றன. **கணவன் கருத்தறிந்து நடப்பதே தனது கடமை** என்பதை முதல்

மனைவி நன்கு அறிந்திருந்தால், அவள் வாயில் கடுஞ் சொற்கள் வந்திரா. முதல் மனைவி இருக்கும்பொழுது இரண்டாம் மணம் செய்துகொள்வது தவறு. ஆயினும் செய்துகொண்ட பிறகு மனைவியர் இருவரும் மனம் ஒத்து வாழ்வதே நல்லது. அங்ஙனமின்றிக் கீரியும் பாம்புமாக இருப்பின், வீட்டில் எவருக்கும் இன்பம் இராது.

இரண்டாம் மனைவி மனம் வைத்திருந்தால், முதல் மனைவியின் வாழ்வையே கெடுத்திருத்தல் கூடும். கணவனே அவளை வெறுத்து ஒதுக்கி விட்டான். அது தன் நல்வாழ்வுக்கு ஏற்றது என்று இரண்டாம் மனைவி விட்டிருக்கலாம். ஆயின், அவளது பரந்த மனப்பான்மையும் சிறந்த ஒழுக்கமும் முதல் மனைவியைத் திக்கற்றவளாக விட்டுவிட இசையவில்லை. அவள் முதல் மனைவியின் வாழ்வுக்காகக் கணவனிடம் மன்றாடினாள்; அவளைத் தன்னுடன் வாழும்படி விருப்பத்தோடு சேர்த்துக் கொண்டாள். இத்தகைய மனநிலை ஒருவனை மணந்து வாழும் மனைவியரிடம் இருக்க வேண்டுவதாகும். இவ் விரிந்த மனப்பான்மை இருப்பின், பலதார வாழ்க்கையில் துன்பம் நேராது.

## 2. வில்லிபாரதத்தில் இல்வாழ்க்கை

### வில்லிபாரதம்

பாரத வரலாறு சங்ககாலத்திற்கு முற்பட்டது. சங்க காலத்தில் பெருந்தேவனார் என்பவர் ஆசிரியப்பாவில் பாரத வரலாற்றைத் தமிழில் பாடினர். ஆயின், அந்நூல் இப்பொழுது இல்லை. கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் பெருந் தேவனார் என்ற மற்றொரு புலவர் **பாரத வெண்பா** என்ற நூலை எழுதினர். அதன் பெரும்பகுதி இப்போது கிடைப்பதில்லை. கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் **வில்லி புத்தூர் ஆழ்வார்** என்பவர் விருத்தப்பாவில் பாரத வரலாற்றைப் பாடினர். அந்நூலே **வில்லி பாரதம்**

என்பது. இல்வாழ்க்கைப்பற்றி இதில் கூறப்பட்டுள்ள செய்திகளை இங்குக் காண்போம் :

### காதல் மணம்

அருச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றபொழுது பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையை அடைந்தான். பாண்டியன் அவனைப் பரிவுடன் வரவேற்றான் ; அருச்சுனனுக்கு அழகிய சோலை ஒன்றில் விருந்து அளித்தான். அருச்சுனன் அச்சோலையில் விருந்துக்குப் பின்பு இளைப்பாறிக்கொண்டிருந்தான். அப்பொழுது பேரழகி ஒருத்தி தன் பணிப் பெண்களுடன் அச் சோலைக்கு வந்தாள். அவள் பாண்டியன் மகள் என்பதை அருச்சுனன் அறிந்தான். அருச்சுனன் அவளது பேரழகில் ஈடுபட்டு, அவளை மணந்துகொள்ள விரும்பினான்.

பாண்டியன் மகளான சித்திராங்கதை பலவகைத் தளிர்களையும் மலர்களையும் பறித்துக்கொண்டு தன் தோழிப்பெண்கள் உடன்வர ஒரு செய்குன்றிற் சென்று அமர்ந்தாள். அருச்சுனன் தனது மெய்வடிவத்தோடு அச்செய்குன்றில் சென்று நின்றான். அச்செய்குன்றின் பக்கங்களில் வண்டானம் என்ற ஒரு சாதி நாரைகள் திரிந்துகொண்டிருந்தன ; வண்டுகள் மலர்களைச் சுற்றிப் பாடிக்கொண்டிருந்தன ; மயில்கள் கூத்தாடின. கிளிகள் சான்றோர் சொற்களைச் சொல்லிக்கொண்டிருந்தன. நாகணவாய்ப் பறவைகள் மூவகைத் தமிழையும் கொண்டாடித் தலையைச் சாய்த்து நின்றன. இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து நின்ற சித்திராங்கதை, தன் சுய வுருவில் நின்ற அருச்சுனனைக் கண்ணுற்றாள். இருவர் விழிகளும் ஒன்றையொன்று சந்தித்தன. இருவர் மனங்களும் மாறின ; ஒருவர் மனத்தில் மற்றவர் குடிபுகுந்தார்.

“ செந்திருவை அனையாளும் திருமாலை
அனையானும் சிந்தை ஒன்றாய்

வந்திருவர் விலோசனமும் தடையின்றி
உறவாடி மகிழ்ச்சி கூர்ந்து
வெந்துருவம் இழந்தமதன் மீளவும்வந்து
இரதியுடன் மேவு மாபோல்
கந்தருவ முறைமையினால் கடவுளர்க்கும்
கிடையாத காமம் துய்த்தார்.''

பின்பு இச்செய்தியைப் பாண்டியன் அறிந்தான். தீர்த்த யாத்திரைக் கோலத்தில் வந்தவன் அருச்சுனன், அவன் தனக்கு மருமகன் ஆயினான் என்பதை அறிந்த பாண்டியன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தான்; நல்ல நாளில் தன் மகளுக்குத் திருமணம் செய்வித்தான்.

இவ்வாறு தமிழ் இலக்கண முறைப்படி பாண்டியன் மகளுக்குக் **காதல் மணம்** நடைபெற்றது. இக்காதல் மணத்தை வடநாட்டார் காந்தருவ மணம் என்பர். வட நாட்டானைத் தென்னாட்டு மகள் மணந்து கொண்டாள் என்பது இங்கு அறியத்தகும். **காதல் என்னும் நுண்ணிய உணர்ச்சி சாதி, சமயம், நாடு, நிறம், மொழி என்பவற்றைக் கடந்தது** என்னும் உண்மையை இவ்வரலாறு உணர்த்துகின்றது.

### மற்றொரு காதல் மணம்

அருச்சுனன் பல தலங்களைப் பார்த்துக்கொண்டே துவாரகையை அடைந்தான். கண்ணன் அதற்கு அரசனாக இருந்தான். கண்ணனுக்கும் பலதேவனுக்கும் ஒரே தங்கையாக இருந்தவள் **சுபத்திரை**. அவள் பேரழகி; பல கலைகளில் வல்லவள்; தேர் ஓட்டவும் அறிந்தவள். அவள் அருச்சுனனுடைய அழகு, ஆண்மை முதலிய பண்புகளை உணர்ந்து அவன்மீது காதல் கொண்டாள். இதனை அறிந்த கண்ணன் தன்னுள் மகிழ்ந்தான். இதனை அறியாத பலதேவன் அவளைத் துரியோதனனுக்கு மணம் முடிக்க விரும்பினான். கண்ணனோ இதனை விரும்பவில்லை.

பார்ப்பனக் கோலத்துடன் வந்த வில்விசயனைக் கண்ணன். வரவேற்று ஒரு சோலையில் இருக்கச் செய்தான். வந்தவன் அருச்சுனன் என்பது அவனுக்கு மட்டும் தெரியும். பலதேவன் முதலியோர் அவனை அந்தணன் என்றே நம்பினர். கண்ணன், தவக்கோலத்தில் வந்த அருச்சுனனுக்குப் பணிவிடை செய்யச் சுபத்திரையை அமர்த்தினான்; நகருக்கு வெளியில் ஏதோ விழாக்கொண்டாடுவதற்காகப் பலதேவன் முதலியோரை அழைத்துக்கொண்டு அகன்றான்.

அப்போது சுபத்திரை துறவியின் சில செயல்களைக் கண்டு ஐயுற்றாள்; உண்மையை அறிய விரும்பி அவனுடன் பேசினாள். அவன் தான் எப்பொழுதும் நிலையாக இருப்பது அத்தினபுரி என்று கூறினான். உடனே சுபத்திரை அருச்சுனன் நீங்கலாக உள்ள நால்வரது நலனை விசாரித்தாள். அருச்சுனன் அவளை நோக்கி, "அருச்சுனனை மட்டும் நீ விசாரியாததன் காரணம் யாது?" என்று கேட்டான். உடனே தோழிப் பெண் அவனை வணங்கி, "ஐயனே, எங்கள் தலைவி விசயனையே மணக்கவேண்டும் என்று தவம் இருக்கின்றாள். அவ்வழகன் இப்பொழுது எங்கே இருக்கிறான்?" என்று ஆவலோடு கேட்டாள்.

விசயன் புன்முறுவலோடு, "அருச்சுனன் தீர்த்த யாத்திரையாகச் சென்று பல இடங்களையும் கண்டான்; இப்பொழுது இங்கு உங்கள் நடுவில் இருக்கின்றான்", என்று அமைதியாகப் பதில் கூறினான். அவ்வளவே: சுபத்திரையின் ஐயம் தீர்ந்தது. அப்பொழுது அக்காதலர் இருவரும் அடைந்த மகிழ்ச்சி சொல்லும் தரமன்று. அருச்சுனன் தன் தந்தையான இந்திரனை மனத்தால் நினைத்தான். இந்திரன் உடனே அங்குத் தோன்றினான். கண்ணனும் அங்குத் திடீரெனத் தோன்றி அவனை வரவேற்றான். அவ்விருவர் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. பின்பு அருச்சுனன் சுபத்திரையை

அழைத்துக்கொண்டு அத்தினபுரிக்குச் சென்றான். மனம் ஒன்றுபட்ட காதலர் வாழ்வு இன்ப வாழ்வே என்பதில் ஐயம் உண்டோ?

**சூதாட்டம்**

பண்டைக் காலத்தில் அரசரும் பொது மக்களும் சூதாடலைப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். அவ்வாட்டத்தில் சிறிது தோற்றவுடன் மான வுணர்ச்சியால் உந்தப்பட்டு ஒவ்வொரு பொருளாகப் பந்தயம் வைத்து இழத்தல் அல்லது வெல்லுதல் வழக்கம். இக்கொடிய சூதாட்டத்தைத் திருவள்ளுவர் போன்ற சான்றோர் வன்மையாகக் கடிந்தனர். நீதி நூல்கள் அனைத்தும் இதனைக் கண்டித்துள்ளன. அப்படி இருந்தும் நளன் சூதாடித் தன் நாட்டைத் தோற்றுக் காட்டிற்குச் சென்றான். ஆனால் அவன் தன் மனைவியைப் பந்தயமாக வைத்துச் சூதாடவில்லை. அந்த இழிநிலைக்கு இறங்கியவன் தருமன் ஒருவனே. அவன் முதலில் தன்னுடைய பொருள்களையும் தன் தம்பிமார்களின் பொருள்களையும் தான் ஆண்ட நாட்டையும் சூதில் தோற்றான்; பின்பு தன்னையும் தம்பிமாரையும் தோற்றான்; அதன் பின்பு ஐவர்க்கும் மனைவியான துரோபதையையும் ஆட்டத்தில் தோற்றான். இவனது இத்தவறான செயலால் இவன் தம்பிமார்களும் மனைவியும் சொல்லொணாத் துன்ப முற்றனர்.

இங்ஙனம் மனைவியை வைத்துச் சூதாடுதல் நம்பத் தக்கதா என்று பலர் எண்ணியது உண்டு. இங்ஙனம் ஆடுதல் அக்காலத்தில் மட்டுமன்று—இக்காலத்திலும் உண்டு என்று கூறுவதுபோல அண்மையில் ஒரு நிகழ்ச்சி வடநாட்டில் நடந்திருக்கிறது. அச்செய்தி செய்தித் தாளில் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:

“சூதாட்டத்தில் மனைவியை இழந்தான் கணவன். குழந்தைகள் அநாதை ஆஸ்ரமத்தில்!

மொராதாபாத், ஜனவரி 5—"சூதாட்டத்திலே மனைவியைப் பணயமாக வைத்து அவளையே இழந்தான் ஒரு கணவன்! அவனுடைய அந்தச் சூதாட்ட வெறியில் அவன் குழந்தைகள் அனாதை ஆயின! இந்தச் சம்பவம் வட இந்தியாவில் மொராதாபாத் நகரில் நடந்தது.

மனைவியைத் தோற்றான்! சூதாட்டத்தில் எல்லாவற்றையும் இழந்த அந்த ஆசாமி கடைசியில் **தனது இளம் மனைவியையே பந்தயப் பொருளாக வைத்தான்.** ஆனால் அதில் அவன் தோற்று மனைவியை இழந்தான். வெற்றிபெற்றவனுக்கு ஒரே சந்தோஷம். துரதிர்ஷ்டம் பிடித்த அந்தப் பெண் தன் இரண்டு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு அந்தப் புதிய கணவனுடன் போனாள். ஆனால் பந்தயத்தில் வெற்றி பெற்ற ஆசாமி அவளுடைய குழந்தைகளைக் காப்பாற்ற விரும்பவில்லை. அவை அவனுக்குப் பெரும்பாரமாகத் தோன்றிற்று. எனவே, அவன் அந்த இரு குழந்தைகளையும் ஊரில் இருந்த ஆரிய சமாஜ அனாதை ஆசிரமத்துக்குக் கூட்டிக்கொண்டு போனான்.

'சூதாட்டத்தில் இவர்களுடைய தாய்மட்டும் தான் எனக்குக் கிடைத்தாள். எனவே, குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பு என்னுடையதல்ல' என்று சொல்லிவிட்டு, அந்த ஆசாமி தீர்மானமாக வெளியேறி விட்டான்.

தாய், தந்தையர் இருந்தும் அனாதைகளான அந்தக் குழந்தைகளை என்ன செய்வது என்று ஆசிரம அதிகாரிகளுக்குப் பெரும் பிரச்னையாக உள்ளது. ஏனெனில், அந்த ஆசிரமத்தில் தாய் தந்தையற்ற குழந்தைகள் மட்டுமே அனாதைகளாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இதுபற்றிப் போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அக்குழந்தைகள் அனாதை ஆசிரமத்தில் இருந்துவருகின்றன." —*தினத்தந்தி* (5–1–1957)

**மனைவியை மகிழ்வித்தல்**

பாண்டவர் காட்டில் வசித்தபோது ஒரு நாள் அழகிய **பொன்மயமான தாமரை மலர்** ஒன்று துரோபதையின் முன் வந்து வீழ்ந்தது. அவள் அது போன்ற மலரைப் பெற்று மகிழ விரும்பினாள். தான் நினைத்ததையெல்லாம் முடித்துத் தருபவன் **வீமன்** ஆதலால், அவள் இம்முறையும் அவனிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். வீமன் அங்கிருந்த உரோமச முனிவனை வணங்கி அம் மலர் எங்கே கிடைக்கும் என்று கேட்டான். குபேரனுக்கு உரிய அளகாபுரியிலுள்ள தோட்டத்தில் அது கிடைக்கும் என்று அம்முனிவன் கூறினான்.

**தன்னை மதித்துக் கேட்டமனைவியை மகிழ்விப்பதே தனது கடமை** என்று எண்ணிய வீமன், அளகாபுரியை நோக்கிச் சென்றான்; வழியில் எதிர்த்தவரை வென்றான். இறுதியில் மலரைப் பறித்துக்கொண்டு மீண்டான்; துரோபதையின் கையில் அம்மலரைக் கொடுத்து மகிழ்ந்தான். அவள் தனது முகமலர்ச்சியால் அவனது ஆண்மையைப் பாராட்டினாள்.

சீதை விளையாடப் பொன்மானை விரும்பினாள். இவ்வாறு ஒவ்வொரு மனைவியும் சில பொருள்களை விரும்புவது இயல்பே. அவளால் விரும்பப்படும் பொருள் தன் ஆற்றலுக்கு உட்பட்டதாயின், அதனைப் பெற்றுத்தந்து மனைவியை மகிழ்விப்பது கணவனது கடமையாகும். இங்ஙனம் மகிழ்விப்பவன் அம்மனைவியால் சிறப்பாக மதிக்கப்படுவான் என்பது உறுதி. தனது உழைப்பாலும் ஊக்கத்தாலும் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுபவன், அவளது உள்ளத் தாமரையில் என்றும் குடியிருப்பான் என்பதில் ஐயமில்லை.

**பிறன் மனைவியை விரும்பி அழிதல்**

பாண்டவர் ஐவரும் துரோபதையும் வேற்றுருவம் கொண்டு விராட நகரத்தில் ஓராண்டு கழித்தனர். அங்கு

அவர்கள் வேற்றுருவில் இருந்த பொழுது, விராட மன்னனது மைத்துனனுன **கீசகன்** துரோபதையைக் காதலித்தான். துரோபதை அவனது தமக்கைக்கு வண்ண மகளாக இருந்தாள். கீசகன் வலிமையால்தான் விராடன் நாட்டை ஆண்டு வந்தான். ஆதலால் அந்த நாட்டில் கீசகன் வைத்தது சட்டமாக இருந்தது. அவனை எதிர்க்க யாவரும் அஞ்சினர்.

அவன் துரோபதையின் பாதங்களைப் பணிந்து தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். அப்போது துரோபதை, "மாறன் கணைகளால் உயிர் போவதாய் இருந்தாலும், **குற்றமற்ற மரபில் பிறந்தவர் பிறர் மனைவியை உள்ளத்தாலும் நினையார்.** நினது செயல் தவறுனது. எனது உடலைத் தேவர் ஐவர் காக்கின்றனர்," என்று கூறினாள். அவன் மீண்டும் அவள் பாதங்களில் விழுந்து பணிந்தான். அவள் அவனது தமக்கையான அரசியிடம் முறையிட்டாள்; கீசகனுக்கு அழிவு நேரும் என்று எச்சரித்தாள். அரசி தன் தம்பியைக் கடிந்து அனுப்பினாள்.

கீசகன் துரோபதையை நினைந்தபடியே தன் மனையில் பிதற்றிக்கொண்டிருந்தான். அவன் துரோபதையைக் காணுவிடில் இறந்துவிடுவான் என்று பணிப்பெண்கள் அரசியிடம் அறைந்தனர். அரசி ஒரு மாலையைக் கொடுத்து அதனைக் கீசகனிடம் கொடுத்து வரும்படி துரோபதையை வேண்டினாள். துரோபதை சென்று கீசகனிடம் அம்மாலையைக் கொடுத்தாள். கீசகன் அவளைக் கண்டதும் ஆவேசம் கொண்டவனைப்போல அவளைப் பிடிக்க வந்தான். அவள் அலறிக்கொண்டு ஓடி, அரசனது அவைக்களத்தில் விழுந்தாள்; நடந்ததைக் கூறி மன்னனிடம் முறையிட்டாள். மன்னன் கீசகனுக்கு அடங்கியவன் ஆதலால் ஒன்றும் பேசவில்லை.

திரௌபதி, அரண்மனைச் சமையற்காரனுக உருமாறியிருந்த வீமனை அன்று இரவிற்கண்டாள். இருவரும்

கீசகனைத் தொலைக்க முடிவு செய்தனர். 'மறுநாள் இரவு நகர்ப்புறத்திலுள்ள சோலைக்கு வரும்படி கீசகனைத் துரோபதை தூண்ட வேண்டும்—வீமன் பெண்ணுருவம் கொண்டு துரோபதையுடன் அச்சோலைக்குச் செல்ல வேண்டும்—அங்குக் கீசகனைக் கொல்லவேண்டும்' என்பது அவர்தம் முடிவு.

மறுநாள் கீசகன் துரோபதையைப் பணிந்து தன் விருப்பத்தை நிறைவேற்றுமாறு வேண்டினன். துரோபதை அவனுக்கு இணங்கினள் போல நடித்து, அன்று நள்ளிரவில் சோலையில் வந்து தன்னைச் சந்திக்கும்படி செப்பினள். கீசகன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

நள்ளிரவில் சோலையில் இருந்த பெரிய மர நிழலில் வீமன் பெண் வேடத்தில் நின்றுகொண்டிருந்தான். துரோபதை பாதுகாப்பு மிகுந்த ஓர் இடத்தில் அச்சோலையிலேயே வைக்கப்பட்டிருந்தாள். காமவெறியில் அறிவைப் பறிகொடுத்த கீசகன் எமலோகத்தை நாடிவரும் உயிர் போலச் சோலையை நாடிவந்தான்; மரநிழலில் நின்றுகொண்டிருந்தவள் துரோபதையே என்று எண்ணிப் பலவாறு அவள் புகழைப் பாடினன். வீமன் நகைத்து அவன் கைகளைப் பற்றி இழுத்துப் போர் தொடுத்தான். இருவருக்கும் நெடுநேரம் போர் நடைபெற்றது. இறுதியில் கீசகன் கொல்லப்பட்டான். அவனது உடல் உருத் தெரியாமல் பிசையப்பட்டது. வீமன் துரோபதைக்கு அவனது உடலைக் காட்டி, "பெண்ணே, உன்னை விரும்புவோர் இந்தக் கீசகனைப் போல ஆவர். இவனைப் பார்," என்று கூறினன்.

**படிப்பினை**

கீசகன் வீமனைப் போன்ற பெருவீரன். பல நாட்டு மன்னர் அவனைக் கண்டு அஞ்சினர். அத்தகைய பெருவீரன் பிறன் மனைவியை விரும்பியதால் ஆண்மை கெட்டு, அதுகாறும் பெற்றிருந்த புகழ் கெட்டுத் தன் உயிரை

இழந்தான்; தீராப் பழியையும் பெற்றான். இஃது ஒவ்வோர் ஆண் மகனும் தன் உள்ளத்தில் பதிக்கவேண்டும் படிப்பினையாகும்.

இன்றும் அறிவற்ற சிலர் இத்தவறு செய்கின்றனர்; கணவனாலோ பிறராலோ குத்தப்படுகின்றனர்; வெட்டப் படுகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளைச் செய்தித் தாள்களில் காண்கின்றோம். இப்பிறன் மனை விழைதலை வள்ளுவர் வன்மையாகக் கண்டித்தார். வரலாறும் பல சான்றுகளைக் காட்டுகின்றது. ஆயின், கீழ் மக்கள் இன்றும் இத்தீய செயலை விட்டிலர். இதனால் வரும் துன்பம் சிறிதன்று. பழியும் பாவமும் பெருகுவதில் பயன் யாது? ஒருவனுக்கு உரிமை பூண்ட ஒருத்தியை மற்றொருவன் விரும்புதல் அறிவீனமன்றோ? இதனால் அவமதிப்பும் உயிர்க் கொலையும் நேருகின்றன. எனவே, இச்செயலில் ஈடுபடாதிருத்தல் ஆண் மகன் கடமையாகும்.

## குடும்ப ஒற்றுமை

அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்தவன் அபிமன்யு என்பவன். இவன் பாண்டவர் ஐவராலும் போற்றி வளர்க்கப் பெற்றவன். இவன் அறிவிலும் போர்ப் பயிற்சியிலும் சிறந்தவன். பாரதப் போரில் பதின்மூன்றும் நாள் இவன் செய்த போர் மிகவும் கடுமையானது. அன்று இவன் பகைவர் படையின் பெரும் பகுதியை அழித்தான். துரியோதனன் இவனை அழிக்கத் தன் மைத்துனனை ஏவினான். அவன் சிவனிடம் பெற்ற கொன்றை மாலையால் அபிமன்யுவை வளைத்தான்; சிவன் கொடுத்த கதையால் அவனைக் கொன்றான்.

## தருமன் புலம்பல்

"எனது கண் போன்றவனே, எனது உயிர் போன்றவனே, நீ பிறந்த நாள் முதற்கொண்டு உன் தந்தையான அருச்சுனனைக் காட்டிலும் பெருமையும் ஒளியும் மிகுந்த

வன் என்ற காரணத்தால் உன்னைக்கொண்டே பகைவரைக் கொன்று உலகத்தை ஆள எண்ணியிருந்தேனே! உனது அன்புள்ள தந்தையரான எங்களை மறந்துவிட்டாயே! உன் தந்தையான அருச்சுனன் வாழ்ந்திருக்க, மலைகள் போலும் வலிய தோள்களை உடைய வீமன் உயிரோடு இருக்க, சிறந்த நகுல சகாதேவர் இருக்க, நின் மாமனை கண்ணபிரான் இருக்க, பகைவென்று அரசாண்டு வாழக் கருதி யான்இருக்க, சிங்கக்குட்டி போன்ற நீ இறப்பது தகுதியோ!'' என்று தருமன் பலவாறு புலம்பி மயங்கித் தன் தேரில் வீழ்ந்தான்.

**வீமன் புலம்பல்**

''மகனே, இன்று நீ செய்தபோர் வியத்தற்குரியது. சிவபெருமானது கொன்றை மாலையால் உன்னையும் என்னையும் பகைவர் பிரித்து விட்டனர். நீ இவ்வாறு வஞ்சனையால் கொல்லப்படுவாய் என்று நான் கருதவில்லை. சிங்கக்குட்டி போன்ற நீ அழிந்து ஒழிய, அதன் பின்பும் நான் உயிரோடு இருக்கின்றேனே!'' என்று வீமன் அழுது புலம்பினான்.

**படிப்பினை**

அபிமன்யு இறந்தவுடன் இவ்வாறு அவனுடைய பெரிய தந்தையரும், சிறிய தந்தையரும் புலம்பினர் என்றால், அச்சகோதரர்தம் ஒற்றுமையும், அருச்சுனன் மகனை அவர் அனைவரும் நேசித்த நிலையும் நன்கு விளங்குகின்றன அல்லவா? இவர்களைப் போலவே அண்ணன் மக்களைப் போற்றி வளர்க்கும் தம்பிமார்கள் இக்காலத்திலும் உண்டு. தம்பியின் பிள்ளைகளைப் பேணும் அண்ணன்மார்களும் உண்டு. பிள்ளைகளும் இதற்கேற்ற முறையில் **கல்வியிலும் ஒழுக்கத்திலும்** சிறந்து விளங்குகின்றனர். ஆயின், இத்தகைய ஒற்றுமை உள்ள குடும்பங்கள் மிகச் சிலவேயாகும். இவை மிகப் பலவாகப் பெருகுதல் வேண்டும்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தமையன், தம்பி என்னும் இருவரில் ஒருவன் ஏழை, ஒருவன் செல்வன் என்று வைத்துக் கொள்வோம். செல்வன் தன் உடன் பிறந்த ஏழையைக் காக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அவன் மக்களை நல்வழிப்படுத்துவதும் செல்வன் கடமையாகும். இவை இரண்டும் நடைபெறத்தக்க நிலையில் எளியவனும் அவன் மக்களும் செல்வனது உள்ளத்தைக் கவர வேண்டும் ; அவன் கருத்துக்கு இசைய நடக்கவேண்டும். இவ்விருவர்தம் மனைவியரும் ஒன்றுபட்ட உள்ளத்தினராய் வாழ்தல் வேண்டும்.

சில குடும்பங்களில் எவ்வளவு உதவிசெய்த போதிலும், பயனற்ற நிலையில் வாழும் உடன் பிறந்தார் உண்டு. அவர்தம் **சோம்பல், சூழ்நிலை, தீயபண்புகள்** ஆகியவையே அவர்தம் இழிநிலைக்குக் காரணம். அவர்கள் உள்ளம் திருந்தினால்தான் நல்வாழ்வு பெறமுடியும். அவர்களுக்கு மேலும் மேலும் உதவி செய்வது வீணாகும். சிறிதளவு உதவியையும் பெரிதளவாகக் கருதித் தம் ஊக்கத்தாலும், உழைப்பாலும், ஒழுக்கத்தாலும் முன்னேறும் உடன் பிறந்தார்க்கு உதவி செய்யத்தான் வேண்டும். " நம் உடன் பிறந்தவனும் அவன் குடும்பத்தவரும் நல்வாழ்வுபெற நம்மால் இயல்வதைச் செய்வோம்," என்பது உடன் பிறந்தாரின் எண்ணமாக இருத்தல் வேண்டும். குடும்ப ஒற்றுமைக்கு இது மிகவும் இன்றியமையாதது.

## 3. பிற்கால நூல்களில் இல்வாழ்க்கை

### கந்த புராணம்

உண்மைத் துறவிகளுக்கு வேண்டும் உதவிகளைச் செய்வது இல்வாழ்வார் கடமை ; தம் குடியில் இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டும் கடமைகளைச் செய்தல் வேண்டும் ; இல்வாழ்க்கைக்குரிய அன்பு, ஒழுக்கம், இன்சொல், பிறன்மனை விழையாமை முதலிய அறங்கள் பல

வும் ஆற்றவேண்டும் ; விருந்தோம்பலை நடத்தவேண்டும். இவை அனைத்தும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர் கடமைகளாகும்.

" துறந்தவர்கள் வேண்டியதொர் துப்பரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இருங்கடன் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந் தோம்புமுறை அல்லால்
பிறந்தநெறி யாதுளதொர் பேருதவி யாதோ ?"

**கூர்ம புராணம்**

"தருமம் செய்தல், நன்னெறியில் பொருளீட்டல், அறநெறி தவருது ஒழுகுதல், இல்லத்தில் இன்பம் துய்த்தல், ஊரார் வாழ்த்த வாழ்தல், அறிவுடையோர் இகழ்வனவற்றைச் செய்யாதிருத்தல், அறிவுடையோர் விரும்பும் செயல்களையே செய்தல், சான்ருேர் பாராட்டும் முறையில் நடத்தல், அருளுணர்வுடன் இல்லறம் நடத்தல் என்பன இல்வாழ்வார் கடமைகளாகும்" என்று கூர்ம புராணம் கூறுகின்றது.

**சிதம்பர மும்மணிக்கோவை**

அறநூல்களில் சொல்லப் பெறும் அறங்களில் இல்லறம் துறவறம் என்பன சிறந்தவை. இல்லறத்தின் இலக்கணம் யாது ? கணவன் கற்றவனுக இருத்தல் வேண்டும் ; நற்குணங்கள் நிறைந்த கற்புடைய மனைவியுடன் வாழ்தல் வேண்டும் ; உற்ருர் உறவினருடன் அன்பும், பிறரிடமும் பிற உயிர்களிடமும் அருளும் காட்டி நடந்துகொள்ள வேண்டும் ; இன்சொல் உடையவனுதல் வேண்டும்; விருந்தினரைப் போற்ற வேண்டும்; ஐம்புலன்களையும் அளவோடு அடக்குபவனுதல் வேண்டும் ; தன் நற்செயல்களால் புகழை நிறுத்தல் வேண்டும் ; பிறன்மனை விரும்பாதவனுதல் வேண்டும். இப்பண்புகளோடு வாழ்தலே இல்வாழ்க்கையாகும்.

## விநாயக புராணம்

இல்வாழ்க்கையில் கற்புடைய மனைவியே சிறந்த செல்வம்; வருவாய்க்குத் தக்கபடி வாழ்தலே இன்பம்; கற்புடைய மனையாளோடு வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவன் பெருமிதத்தோடு நடப்பான்; வாழ்க்கை இன்பம் பெறும்; இத்தகைய வாழ்க்கையே போற்றத்தகும் இல்வாழ்க்கையாகும்.

## திருக்குற்றாலப் புராணம்

துறவிகளுக்கும், திக்கற்றவர்க்கும், வறியவர்க்கும் இல்வாழ்க்கையில் இருப்பவனே உதவிசெய்ய வசதி உடையவன். மனித வாழ்விற்கும் உயர்கதிக்கும் இல்லறமே வித்தாகும். மனைவாழ்க்கை அறம் என்னும் சரக்கை ஏற்றும் வண்டியாகும். செயல் என்னும் நுகத்தைப் பிடித்துக் கணவனும் மனைவியும் முறைதவறாமல் செலுத்தினால், இல்வாழ்க்கையாகிய வண்டி எவ்வளவு தூரம் வேண்டுமாயினும் செல்லும். கணவன் மனைவி ஆகிய இருவருள் ஒருவர் மட்டுமே அவ்வண்டியைச் செலுத்த முயன்றால் அது சிறிதளவும் செல்லாது.

## மாயூரப் புராணம்

இல்வாழ்க்கைக்கு ஏற்ற குணங்கள் இல்லாத மனைவியைச் சார்ந்து வாழின், உலகத்தார் நகைப்பர். அவ்வாறு வாழ்வதைவிட ஒருவன் எவ்வகையாலேனும் உயிரை மாய்த்துக் கொள்ளுதல் நலம். தகுதியற்ற மனைவியோடு வாழும் வாழ்க்கை நரக வாழ்க்கையாகும்.

## சிவ–பரமார்த்த தரிசனம்

துறவிகள், குடியில் இறந்தோர், நோயாளிகள், திக்கற்றவர், உதவி விரும்பும் வயதானவர், சிறுபிள்ளைகள், அறவுணர்வு கொண்ட பெரியோர்கள், விருந்தினர், பெற்றோர், சுற்றத்தார், கற்பிற் சிறந்த மனைவி இவர்களை உப

சரித்து உண்ணுதல் இல்லறத்தின் இலக்கணமாகும். கொலை, களவு, கள், காமம், கோபம் என்பவற்றை நீக்கி ஐம்புலன் நுகர்வுகளை அளவுப்படுத்தி, நன்னிலையி லிருந்து அணுவளவும் விலகாமல் வாழும் வாழ்க்கையே இல்வாழ்க்கை எனப்படும்.

**நன்னெறி**

"இரண்டு கண்களும் ஒரே சமயத்தில் ஒரு பொருளையே காணும். அதுபோலவே அன்புடைய **மனைவியும் கணவனும் கருத்தும் செயலும் ஒன்றுபட்ட வராய் நடத்துவதே இல்வாழ்க்கை** எனப்படும்" என்பது சிவப்பிரகாசர் கருத்தாகும்.

## குசேல உபாக்கியாநத்தில் இல்வாழ்க்கை

**குசேல உபாக்கியாநம்**

இது 'குசேல முனிவனைப்பற்றிய கிளைக்கதை' எனப்பொருள்படும். இது பாகவதத்துள் கூறப்படுவது. கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் குசேல உபாக்கி யாநம் பாடப்பெற்றது. இது ஒரு தனிநூல்; 773 செய்யுட் களைக்கொண்டது. இதனைப் பாடியவர் வல்லூர்–தேவ ராசப்பிள்ளை என்பவர்.

**வாழ்க்கைக்கு ஏற்ற மனைவி**

குசேலன் என்ற முனிவனுக்குச் சுசீலை என்ற பெண்மணி மனைவியாக இருந்தாள். முனிவன் தவத்தால் உடல் மெலிந்தவன்; உலகப்பற்றைப் பெரிதும் விட்டவன்; சிறந்த அறிஞன்; கண்ணனுடன் படித்தவன். அவன் நாள்தோறும் நீவாரப்புல்லின் தானியங்களைக் கொண்டு வந்து கொடுத்தான். சுசீலை அவற்றைப் பக்குவப் படுத்திச் சமையல் செய்து, அதிதிகளுக்கு இட்டுக் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் இட்டுத் தானும் உண்டு வந்தாள். நாளடைவில் அவள் இருபத்தேழு பிள்ளை

களுக்குத் தாயானுள். மிகவும் வறிய வாழ்க்கையை வாழ்ந்து வந்த அவள், கணவனிடம் மிக்க அன்பு காட்டினுள்; அமைதியும் நற்குணமும் ஓர் உருவம் எடுத்து வந்தாற்போல விளங்கினுள். 'கணவனது உடம்பைப் போற்ற வல்லவள் மனைவியே' என்று அறிஞர் கூறியிருப்பது இச்சுசீலையின் பணிவிடையைப் பார்த்தே போலும்'! என்று அறிஞர் நினைக்கும்படி அவள் இல்லறத்தில் நடந்துகொண்டாள்.

அப்பெண்மணி குற்றமற்ற மரபில் வந்தவள்; தன் வீடு நோக்கி வரும் விருந்தினரை உள்ள மகிழ்ச்சியோடு உபசரிக்கும் நன்மனம் உடையவள்; கணவனது நினைப்பு அறிந்து நடப்பவள்; உண்மை தவருதவள்; கோபம் இன்னதென்றே அறியாதவள்; கற்பிற் சிறந்தவள்; தான் பெற்றதைக்கொண்டு உள்ள அமைதி அடைபவள்.

" மாசிலாக் குலத்து வந்தாள்;
வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள்; கொண்கன்
நினைப்பறிந் தொழுகு நீராள்;
தேசுறு வாய்மை யுள்ளாள்;
சினந்திடல் என்றும் இல்லாள்;
பேசுதிண் கற்பு வாய்த்தாள்;
பெற்றதே கொண்டு வப்பாள்."

இத்தகைய இல்லாள் அகத்து இருப்பின், இல்லாதது ஒன்றும் இல்லை அல்லவா? இத்தகைய மனைவியைப் பெற்றவனே பேறு பெற்றவன்.

### குடும்பத்தில் வறுமை

வறுமை இல்லறத்தார் அழகை ஒடுக்கிவிடும்; உடம்பைச் சருகாக வாட்டிவிடும்; சோம்பலை வளர்க்கும்; கணவன் மனைவியர்க்கு இடையே அடிக்கடி சண்டையை உண்டாக்கும்; அவமானம், பொய், பேராசை இவற்றை உண்டாக்கும்; களிப்பு என்னும் கடலுக்கு வடவைக்

கனல் போன்றது; பலதீய எண்ணங்கள் வாழ்வதற்கு இடமாகும்; பலபல துக்கங்களைத் தோற்றுவிக்கும் இடமாகும்; ஒழுக்கத்தை எரிக்கும் நெருப்பு ஆகும்; இவ்வறுமை கொடியவற்றுள் கொடியது. இதனை ஒழிப்ப வரே இல்லற வாழ்க்கையை இனிது நடத்த முடியும்.

### பிள்ளைத் துன்பம்

குழந்தையைப் பெறுவது துன்பமான செயல். அதனை வளர்ப்பது பெருந்துன்பமாகும். அக்குழந்தை கொடிய நோய் அடையுமாயின், அதனை நீக்கப் பெற்ருேர் படும் துன்பம் சிறிதன்று. அக்குழந்தை காளைப்பருவம் அடைந்த இடத்தும் பெற்ருேர் அப்பிள்ளையின் நலத்திற் காகத் துன்பப்படுவர். பிள்ளை இறக்குமாயின் பெற்ருேர் படும் துன்பம் அளவிடமுடியாது. இப்பிள்ளையால் பெற்ருேர்க்குத் துன்பம் பெரிது; இன்பம் சிறிதளவே யாகும்.

" மதலையைப் பெருநாள் துன்பம்
வளர்த்திடு நாளும் துன்பம்
விதலைநோய் அடையில் துன்பம்
வியன்பரு வத்தும் துன்பம்
கதமுறு காலர் வந்து
கைப்பற்றின் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால்
எற்றைக்கும் துன்பம் ஆனல்."

இங்குக் கூறப்பட்டுள்ளவை உண்மைச் செய்திகள் என்பதைப் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கின்றவர் நன்கு அறிவர்.

### குடும்பத்தில் முயற்சி

முயற்சியின் தேவையைப் பற்றிச் சுசீலை கீழ்வருமாறு தன் கணவனுக்கு எடுத்துக் கூறுகின்ருள்: " பெருமானே, உலகத்தில் தக்க முயற்சி மேற்கொள்ளாத ஒருவனுக்கு எவ்வாறு செல்வம் கிடைக்கும்? நிலத்தை நன்கு உழுது

விதைக்காதவனுக்கு நற்பயன் எவ்வாறு கிடைக்கும்? மனிதன் தனக்குச் செல்வம் வாய்க்க வேண்டும் என்று எண்ணி நாள்தோறும் முயன்று உழைத்தால்தான் இறைவன் அருள்புரிவான். இதனுற்றன்,

"முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்று பேரறிஞர் கூறிச் சென்றனர்.

பாத்திரத்தில் இட்ட பால் உணவைக் கையால் எடுத்து உண்ணுவிடில் ஒருவனது பசி எவ்வாறு நீங்கும்? அதுபோலக் 'கடவுள் தருவான்' என்று எண்ணி ஒருவன் நாள்தோறும் முயற்சி செய்யாமல் இருப்பாணுயின் செல்வத்தைப் பெறமுடியாது."

இம்முயற்சியுடைமை இல்வாழ்க்கையில் இருப்பவர்க்கு மிகவும் வேண்டற்பாலது. கணவனது முயற்சியால்தான் வாழ்க்கைக்குப் பொருள் ஈட்டப்படுகிறது. மனைவியது முயற்சியால் அப்பொருள் இல்வாழ்க்கைக்கு நன்முறையில் பயன்படுத்தப்படுகிறது. பிள்ளைகள் முயற்சி உடையவராயின், குடும்பத்திற்கு நற்பெயர் தேடித்தருவர். எனவே, இல்லறம் நல்லறமாக இலங்குவதற்குக் கணவன்—மனைவி—பிள்ளைகள் ஆகியோரிடம் இடைவிடா முயற்சி இருத்தல் வேண்டும்.

**கணவன் பெருமையும் கடமையும்**

குற்றமற்ற கற்பினையுடைய மனைவிக்குக் கணவனே வழிகாட்டுதற்குரிய கடவுள் என்று வேதங்கள் சொல்லுகின்றன. எனவே, அக்கடவுளாகிய கணவனையே நம்பிய பக்தை ஆகிய மனைவியைக் காப்பாற்றுதல் கணவனது கடமையாகும். அவன் பெற்றெடுத்த மக்களையும் அவர்தம் தாயாகிய தன் மனைவியையும் குறைவறப் பாதுகாத்தல் கணவனது பொறுப்பாகும்.

"மாசறு கற்பின் மடவரல் தனக்கு
வகுக்கருங் கொழுநனே யுலகம்

ஆசறத் துதிக்குங் கடவுளாம் என்று
 அரியநான் மறைசொலும் அதனுற்
பாசமுற் றிரியப் பலகலை யொருங்கு
 பளகறத் தேர்ந்தநீ யெனக்குப்
பேசருங் கடவுள் ஆமெளி யேனைப்
 பெட்பொடு புரத்தல்நின் கடனே.''

**மனைவியின் மாண்பு**

குசேலன் தன் வறுமையைத் தீர்த்துக்கொள்ளச் சுசீலையின் வேண்டுகோள்மீது கண்ணனைக் காணச் சென்றான். கண்ணன் குசேலனை நன்கு வரவேற்றுப் பேசிக்கொண்டிருந்தபொழுது, குசேலன் மனைவி எப்படிப் பட்டவள் என்பதை அறியப் பல கேள்விகள் கேட்டான். அக்கேள்விகளால் பெறும் விடைகள் அனைத்தும் உத்தம மனைவியின் மாண்பினைப் புலப்படுத்தும். அவற்றைக் கீழே காண்க :

1. '' நின்னுடைய மனைவி நற்குணங்கள் நிரம்பிய வளா ?
2. உன்னுடைய சொற்படி நடக்கும் சிறப்புடைய வளா ?
3. தன் உயிர்போல உன்னைப் பாதுகாக்கும் இயல் புடையவளா ?
4. உன் வருவாய்க்குத் தக்க செலவு செய்பவளா ?
5. நீ சொல்லும் செயல்களைச் சொன்னபடியே செய்பவளா ?
6. எவ்வளவு வறுமை வரினும் அதை வெளிப் படுத்தாத இயல்புடையவளா ?
7. நாயகன் குறைகளைத் தூற்றாது அமையத்தக்க வளா ?

'' நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே ?
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே ?
தன்னுடைய வுயிராநின் றனைப்பேணுந் தன்மையளே ?
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே ?

"சொன்னகா ரியமனைத்துஞ் சொன்னபடி யியற்றுவளோ?
என்னமிடி வரினும்வெளி யெடுத்தியம்பா வியலினளோ?
தன்னருநா யகன்பழிதூற் றாதமையத் தக்கவளோ?
பன்னருமா மறையுணர்ந்த பளகறுநற் குணக்குன்றே!"

இவ்வினாக்களால் அறியப்படுவன யாவை? இவ்வினாக்களி லேயே விடையிறுத்தலைக் காண்க:

மனைவி நற்குணங்கள் நிரம்பியவளாக இருத்தல் வேண்டும்; கணவனுடைய சொல்லைப் பாதுகாப்பவளாதல் வேண்டும்; தன் உயிரைப் போலக் கணவனைக் கருதிக் காப்பவளாதல் வேண்டும்; கணவனது வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்பவளாதல் வேண்டும்; கணவன் சொல்லும் வேலைகளைச் சொன்னபடி செய்பவளாதல் வேண்டும்; குடும்பத்தில் எவ்வளவு வறுமை வரினும் அதனை வெளியிற் சொல்லாதவளாதல் வேண்டும்; நாயகன் தவறுகளைச் சிறிதளவும் வெளியில் தூற்றாதவளாக இருத்தல் வேண்டும். இவளே உண்மையான 'வாழ்வரசி' என்பது கண்ணன் கருத்து.

## தந்தையின் கடமை

'நின் பிள்ளைகளுக்கு இன்னின்ன கடமைகளைச் செய்தனையா?' என்று கேட்கின்ற முறையில் கண்ணன் குசேலனை நோக்கிச் சில கேள்விகள் கேட்கின்றான்: "நீ நின் மக்களைப் பேரவையோர் மதிக்கத்தக்க முறையில் செய்ய வேண்டுவன அனைத்தையும் சரியாகச் செய்து விட்டனையா?" 'இத்தகைய அறிவுடைய மக்களைப் பெற இவர் தந்தை என்ன தவத்தைச் செய்தான்!' என்று அறிஞர் பாராட்டும் வகையில் நின்மக்கள் பல கலைகளையும் கற்கின்றனரா? 'இவரிடம் உள்ள உயர்ந்த குணங்கள் வேறு எவரிடமும் இல்லை' என்று அறிஞர் பாராட்டத் தகும் முறையில் நின்மக்கள் குணங்களால் உயர்ந்தவரா? சிறுபிள்ளைகள் விரும்புகின்றவற்றைக் கொடுத்து அவர்களுக்கு மனக்குறை உண்டாகாதபடி கவனிக்கிறாயா?"

முன்போலவே இக்கேள்விகளிலேயே விடையும் அமைந்திருக்கின்றது. தந்தை தன் சிறு மைந்தர் விரும்புவனவற்றைக் கொடுத்து அவர் மனம் மகிழும்படி செய்ய வேண்டும்; அவர்களைப் பல கலைகளிலும் வல்லவராகச் செய்வித்தல் வேண்டும்; அவர்களது புலமையைக் கொண்டு அவர்தம் தந்தையை அறிஞர் பாராட்ட வேண்டும்; அம்மக்கள் நற்குணங்களால் உயர்ந்தவர்களாக விளங்கும்படி செய்வித்தல் தந்தையின் கடமையாகும் என்பது கண்ணன் கருத்து.

### மனைவி உணவூட்டுதல்

"கணவன் உண்ண விரும்பும் ஒவ்வொன்றையும் மனைவி எடுத்துக் கொடுத்து உண்ணும்படி உபசரிப்பாள். மருத்துவர் விலக்கிடும் ஒன்றைக் கணவன் உண்ண நினைத்தால், மனைவி தடுத்து நிறுத்துவாள். கணவன் பிறிதொன்றிற் கருத்தை செலுத்திய காரணத்தால் உணவைக் குறைப்பது கண்ட மனைவி எதையேனும் வைத்துக் கொண்டு, 'இதனை உண்டுபாருங்கள்' என்று அளவற்ற அன்போடு கூறி ஊட்டுவாள். மனைவி யோசனை கூறுவதில் அமைச்சராக இருப்பாள்; வேலை செய்வதில் ஓர் அடிமைப் பெண்ணாக விளங்குவாள்; உணவு ஊட்டுவதில் தாயாக விளக்கம் பெறுவாள். இவை நல்ல மனைவியின் பண்புகள்," என்று நல்லறிஞர் கூறுவர்.

# IV. கற்புடை மகளிர்

**சிலப்பதிகாரம்**

கண்ணகியின் நற்குணங்களையும் அவள் கணவன் பால் கொண்டிருந்த அளவற்ற அன்பையும் அறிந்த கவுந்தியடிகள், கண்ணகியைப் பாராட்டிப் பத்தினிப் பெண்டிர் சிறப்பை எடுத்துக் கூறுதல் உள்ளத்தைக் கவர்வதாகும் :

" இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்டஇத் தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால் ;
வானம் பொய்யாது, வளம்பிழைப்பு அறியாது,
நீள்நில வேந்தன் கொற்றம் சிதையாது,
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு."

**மணிமேகலை**

தன் கணவன் இறந்தால் பின்பு உயிர்வாழ விரும்பாத மனைவி தன் உயிரை விடுவாள் ; அல்லது எரி வளர்த்து அதில் வீழ்ந்து தன் உயிரைப் போக்கிக் கொள்வாள் ; அல்லது கைம்பெண்ணாக இருந்து நோன்பு நோற்றுக் காலம் கழிப்பாள் ; அடுத்த பிறவியில் அக்கணவனோடு சேர்ந்து வாழ நோன்பு இருப்பாள். இம்மூன்றில் ஒன்று செய்தல் பத்தினிப் பெண்ணின் இயல்பாகும்.

**வளையாபதி**

நாடும் ஊரும் மிகுதியாகப் புகழ்ந்து போற்றும்படி யான நல்லியல்புகளைப் பெற்றவள் பத்தினிப்பெண். அவள் ' பெய் ' எனப் பெய்யும் மழை.

**கீழ்க்கணக்கு நூல்கள்**

" கணவனோடு ஒவ்வொரு நிலையிலும் எதிர்த்து நிற்பவள் அவனுக்கு எமனாவாள் ; குறித்த நேரத்தில்

சமையல் வேலையைக் கவனியாதவள் கொடிய நோய் போன்றவள்; சமையல் செய்த பண்டங்களைக் கணவனுக்கு உதவாதவள் வீட்டில் வாழும் பேய் போன்றவள். இம்மூவரும் கணவனைக் கொல்லும் படைகள் போன்றவர்,'' என்பது நாலடியார் கருத்து. எனவே, இம்மூன்று இயல்புகளும் நீங்கப் பெற்றவர் பத்தினிப் பெண்டிர் என்பதாம்.

''வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்தலும் சுற்றத்தவரைப் போற்றுதலும், விருத்தினரை உபசரித்தலும், இல்லறத்தில் நன்மை வளரத்தக்க முறையில் வழிபாடு செய்தலும், பத்தினிப் பெண்டிர்க்குச் சிறப்பைத் தருவன,'' என்று **சிறுபஞ்சமூலம்** செப்புகிறது.

''கணவனை விட்டுப் பிரிந்து வாழ்தல், தான் பிறர் இல்லத்தில் உறைதல், தீய பெண்களுடன் சேருதல், நகைகள் அணிந்துகொண்டு வேற்றூர் செல்லுதல், திருவிழாக் காணுதல், கணவன் அறியாது நோன்பு இருத்தல் தீய பெண்கள் இயல்புகள். இவை நீங்கப் பெற்றவரே பத்தினிப் பெண்டிர்,'' என்பது **அறநெறிச்சாரம்** அறையும் செய்தியாகும்.

**பாரத வெண்பா**

காதலன் விரும்பத்தக்க செயலைச் செய்து அவனை இன்புறுத்துவது பத்தினிப் பெண்ணின் இயல்பு. அவன் மனம் தன்பால் ஈடுபடும்படி நடப்பவளே சிறந்த பத்தினி.

> ''எப்பணியால் இன்புறுவர் காதலரக் காதலரை
> அப்பணியால் அப்பொழுதே அன்புறுத்தி—ஒப்ப
> மனம்குழையும் வண்ணம் மகிழ்விப்ப தன்றே
> கனங்குழையார் தங்கள் கடன்.''

**சிந்தாமணி முதலியன**

''கணவன் அலுவல் காரணமாகப் பிரிந்திருக்கும் போது பத்தினிப்பெண் தன்னை ஆடை அணிகளால்

அழகு செய்து கொள்ளாள்; அவன் திரும்பி வரும் வரையில் அவனைப் பற்றிய கவலையோடு இருப்பாள்,'' என்று சிந்தாமணி செப்புகிறது.

"தெய்வமும் மேகமும், கணவனைக் கடவுளாகக் கருதி நடக்கும் பத்தினியின் சொற்படி நடக்கும். கணவன் இறந்தான் என்பதைக் கேட்டவுடன் இடி ஓசை கேட்ட நாகம் போலக் கலங்கிச் சூரபதுமன் மனைவியாகிய பதுமகோமளை உயிர் துறந்தாள். இது தலையாய கற்பு எனப்படும்,'' என்று கந்தபுராணம் கூறுகிறது.

"கணவன் சொற்படி பணிபுரிந்து கணவனையே தொழுது, அவனுக்குப்பின் உண்டு உறங்கி, பிறர் பழிக்க முடியாதபடி கற்பு நெறியில் நடப்பவள் பத்தினியாவாள்,'' என்று பிரபோத சந்திரோதயம் பேசுகிறது.

"காலையில் சமையலறைக்குச் செல்லுதல், அன்போடு சமைத்தல், சுவை பொருந்திய உணவால் கணவனை உண்பித்தல், விருந்தினரைப் போற்றுதல், பிள்ளைகளைப் பாதுகாத்தல், கணவன் முன்னுறங்கப் பின்னுறங்கல், கணவனுக்கு முன் எழுதல், அவனை மனத்தால் தொழுது எழுதல் என்பன கற்புடை மகளிர் செயல்களாகும்.

**காசி கண்டம்**

கணவனது வீட்டைத் துறந்து சென்ற பெண்களைக் கண்டு பத்தினிப் பெண்கள் மனம் வருந்துவர்; 'இன்னதைச் செய்யுங்கள்' என்று சொல்லும்பொழுதே 'செய்து விட்டோம்' என்று கூறுவர். அதாவது, கணவர் குறிப்பு அறிந்து அவர் கூறும் முன்பே செய்துவிடுவர் என்பது கருத்து. அப்பத்தினிப் பெண்டிர் தம் நகைகளைக் கணவன் வேறு ஒருத்திக்குக் கொடுப்பினும் கோபப்படார்; துணையின்றித் தனியே செல்லார்; தாமே பிறர் வீடு செல்லார். பசு, விருந்தினர் முதலியோரை உபசரித்து உண்பர். கணவன் சொற்கடவாமையையே அறமாகக் கொள்வர். கணவரைப் பழி தூற்றார்; கணவர் இன்பத்

தைத் தம் இன்பமாகக் கருதுவர்; அவ்வாறே கணவர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதுவர்.

## திருக்குடந்தைப் புராணம்

"கடவுள், ஆசிரியன், தன் தந்தை, தாய், உடன் பிறந்தான், பிற உறவினர் ஆகிய எல்லோரும் தன் கணவனே - அதாவது, தன் கணவனே கடவுள், ஆசிரியன் முதலிய எல்லோரும் என்று கருதி, இல்லறத்தை நல்லறமாக நடத்துபவளே கற்பிற் சிறந்த மனைவி," என்று **திருக்குடந்தைப் புராணம்** செப்புகின்றது.

# V. மக்கட் பேறு

## குழந்தை இன்பம்

நீர் நிலை இல்லாத ஊர் வளமற்றதாகக் காணப்படும்; சந்திரன் இல்லாத இரவு ஒளியிழந்து காணப்படும்; பூக்கள் இல்லாத சோலை பொலிவிழந்து காணப்படும்; குடிகள் இல்லாத ஊர் பாழூர் என்று வெறுக்கப்படும்; தாமரை இல்லாத குளம் நற்குளம் என்று நவிலப்படாது. இவைபோலவே குழந்தை இல்லாத வீடு ' வீடாக'க் கருதப் படாது. குடும்பம் என்னும் மரத்திற்குக் குழந்தையே இனிய பழமாகும். எத்துணைத் துன்பங்கள் இருப்பினும், அவை குழந்தைகளைக் காணும்போது பகலவனைக் கண்ட பனிபோல அகல்கின்றன. குழந்தை தீய குணங்களால் பற்றப்படாது, அன்று மலர்ந்த செந்தாமரை மலர்போன்ற இனிய முகத்தையும் புன்முறுவலையும் மாசற்ற மனத்தை யும் கொண்டுள்ளது; தவழ்தலைப் பயின்றும், மழலைச் சொற்களைப் பேசியும், மனங் கரையச் சிரித்தும் பெற் றோர்க்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கின்றது. ஆதலால் இல்வாழ்வார்க்குச் சிறந்த பேறு மக்கட் பேறேயாகும்.

அரசன் முதல் ஆண்டி ஈருகவுள்ள அனைவரும் குழந்தைகளை விரும்புகின்றனர். மக்கட் பேற்றால் பெறும் இன்பம் எல்லோர்க்கும் ஒன்றாகவே இருக்கும். செல்வர் இடம், பொருள், ஏவல் முதலியவற்றைப் பெற்றிருப்பினும், பிள்ளைப்பேறு இல்லாராயின், யாதும் பெறாதவரேயாவர். முற்றும் துறந்த முனிவரும் பிள்ளை களிடம் உள்ளம் குழைவர் எனின், மக்களைப் பெறுதலால் உண்டாகும் இன்பம் செப்பும் தரமன்று.

## புறநானூறு

மக்கட் பேற்றின் சிறப்பைப் பற்றிச் சங்ககால முதல் பிற்காலப் புராணங்கள் வரையும் எல்லா நூல்களும் எடுத்

தோதுகின்றன. **பாண்டியன் அறிவுடை நம்பி** சங்க காலத்தவன். அவன் பிள்ளைப் பேற்றின் இன்பத்தை நன்கு அறிந்தவன். "செல்வர் செல்வம் பலவற்றையும் படைத்தவர் ; பலருடனேயே இருந்து உண்ணும் வசதி பெற்றவர். ஆயினும், தட்டுத் தடுமாறி நடந்து சென்று, சிறிய கையை நீட்டிப் பெற்றோர் உண்ணும் பாத்திரத்தில் கிடந்த உணவினைத் தரையிலே இட்டும், கூடப்பிசைந்து தோண்டியும், வாயினால் கவ்வியும், கையால் துழாவியும், சோற்றினை உடம்பின்மேல் சிதறியும்—இவ்வாறு பெற்றோரது அறிவை இன்பத்தால் மயக்கும் பிள்ளைகளை அச் செல்வர் பெறவில்லையாயின், அவர் வாழ்நாள் சிறப் புறாது," என்பது பாண்டியன் கருத்து.

" படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே."

—**புறநானூறு**

**வளையாபதி**

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டல கேசி, வளையாபதி எனப் பெருங்காப்பியங்கள் ஐந்து. அவற்றுள் ஒன்றான **வளையாபதி** மக்கட்பேறு இல்லாத செல்வத்தைப் பற்றிப் பேசுகின்றது : "பிள்ளையில்லாத செல்வம் பொறுமையில்லாத அறிவு போன்றது ; உணர்ச்சி இல்லாத இளமை போன்றது ; நீராடும் துறையைப் பெறாத தாமரைக்குளம் போன்றது ; ஆடையில்லாத உருவம் போன்றது ; மணமில்லாத மாலை போன்றது ; கல்வி நலம் இல்லாத புலமை போன்றது ; பாதுகாப்பு இல்லாத நகரம் போன்றது."

“ பொறையிலா அறிவு, போகப் புணர்விலா இளமை, மேவத்
துறையிலா வனச வாவி, துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலே, கல்வி நலமிலாப் புலமை, நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும், சேயிலாச் செல்வம் அன்றே.”
—வளையாபதி

**பிற நூல்கள்**

‘‘பெரிய ஆலமரத்தில் விழுது தோன்றிச் சிறப்பிக்கின்றது. கரையான் ஆலமரத்தைப் படிப்படியாக அரிக்கின்றது. ஆயினும் அம்மரத்தைத் தாங்கி நிற்கும் வலிமை விழுதுக்கு உண்டாகிறது. அதுபோலத் தந்தையினிடத்துத் தளர்ச்சி தோன்றினுல், அவன் பெற்றெடுத்த மகன் பாதுகாக்க, அத்தளர்ச்சி நீங்கும்,’’ என்று **நாலடியார்** கூறுகின்றது. ‘‘பிள்ளை இல்லாதவர் வீடு மலர் மணம் அற்ற சோலே போன்றது ; தாமரை மலராத பொய்கை போன்றது ; இளம்பிறையை வானத்தில் பெருத அந்தியைப் போன்றது,’’ என்று **சூளாமணி** சொல்லுகின்றது.

‘‘ துறத்தற்கு அரிய துன்பத்திலிருந்து நீங்கினவர் இவ்வுலகத்து அரசரல்லர் ; தேவர் அல்லர் ; தேவர்க்கு அரசனுகிய இந்திரனைப் போன்றவரும் அல்லர் ; பெரிய தவத்தைத் தொடங்கி நோன்பு இழைத்தவரும் அல்லர். **தம் சொல்லே மறுக்காத மக்களைப் பெற்றவரேயாவர்**· அஃதாவது, மண்ணவரும் விண்ணவரும், மாதவரும் துயர் துறந்தார் அல்லர் ; தம்சொற்படி நடக்கும் மகனைப் பெற்றவரே துயர் துறந்தவராவர் என்பது கருத்து. இது **கம்பர்** கருத்தாகும்.

“ பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே(று) அல்ல பிற.”
“ எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்.”

என்னும் குறட் கருத்துக்கள் இங்கு ஒப்பு நோக்கற்பாலன.

**நளவெண்பா**

கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் நளவெண்பாவைப் பாடிய **புகழேந்திப் புலவர்** மக்கட்பேற்றின் மாண்பை உரைக்கத் தவறவில்லை. "மைந்தரை அழைத்துக்கொண்டு நின் தாய் வீடு செல்," என்று நளன் கூறியதைக் கேட்ட தமயந்தி, "மக்களை வேண்டுமாயின் பெற்றுக்கொள்ள லாம்; அவ்வாறு கணவனைப் பெறலாகுமோ? நின்னை விட்டுப்பிரியேன்," என்ருள். அப்போது நளன், கணவனை விட மக்களையே பாதுகாத்தல் சிறந்தது என்பதை அறி வுறுத்த விரும்பி, மக்கட்பேற்றின் மாண்பைக் கீழ்வருமாறு எடுத்துரைத்தான் :

"பெற்ருேர் உண்ணும் சோற்றைத் தாமரை மலர் போன்ற கைகளால் பிசையும் வளம் மிகுந்த சிவந்த வாயையுடைய பிள்ளைகளைப் பெருதவர் பொன்னை உடையவராயினும், புகழை உடையவராயினும், வேறு எவற்றை உடையவரானும், 'உடையவர்' என்று சொல் லப் பெருர். சிறிய தலையையும் கிண்கிணி அணிந்த காலையும் பால்மணம் மாருத வாயையும் கொண்ட குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாத செவி, பல் வேறு கலைநுட்பங்களைக் கேட்டிருந்தும் பயன்பெருத தாகும்."

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையீங் கில்லா தவர்?"

"சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச் செவி."

—நளவெண்பா

**வில்லிபாரதம்**

பாண்டு மன்னன் குந்திதேவியிடம் மகப்பேற்றின் சிறப்பைக் கீழ்வருமாறு விளக்கினான்: "இயற்கையாய்த் தோன்றுகின்ற மழலைச் சொல்லைக் கொவ்வைப் பழம் போன்ற வாயிலிருந்து ஊறும் சொள்ளோடு சேர்த்துக் கொஞ்சிப் பேசுகின்ற சொல்லினால் பிள்ளைகள் கேட்போரை உருகச் செய்வர்; பெற்றோர் எங்கேனும் சென்றால் அழுதுகொண்டே அவர்களைப் பின் தொடர்வர்; அவர்தம் தோள்மீது விளையாடுவர். இவற்றால் பெற்றோர் மகிழ்ச்சியடைவர். இத்தகைய மக்களைப் பெறாதவர்க்கு இல்வாழ்க்கையில் இன்பம் எப்படி உண்டாகும்? மை தீட்டப் பெற்ற அகன்ற கண்களையுடைய குழந்தையின் முகத்தில் பொருந்திய கண்ணின் பார்வையைப் பெறாதவர் உண்மை பேசுதல், தானம் செய்தல், பலவகை விரதங்களை மேற்கொள்ளுதல், வேள்வி செய்தல் முதலியன நாள் தோறும் செய்து வரினும், நற்கதி சென்று சேரார். அவர்கள் இவ்வுலகத்தில் பெறும் இன்பம் ஒன்றுமில்லை."

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை என்னாம்?"

"மெய்தானம் வண்மை விரதந் தழல்வேள்வி நாளும்
செய்தாலும் ஞாலத் தவர்நற் கதிசென்று சேரார்;
மைதாழ் தடங்கண் மகவின் முகமன்னு பார்வை
எய்தா தொழியிற் பெறுமின்பம் இவனு மில்லை."

—**வில்லிபாரதம்**

**காசிகண்டம் முதலியன**

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **அதிவீரராம பாண்டியன்** காசியின் பெருமையை விளக்கும் **காசிகண்டம்** என்னும் நூலைச் செய்தான். அப்புலவர் பெருமானும் பிள்ளைப் பேற்றின் சிறப்பை அந்நூலுள் கீழ்வருமாறு எடுத்துரைக்கின்றான்:

"எவ்வகைச் செல்வத்தை உடையவராயினும், இனிய பழம்போன்ற மழலைச் சொற்களைப் பேசும் சிவந்த வாயையுடைய 'பிள்ளை இல்லாதவர்' என்னும் பெயரைப் பெற விரும்பார்; எவ்வகைத் தவத்தைச் செய்தேனும் பிள்ளைப் பேற்றை விரும்புவர். • பிறக்கும் பிள்ளை, பெற்றோர் சொற்படி நடந்தால்தான் பெற்றோர் நற்பயன் பெறுவர்; அவர்தம் குடியும் உயரும்; பிள்ளைகளும் நற்பெயர் பெறுவர்."

அதே நூற்றாண்டில் வாழ்ந்த **வரதுங்கராம பாண்டியன்** செய்த **பிரமோத்தர காண்டமும்** பிள்ளைப் பேற்றின் பெருமையைப் பின்வருமாறு பேசுகின்றது:

"தத்திச் செல்லும் அலைகளையுடைய கடலால் சூழப்பெற்ற நிலவுலகம் முழுவதும் வந்து தாள்தொழும் அரசியல் வளம் எல்லாம் பெறினும், இந்திரர் முதலியோர் பதத்தைப் பெறினும்—பிள்ளை இல்லாத வாழ்வு வாழ்வாகாது."

"உந்து மேற்கடல் உடுத்தபார் முழுவதும் ஒருங்கே
வந்து தாள்தொழும் அரசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதியர் பெரும்பதத் திருக்கை எய்திடினும்
மைந்தர் இன்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே."
—**பிரமோத்தர காண்டம்**

**சீகாளத்திப் புராணம்**

இதனைச் செய்தவர் **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்**; கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர். முற்றத் துறந்த முனிவராகிய இவரும் பிள்ளைப் பேற்றின் பெருமையைக் கீழ்வருமாறு பேசியுள்ளார்:

"மக்கள் இல்லாத வாழ்வு கண்ணில்லாத உடலைப் போன்றது; திங்கள் இல்லாத இரவு போன்றது; அறிவு சான்ற அமைச்சர் இல்லாத அரசாட்சியைப் போன்றது; அருள் உணர்ச்சி இல்லாத வலிய நெஞ்சம் போன்றது; புலவர் இல்லாத அவை போன்றது. அழுக்குப் படிந்த மெல்லிய சிறந்த தளிர்போன்ற பாதங்களோடு, இனிய

பால் சோற்றைப் பிசைந்த கையோடு சிவந்த பவளம் போன்ற வாயிலிருந்து ஊறும் நீர் மார்பினை நனைக்கப் பிள்ளைகள் பெற்றோர்மீது ஏறி விளையாடுவர். அங்ஙனம் விளையாடுவது பெற்றோர் உடம்பிற்கு இன்பத்தைத் தரும். இவ்வாறு குழந்தைகள் விளையாடப் பெறும் உடம்பே 'உடம்பு' என்று அறிஞர் அறைவர். பரல்கள் உள்ளே அமையப் பெற்ற பொன்னால் இயன்ற தண்டையைக் காலில் அணிந்து தளர் நடை நடக்கும் சிறுவர் பேசும் மழலைச் சொற்களாகிய அமுதத்தைப் பருகாத செவி பொம்மையின் செவிதான் என்று சொல்லப்படும்.''

'' கண்ணில் யாக்கையும் திங்களில் கங்குலும் கண்போல்
அண்ணல் மந்திரி இல்அர சாட்சியும் அருளில்
திண்ணென் நெஞ்சமும் புலவரில் அவையும்ஒண் தீம்பால்
வண்ண வாய்இள மக்களில் வாழ்வும்ஒப் பாமால்.''

—சீகாளத்திப் புராணம்

இதே நூற்றாண்டில் வாழ்ந்த குமர குருபர அடிகள், ''சிறந்த கற்பும் கணவன்மீது அன்பும் நற்குண நற் செயல்களும் உடைய மனைவிக்குப் பிள்ளைப் பேறு என் னும் செல்வம் உண்டாகுமாயின், அவளை மனைவியாகப் பெற்ற கணவன் செய்யவேண்டும் தவம் வேறு ஒன்று மில்லை,'' என்று தமது **நீதிநெறி விளக்கம்** என்னும் நூலில் குறித்துள்ளார்.

**காஞ்சிப் புராணம் முதலியன**

கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் தாம் இயற்றிய காஞ்சிப் புராணத்தில் மக்கட் பேற்றின் சிறப்பினை மகிழ்ச்சியோடு கீழ்வருமாறு தெரி வித்துள்ளார் :

''மேலான கதியைத் தந்தைக்கு அளிப்பவன் மகனே யாவான் ; அம்மகனால் தந்தை வாழ்வு பெறுவான் ; அம் மகனுக்கு மகனால் முடிவில்லாத இன்பத்தை அடைவான் ; கொள்ளுப் பேரனால் மேலான பதத்தை அடைவான்.

தென்புலத்தார்க்கு வேண்டிய கடமையைச் செய்பவன் மகனேயாவன் ; வேறொருவராலும் அதனைச் செய்ய முடியாது.''

" பிள்ளை பெற்றவருக்கு ஏழு பிறப்புக்களிலும் தீவினை வந்து எய்தாது ; இறந்த முன்னோர்க்கு உரிய கடமைகளைப் பிள்ளைகள் செய்வதால் அம்முன்னோர் களிப்படைவர். இங்ஙனம் முன்னோர்க்கும் இல் வாழ்வார்க்கும் பிள்ளைகள் நலத்தைச் செய்வதால், குற்றமற்ற தவங்கள் பலவற்றைச் செய்தேனும் பிள்ளைகளைப் பெறுதல் இல்லறத்தார் கடமையாகும்,'' என்பது **விநாயக புராணத்துள்** காணப்படும் கருத்தாகும். இப்புராணம் **கச்சியப்ப முனிவரால்** இயற்றப்பட்டது.

" இல்லற ஒழுக்கம் சிறந்து விளங்கவும், நீத்தார் கடன் செவ்வையாக நடைபெறவும் உதவும் மக்களுக்கு இணையான செல்வம் வேறொன்றும் இல்லை. இம்மை மறுமையாகிய இரண்டிலும் இன்பம் தருவது மக்கட் பேறு தான். ஆதலின், மக்களைப் பெறும் வாழ்க்கையே புண்ணிய வாழ்க்கை,'' என்பது **திருக்கூவப் புராணத்துள்** காணப்படும் கருத்தாகும்.

" இல்வாழ்க்கையில் மக்கள் இருத்தல் சிறப்புடையது. கடவுள் உணர்ச்சியும் நல்ல ஒழுக்கமும் உடைய புதல்வர் இருப்பாராயின், அவரைப் பெற்றோர்க்கு ஏழு பிறவிகளிலும் வல்வினை தொடராது,'' என்பது **திருக்கழுக்குன்ற புராணத்தில்** காணப்படும் கருத்தாகும்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் வாழ்ந்த **ஔவையாரும்** மக்கட் பேற்றின் சிறப்பினை எடுத்துக் கூறியுள்ளார் : " பன்றி ஒரு முறைக்குப் பல குட்டிகளை ஈனும் ; ஆனால் யானை ஒரு முறைக்கு ஒரு குட்டியையே ஈனும். இவற்றுள் யானைக் குட்டியையே அறிவுடையோர் மதிப்பர். அதுபோலவே அழகு, அறிவு முதலியன இல்லாத மக்கள் பலரைப் பெறுவதைவிட, நல்ல மைந்தன் ஒருவனைப் பெறுதலே மதிப்புடைய செயல். சபையை

அலங்கரிப்பவர் கற்றவர் ; வானத்தை அலங்கரிப்பது சூரியன் ; படுக்கையை அலங்கரிப்பவள் மனைவி ; இவ்வாறே வீட்டை அலங்கரிப்பவர் பிள்ளைகள்,'' என்பது ஔவையார் கருத்து.

## முடிவுரை

இதுகாறும் கூறப்பெற்ற பல நூல் மேற்கோள்களால், இல்வாழ்க்கை இன்பத்திற்கு மக்கட் பேறு பலவகையாலும் இன்றியமையாதது என்பது வற்புறுத்தப்பட்டமை காண்க. மனைக்கு விளக்கந்தரும் பிள்ளைகளை உணவூட்டி வளர்ப்பதோடு அறிவூட்டியும் வளர்த்தல் பெற்றோர் கடமையாகும்.

# VI. இருண்ட இல்வாழ்க்கை

**திராவக வீச்சு**

இன்றைய தமிழகத்தில் இல்வாழ்க்கையில் நடைபெறும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் பல, நாள் செய்தித்தாள்களில் காணலாம்.

மனைவி ஒருத்தி தன் கணவனைச் சரியாகக் கவனிக்கவில்லை; அவனைக் கணவனாக மதித்து நடத்தவில்லை. இக்காரணங்களால் கணவன் நெடுநாளாகத் தன் மனைவியிடம் ஐயமும் கோபமும் கொண்டிருந்தான். அவளது ஒழுக்கத்தில் ஐயம் கொண்ட கணவன், ஒரு நாள் அவளைப் பழிவாங்கத் துணிந்தான். அந்நாளில் அவள் எங்கோ வெளியிற் சென்றிருந்து வீடு திரும்பினாள். அவள் எங்குச் சென்றிருந்தாள் என்பது கணவனுக்கே தெரியாது.

ஆத்திரங் கொண்ட கணவன், ஒரு பாத்திரத்தில் **அக்கினி திராவகத்தை** வைத்துக்கொண்டிருந்தான்; அவள் உள்ளே வந்த சமயம் அவள் முகத்தின்மீது வீசினான். அடுத்த விநாடியே அவள் முகத்தின்மீது நெருப்பு வந்து அடித்தது போலிருந்தது. அவள் வலி பொறுக்க முடியாமல் கதறினாள். அவளது முகம் முழுவதும் கருகிப் போய்ப் புண்ணாகிவிட்டது. அவளது முக அழகு கெட்டு விட்டது. அவளுடைய தோளிலும் கையிலும் தீப்புண்கள் உண்டாயின.

அக்கணவன் போலீஸ் நிலையத்தில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்; "அவளுக்கு என்மீது அன்பு இல்லை. என்னைச் சரியாகக் கவனிப்பதில்லை; வேறொருவன்மீது பற்றுக்கொண்டு என்னை அலட்சியப்படுத்துகின்றாள். ஆதலால் ஆத்திரங் கொண்டு இதனைச் செய்தேன்," என்று கூறினான்.

**மாமி-மருமகள் போர்**

பல வீடுகளில் மாமியார் – மருமகள் போர் நடப்பது இயற்கையாக இருக்கின்றது. தன் மகனுக்கு மணம் செய்ய வேண்டும் என்று தாய் ஆவல் கொள்கிறாள்; எவ்வாறோ திருமணம் செய்கிறாள்; ஆயின், திருமணத் திற்குப் பின்பு வீட்டுக்கு வந்த மருமகளை வைத்துக் கொண்டு ஒழுங்காகக் குடித்தனம் செய்வதில்லை. பல ஆண்டுகள் தாய் வீட்டிலே வளர்ந்த பெண் புது வீட்டில் வந்து குடித்தனம் செய்கையில், அறிந்தோ-அறியாமலோ சில தவறுகள் செய்வது இயல்பே. அந்நிலையில் மாமி என்பவள் அச்சிறிய மணப் பெண்ணுக்குத் தாய் போல இருந்து அன்பு காட்டி அவளை நல்வழியிற் செலுத்தல் வேண்டும். இதற்கு மாறாக அவள் சீறியும் சினந்தும் வசைச் சொற்களைக் கொட்டுவாளாயின், சிறு பெண் நடுங்குவாள். அந்நிலையில் அவளுக்குக் கணவனாவது தக்க துணையாக இருந்து ஆறுதல் கூறவேண்டும்; தன் தாய் மனத்தையும் மாற்ற முயல வேண்டும். இவ்வாறு இல்லாமல் அவன் தாயைச் சார்ந்து இருத்தலும் தவறு; மனைவியைச் சார்ந்து இருத்தலும் தவறு.

பல இடங்களில் அவன் மனைவியைச் சார்ந்திருத் தலைக் காண்கிறோம்; சில இடங்களில் தாயைச் சார்ந்திருத் தலைப் பார்க்கிறோம்; அவன் மனைவியைச் சார்ந்தால், தாயின் நிலைமை பரிதாபத்திற்கு உரியதாகிறது; தாயைச் சார்ந்தால், மனைவியின் வாழ்க்கையும் அவனது இல்வாழ்க் கையும் இருண்டு விடுகின்றன. இத்தகைய இருண்ட செய்திகளையும் செய்தித்தாள்களிற் காண்கின்றோம்.

பல குழந்தைகளைப் பெற்ற ஒரு மனைவிக்கும் அவளது மாமியாருக்கும் பல ஆண்டுகளாக ஓயாத போராட்டம் நடைபெற்றுவந்தது. ஒவ்வொரு சமயத்திலும் அவளது கணவன் தன் தாயின் பக்கமாகவே நின்று மனைவியை அடித்துத் துன்புறுத்துதல் வழக்கமாக இருந்தது. பொறு மைக்கும் ஓர் அளவு உண்டன்றோ? ஒரு நாள் மனைவி

பொறுக்க முடியாத நிலை ஏற்பட்டது. மனைவி தனியாகப் பிரிந்தாள்; தனக்கு வாழ்க்கைப் பணம் தேவை என்று வழக்குத் தொடுத்தாள். நீதி மன்றத்தார் அம்மனைவியை வைத்துக்கொண்டு தனிக்குடித்தனம் நடத்தும்படி கணவனுக்கு அறிவுறுத்தினர். அக்கணவன், தன் தாயை விட்டு வரமுடியாது என்று உறுதியாக உரைத்தான். உடனே நீதி மன்றத்தார் அம் மனைவிக்கு வாழ்க்கைப்பணம் தரும்படி ஆணை பிறப்பித்தனர். இத்தகைய வாழ்க்கையில் அக் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ என்ன இன்பம் இருக்க முடியும்?

இருபது ஆண்டுகட்கு முன் சென்னையில் ஒரு குடும்பம் வாழ்ந்தது. அக்குடும்பத்தில் மாமியாருக்கும் மருமகளுக்கும் அடிக்கடி சண்டை நடப்பது வழக்கம். இருவருமே அடங்காப் பிடாரிகள். கணவன் பலமுறை தாய்க்குத் தெரியாமல் மனைவியைக் கண்டித்தான்; மனைவிக்குத் தெரியாமல் தாய்க்கு அறிவுறுத்தினான். ஆயினும், அவன் முயற்சி பயனளிக்கவில்லை. ஒரு நாள் அவன் அலுவலகத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் மாமியார் - மருமகள் போர் தொடங்கிவிட்டது. இருவரும் மயிர் பிடித்துச் சண்டையிட்டனர். அக்காட்சியைக் கண்ட கணவன் உள்ளம் வருந்திற்று. அவன் படித்தவன்; ஓர் அலுவலகத்தில் மாதம் ரூபாய் நூறு சம்பாதித்துக் கொண்டிருந்தவன்; மிக்க மான உணர்வு கொண்டவன். இத்தகைய தாயுடனும் மனைவியுடனும் இருப்பதைவிட, அவ்விருவரையும் திண்டாடவிட்டுத் தான் எங்கேனும் சென்றுவிடுதல் நலம் எனக் கருதினான்; தன்னை மறந்தான்; நேரே அலுவலகம் சென்றான்; தனக்கு இனி வேலை வேண்டாவென்று எழுதிக்கொடுத்து விட்டு வீடுவந்து சேர்ந்தான்; தன் பெட்டியை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டான். அன்று வரையில் அடிக்கடி இருள் கவிந்த அவர்தம் இல்வாழ்க்கை, அன்று முதல் இருண்டுவிட்டது. மாமியும் - மருமகளும் உண்மையை

உணர்ந்து அழுது புலம்பினர். நடந்துவிட்ட நிகழ்ச்சி அழுது புரண்டாலும் திருத்தம் பெருது அல்லவா? இருவரும் மிக்க அடக்கத்தோடு இருக்கலாயினர்; தங்கள் நகைகளை விற்று வாழலாயினர். சில மாதங்களில் மகன் பிரிந்த ஏக்கத்தால் தாய் நோய்வாய்ப்பட்டாள்; மனைவி கவலையால் உடல் மெலிந்தாள். வறுமையும் வாட்டத் தொடங்கியது. மாமி முதலில் மடிந்தாள்; பின்பு மனைவியும் இறந்தாள்.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளையும் அறிந்த கணவன் சென்னைக்கு வந்தான்; ஒரு வேலையில் அமர்ந்து தன் மக்களைக் காக்க முற்பட்டான். மாமி-மருமகள் சண்டையால் அவனது வாழ்க்கை அழிந்துவிட்டது. வாழ்வில் இத்தகைய இருளடையாமல் காத்துக்கொள்வது இல்லறத்தார் கடமையாகும்.

### காதற் பரத்தை

கணவன் மனைவி மக்களோடு வாழ்கிருன். உறுதியான ஒழுக்கமற்ற அவன், திடீரென்று வேருெருத்தியைக் காதற் பரத்தையாகக் கொண்டு, அவளை வீட்டிற்குள் அழைத்து வந்து வாழத் தொடங்குகிருன். அந்த வீட்டில் மணந்துகொண்ட மனைவி, காதற்பரத்தை ஆகிய இருவரும் இருக்கின்றனர். அவ்வில்லத்தில் அமைதி இருக்க முடியுமா? கணவனுக்கும் மனைவிக்கும் ஓயாத சண்டை; மனைவிக்கும் காதற் பரத்தைக்கும் ஓயாத போர். இந்த நிலையில் கணவன் காதற் பரத்தைக்கு எதிரில் மனைவியை அடிக்கிருன்; துன்புறுத்துகிருன். காதற் பரத்தையும் அவனும் கொஞ்சிக் குலாவுவதைக் கண்டு மனைவி மனம் பதறுகிருள். இந்த நிலையில் அவ்வீடு இல்வாழ்க்கைக்கு உகந்த ‘வீடு’ என்று சொல்ல முடியுமா?

பல நாள் துன்புற்ற மனைவி தனியே பிரிந்து வாழ விரும்பிஞள். கணவன் உதவி செய்ய மறுத்தான். வழக்கு நீதி மன்றத்திற்குச் சென்றது. நீதி மன்றத்தார்,

"கணவன் காதற் பரத்தையுடன் வாழும் வீட்டில் மனைவியையும் இருக்கும்படி வற்புறுத்துதல் தவறு. கணவனிடமிருந்து பிரிந்து வாழ மனைவிக்கு முழு உரிமை உண்டு. அவளுக்கு வாழ்க்கைப் பணம் கொடுக்கக் கணவன் கடமைப்பட்டவன்," என்று முடிவு கூறினர். இங்ஙனம் பிரிந்து வாழும் கணவனுக்கோ மனைவிக்கோ மெய்யான இல்லற இன்பம் கிடைக்க வழியுண்டா?

## பொறுப்பற்ற மனைவி

கணவனுக்குக் குறைந்த வருவாய் வருகிறது. மனைவி அதைக்கொண்டு சிக்கனமாக வாழ்க்கை நடத்தக் கடமைப்பட்டிருக்கிருள். வாழ்வரசியிடம் இக்கடமையுணர்ச்சி இல்லாவிடில் குடும்பவாழ்க்கை இருண்டுவிடும். அவள் பொறுப்பு அற்ற நிலையில் கணவனை, 'அதை வாங்கிக்கொடு, இதை வாங்கிக்கொடு' என்று அடிக்கடி வற்புறுத்தி வருவது இல்லற அமைதியைக் கெடுத்துவிடும். இத்தீய பண்பினுல் மனைவிமார் சிலர் தம் வாழ்க்கையைப் பாழ்படுத்திக்கொண்டனர்.

ஒரு மனைவி ஒரு வயது குழந்தை உடையவள்; மன அடக்கம் இல்லாதவள்; கணவன் நிலை அறிந்து நடவாதவள். பிறபெண்கள் அணிந்திருந்த நகைகளைப் பார்த்துத் தனக்கு அவை இல்லையே என்று மனம் வருந்தினுள்; அடிக்கடி அவை வேண்டும் என்று கணவனைத் துன்புறுத்தினுள். சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும்? கையில் காசு இல்லாததால் நகை வாங்க முடியவில்லை. மனைவி மனம் வருந்தினுள்; 'நினைத்ததை வாங்க முடியாதது என்ன வாழ்வு!' என்று மனம் வெறுத்தாள்; வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டாள்; தன் குழந்தைமீது மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்தாள்; தானும் அவ்வாறே செய்துகொண்டு இறந்தாள். இத்தகைய பொறுப்பற்ற பெண்களும் சமுதாயத்தில்

இருக்கின்றனர். இவர்களால் இல்வாழ்க்கை நரக வாழ்க்கையாகின்றது.

## குடிவெறி

குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும்; எல்லாத் தீய பண்புகளையும் நன்முறையில் வளர்க்கும்; அறிஞர் பழிக்கத்தக்க பாதைகளிற் செலுத்தும்; அறநெறி தவறி நடக்கச் செய்யும்.

மதுவிலக்குச் சட்டம் ஏற்படாதிருந்த காலத்தில் குடித்து வெறிகொண்ட கணவன் தன் மனைவியையும் மக்களையும் அடித்துத் துன்புறுத்துவது வழக்கம்; வீட்டுச் செலவுக்குப் பணம் கொடாமையாலும் குறைத்துக் கொடுத்தமையாலும் ஏற்பட்ட குடும்பச் சண்டைகள் பலவாகும்; இக்குடியர்களை மணந்துகொண்ட பெண்மணிகள் பட்ட கொடுமைகள் பல; சோறின்றித் தவித்த நாட்கள் பல; அடியும் உதையும் பட்ட நாட்கள் பல; குத்தும் வெட்டும் பட்ட நாட்கள் சில. ஒவ்வொரு நாளும் அவர்தம் இல்லமும் முன்றிலும் அமர்க்களமாகவே காணப்பட்டன. குடிவெறியினால் ஒழுக்கக்கேடு வெள்ளம் போல் பரவியிருந்தது.

மதுவிலக்கு ஏற்பட்ட பின்பு இக்கேடுகள் பெரிதளவு குறைந்தன. ஆயினும் கள்ளக் குடிப்பழக்கம் இன்றும் இருந்து வருதலால் அல்லல்களும் இருந்து வருகின்றன. மனிதன் குடித்த பிறகே கொலை செய்கிறான்; குடித்த பின்பே திருடுகிறான்; குடித்த பின்பே மிகவும் இழிவான செயல்களில் இறங்குகிறான். ஒரு தந்தை தான் பெற்ற மகளையே மனைவியாக்கக் கருதும் இழிநிலைக்கு வருகிறான் எனின், குடியின் தீமையை என்னென்பது!

ஒருவன் மணமாகாத தனது மூத்த மகளைக் கெடுக்க முயன்றான். அவள் அஞ்சித் தமக்கையின் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். அடுத்த பெண்கள் மூவர் நெருங்கிய உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டனர். தந்தை பல

முறை அழைத்தும் அப்பெண்கள் தந்தை வீட்டிற்கு வர மறுத்துவிட்டனர். தன் சொற்படி தன் பெண்கள் வராமையால் வெறிகொண்ட தந்தை பழிவாங்கச் சமயம் பார்த்திருந்தான். ஒரு நாள் மூன்றும் பெண் சில சிறுமிகளோடு தெருவில் விளையாடிக்கொண்டிருந்தாள். அவளைக் கண்ட தந்தை ஆத்திரம் கொண்டு, அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு கத்தியால் கழுத்திற் குத்திவிட்டான். அப்பெண் அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்தாள். தந்தை தூக்குத் தண்டனை பெற்றான். இக்குடும்பத்தார் இல்வாழ்க்கை எப்படி இருக்கிறது!

### கணவனுக்குத் துரோகம்

பல குடும்பங்களில் பெண்கள் விருப்பத்திற்கு மாறாகத் திருமணம் நடக்கிறது. அவள் விரும்பாத கணவனுக்கு வாழ்க்கைப்படுகிறாள். பெற்றோர் பிடிவாதத்தாலும் வறுமையாலும் பல்வேறு சூழ்நிலைகளாலும் இத்தகைய திருமணங்கள் நடக்கின்றன. கல்வியறிவற்ற பெண்கள் இத்திருமணத்திற்கு முதலில் இசைகிறார்கள்; திருமணம் நடந்த பிறகு கணவனோடு ஒத்து வாழ்வதில்லை; மனக்கசப்பு முற்றுகிறது. இதனால் இல்வாழ்க்கையில் அமைதியில்லை. இவ்வமைதி இன்மையால் உண்டாகும் கேடுகள் பல.

பேரழகி அழகற்றவனுக்கு வாழ்க்கைப்படுகிறாள்; அழகுள்ள இளைஞரைக் காணும்பொழுது தன் கணவனை நினைந்து வெறுக்கிறாள். இவ்வாறே பணத்திற்கு ஆசைப்பட்டுக் கிழவனை மணந்துகொண்ட பெண் இல்லற இன்பத்தை நினைத்து ஏங்குகிறாள்; அவனுடைய பணமோ, வீடோ, நிலமோ அந்த இன்பத்தைத் தர முடியாது என்பதை அறியும்போது, அம்புபட்ட மயில் போலத் துடிக்கின்றாள். அவள் உள்ளம் துடிக்கத் துடிக்க வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுகிறது; கணவனுக்கே துரோகம் செய்யவும் துணிகின்றாள். இவ்வாறு கணவரை

விட்டு ஓடிப்போன மனைவியர் பலர்; கணவன் உயிரைப் போக்கிய மனைவியரும் பலராவர்.

ஒரு பெண்ணுக்கு விருப்பமற்ற திருமணம் நடத்தப் பட்டது. அவள் நல்ல அழகி. ஆனால் கணவன் அழ கற்றவன். அதனால் அவள் கணவனை வெறுத்தாள்; அழகிய இளைஞன் ஒருவனைக் காதலித்தாள்; அவனை மணந்துகொள்ளவும் துணிந்தாள். இதையறிந்த கண வன் அடங்காச் சினம் கொண்டான்; ஒரு நாள் அவளை ஒரு தூணில் பிடித்துக் கட்டினான். அவள் கையில் துணியைச் சுற்றினான்; அத்துணிமீது மண்ணெண் ணெயை ஊற்றினான்; அத்துணிக்குத் தீ வைத்தான். இதனால் அவளது கை, கால்கள் முதலியன வெந்து விட்டன. கணவன் தண்டனை பெற்றான். இந்த வீட்டில் இன்பம் இருக்க முடியுமா?

திருமணத்திற்கு முன்பே பெண் மனமார விரும்பும் ஒருவனுக்கு மணம் செய்து வைத்திருந்தால், இக்கேடு நிகழ வழி இல்லையல்லவா? தம் பிள்ளைகளது விருப்பத் திற்கு மாறாகப் பெற்றோர் தாமாகவே மணமக்களைத் தேடித் திருமணம் செய்விப்பது பெருந்தவறு. இத்தவற் றால் விளையும் கேடுகள் மிகப் பல. இத்தவறு பற்றிய செய்திகளுட் சிலவே செய்தித்தாள்களில் வந்துகொண் டிருப்பவை. இக்கேடுகளை நன்கு எண்ணி, இவை நிகழாதபடி பார்த்துக்கொள்ளுதல் அறிவுடைப் பெற்றோர் கடமையாகும்.

### அமைதியற்ற மனைவி

பேச்சியம்மாள் குப்பனுக்கு இரண்டாம் மனைவி. அவள் பக்கத்து ஊரில் இருந்த சுப்பம்மாளின் சிறிய தாயார் மகள். பேச்சியம்மாள் அடிக்கடி சுப்பம்மாள் வீட்டிற்கு வந்து போவது வழக்கம். இதனால் சுப்பம்மாள் கணவனுக்கும் பேச்சியம்மாளுக்கும் தொடர்பு ஏற் பட்டது. அவன் அவளை இரண்டாம் மனைவியாகக்

கொண்டான். அவளுக்குக் குழந்தையும் பிறந்தது. இச்செயலால் அவளது முதல் கணவனுக்கும் இரண்டாம் கணவனுக்கும் சண்டை உண்டாயிற்று. முதற் கணவன் கொல்லப்பட்டான்; இரண்டாம் கணவன் தூக்குத் தண்டனை பெற்றான். பேச்சியம்மாளது ஒழுக்கக் கேட்டால் இரண்டு குடும்பங்கள் இருண்டுவிட்டன. இத்தகைய நிகழ்ச்சிகள் சில நம் சமுதாயத்தில் நடை பெறுகின்றன. பின் விளைவு நோக்காததாலும் ஆழ்ந்து சிந்தியாமையாலும் இத்தவறுகள் ஏற்படுகின்றன. இவற்றால் வாழ்க்கை வரண்டுவிடுகின்றது.

சில பெண்கள் கணவன் சிறிது கடிந்தாலும் தாய் வீட்டிற்கு ஓடிவிடுகின்றனர்; அங்குச் சில நாட்கள் இருந்து பின்பு வருகின்றனர்; மீண்டும் சிறு பூசல் ஏற்பட்டவுடன் ஓடிவிடுகின்றனர். இவ்வாறு ஓடும் மனைவியோடு கணவன் எப்படி இல்வாழ்க்கை நடத்த முடியும்? அவளுக்கேனும் வாழ்க்கை இன்பம் உண்டா? அவளுடைய பெற்றோரேனும் அவளுக்கு அறிவுரை கூறுகின்றனரா? அவர்களும் பெண்ணோடு சேர்ந்துகொண்டு மணமகன் மீது குற்றம் சுமத்தவே முனைகின்றனர். இத்தகைய அறியாமையால் ஏற்பட்ட சண்டைகள் பல; இதனால் ஏற்பட்ட அடிதடிகள் பல; நடைபெற்ற கொலைகள் பல வாகும். இந்த வன்முறைகளால் இல்வாழ்க்கை இருதிறத்தார்க்கும் இருண்டு விடுகிறது.

### தீமையிற் செலுத்தல்

கொடிய வறுமையால் செய்வகை தோன்றாமல் கணவனே தன் மனைவியைத் தீயநெறியிற் செல்லும்படி தூண்டுவதுண்டு; அவ்வாறு செலுத்தி வாழ்க்கை நடத்துவதும் உண்டு. கணவனே மனைவியைத் தீ நெறியிற் செலுத்துவது மிகவும் வெறுக்கத்தக்க செயலன்றோ? சோம்பேறியான அவனால் அவளது ஒழுக்கம் கெடுகிறது; அவளால் சமுதாய இளைஞர் பலர் கெடுகின்றனர்.

அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் சிறப்புற முடியாது. இத்தகையோர் நடத்தும் வாழ்க்கை 'இல்வாழ்க்கை' என்று சொல்லப்படுமா ?

ஒரு கணவன் தன் மனைவியைத் தீயநெறியிற் செல்லத் தூண்டினன். மானவுணர்ச்சியுடைய அம் மங்கை நல்லாள் கணவனை வெறுத்தாள்; உடனே அவனை விட்டுத் தன் தாய் வீடு சென்று விட்டாள் ; சில நாட்கள் கழித்துக் கணவன் மாமனர் வீடு சென்றான் ; மனைவி யைத் தன்னுடன் அனுப்பும்படி வேண்டினன். மாமனர் மறுத்துவிட்டார். கணவன் மனம் நொந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றான் ; தண்டனை பெற்றான். இத்தகைய கணவனல் மனைவி பெறும் இன்பம் யாது ?

**சமையல் தெரியவில்லை**

"என் பெண்ணுக்குச் சமையல் தெரியாது" என்று திருமணத்தின்போது பெருமையாகப் பேசும் அறிவற்ற பெற்றோரும் நமது சமுதாயத்தில் இருக்கின்றனர். பெண் எவ்வளவு படித்தவளாக இருப்பினும், செல்வர் வீட்டு மகளாக இருப்பினும், அவள் சிறப்பாக அறிந்திருக்க வேண்டுவது சமையல் வேலை. அது தெரியாதவள் எது தெரிந்தவளாக இருப்பினும் பயனில்லை.

ஒருவன் ஒரு பெண்ணை மணந்துகொண்டான். இருவரும் தனிக்குடித்தனம் செய்யத் தொடங்கினர். அப் பொழுது சமையல் கலையில் பயிற்சி பெறாத மனைவி நாள் தோறும் கணவனிடம் வசைச்சொல் பெற்றுக்கொண்டாள். இறுதியில் கணவன் அவளை வெறுத்து வீட்டை விட்டு ஓடி விட்டான். அப்பெண் அவன்மீது வழக்குத் தொடர்ந்தாள். கணவன் நீதி மன்றத்தில், "இவளுக்குச் சரியாகச் சமைக்கத் தெரியவில்லை ; அத்துடன் அடிக்கடி தாய் வீட்டிற்கு ஓடிவிடுகிறாள். ஆதலால் இவளோடு தனியாகக் குடித்தனம் செய்வது இயலாது," என்று கூறினன். மனைவி, "இவர் நாள்தோறும் எனக்குச் சமையல் தெரிய

வில்லை என்று திட்டுவது வழக்கம்; வரவர மிகவும் கொடுமைப்படுத்துகிறார். ஒருநாள் என்னை அறையுள் தள்ளிப் பூட்டிவிட்டார். நான் இவரிடம் பல கொடுமைகளுக்கு ஆளாகித் தவிக்கிறேன். எனக்கு வாழ்க்கைப் பணம் தரக் கட்டளையிட வேண்டுகிறேன்,'' என்று கூறினாள். இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றத்தார் திங்கள்தோறும் அவளுக்கு வாழ்க்கைப்பணம் கொடுக்கும்படி கணவனுக்குக் கட்டளை பிறப்பித்தனர். இவர்தம் இல்வாழ்க்கை இருண்டுவிட்டதன்றோ?

## பரத்தையும் மனைவியும்

ஒருவன் தன் திருமணத்திற்கு முன்பு ஒருத்தியைக் காதற்பரத்தையாகக் கொள்கிறான்; பின்பு அது வெளிப் படாத நிலையில் திருமணம் செய்துகொள்கிறான்; இரண்டு குடும்பங்களையும் நடத்தி இடர்ப்படுகின்றான்; இருவரையும் இன்புறுத்த முடியாமல் தவிக்கிறான்; இதனால் இருவர் வெறுப்புக்கும் ஆளாகின்றான்; இருவர் வாழ்க்கையையும் பாழாக்குகின்றான்; இங்ஙனம் வாழ்பவர் பலர். இவர்தம் வாழ்க்கை அவல வாழ்க்கையே தவிர, இன்பம் தரும் இனிய வாழ்க்கை ஆகாது.

ஒருவன் காதற்பரத்தையின் வீட்டிலேயே பெரும் பொழுதைப் போக்குகின்றான்; தன் மனைவி மக்களைக் கவனிப்பதில்லை. இதனால் மனைவி பொறுத்துப் பொறுத்துப் பார்த்து நெறி தவறுகிறாள். இத்தவற்றுக்குக் காரணம் கணவனே தவிர மனைவி இல்லை. அவள் தவறு தலைப் பார்த்துப் பிள்ளைகளும் கெடுகின்றனர். மேய்ப்போன் இல்லாத ஆடுகள் போலத் தந்தையால் கண் காணிக்கப்படாத மக்கள் கெடுதல் இயல்பன்றோ? இந்நிலையில் அவர்தம் இல்வாழ்க்கை இருண்டுவிடுகிறது. ஆடவன் நெறிதவறாது இருப்பின், பல குடும்பங்கள் நன்முறையில் இருக்க வழியுண்டு. புலனடக்கம் இல்லாமல்—எதனையும் ஆழ்ந்து நினையாமல்—பின் விளைவு நோக்காது செய்தல்

முதலியவற்றால்தான் பலரது இல்வாழ்க்கை இருண்டு விடுகிறது.

### இரண்டாம் மணம்

ஒருவன் ஒருத்தியை மணந்துகொண்டு பல பிள்ளை கட்குத் தந்தையாகின்றான்; மனைவிமக்களோடு இன்ப மாக வாழ்ந்து வருகின்றான்; பின்பு திடீரென்று, புல னடக்கம் இல்லாத காரணத்தால், தன்னோடு தொழில் செய்யும் ஒருத்தியைக் காதலித்துப் பதிவுத் திருமணம் செய்துகொள்கிறான்; அவளுடனேயே வாழத் தொடங்கு கின்றான்; தன் மனைவிமக்களை நடுத்தெருவில் விட்டு விடுகின்றான்; முதல் மனைவி நெறி உடையவளாக இருப் பதால் கூலி வேலை செய்து பிள்ளைகளைக் காப்பாற்று கிறாள். இவ்வாறு கணவனால் புறக்கணிக்கப்பட்டு வாழ்வு இழந்து நிலைதாழ்ந்து அல்லற்படும் மனைவிமார் பலர் இச் சமுதாயத்தில் இருக்கின்றனர். மானவுணர்ச்சியற்ற அவள் கணவன் ஊருக்கு அறிவுரை வழங்குகிறான்; ஒழுக்கம் பற்றிப் பேசுகிறான். இங்ஙனம் இருக்கின்ற பொறுப்பற்ற கணவன்மார் பலர். இத்தீயவரால் சமுதாய ஒழுங்கே கெடுகிறது.

### பிடிவாத திருமணம்

ஒரு தந்தைக்கு ஒரே மகள் இருக்கிறாள். அவள் நகரத்தவள் ஆதலால் ஓரளவு படித்து இக்கால நாகரிகத் தில் திளைக்கிறாள். அவளுடைய அத்தை மகன் கிராமத் தில் நிலக்கிழானாக இருக்கின்றான். அவனுக்குத் தன் மகளைக் கொடுத்தால் சொத்து வேறிடம் செல்லாது என்னும் கருத்துக்கொண்டு தந்தை அவனுக்கே தன் மகளை மணம் செய்விக்க விரும்புகின்றான். மகள், " அப்பா, கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கா தீர்கள்; அவர் படித்தவரல்ல; அநாகரிகர்; கைநிறைந்த பொன்னைவிடக் கண்நிறைந்த கணவனே மேலானவன்;

ஆதலால் பொருள் இல்லாவிடினும் படித்தவனாகவுள்ள ஒருவனையே நான் மணக்க விரும்புகின்றேன்,'' என்று கூறுகிறாள். ஆயினும் தந்தை கேட்கவில்லை; **பிடிவாத மாக** அவனுக்கே அவளை மணம் முடிக்கிறான்; பெண் கண்ணீரும் கம்பலையுமாகத் திருமணத்தை ஏற்றுகொள் கின்றாள்.

இப்பிடிவாத மணம் ஒன்று முப்பதாண்டுகட்குமுன் நடைபெற்றுப் பெண் கணவனோடு தொடர்ந்து வாழ வில்லை; அடிக்கடி தாய் வீட்டிற்கு வந்துவிடுவாள்; அக்கம் பக்கத்தில் இருந்த இளைஞர்களோடு கள்ள நட்புக் கொண்டு இருந்தாள். இதனை அறிந்த உற்றார் உறவினர் உள்ளம் கொதித்தனர். கணவன் பொறுத்துப்பொறுத்துப் பார்த்து இரண்டாம் திருமணம் செய்துகொண்டான். அவள் அவனது வாழ்க்கையை வளப்படுத்தும் மனைவி யாக அமைந்தாள். அவளுக்குப் பிள்ளைகளும் பிறந்தார் கள். எனவே கணவனுடைய சொத்து அப்பிள்ளைகட்கே உரியதாயிற்று. முதல் மனைவியின் இல்வாழ்க்கை இருண்டுவிட்டது. அவள் நாட்டார் நகைக்க ஒழுக்கம் கெட்டுச் சீரழிந்தாள். அவளது தவற்றுக்கு அவளது தந்தையே காரணம். இந்த அவலநிலை இன்றும் பல குடும்பங்களில் இருந்துவருகின்றது. மகளது நல்வாழ்வை விரும்பும் பெற்றோர் **அவளை நன்றாகக் கேட்டுத் தெளிந்த பின்னரே** திருமணம் முயற்சியில் ஈடுபடல் வேண்டும்; அவளுக்குப் பிடியாதவன் கோடீசுவரனே ஆயினும் அவனுக்கு மணம் முடிக்கும் எண்ணத்தைப் பெற்றோர் கைவிடுதல் வேண்டும். இங்ஙனம் பெற்றோர் நடந்து கொள்ளின், பெண்களது இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக விளங்கும்.

**மாறுபட்ட மனைவி**

ஓர் ஆசிரியர் சிறந்த பண்புகள் வாய்க்கப்பெற்றவர்; உழைப்பால் முன்னுக்கு வந்தவர். அவரது உழைப்பைப்

பாராட்டி அவரது மாமன் தன் மகளை மணம் செய்து கொடுத்தார். ஆயின், மாமன் மகள் கணவன் சொற்படி நடப்பதில்லை; கணவன் வீட்டார் ஏழைகள் என்ற காரணத்தால் கணவரையும் அவர் பெற்றோரையும் அலட்சியப்படுத்தினாள். இதனால் பெற்றோர் தம் மகனை விட்டு அகன்றனர். அவர் அகன்ற பிறகும் அவள் மனம் மாற வில்லை; கணவனை முன்போலவே அலட்சியம் செய்து வந்தாள்; கணவனது சொல்லுக்குச் சொல் எதிர்த்துப் பேசி வந்தாள். மான வுணர்ச்சியுள்ள அக்கணவர் அவளோடு பேசுவதில்லை. அவரது பேசாமையும் அவளை நல்வழிப்படுத்தவில்லை. இவர்களுக்குப் பிள்ளைகள் மூவர் இருக்கின்றனர். கணவர் தமக்கு வேண்டுவனவற்றை அப்பிள்ளைகளிடம் சொல்லி அனுப்புவார்.

பாவம்! சிறந்த குண நலம் பெற்ற அக்கணவருக்கு மனைவி எமனாக வந்து வாய்த்தாள். அவளது செயலால் அவளுக்கும் இன்பமில்லை; அவளை மணந்துகொண்டவருக்கும் இன்பமில்லை; இவர்களால் குழந்தைகளுக்கும் வாழ்வு வளமில்லை. ஒருவரோடொருவர் மனம் கலந்து பேசாமல் இருக்கும் வாழ்க்கை இருண்ட வாழ்க்கை தானே!

## கணவனை மதியாமை

பணக்கார வீட்டுப் பெண் ஏழைக்கணவனைப் பெரும்பாலும் மதிக்கமாட்டாள். படித்த கணவன் அவள் நிலையைக் கண்டு மனம் வருந்துவான். எளிய கணவன் மனம் புண்படுவான்; ' நம்மிடம் பணம் இல்லை என்ற கருத்தினால் அல்லவா இவள் நம்மை அவமதிக்கிறாள். பணம்தான் இவளுக்குக் கணவன்போலும்!' என்று எண்ணுவான். இதனால் அவர்தம் வாழ்க்கையில் மன அமைதியிராது. பணம் படைத்த பெண் எவனை மணந்தாளோ, அவனையே தன் வாழ்க்கைக்கு நாயகனாக எண்ணி, அதற்கு ஏற்ப நடக்கவேண்டும். அங்ஙனம்

நடந்தால்தான் வாழ்க்கை வளம்பெறும். பணச் செருக்கைக் கணவனிடம் காட்டினுல், மானவுணர்ச்சியுள்ள கணவன் அவளோடு வாழமாட்டான்; வேறு மணம் செய்துகொள்வான். இதனுல் அவளது வாழ்வு சீரழியும். மணமான பின்பு இங்ஙனம் நடந்து சீரழிவதைவிட ஏழைகளை மணக்காமல் இருப்பதே நல்லதல்லவா?

சமுதாயத்தில் சாதிகள் ஒழியும் வரையில்—இனத்துள்ளேயே திருமணம் நடைபெறும் வரையில்—இனப் பொருளாதார நிலை சீர்பட வேண்டுமாயின், செல்வர் வீட்டுப் பெண்கள் எளியவர் வீட்டில் வாழ்தல் வேண்டும்; எளியவர் வீட்டுப் பெண்கள் செல்வர் வீடுகளில் வாழ்தல் வேண்டும். செல்வன் செல்வன் வீட்டிலேயே கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்வது இனப்பொருளாதார நிலையைச் சரிப்படுத்துவது ஆகாது.

## மனைவியின் தவறு

ஒருவன் ஒரு பெண்ணை மணந்துகொள்கிருன். அவனுக்கு நெருங்கிய உறவினர் அவன் வாழ்ந்த ஊரில் இல்லை; மனைவியின் உடன்பிறந்தவரும் பிற உறவினரும் அவ்வூரில் இருந்தனர்; அவர்கள் அடிக்கடி வந்து அவளைப் பார்த்துச் செல்வது வழக்கம்; இவ்வாறு தன் உடன் பிறந்தாரும் உறவினரும் தன்னை அடிக்கடி வந்து பார்ப்பதையும் கணவனைச் சேர்ந்த ஒருவரும் அங்ஙனம் வாராமையையும் கண்ட அவள், தனது நிலை கணவனது நிலையினும் மேம்பட்டது என்று தவருகக் கருதினுள்; அக்கருத்தால் சிறிது ஏறுமாருக நடக்கத் தொடங்கினுள். படிப்பும் ஒழுக்கமும் உடைய அக்கணவன் அவளையும் படிப்படியாகப் படிக்கச் செய்து அவளது அறிவை உயர்த்திவந்தான். ஆயினும் முன்சொன்ன துறையில் அவள் அறிவு திருந்தவில்லை; பல சமயங்களில் சிறு பூசல்கள் இது காரணமாக ஏற்பட்டன. ஆயினும் அவள்

மனநிலை மாறவில்லை. கணவன் வீட்டுப்பூசல் வெளிக்குத் தெரியலாகாது என்னும் மானவுணர்ச்சி உடையவன்; ஆதலால் குற்றம் கண்டபோது மனைவியுடன் பேசாது மௌன விரதம் கொள்வது வழக்கம். இத்தகைய முறையிலும் அவள் திருந்தவில்லை. கணவன் சுட்டிக்காட்டும் பொழுதும் அவள் தன் குற்றத்தை உணர்வதில்லை; தான் செய்தது சரி என்று சாதிப்பது அவள் வழக்கம். இதனால் இல்லறத்தில் பலநாள் அமைதி நிலவவில்லை. பிள்ளைகள் முன்னிலையிலேயே கணவனும் மனைவியும் சொற்போர் நடத்தினர்; பிள்ளைகள் அதுகண்டு மனவாட்டம் அடைந்தனர். மானவுணர்ச்சி கொண்ட தந்தை அந்நிலை கண்டு வருந்தினான்.

கணவன் வேற்றூருக்கு மாற்றப்பட்டான். வேற்றூரில் குடி புகுந்த பின்பு, அதுகாறும் இருந்த தீய பண்பு அம்மனைவியை விட்டு ஒழிந்தது. அவள் முற்றிலும் நற்பண்பு வாய்ந்த நங்கையாக இலங்கத் தொடங்கினாள். அப்போதுதான் அவள் கணவன், முன்னைய ஊரில் இருந்தபோது அவள் நடந்துவந்த முறைக்கும் பின்னைய ஊரில் நடந்துகொண்ட முறைக்கும் உள்ள வேறுபாட்டின் காரணத்தை நன்கு அறிந்தான்.

ஆடவனைச் சேர்ந்த உறவினர் ஊரில் பலராக இருப்பின் ஆடவன் செருக்கடைவான்; இவ்வாறே பெண்ணும் செருக்கடைவாள்; ஆயின், இங்ஙனம் செருக்கடைதல் சிற்றறிவினர் இயல்பு. மக்களுள் பெரும்பாலோர் சிற்றறிவினரே ஆதலின் அவர்கள் மனமாற்றம் பெறுதல் பொருட்டு இந்த உண்மை இங்கு விளக்கப்படுகிறது. தாம் வாழும் ஊரில் உற்றார் உறவினர் பலராக இருத்தல் தமக்கு வலிமையையும் மகிழ்ச்சியையும் தருவதாகக் கருதவேண்டுமே தவிர, கணவனை இழிவாகக் கருதவோ அல்லது மனைவியை இழிவாகக் கருதவோ உதவுவதாக எண்ணுதல் பெருந்தவறு. அத்தவறுடைச் செயலால் இல்வாழ்க்கையில் அடிக்கடி அமைதி கெடும். அவ்வமைதி

குலேயும் நேரத்தில் எவருக்கும் எத்தகைய தீங்கும் நேரலாம்.

### ஆடம்பரச் செலவு

தம் இயல்புக்கு மேற்பட்ட அளவில் கடன் வாங்கித் திருமணம் செய்தல் பெரும்பாலோர் இயல்பாக இருக்கிறது. குறைந்த வருவாய் உடைய கணவன் மாதந்தோறும் தன் திருமணக் கடனுக்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திவிட்டு எஞ்சியுள்ள சிறு தொகையைக் கொண்டு குடும்பத்தை நடத்த இயலாது தவிக்கிருன். இத்தவிப்பினுல் புதிய மணமக்களிடையே பற்ருக்குறை தலேவிரித்தாடுகிறதே தவிர, இல்லற இன்பம் களிநடம் புரிய வழியில்லே. ஆண்டுதோறும் நடைபெறும் தீபாவளி, பொங்கல் முதலிய பெருநாட்களில் விலேயுயர்ந்த—தம் தகுதிக்கு மேற்பட்ட ஆடைகளே வாங்குவதினுல் கடன் உண்டாகிறது. வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்யாமையால் திங்கள்தோறும் கடன் வளர்கிறது. சுருங்கக்கூறின், பெரும்பாலான குடும்பங்களில் கடன் என்பதே மந்திர மொழியாக இருக்கிறது. இதனுல் மனம் அமைதியுறவில்லே. மனஅமைதி இல்லாத இடத்தில் இன்பம் தோன்றுவது இல்லே. எனவே, அவர்தம் இல்வாழ்க்கை இருண்டு காணப்படுகிறது.

### பொய் வாக்குறுதி

தமது பெண்ணுக்கு மணம் முடிந்தால் போதும் என்னும் கருத்துக்கொண்ட பெற்ருேர், மணமகன் வீட்டார் கேட்பனவெல்லாம் தருவதாக வாக்களித்து விடுவர் ; திருமணம் ஆனபிறகு வாக்களித்தபடி ஒன்றும் செய்யார், அல்லது சில செய்து பல செய்யார். இக்குறையால் கணவனே அவனேச் சார்ந்தவரோ சமயம் வாய்க்கும் போதெல்லாம் மணமகளேக் குத்தலாகப் பேசுவர் ; அவள் முன்னிலேயில் அவள் பெற்ருேரை இழிவுபடுத்திப் பேசுவர்;

இவற்ருல் பெண்ணின் மனம் புண்படும். இதனுலும் கணவனுக்கும் மனேவிக்கும் வாழ்க்கை இன்பம் குறையும்.

படித்த இளேஞன் ஒருவன் பங்களூரில் ஒரு பெண்ணே மணந்து கொண்டான். அப்பெண் வீட்டார் வாக்களித்த படி ஒன்றும் செய்யவில்லே. இதனுல் வெகுண்ட மண மகனது தாய், சமயம் வரும்பொழுதெல்லாம் மணமகளேக் குத்தலாகப் பேசிவந்தாள். 'கால் பட்டால் குற்றம், கை பட்டால் குற்றம்' என்று கடிந்து வந்தாள்; அவளே நீக்கி விட்டுத் தன் மகனுக்கு இரண்டாம் திருமணம் செய்யவும் துணிந்துவிட்டாள். ஆனுல் மணமகன் தாயின் கருத் துப்படி செய்யவில்லே; "பெண்ணின் பெற்ருேர் வாக்குத் தவறியதற்குப் பெண் பொறுப்பாகமாட்டாள். ஆதலால் அவலே நினேந்து உரலே இடிப்பதில் பயனில்லே. என்னே நம்பி மணந்து கொண்டவளே யான் கைவிடேன். எது வரினும் வருக; எது போயினும் போக," என்று உறுதி யாகக் கூறிவிட்டான். அவனது உறுதியால் அப்பெண் இன்றும் வாழ்வரசியாக இருக்கின்ருள். பெண்ணின் பெற்ருேர்கள் தம் மகளது திருமணத்தின்போது வாக் குறுதி அளிப்பதில் மிக்க கவனத்துடன் இருக்கவேண்டும்; இன்றேல் பெண்ணின் வாழ்வு சீர்கெட்டுவிடும்.

## செலவு மிகுதி

ஒரு குடும்பத்தார் சிக்கனமாகச் செலவு செய்யும் வழக்கத்தை உடையவர்; மற்ருெரு குடும்பத்தார் வரவுக்கு மேல் செலவு செய்யும் அல்லது வரவுக்கு உட்பட்ட ஆடம் பரச் செலவு செய்யும் பழக்கத்தை உடையவர். முதல் குடும்பத்து ஆடவன் இரண்டாம் குடும்பத்தில் திருமணத் தொடர்பு கொள்கிருன். அவன் தன் குடும்பத்திற்கு ஏற் பச் சிக்கனமாகச் செலவு செய்ய விரும்புகிருன். ஆனுல் மனேவி ஆடம்பரச் செலவை விரும்புகிருள். இதனுல் காலப்போக்கில் பணமுட்டுப்பாடு ஏற்படும்; அடிக்கடி கணவன் மனேவிக்குள் கருத்து வேற்றுமை தோன்றும்;

இதனாலும் அவர்தம் இல்வாழ்க்கை அடிக்கடி இருளடைய நேரிடும்.

‘ சிறு தீனி ’

சிலர் தம் வீட்டில் சரியாக உணவு கொள்ளாமல் ‘ சிறு தீனி ’ தின்பதிலேயே பெருவிருப்பம் கொள்கின்றனர். சிற்றுண்டிக் கடைகள் மிகுதியாக ஏற்பட்ட நாள் முதல் இச்சிறு தீனியால் பல குடும்பங்கள் அழிந்து வருகின்றன. இப்பழக்கத்தை உடைய கணவனோ மனைவியோ சிக்கன வாழ்க்கையைக் கையாள முடியாது; காசு இல்லாத போது கடன் வாங்கியோ ஒரு பொருளை அடைமானம் வைத்துக் காசு பெற்றோ சிறுதீனி தின்ன விழைவர். இப்பழக்கம் உடைய கணவன், வீட்டிற்குச் செலவழிக்கும் பணத்தைவிடச் சிறுதீனிக்குச் செலவழிக்கும் பணம் மிகுதியாதலைக் காணலாம். மனைவி சிறுதீனி தின்பவளாயின், கணவன் கொடுக்கும் பணத்தில் சிறு பகுதியையே வீட்டிற்குச் செலவழிப்பாள் ; பெரும்பகுதியைச் சிறுதீனி தின்பதில் செலவழிப்பாள். இங்ஙனம் சிறுதீனி தின்பதால் உடல்நலம் கெடுவதுடன் பணத் தொல்லையும் ஏற்படும். இருவர் பழக்கமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருப்பதால் மனக்கசப்பு ஏற்படும். இதனாலும் இல்வாழ்க்கையில் இருள் தோன்றும்.

சூதாடல்

கிண்டிக் குதிரைப் பந்தயம், சீட்டாடுதல், பிற பந்தயங்களில் பொருள்வைத்து ஆடுதல் முதலியன இல்வாழ்வை அழிக்கும் படைகளாகும். சூதாட்டத்தால் நளன் நாட்டைத் துறந்தான் ; தருமன் காட்டை அடைந்தான் ; அரசர் பலர் ஆண்டிகள் ஆயினர். இவ்வுண்மைகளை நன்கு அறிந்தும், கணவனோ மனைவியோ பணம் வைத்து ஆடும் ஆட்டங்களில் தலையிடுதல் பெருந்தவறாகும் ; இவ்வாறு தலையிட்டு அழிந்த குடும்பங்கள்

பல ; இன்றும் அழிந்துகொண்டுவரும் குடும்பங்கள் பல வாகும். சிறுமீன் காட்டிப் பெருமீன் இழுப்பது போன்றவை இவ்வாட்டங்கள். இவற்ருல் மாதச் சம்பளத்தின் பெரும்பகுதியை இழந்து தவிக்கும் குடும்பங்கள் பல. ஒரு குடும்பத் தலைவனின் நல்ல ஒழுக்கத்தால்தான் அக் குடும்பம் சிறப்படைதல் கூடும். இதனை உணர்ந்தும், 'பேராசை பேரிழப்பு' என்பதை அறிந்தும், மக்கள் இவ் வாட்டங்களில் இறங்கித் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்றனர். ஒளி இருக்கவேண்டும் அவர் தம் வாழ்வில் இச்செயல்களால் இருள்படிகிறது ; தம் தகாத செயல்களால் தம்மைத்தாமே அழித்துக்கொள்கின்றனர்.

## கொள்கை மாறுபாடு

ஒத்த கல்வி இல்லாத—ஒத்த மனப்பண்பு இல்லாத குடும்பங்களில் ஒன்றுபட்ட கொள்கைகள் இருத்தல் அருமையாகும். கணவன் கொள்கைகளுக்கு நேர்மாருன முறையில் மனைவியின் கொள்கைகள் இருக்குமாயின், அவர்களால் நடத்தப்பெறும் இல்வாழ்க்கையில் முழு அமைதி இருத்தல் அருமையாகும்.

## உடற்பொருத்தம்

மணமக்களின் பொருத்தங்களைப் பார்க்கும்போது உடற்பொருத்தத்தையும் கவனிப்பது வழக்கம். மெலிந்த ஆடவனுக்குத் தடித்த பெண் பொருத்தமில்லை; இவ்வாறே தடித்த ஆடவனுக்கு மிகமெலிந்த பெண் பொருத்தமில்லை; மிக உயர்ந்த ஆடவனுக்கு மிகவும் குட்டையான பெண் பொருத்தமில்லை. இத்தகைய குறைகளை நீக்கி, இருவர் உடற்கட்டையும் நன்கு ஆராய்ந்து, திருமணம் செய்வித்தலே அறிவுடைமையாகும். மனித இனத்தில் உடற்கூற்ருல் பலவகைச் சாதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 'இதற்கு இஃது ஏற்றது' என்று சோதிட நூலும் மானிட மறை நூலும் கூறுகின்றது. அவற்றை நன்கு

அறிந்து திருமணம் செய்வித்தல் வேண்டும். அப்பொழுது தான் இல்வாழ்க்கை இன்பமுடையதாக இருக்கும்.

**வறுமை**

வறுமையின் கொடுமை முன்பே நன்கு விளக்கப் பட்டது. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்னும் மூதுரைப்படி வருவாய்க்கு ஏற்பச் சிக்கனமாக வாழ்க்கை நடத்துவோர் வறுமையால் துன்பப் படார். கண்டதையெல்லாம் காமுறும் மனப்பான்மையை வளர்த்துக்கொண்டவரே வறுமையால் துன்பப்படுவர். வேலையில்லாத் திண்டாட்டத்தால் வறுமை வாட்டும். வரு வாய் போதாமையால் கணவன் மனைவியின் மனநிலை ஒரு பாதையில் செல்லுதல் அரிது. இரண்டும் ஒன்றுய்ச் செல்லின், அவர்தம் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகும். இருவரும் மனக்குரங்கை அடக்கி ஆள்பவராயின், இல் வாழ்க்கையில் இன்பம் தலைகாட்டும்; இன்றேல், கணவன் மனைவியர்க்குள் வறுமை காரணமாக அடிக்கடி சண்டை கள் ஏற்படும். இதனால் வாழ்க்கை அடிக்கடி வரண்டு காணப்படும். ஆதலால் கணவனும் மனைவியும் கிடைத் ததைக் கொண்டு இன்பமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்; அல்லது **செலவுக்கு ஏற்ப வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.** இல்லறத்தை நல்லற மாகக் கொள்ள வேண்டும் என்னும் ஆவலுடையவர் இம்முறையைத்தான் கையாளுவர்.

**உறுதியற்ற மனம்**

இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். இருவரும் மணம் செய்து கொள்ள இசைகிறார்கள். ஆயின், உறுதியற்ற உள்ளம் படைத்த அவ்விளைஞன் சில மாதங்கள் கழித்து வேறொரு பெண்ணைக் காதலிக் கிறான்; அவளையே மணந்துகொள்ளத் துணிகிறான்; தான் முதற் பெண்ணுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறுகிறான். ஆயின், அவனுடைய பெற்றோர் அவனது

இரண்டாம் காதலை அறியாமல், முதற் காதலியை அவனுக்கு ·மணம் முடிக்கின்றனர். அவன் அவளோடு சில மாதங்கள் வாழ்வது. போலப் பாசாங்கு செய்து, இல்லாத குற்றங்களை அவள்மீது சுமத்தி, அவளை விலக்கி, இரண்டாம் காதலியை மணந்துகொள்கிறான். இச்செயல் முதல் மனைவியை எந்த அளவு பாதிக்கிறது என்பதை அவன் எண்ணிப் பார்க்கவில்லை; அவளது வாழ்வே கெட்டுவிட்டும் அன்றோ? இத்தகைய மனவுறுதி இல்லாத ஆடவர் விலங்குகளிலும் கீழானவர். இவரோடு வாழ்க்கை நடத்துவதில் இன்பம் இருத்தல் அரிது. அவ்வாழ்க்கை இருண்ட இல்வாழ்க்கையாகவே இருக்கும்.

**ஐயுறுதல்**

மணமான பெண் கணவனுடன் ஓராண்டு இன்பமாக வாழ்ந்தாள். பின்பு அவள் நடத்தையிற் கணவனுக்கு ஐயம் பிறந்தது. அவன் அவளைக் கண்டித்தான். அதனால் அவள் கணவனிடம் பேசுவதில்லை. ஒரு நாள் வேறு ஒருவனிடம் மனைவி பேசிக்கொண்டிருந்தபோது கணவன் கண்டான்; ஆத்திரம் கொண்டான்; அவளைக் கொலை செய்தான்; அக்கொலையால் ஆயுள் தண்டனை பெற்றான். இதனால் இருவருக்கும் இன்பம் இல்லை அல்லவா?

கணவன் ஒரு பெண்ணுடன் பேசுவதைக் கண்டவுடனே மனைவி அவனது ஒழுக்கத்தில் ஐயுறுகிறாள். இங்ஙனமே மனைவி ஓர் ஆடவனுடன் பேசுவதைக் கண்டவுடன் கணவன் அவளது ஒழுக்கத்தில் ஐயுறுகிறான். மேனாடுகளில் ஒருவன் மனைவி மற்றொருவனோடு கைகோத்து நடத்தலும், சிரித்து விளையாடுவதும், நடனமாடுதலும் இயல்பு. இவை நமது பண்பாட்டிற்கு ஒவ்வாதவை. நம் நாட்டுப் பெண்கள் ஆடவர் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழும் இயல்புடையவர். அவ்வியல்பிற்கு மாறாக ஒரு சில பெண்கள் பிற ஆடவருடன் தாராளமாகப் பேசுவதைக் கண்டதும், கணவரும் பிறரும்

அப்பெண்களைப்பற்றி ஒருவாறு நினைக்கத் தொடங்குகின்றனர். இத்தகைய ஐயம் விரும்பத்தக்கதன்று. 'ஏதேனும் இருக்குமோ' என்று ஐயுறக்கத்தக்க வகையில் கணவனே மனைவியோ நடப்பது குடும்பத்தைப் பாழாக்கிவிடும்; வாழ்க்கையை வரண்டுவிடச் செய்யும். ஆதலின் ஒருவரையொருவர் தக்க காரணமின்றி ஐயுறுதல் ஆகாது.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஆடவன் பொது நல வாழ்க்கையில் ஓர் அளவோடு ஈடுபடுதல் வேண்டும்; அளவு மிகுதியால் பொது நலத்தொடர்பான வம்புகளிலும் வழக்குகளிலும் தலையிடின், அவனது செல்வமும் காலமும் அழிந்துவிடும். இங்ஙனம் ஈடுபட்டு அழிந்த குடும்பங்கள் பலவற்றை நமது சமுதாயத்தில் காணலாம். இதனை இல்லறத்தார் அழுத்தமாகக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

பொதுநலப் பணியில் ஈடுபட்டுத் தம் குடும்பத்தைக் கவனியாத மனைவிமாரும் சிலர் உண்டு. இதுவும் தவறாகும். ஒவ்வொரு குடும்பமும் சமுதாயத்தின் ஓர் உறுப்பாகும். அதனால் ஒவ்வொரு மனைவியும் தன் குடும்பத்தைச் செவ்வையாகப் பாதுகாப்பின், சமுதாயம் பாதுகாக்கப்படும். ஆதலால் தன் குடும்பத்தை நல்ல முறையில் பாதுகாத்துக்கொள்ளுதலே முதற் கடமையாகும்; அதன் பின்னரே பொதுநலத் தொண்டில் இறங்குதல் வேண்டும். இந்த உண்மையை மறந்து பலர் பொதுச் செயல்களில் ஈடுபட்டுத் தம் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டனர். அவருள் ஊரும் பேரும் தெரியாமல் இறந்தவர் பலர்; குற்றுயிரோடு வாழ்க்கை வளம் இழந்து இன்றும் தவிப்பவர் சிலராவர். இத்தகைய பொதுநலத் தொண்டால் அவர் தம் இல்வாழ்க்கையின் ஒளி குன்றிவிடுகிறது. அவர்தம் மனைவி மக்களைக் கவனிப்பதில்லை. இத்தகைய பொதுநலத் தொண்டு விரும்பத் தக்கதன்று.

**பிள்ளை வளர்ப்பு**

கணவனும் மனைவியும் நல்ல பழக்க வழக்கங்களை உடையவராய் இருப்பின், பெரும்பாலும் அவர்தம் பிள்ளைகள் அவர்களைப்போலவே நல்ல பழக்க வழக்கங்களில் வளர்ச்சி பெறுவர். கணவனும் மனைவியும் கீரியும் பாம்புமாக வாய்ப்போரிலும் கைப்போரிலும் ஈடுபட்டு இருப்பின், அவர்தம் பிள்ளைகள் நல்ல பழக்க வழக்கங்கள் இல்லாமல் நாளடைவில் கெட்டுவிடுவர். கெட்ட பின்பு அவர்களைத் திருத்துவது என்பது இயலாத செயல். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு போக்கிற் செல்லின், இல்வாழ்க்கையில் அமைதி இராது; பெயரும் புகழும் குறையும். ஆதலால் பிள்ளைகள் நல்வாழ்வு பெற - இல்லறம் சிறப்படைய - மனைவியும் கணவனும் பிள்ளைகளது நல்வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும்; அவர்களது நல்ல வளர்ச்சியைக் கருதியாவது இவர்கள் மன ஒற்றுமையோடு வாழ்தல் வேண்டும்.

பிள்ளைகள் துள்ளித்திரிகின்ற காலத்தில் அவர்களது துடுக்கை அடக்கி நல்வழிப்படுத்த வேண்டுவது பெற்றோர் கடமையாகிறது. அங்ஙனம் செய்யாவிடில் அப்பிள்ளைகள் சூழ்நிலையால் கெட்டுவிடுவர். ஒரு தந்தை தன் புதல்வர் இருவரையும் உரிய காலத்தில் கவனிக்காது செல்வமாக வளர்த்துவந்தான். அதனால் அம்மக்கள் படிப்பிலும் ஒழுக்கத்திலும் குறைந்தனர். பின்னர்த் தந்தையின் முதுமைப் பருவத்தில் அவ்விருவரும் வேலைக்குச் சென்றனர். ஒவ்வொருவருக்கும் முப்பது ரூபாய் சம்பளம் கிடைத்தது. ஒவ்வொருவரும் தம் சம்பளத்தில் பத்து ரூபாயை வீட்டில் கொடுத்தனர்; எஞ்சிய பணத்தைத் தாமே செலவழித்தனர். இதனால் மூப்படைந்த பெற்றோரும் இளம் பிள்ளைகளும் பசிப்பிணியால் வாடலாயினர். ஒழுக்கங் கெட்ட அப்பிள்ளைகளை நினைந்து பெற்றோர் நாடோறும் நைந்தனர். இத்தகைய இழிநிலைமை தமது வாழ்க்கையில் நேராமல் பார்த்துக்கொள்ள

வேண்டுவது ஒவ்வொரு குடும்பத்துப் பெற்ரோரது கடமையாகும்.

**மாமியார் வீட்டில் மருமகன்**

செல்வர் சிலர் தம் பெண்ணை ஏழைக்குக் கொடுத்துத் தம் வீட்டிலேயே வைத்துக்கொள்வது வழக்கம். இம் முறை வரவேற்கத் தக்கது. ஆனல் பெண் அறிவுடையவளாக இருத்தல் வேண்டும். அவள் அறிவற்றவளாயின், தன் செல்வப் பெருக்கை நினைந்தும், தன் வீட்டிலேயே கணவன் இருக்கிருன் என்பதை நினைந்தும் அவனைக் கவனக் குறைவாக நடத்தத் தொடங்குவாள். அவள் பெற்ருேரும் அறிவற்றவராயின், மருமகனை அலட்சியப் படுத்துவர். மருமகனும் குற்றம் கண்டபோது மனைவியைக் கண்டிக்க இயலாது இடர்ப்படுவான். அவனுக்கு மனக்கவலை மிகும். அதனல் இருவர் உள்ளங்களும் நாளடைவில் வேறுபடும்; இல்வாழ்க்கையில் இருள் கவியத் தொடங்கும். ஆதலின் ஏழையாயினும், செல்வனுயினும் கணவன் தன்மனைவியோடு தனித்து வாழ்தலே சிறப்புடையது.

**சோம்பல்**

இஃது இல்வாழ்க்கையில் இருக்கக் கூடாத ஒன்று. ஒருவன் சூழ்நிலையால் சோம்பேறியாவான்; அதனல் தான் செய்யவேண்டும் வேலைகளைத் தொடர்ந்து செய்யான். குடிப்பழக்கத்தாலும் தீய ஒழுக்கத்தாலும் தீயவரோடு நட்புக்கொள்ளலாலும் பலர் சோம்பேறிகளாகின்றனர். அவர்களுக்குத் திருமணம் செய்வது பெருந் தவறு.

ஒருவன் குடிப்பழக்கமும் தீய ஒழுக்கமும் உடையவன்; இவ்விரண்டாலும் தன் தொழிலைத் தொடர்ந்து செய்வதில்லை. அவனுக்குத் திருமணம் நடைபெற்றது. அவன் மனைவி மிகவும் நல்லவள்; கணவன் கருத்தறிந்து

நடப்பவள்; அவன் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாதவள்; அவனை இன்புறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவள்; பெற்றதைக்கொண்டு உவப்பவள். இத்தகைய சீரிய குணநலம் படைத்த மனைவி இருந்தும், அவன் திருந்தவில்லை. ஒரு நாள் வேலை செய்து ஒன்பது நாள் சோம்பேறியாக இருப்பான்; பிறர் வீட்டுத் திண்ணைகளில் அமர்ந்து ஊர் வம்பு பேசுவான். இத்தகைய சோம்பேறி வாழ்க்கையால் கடன் மிகுந்தது. கடனை ஒழிக்க நிலத்தை விற்றான்; நிலம் விற்ற பின்பும் அவன் அறிவு பெறவில்லை; குடிப்பதும் ஊர் வம்பு பேசுவதுமாகக் காலம் கழித்தான். அவனைத் திருத்த இயலாத மனைவி மனம் நொந்தாள். கடன் முற்றவே, வீடும் விற்கப்பட்டது. வேறொருவரது நிலத்தில் இருவரும் குடிசை கட்டி வாழத்தொடங்கினர். அந்த நிலையிலும் அவனுக்கு அறிவு வரவில்லை; முன்போலவே சோம்பேறி வாழ்க்கை வாழலானான். அவன் மனைவி நற்பண்புகள் நிறைந்தவளாக இருந்தும் அவன் சோம்பேறியாக இருந்தமையால், அவர்தம் வாழ்வு இருண்டுவிட்டது. இத்தகைய இருண்ட வாழ்க்கையை உடையவர் நமது சமுதாயத்தில் பலர் இருக்கின்றனர்.

சோம்பல் ஆணைப் பற்றினும், பெண்ணைப் பற்றினும், அவர் நடத்தும் இல்லறம் சிறவாது. அலுவலுக்குச் செல்லும் கணவனுக்குக் குறித்த நேரத்தில் சமையல் செய்யாத சோம்பல் நிறைந்த மனைவியரும் உண்டு. இவர் குறையால் வீட்டுப் பணம் உண்டிச் சாலைகளுக்குச் சென்று சேர்ந்துவிடும். குறைந்த வருவாய் உடைய பலர் இம்முறையில் துன்பப்படுகின்றனர். இவர்தம் வாழ்க்கை நாளடைவில் பாழடைந்துவிடுகிறது.

### உயர்வு—தாழ்வு

பொருளீட்டுவதால் தானே உயர்ந்தவனென்று கணவன் எண்ணுகிறான்; தான் கொண்டுவரும் பணத்தை

வைத்துக்கொண்டுதானே மனைவி குடித்தனம் நடத்து கிருள். எனவே அவள் தனக்கு அடுத்தபடியான நிலையை உடையவள்—தனக்கு அவள் சமமாகாள் என்று ஆடவன் கருதுவது வழக்கம். இதனுல் கணவன் தன்னை உயர்ந்த வனுகவும் மனைவியைத் தாழ்ந்தவளாகவும் கருதி நடக்கத் தலைப்படுகிருன். பெரும்பாலான மனைவியர்க்குக் கல்வி இல்லாதது அவர்கள் மதிப்பு இழப்பதற்கு காரணமாக வுள்ளது. படித்த கணவனிடம் படியாத மனைவி ஒழுங்காக நடந்து கொள்ளாமையும், அவன் அலட்சியமாக நடத்து வதற்கு ஒரு காரணமாகிறது. இக்குறைகளெல்லாம் மணத்திற்கு முன்னரே தெரிந்தவை ஆதலாலும் பெரும் பாலரான பெண்களிடம் இருப்பவையே ஆதலாலும், கணவன் அக்குறைகளை நிறைவாகக் கொள்ளுதலே நேர்மையானது; இங்ஙனம் கொள்ளத் தவறினுல் இல் வாழ்க்கை இருண்டுவிடும். பொருளீட்டுவதற்குக் கண வன்; இல்லறத்தை நல்லறமாக்க மனைவி—எனவே, இரு **வரும் சரிநிகர் சமானரே** என்று கொள்ளுவது அறி வுடைய கணவன் செயலாகும். இங்ஙனம் கொள்ளின், அவன் மனைவியைத் தன்னை ஒத்த நிலையில் வைத்து மதிப்பான்; நாள்தோறும் இன்ன இடத்திற்குச் செல்வ தாகக் கூறிச் செல்வான்; அவள் அறியாதபடி எதனையும் மறைத்து வையான். இங்ஙனம் வாழ்பவனே தன் மனை வியையும் தன்னையும் வாழ்விப்பவனுவான். சுருங்கக் கூறின், கணவன் மனைவியைச் சமமாகக் கருதி நடத்தல் வேண்டும்.

## இன்ப நுகர்ச்சி

கணவனை மகிழ்விப்பதிலேயே மனைவி கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும். இவ்வாறே மனைவியை இன்புறுத்துவதிலேயே கணவன் கருத்துடையவனுய் இருத்தல் வேண்டும்; எவ்வெவ்வாறு நடந்துகொள்ளுதல் மனைவிக்கு இன்பத்தைத் தரும் என்பதை எண்ணிப்

பார்த்து, அவ்வவ்வாறு நடந்துகொள்ளுதல் கணவன் கடமையாகும். மனைவிக்கு உடல் இன்பத்தை உண்டாக்கு வதில் கணவன் மிகுந்த கருத்துடையவனாய் இருத்தல் வேண்டும். இத்துறையில் அவன் தவறுவனாயின், இல் லறம் உறுதியாக இருண்டுவிடும் ; மனைவிமீது பழிகூறிப் பயனில்லை. இத்துறையில் கணவன் தவறியதால், வாழ்க்கை இருண்டுவிட்ட குடும்பங்கள் பலவாகும். ஒழுக் கத்திற்கே பெயர்பெற்ற குடும்பங்களும் இக்குறையால் கெட்டுவிட்டன. எனவே, நல்வாழ்க்கைக்கு அடிப்படை யான இத்துறையில் கணவன் மிகுந்த கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

### ஒழுக்கக் கேடு—ஐயம்

கணவன் ஒழுக்கக் கேட்டு மிகுதியால் தன் வீட்டிற்கு நாள்தோறும் வருவதில்லை ; தன் மனைவியின் முகத்தைப் பார்ப்பதுமில்லை. அவளோடு சரிவரப் பேசுவதுமில்லை ; தான் இவ்வாறு ஒழுக்கக் கேடனாய் இருப்பதால் தன் மனைவியும் ஒழுக்கம் கெட்டுவிட்டனளோ என்று எவ்விதச் சான்றுமின்றித் தானே ஐயுறுகிறான். இந்த ஐயத்தால் அடிக்கடி பூசலும் குழப்பமும் விளைகின்றன. அவனது ஒழுக்கக் கேட்டால் இல்வாழ்க்கை சிதறுகிறது ; அவன் கொண்ட வீண் ஐயுறவினால் இல்வாழ்க்கை மேலும் சிதைவுறுகிறது. மனைவிக்கு இல்வாழ்க்கையே இருண்டு விடுகிறது.

சில குடும்பங்களில் மனைவி ஒழுக்கக்கேடு உடையவ ளாக இருக்கிறாள் ; கணவன் சிறந்த ஒழுக்கமுடைய வனாகக் காண்கிறான். அவன் மனம் மனைவியின் ஒழுக்கக் கேட்டினை நினைந்து நினைந்து புண்ணாகிறது. இந்த நிலையிலும் வாழ்க்கை இருதிறத்தார்க்கும் இருண்டு விடு கிறது. உடல் உறவில் கணவனுக்கு ஏற்றவாறு மனைவி நடக்கத் தவறினாலும், மனைவிக்கு ஏற்ற முறையில் கண வன் நடக்கத் தவறினாலும், இல்வாழ்க்கை இருண்டுவிடும்.

ஒவ்வொரு கணவனும் மனைவியும் இதனைக் கருத்தினில் இருத்திக் கவனமாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

**கூடாநட்பு**

ஒருவர் பொதுநல ஊழியராக இருந்தார். அவர் மாணவரும் நண்பரும் எப்பொழுதும் அவர் வீட்டில் கூடியிருப்பது வழக்கம். இப்பின்னவர் அவர் மனைவியோடும் மக்களோடும் வேற்றுமையின்றிப் பழகி வந்தனர். விரிந்த சிந்தையும் பரந்த நோக்கமும் உடைய கணவர் தம் பொதுநலத் தொண்டிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்; உடல் உறவில் மனைவியை மகிழ்விக்கத் தவறினர். பல மக்களைப் பெற்ற அம்மனைவி, அங்கு வந்து கொண்டிருந்த சிலருடன் நெருங்கிப் பழகத் தொடங்கினள்; இறுதியில் ஒருவனோடு ஓடிவிட்டாள்.

இந்நிகழ்ச்சிக்கு உரிய காரணங்கள் யாவை? (1) கணவன் மனைவியை இன்புறுத்தாமை, (2) மனைவியிடம் பிறரை நெருங்கிப் பழக விட்டமை என்னும் இரண்டு குற்றங்கள் கணவன் செய்தவை. வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்பதைக் கருதும் கணவன்மார் இவற்றை மனத்தில் இருத்துதல் வேண்டும்.

**பலதாரம்**

பலதார மணத்தால் கணவன் இல்லற இன்பத்தை இழக்கின்றன்; அவனை மணந்துகொண்ட மனைவியரும் இழக்கின்றனர். மூவர் ஒருவனை மணந்து வாழ்கின்றனர். அவன் மூவரையும் உடல் உறவிலோ பிற துறைகளிலோ மகிழ்விக்க முடிவதில்லை. இஃது இயற்கைக்கும் மாறுபட்டதே. மேலும் ஒரே குடும்பத்தில் வாழ்வதால் மூவருள்ளும் மனக்கசப்பு மிகுகின்றது. இவர்களை அமைதிப்படுத்துவதே கணவன் வேலையாக முடிகிறது. அவனுக்கும் மனஅமைதி உண்டாவதில்லை. எனவே, அறிவுள்ள ஆடவன் ஒருத்தியோடு வாழும் வாழ்க்கையையே மேற்கொள்ள விரும்புவான்.

## ஒரே வீட்டில் கொடுக்கலும் வாங்கலும்

குப்பனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றனர். அவ்வாறே கண்ணனுக்கும் ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றனர். குப்பன் மகளுக்கும் கண்ணன் மகனுக்கும், குப்பன் மகனுக்கும் கண்ணன் மகளுக்கும் திருமணம் நடக்கிறது. குப்பன் கண்ணனுக்கு மைத்துனன்; குப்பன் மனைவி கண்ணன் தங்கை. இவ்வளவு நெருக்கமான உறவு இருந்தபோதிலும், சில சமயங்களில் குடும்பத்தில் பூசல் உண்டாகும். குப்பன் மகன் கண்ணன் மகளைச் சரிவர நடத்துவதில்லை. கண்ணன் மகள் அகங்காரி; அடக்கமற்றவள்; கணவனையும் மாமன் மாமியையும் மதிப்பின்றிப் பேசுவாள். எனவே, அவள் கணவனால் வெறுக்கப்படுகிருள். அவள் தன் தாய்வீடு சென்று தன் குறைகளைச் சொல்லி அழுகிருள். தன் மகளைத் திருத்த அறிவில்லாத தாய், தன் மருமகனையும் அவன் பெற்றோரையும் இழித்துப் பேசுகிருள். வீட்டிலுள்ள மருமகள் தன் தாய்தந்தையர்க்காகவும், தன் தமையனுக்காகவும் பரிந்து பேச வருகிருள். உடனே மாமி தன் சீற்றத்தை மருமகள் மீது காட்டுகிருள். மருமகளுக்குப் பரிந்து மகன் சண்டைக்கு வருகிருன். இவ்வாறு பூசல்கள் மிகுகின்றன. ஒருத்தியின் அடங்காத் தனத்தால் இரண்டு குடும்பங்களிலும் இருள் கவிகின்றது.

இவ்வாறு மணம் செய்துகொண்ட எல்லாக் குடும்பங்களிலும் இத்தொல்லைகள் உண்டாவதில்லை. அறிவற்ற கீழ்மக்களிடத்திலேயே இவை உண்டாகின்றன. இவை தோன்ருவண்ணம் தடுப்பது ஈரிடங்களிலும் உள்ள பெற்ரோர்களின் கடமையாகும். 'எதற்காகப் பெண்ணை மணம் செய்து கொடுத்தோம்? அவள் வாழ்வதற்கா? சீரழிவதற்கா?' என்பதைப் பெண்ணின் பெற்ரோர் எண்ணிப்பார்த்துத் தம் மகளுக்கு நல்லறிவு புகட்டுதல் வேண்டும். இவ்வாறே கணவனுடைய பெற்ரோரும் தம் மகனுக்கு அவ்வப்போது அறிவுரை கூறி நல்வழிப்

படுத்துதல் வேண்டும். இங்ஙனம் நன்முறையில் செல்வதை விடுத்துத் தீய எழுச்சிகளுக்கு இலக்காகி, ஒரு குடும்பத்தை மற்றொரு குடும்பம் பழிவாங்க நினைத்தலும், வாய்ப்போர்—கைப்போர்—கருவிப்போர்களில் இறங்குதலும் பெருந்தவறாகும். இத்தவறுகள் இருகுடும்பத்தாரையும் நாசப்படுத்தும்.

### வாயாடி—சண்டைக்காரி

வீட்டில் கணவனுடன் எதிர் வார்த்தையாடும் ஒருத்தியால் இல்லற இன்பம் பழுதுபடுகிறது. அவன் மெதுவாகப் பேசினாலும் இவள் உரத்துப் பேசுவது வழக்கம். இதனால் அறைப்பூசல் அம்பலமாகிறது. இவளால் வீட்டுச் செய்திகள் வெளிப்படுகின்றனவே என்று மானவுணர்ச்சியுள்ள கணவன் மனம் புண்படுகிறான்; அவளை ஒரு பேயாகவே கருதி வேண்டாவெறுப்புடன் வாழ்க்கை நடத்துகிறான். இந்த வாழ்க்கையில் ஒளிக்குப் பதிலாக இருள் காணப்படுகிறதன்றோ?

அச்சண்டைக்காரி தண்ணீர்க் குழாயிடத்தும் அடுத்த வீட்டுக்காரரிடத்தும் சுற்றுப்பக்கத்தில் உள்ளவர்களிடத்தும் அடிக்கடி சண்டை இடுகிறாள். நாளடைவில் இச்சண்டையில் ஆடவர் தலையிடும் தேவை ஏற்படுகிறது. ஆடவரும் பெண்டிரும் அடித்துக்கொண்டு போலீசுக்குச் செல்லுகின்றனர். சில இடங்களில் குத்தும் கொலையும் நடைபெறுகின்றன. நாம் இந்நிகழ்ச்சிகளைச் செய்தித்தாள்களில் அடிக்கடி பார்க்கின்றோம் அல்லவா?

மனைவி அண்டை அயலார் வீடுகளுக்குச் செல்லுதல் பொருத்தமன்று; பிறர் குடும்பத்து நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுதலும் தவறு; தீய சொற்களைப் பயன்படுத்துதல் பெருந்தவறு. வீடு அடங்கித் தனக்குரிய வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு இருப்பதே பாராட்டத்தகும் இல்லாளின் கடமையாகும்.

**கூட்டுக்குடும்பம்**

ஒரு தந்தைக்குப் பிள்ளைகள் நால்வர் இருக்கின்றனர். அந்நால்வர்க்கும் திருமணம் நடக்கின்றது. நால்வரும் நான்கு வித வேலைகளில் அமர்ந்துள்ளனர்; நான்கு வித வருவாய் பெறுகின்றனர். மிகுந்த சம்பளம் வாங்குவோனது மனைவி மிடுக்குடன் இருப்பாள்; சிறுதொகை பெறுவோன் மனைவி தன் ஓரகத்திகளைப் பார்த்து மனம் புழுங்குவாள்; தன் கணவனைத் தாழ்வாக நினைப்பாள். குறைந்த சம்பளம் பெறும் மற்றோர் ஓரகத்தியைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு கட்சி கட்டுவாள். ஆடை அணிகளில் வேறுபாடு இருத்தலும் இப்பூசலைப் பலப்படுத்தும். இதனால் உடன் பிறந்தார் நால்வருள்ளும் நாளடைவில் மனக்கசப்பு உண்டாகும்; மனைவியருள்ளும் பொறாமையும் பூசலும் நிலைபெற்றிருக்கும். எனவே, மெய்யான வாழ்க்கை இன்பம் அப்புதுக் குடும்பத்தில் நிலைத்திருக்க முடியாத நிலை ஏற்படும். பெற்றோர் இதனை உணர்ந்து ஒவ்வொருவரையும் தனிக்குடும்பம் நடத்தும்படியாக விட்டுவிடுவதே சிறந்தது. பெற்றோர் இந்த யோசனையை எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

தனிக்குடித்தனம் செய்யவிடுவதால் நன்மை என்ன? தன் குடும்பம் என்ற உணர்ச்சி பெண்ணுக்கு உண்டாகிறது. அவள் ஒரு தனிக்குடும்பத்திற்குத் தலைவி ஆகிறாள். இருவரும் பிறர் இடையீடு இன்றிக் கலந்து பழக வாய்ப்புக் கிடைக்கிறது. அறிவுடைய மனைவி வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்து நன்கு வாழ இயலும்; கணவனுடைய பெற்றோர்மீதும் உடன் பிறந்தார்மீதும் வெறுப்புக்கொள்ள வழியில்லை.

**ஆராயாத செயல்**

ஒருவன் ஒரு பெண்ணை மணந்துகொண்டான்; மணந்துகொண்ட பின்பு அவள் **பெண்மை அற்றவள்** என்பதை உணர்ந்தான். மணம் செய்த மறுநாளே

அவனது மணவாழ்க்கை இருண்டுவிட்டது. அவருடைய பெற்ளுேர் மறுமணம் செய்துகொள்ளக்கூடாது என்று அவனைத் தடுத்தனர். ஆண்டுகள் சில கழிந்தன. நண்பர் பலர் அப்பெண்ணின் பெற்றேரிடம் சென்று, " நீங்கள் பெண்தன்மை இல்லாதவளை ஒருவனுக்கு மணம் செய்வித்ததே பெருந்தவறு. அதற்கு மன்னிப்புப் பெறுதல் வேண்டும். அதனைச் செய்யாது, இவனை வேறு மணமும் செய்துகொள்ளக்கூடாது என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? இவனது இரண்டாம் மணத்திற்கு நீங்கள் இசைதல் வேண்டும்," என்று அறிவுறுத்தினர். பின்பு அவனுக்கு இரண்டாம் திருமணம் நடைபெற்றது. இப்பொழுது அம்மனிதன் அவ்விரண்டாம் மனைவியோடு இன்பமாக இருக்கின்றுன்.

இவ்வாறு பொறுப்பற்ற முறையில் பெற்ளுேர் நடக்கின்றனர்; ஏமாற்ற முயல்கின்றனர்; ஏமாற்றிவிடுகின்றனர். இவ்வாறே காக்கை வலிப்பு, தீராத வயிற்று நோய், அடிக்கடி மயக்கம் வருதல், ஓரளவு பயித்தியம்— இக்குறைகளையுடைய பெண்களை இக்குறைகளைத் தெரிவிக்காமலே மணம் முடிக்கின்றனர். இதனுல் இப் பெண்களை மணந்த ஆடவர் துன்பப்படுகின்றனர். இத்தவறுடைய செயலால் பெண்ணுக்கும் இன்பம் இல்லை; அவளை மணக்கும் ஆணுக்கும் இன்பம் இல்லை; இருவர் வாழ்க்கையும் இருண்டுவிடுகிறது. பெண்ணைத் தேர்ந்தெடுப்பதில் மணமகன் பெற்ளுேர் மிக்க கவனம் செலுத்த வேண்டும்; இவ்வாறே மணமகனைத் தேர்ந்தெடுக்கும் போதும் பெண்வீட்டார் அவனைப்பற்றிய விவரங்களை நன்கு ஆராய்ந்து தெளிதல் வேண்டும். ஆண்மையற்றவனுக்குத் திருமணம் செய்துவைத்தல் தவறு; இவ்வாறே பெண்மை அற்றவளுக்குத் திருமணம் செய்தலும் தவருகும்.

## உடன்பிறந்தாள் இல்லத்திற்குப் போதல்

ஒருத்தி அடிக்கடி தன் தமக்கை வீட்டிற்குத் தனியே போய் வருவது வழக்கம். நாளடைவில் தமக்கையின் கணவனுக்கும் இவளுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதனை அறிந்த கணவன் இவளைக் கடிந்தான்; தமக்கையும் வன்மையாகக் கடிந்தாள். அதனால் தமக்கை கணவனும் இவளும் வேற்றூருக்குச் சென்று கணவனும் மனைவியுமாக வாழலாயினர். தங்கையின் இத்தவறுடைய செயலால் தமக்கை கணவனை இழந்தாள்; இல்வாழ்க்கையை இழந்தாள். தங்கையின் கணவன் மனைவியை இழந்தான், அவனது வாழ்க்கை இருண்டது. இவ்வாறு நடைபெறும் கூடாநிகழ்ச்சிகள் நம் சமுதாயத்தில் உண்டு.

## பொருந்தா மணம்

ஒரு கடை முதலாளி மனைவி, அக்கடையில் வேலை பார்க்கும் இளைஞன் ஒருவன்மேல் காதல் கொண்டாள்; "உன்மீது நான் காதல் கொண்டுள்ளேன்; நீ வேலையாள் என்றும் நான் முதலாளி மனைவி என்றும் எண்ணாதே. என்னை உன் காதலியாகக் கருது," என்று அவனுக்குக் கடிதம் எழுதினாள். அவ்விளைஞன் மானவுணர்வுடையவன் ஆதலால் அவள் விருப்பத்திற்கு இணங்கவில்லை; அவளது கணவரிடம் கூறிக் குடும்பத்தில் குழப்பத்தை உண்டாக்கவும் விரும்பவில்லை. தான் மிக்க உயர்வாக மதித்துவந்த முதலாளி மனைவியின் செயல் அவனுக்கு மனவேதனையை அளித்தது. அதனால் அவன் தற்கொலை செய்துகொண்டான்.

இத்தகைய மனைவிமார் சிலர் நமது சமூகத்தில் இருக்கின்றனர். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று முதலாளி மனைவி நினைத்ததாலோ அல்லது அவள் தன் கணவனிடம் தன் மனநிறைவுக்கேற்ப இன்பம் நுகர இயலாமையாலோ இத்தவறு செய்தாள். இத்தகைய தவறுகளால் குடும்ப வாழ்க்கை இருண்டுவிடுகிறது.

**தாலியைப் பறித்த கணவன்**

ஒருவன் ஒருத்தியை மணந்து கொண்டான்; அவளோடு சிறிதுகாலம் வாழ்ந்தான். அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. ஓராண்டுக்குப்பின் அவன் வேறு ஒருத்தியுடன் வாழத் தொடங்கினன்; மனைவியையும் குழந்தையையும் தவிக்க விட்டான். மனைவி அவனைக் கடிந்தாள். தன் செயலுக்கு நாணுது அவள் கடிந்தமையால் ஆத்திரம் கொண்டு அவளது தாலியைப் பறித்துக்கொண்டான். குழந்தையை எடுத்துக்கொண்டு தன் காதலியின் இல்லம் சென்றுன். மனைவி வாழ்க்கைப் பணம் வேண்டி வழக்குத் தொடுத்தாள்.

இந்நிகழ்ச்சிக்குக் காரணம் கணவனது மனக் கோணல் அல்லது மனைவியின் போதாக்குறை என்று சொல்லலாம். உண்மை எதுவாக இருப்பினும், இருவரும் விட்டுக் கொடுத்து மனம் பொருந்தி வாழ்தலே ஏற்றது. இத்தகைய துன்ப நிகழ்ச்சிகள் பல நமது சமுதாயத்தில் நடைபெறுகின்றன.

**தவருன உறவு**

ஒருவனது மனைவி பக்கத்து வீட்டு வாலிபனுடன் கொஞ்சிப் பேசுவது வழக்கம். கணவன் வீட்டில் இல்லாத பொழுது இச்செயல் நடைபெற்று வந்தது. ஒருநாள் அக்கணவன் திடீரென்று வீட்டிற்கு வந்துவிட்டான். தன் வீட்டுச் சன்னலில் தன்மனைவி நின்றுகொண்டும், இளைஞன் பக்கத்து வீட்டுச் சன்னலில் நின்றுகொண்டும் மலர்ந்த முகத்தோடு பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான்; பெருஞ்சினங் கொண்டான்; தன்னை மறந்தான்; கத்தியை எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டிற்குள் நுழைந்தான்; மாணவனைத் தாக்கிக் கொன்றுன். அதன் பயனுக அவனுக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது. அவனது மனை வாழ்க்கை இருண்டு விட்டது.

ஒருவனை மணந்துகொண்ட ஒருத்தி சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்கவேண்டும்; தான் அவனை விரும்பவில்லையாயின், அவனைவிட்டு விலகிவிடுதல் நலம். அங்ஙனம் விலகாமல் அவனுடன் இருந்துகொண்டே எதிர்த்துப் பேசுதல் போன்ற தவறுகளைச் செய்வது அவளுக்கும் அவளது கணவனுக்கும் ஏற்றதன்று. அவர் தம் வாழ்க்கை இருண்டு விடுகிறது. இத்தகைய துன்ப நிகழ்ச்சிகள் நேராது பார்த்துக்கொள்ளுதல் மனைவியின் கடமையாகும்.

**காதலால் தற்கொலை**

ஒருவனும் ஒருத்தியும் பல நாள் காதல் உறவு கொண்டு ஒருவரை யொருவர் மணந்துகொள்ள விரும்பினர். ஆனால் பெண்ணின் பெற்றோர் அவளை வேறு ஒருவனுக்கு மணம் முடிக்க உறுதி செய்தனர். இதனை அறிந்த இளைஞன் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொண்டான். தன் காதலன் தற்கொலை செய்துகொண்டான் என்பதை அறிந்த காதலி மிக்க வருத்தத்துடன் இருந்தாள்; பெற்றோர் வற்புறுத்தலால் அவள் ஒருவனை மணந்தாள். ஆனால் அவளது மணவாழ்க்கை சிறக்கவில்லை. அவளது மனம் இறந்த காதலனையே நினைந்து வருந்தியது. அவள் புதிய கணவனிடம் ஒழுங்காக நடந்துகொள்ளவில்லை. அதனால் வெறுப்புற்ற கணவன் அவளை விலக்கிவிட்டு வேறு மணம் செய்துகொண்டான்.

பெண் உள்ளத்தை நன்கறிந்து பெண்ணின் பெற்றோர் மணம் செய்திருத்தல் வேண்டும். அங்ஙனம் செய்யாததால் அவள் வாழ்க்கை அழிந்துவிட்டது. அவள் விரும்பிய காதலனும் இறக்க நேர்ந்தது. பெண்ணின் பெற்றோர் அறிவோடு நடந்திருந்தால், அவர்தம் மகளின் வாழ்வு வளம் பெற்றிருக்கும் அல்லவா?

**தீய மனைவி**

ஒரு பணக்காரி வீட்டில் இளைஞன் ஒருவன் வேலையாளாக இருந்தான். அவள் அவ்விளைஞனுடன் கள்ள நட்புக் கொண்டிருந்தாள். இதனை அறிந்த பணக்காரியின் கணவன் மனம் வருந்தினான். ஆயினும் அவன் ஒன்றும் செய்யவில்லை. அவளுடைய மகன்–இருபது வயதுடையவன் அவ்வேலைக்காரனைக் கொன்று விட்டான்.

இத்தகைய கூடா ஒழுக்கமுடைய மனைவி இருக்கும் பொழுது, வீடு எவ்வளவு செல்வமுடையதாக இருப்பினும் பாலைவனம் போன்றதாகும்; அவர்தம் வாழ்க்கை வளமற்றதாகும். இத்தகைய குறைபாடுகள் நேராமல் பார்த்துக்கொள்வது கணவன்–மனைவி கடமையாகும்.

**பொறுப்பற்ற கணவன்**

ஒருவன் வேலை கிடைக்காததால் தன் மனைவியை விட்டு எங்கோ ஓடிவிட்டான். மனைவி அவனைப் பல இடங்களிலும் தேடினாள். அவன் கிடைக்கவில்லை. அவள் வயிற்றுப் பிழைப்புக்காக இரண்டு வீடுகளில் வேலைக்காரியானாள்; அதனால் மாதம் ஒன்பது ரூபாய் கிடைத்தது. அது போதாமையால் அவள் "இரவு ராணி" யாக மாறினாள். இத்தகைய வரண்ட வாழ்க்கையை உடைய குடும்பங்கள் நம் நாட்டில் பல உண்டு. கணவனால் துறக்கப்பட்ட மனைவிமார் இத்தகைய சீரழிந்த நிலைக்குப் பலியாகின்றனர். கணவன் தன் கடமையை உணர்ந்து மனைவியைக் காவாததால் இந்த இழிநிலை ஏற்படுகின்றது. இதனால் இரு திறத்தார் வாழ்க்கையும் வரண்டு விடுகிறது.

ஒருவன் இரண்டு மனைவியரை மணந்து கொண்டான். முதல் மனைவி காலமானாள். அவள் குழந்தைகளை இரண்டாம் மனைவி சரியாய்க் கவனிக்கவில்லை. அதனால் ஆத்திரங்கொண்ட கணவன் இரண்டாம் மனைவியை அடித்துத் துன்புறுத்தி வந்தான். அதனால் மனம் வெறுத்த இரண்டாம் மனைவி வாழ்க்கைப்பணம் விரும்பி வழக்குப் போட்

டாள். இத்தகைய குழப்பத்தாலும் வாழ்க்கை வரண்டு விடுகிறது. இரண்டாம் மனைவி அறிவுடையவளாயின், தாயற்ற பிள்ளைகளைத் தாயன்போடு பாதுகாப்பாள்; அதனால் கணவனையும் மகிழ்விப்பாள்; அவள் வாழ்க்கையும் செழிப்புறும். இங்ஙனம் வாழத்தெரியாத மனைவியர் பலர், தமது வாழ்க்கையையும் பாழாக்கிக் கொள்வதோடு கணவனது வாழ்க்கையையும் பாழாக்கி விடுகின்றனர். சூழ்நிலைக்கேற்ப மனைவியர் நல்லறிவு பெற்று நடந்து கொள்ளுதல் நல்லது.

# VII. இன்ப வாழ்க்கை

### சிறந்த மனைவி

மனைவி கற்றவளாக இருப்பினும் கல்லாதவளாக இருப்பினும், இல்லாளாக இருப்பதே சிறந்தது; அஃதாவது, இல்வாழ்க்கைக்கு ஏற்றவளாக இருப்பது சிறந்தது. அவள் கணவனது குறிப்பறிந்து நடந்துகொள்ளுதல் வேண்டும்; கணவன் முன்கோபக்காரனாக இருப்பின், அவன் கோபப்படும்பொழுது அடக்கமாகப் பதில் சொல்ல வேண்டும்; தன் சொல்லாலோ பேச்சாலோ அவனது கோபத்தை அடக்க முயலவேண்டும். **பணிவும் இன் சொல்லுமே வெல்லத் தக்கவை. இவற்றை உடைய வளே சிறந்த வாழ்வரசி.** கணவன் மகிழ்ச்சியாக இருக்கும்பொழுது, நயமாக அவன் குறையை எடுத்துச் சொல்லித் திருத்துதல் வேண்டும்.

மனைவி நற்குண நற்செயல்கள் உடையவளாயின், எத்தகைய கணவனையும் வசப்படுத்தலாம். அவன் அவளைத் தன் உயிரினும் மேலாக நேசிப்பான். கணவனை இன்புறுத்துவதையே நோக்கமாகக் கொண்டவள் வாழ்வில் வெற்றி பெறுவாள். அத்தகையவள் அவனது அகக் கோவிலில் குடி கொள்வாள். அத்தகைய மனைவிக்குக் கணவன் கோவில் கட்டுவதில் வியப்பில்லையல்லவா? அத்தகைய மனைவியின் பிரிவாற்றாது அவளது நினைவாக ஷாஜஹான் கட்டியதே **தாஜ்மஹால்** என்னும் அழகிய கட்டிடம். கும்பகோணத்தில் தமது உத்தம மனைவிக்காகக் கணவர் ஒருவர் கோவில் கட்டியுள்ளார்; ஆண்டுதோறும் அம்மனைவியின் நினைவால் விழா இயற்றி வருகின்றார். இத்தகைய மனைவியே வாழ்வரசி. இந்தச் சிறப்பைத் தான் ஒவ்வொரு மனைவியும் பெற முயலுதல் வேண்டும்.

தன் கணவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்பதைக் கேட்டவுடன் நீதிமன்றத்தில் உயிர்விட்டாள் ஒரு

மனைவி என்று செய்தித்தாள் செப்புகின்றது. சூரபது மன் போரில் ஆவி துறந்தான் என்பதைக் கேட்டவுடன் பதுமகோமளை உயிர் துறந்தாள் என்று கந்தபுராணம் செப்புகிறது. இது நூற்செய்தி. இங்ஙனம் இறக்கும் பத்தினிமாரும் உளர் என்பதைச் செய்தித்தாள் தெரிவிக் கிறது. இத்தகைய பத்தினிமார் தம்மை உடலாகவும் கணவரை உயிராகவும் கருதி வந்தவர் ஆதலால், கணவ ருக்குத் துன்பம் என்றவுடன் உயிரற்ற உடலாகின்றனர். இம் மாதரசியரே வழிபடத்தக்க சிறப்புடையவர். இவர் களை மனைவியராகப் பெற்ற கணவன்மார் பேறு பெற்றவர் ஆவர்.

**சிக்கன வாழ்க்கை**

கணவன் வருவாய்க்குத் தக்கபடி இல்வாழ்க்கையை நடத்துபவளே சிறந்தவள். அவன் செலவாளியாக இருந் தாலும் அவனை நல்வழிப்படுத்த வேண்டுவது மனைவியின் கடமை. அவனது வருவாயையும் வீட்டிற்குத் தேவைப் படும் தொகையையும் விளக்கமாக எடுத்துக் கூறி, நய மான முறையில் அவனை உணரும்படி செய்வது கற்பு டைய மனைவியின் கடமையாகும். வருவாய்க்கு மேல் செலவு செய்பவன் இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்த முடியாது என்பதை அவன் அறியும்படி பணிவாக எடுத்துச்சொல்ல வேண்டும். இதனை விடுத்து, அயலார் அறியும்படி அவனை இகழ்தலும் கோபித்தலும் பெருந் தவறு.

**கடமை உணர்ச்சி**

கணவனது உடம்பைப் பாதுகாப்பதிலும், உணவு ஊட்டுவதிலும் மனைவி கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். அவன் சுவர், தான் சித்திரம் என்பதை அவள் மறத்தலாகாது. சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். கணவன் இருந்தால்தான் ‘மனைவி’ என்னும்

பெயர் அவளுக்குப் பொருந்தும். அவன் நன்கு வாழ்வதே தனது வாழ்வு என்பதை அவள் உணருதல் வேண்டும்.

மாமி சினந்தாலும் மாமன் சீறினாலும் மருமகள் பொறுமையின் சின்னமாக இருந்து குடும்பத்தை நடத்துதல் வேண்டும். அவர்கள் மனம் திருந்தும்படி அவளது நடத்தை இருத்தல் வேண்டும். கணவனும் தன் பெற்றோருடன் சேர்ந்து தன்னைக் கொடுமைப் படுத்தினும், பொறுமைக்கு அணிகலனாய்த் திகழ்வது மனைவிக்கு மாண்பாகும். "அடக்கம் அமரருள் உய்க்கும்", "பொறுமை கடலிற் பெரிது" என்பன பொய்யா மொழிகள். அவளது வாழ்வு நாளடைவில் வளம் பெறும். அனைவருமே அவளைப் போற்றுவர். அவள் ஒவ்வொரு துறையிலும் கணவனையும் அவன் பெற்றோரையும் இன்புறுத்துவதில் தவறக் கூடாது.

## ஆடை அணிகள்

எதிர்வீட்டுப் பெண்களும் பக்கத்து வீட்டுப் பெண்களும் ஆடை அணிகளில் திகழ்கிறார்கள் என்றும், தனக்கு அத்தகைய ஆடையணிகள் இல்லையென்றும் மனைவி மனம் வருந்துதலோ, அவைபற்றிக் கணவனிடம் பேசுதலோ கூடாது. சமுதாயத்தில் சிலர் வருவாய் மிக்கவராக இருப்பர்; சிலர் வருவாய் குறைந்தவராக இருப்பர்; சிலர் இயற்கையிலேயே செல்வராக இருப்பர். மனைவி இந்த உண்மையை உணர்தல் வேண்டும். அவள் அறிவுடையவளாயின் வருவாய்க்கு ஏற்பச் சிக்கனமாகச் செலவு செய்து சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து ஆடை அணிகளைப் பெறுதல் வேண்டும். தன் கணவனுக்கு மிகுந்த வருவாய் வரத்தக்க வழிகளைக் கண்டு அவற்றில் உழைக்கத் தூண்டவேண்டும்; தானும் ஒற்றுமையாக இருந்து வருவாயைப் பெருக்க வேண்டும். இந்த ஆக்க வேலையை விடுத்துக் கணவனைத் துன்புறுத்துவதால்

எவ்வித நலனும் விளையாது. வாழ்க்கையை வளப்படுத்தி இன்பமாக நடக்க முயல்வதே மனைவியின் கடமை. ஆடையணிகள் வாழ்க்கை இன்பத்தைத் தாரா. கணவனும் மனைவியும் மனம் ஒத்து வாழும் வாழ்வே இன்பம் தரவல்லது.

## இன்பக் குறைவு

மனைவி உணர்ச்சி மிக்கவளாகவும் அறிவு நிரம்பியவளாகவும் இருப்பாள். கணவன் உணர்ச்சி குறைந்தவனுகவும் ஓரளவு மந்த அறிவினனுகவும் இருப்பான். கணவனிடம் இக்குறைபாடு இருப்பதால் மனைவி மனம் கலங்கக் கூடாது; தனது நுண்ணறிவினுல் கணவனது உணர்ச்சியை வளர்க்க வேண்டும்; அவனது அறிவையும் படிப்படியாக வளர்க்கவேண்டும்; தன்னைப்போல அவனையும் ஆக்கினுல்தான் அவள் வாழ்க்கை இன்பத்தை உள்ளவாறு நுகரமுடியும். இவ்வாறே மனைவியிடம் காணப்படும் குறைகளைக் கணவன் முயன்று நீக்குதல் வேண்டும். இங்ஙனம் ஒருவர்க்கொருவர் ஆசிரியராகவும் துணைவராகவும் இருந்து துணை செய்யின், அவர்தம் இல்வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகும்.

## ஐயம்

மனைவி ஐயப்படத் தக்க முறையில் கணவன் வேறு பெண்ணுடன் தனித்துப் பேசுதலோ, போதலோ கூடாது. இவ்வாறே கணவன் ஐயப்படத் தக்க முறையில் மனைவி பிற ஆடவனுடன் தனித்துப் பேசுதலோ போவதோ கூடாது. கணவனது நெருக்கமான நண்பனேடு மனைவி ஓரளவாகத்தான் பேசவேண்டும். அளவுமீறி எச்செயலிலும் ஈடுபடுதல் தவறு. இங்ஙனம் அளவு மீறிய பழக்கத்தால் கெட்ட குடும்பங்கள் பலவாகும். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும். இதுவே இன்பவாழ்க்கைக்கு முதற்படி. இருவர் மன

மும் ஐயமற்று இருப்பின், யார் யாரோடு பேசினும் தவ றில்லை. இருவருள் ஒருவர் ஐயப்படுவர் என்பது தெரிந்தால் மற்றவர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். வீண் ஐயங்களுக்கு இடமளித்து, புகாத இடங்களில் சிக்கித் தம் வாழ்க்கையை வீணுக்கிக் கொள்ளுதல் பெருந்தவருகும். ஆதலால் பிற ஆட வரையோ பெண்டிரையோ அணுகாது தீக்காய்வார் போல இருந்து பழகுதல் நல்லது.

**தீயவர் நட்பு**

மனைவி தனியாக இருக்கிருள் என்று அவளுக்குத் துணையாகப் பக்கத்து வீட்டாரைச் சேர்த்து வைப்பதோ, பிறரைத் துணையாக வைப்பதோ நன்கு சிந்தித்துச் செய்யவேண்டுவதொன்ருகும். அங்ஙனம் வந்து சேரு வோர் நல்லவராயின் நன்று ; தீயவராயின், இல்வாழ்க்கை யைப் பாழ்படுத்திவிடுவர். இங்ஙனம் கெட்ட குடும்பங்கள் நம் நாட்டிலும் சில உண்டு. இன்ப வாழ்க்கையில் ஈடு பட்ட கணவனும் மனைவியும் இத்துறையில் மிக்க கவனம் செலுத்துதல் வேண்டும். நல்லவர் நட்பும் துணையும் பெற முயல்வதே நல்லது.

**புரிந்துகொள்ளல்**

திருமணம் நடந்த சில நாட்களுள்ளே கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். மனைவி தான் வாழ வந்துள்ள வீட்டின் நிலையையும் கணவனின் நல்ல இயல்புகளையும் குறை களையும் கருத்தூன்றிக் கவனித்தல் வேண்டும் ; படிப் படியாகக் கணவன் குறைகளைப் போக்க முற்படுதல் வேண்டும் ; இவ்வாறே கணவனும் மனைவியின் மன நிலையையும் பிற பண்புகளையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். மனைவியின் குறைகளை நல்ல முறையில் படிப் படியாக நீக்க முயல வேண்டும். இருவருள்ளும் உண்மை

யான அன்பும் நல்வாழ்க்கையில் நாட்டமும் இருத்தல் வேண்டும். இவை இருக்குமாயின், இருவரும் திருத்தம் பெறுவர் ; அவர்தம் இல்வாழ்க்கையும் சிறப்படையும்.

## பெருந்தீனி

திருமணத்திற்கு முன்பு உண்டான தீயபழக்கத்தால் கணவன் உண்டிக் கடைகளில் பெருந்தீனி தின்னும் பழக்கத்தை மேற்கொண்டால், வீட்டு வாழ்க்கைக்குத் தரும் பணம் குறைந்துவிடும் ; அல்லது சீட்டாடுதல், குதிரைப் பந்தயம் முதலிய தீய வழிகளில் பணத்தைச் செலவழித்தால் வீட்டில் வறுமை தோன்றும். இவ்வாறே மனைவி தவருக நடப்பின், வீட்டில் வறுமை குடிகொள்ளும். ஆதலால் தம் இல்லத்தில் இருவரும் இன்பமாக வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதை விரும்பினுல், கணவனும் மனைவியும் வெளிச் செலவுகளையும் தனிச் செலவுகளையும் கட்டாயம் குறைத்தல் வேண்டும். ஒருவரை அறியாமல் மற்றவர் செலவு செய்தல் கூடாது. ' நம் கணவர் நம்மையறியாமல் செலவு செய்வதில்லை ' என்ற நம்பிக்கை மனைவிக்கு இருக்குமாறு கணவன் நடத்தல் வேண்டும். இவ்வாறே கணவனுக்கு இருக்குமாறு மனைவி நடத்தல் வேண்டும். ' நமது வாழ்க்கையில் ஒரு பாதி மனைவி ; ஆதலால் அவள் அறியாது ஒரு சல்லியும் செலவிட நமக்கு உரிமை இல்லை ' என்று கணவன் கருதவேண்டும் ; இவ்வாறு மனைவியும் கருதுதல் வேண்டும். இங்ஙனம் கருதி வாழும் வாழ்க்கையே இன்ப வாழ்க்கை. அவ்விருவரிடமும் மன ஒற்றுமை வளரும் ; இன்பம் பெருகும். வாழ்க்கை இன்பமே மனிதனுக்கு மிகவும் வேண்டப்படுவது.

## படித்த மனைவி

படித்த பெண் செல்வனை மணக்கிருள். அவன் இவளைவிடப் படிப்பில் குறைந்தவன். ஆயினும் இருவர் மனமும்

ஒன்றுபட்டால் இன்பவாழ்வு உண்டு. 'நாம் படித்திருக்கிறோம், இவன் நம்மளவு படியாதவன்' என்று மனைவி நினைப்பின், வாழ்க்கையில் இன்பம் தோன்றாது. 'நம்மிடம் படிப்பு இருக்கிறது - இவரிடம் பணம் இருக்கிறது' என்று எண்ணி மனமொத்து வாழ்க்கை நடத்துதல் வேண்டும். ஒன்றுபட்ட மனம் இருக்குமாயின், அவர் தம் வாழ்வும் இன்ப வாழ்வாகும்.

சில குடும்பங்களில் மனைவி அதிகம் படித்த ஏழையாகவும், கணவன் சிறிது குறைவாகப் படித்த ஏழையாகவும் அமைதல் உண்டு. அந்நிலையிலும் அவர்கள் மனமொத்து வாழ்வதே நல்லது. கேவலம் படிப்பில் ஏற்றத்தாழ்வு, பணத்தில் ஏற்றத்தாழ்வு என்பவற்றைக் கணவனோ மனைவியோ கவனித்தால், அவரிடம் வேற்றுமை உணர்ச்சி உண்டாகுமே தவிர, ஒற்றுமை உணர்ச்சி உண்டாகாது. ஒற்றுமை உணர்ச்சி இல்லையாயின், அவர்தம் வாழ்வு பயனற்றதாகும்.

## இரண்டாம் தாரம்

முதல் மனைவி இருக்கும் பொழுது இரண்டாம் மனைவியை ஒருவன் மணந்து கொண்டான். இரண்டாம் மணம் முதல் மனைவியின் இசைவுபெற்று நடப்பினும் மாறாக நடப்பினும், இரண்டாம் மனைவி முதல் மனைவியைத் தன்வயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்; அவளிடம் அன்புகாட்டுவதன் வாயிலாகக் கணவனது அன்பைப் பெறுதல்வேண்டும்; கணவனிடமும் மிக்க அன்புடன் பழகவேண்டும்.

முதல் மனைவி பிள்ளைகளைவிட்டு இறந்த பின்பு தான் இரண்டாம் மனைவியாகச் சென்றிருந்தால், முதல் மனைவியின் மக்களைத் தன் மக்களாகக் கருதி அன்பு பாராட்டுவது இரண்டாம் மனைவியின் கடமையாகும். அப்பிள்ளைகளது வளர்ப்பில் கணவன் கருத்தில்லாமல் இருப்பினும் தான் மிக்க கவலை கொள்ளவேண்டும்.

**வாழ வந்த பெண்**

குடும்பத்திற்குத் தக்கபடி நடந்துகொண்டு, வரவுக்கேற்ற செலவினைச் செய்து, தன் கணவனையும் அவனைச் சார்ந்தோரையும் மகிழச் செய்தல் கடமையாகும்; தான் புகுந்த இடத்தின் இன்பதுன்பங்கள் தன்னையும் சாரும் என்பதை உளம் கொண்டு, செந்நெறியில் நடத்தல் வேண்டும்.

கணவனோடு மட்டும் குடித்தனம் செய்யும் நிலைமை மனைவிக்கு ஏற்படலாம். அப்பொழுது அவளே இல்லத்தின் அரசியாக விளங்குவாள். அந்நிலையில் அவள் தன் கணவனைத் தன் உயிர் போலப் பாதுகாக்கவேண்டும். அவன் எத்தகைய தீய சூழ்நிலையிலும் அகப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவனை எல்லாத் துறைகளிலும் இன்புறுத்துவதிலே கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும். அவனது குறிப்பறிந்து அவன் விரும்புதலைச் செய்தல் வேண்டும். அவனைப் பல வகையிலும் ஊக்கப்படுத்தி ஏற்ற கணவனாக விளங்கும்படி செய்வித்தல் வேண்டும். அவன் தன்னை மனம், மொழி, மெய்களால் நேசிக்கும்படி செய்வித்தல் வேண்டும். அன்பாலும் அறிவாலும் அவனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஒருத்தியை மணந்துகொண்ட கணவன் தொடக்கத்தில் அவளிடம் குறைகள் இருப்பின், அவற்றை அன்பால் போக்க முயலவேண்டும். கல்வியற்றவளாயின், படிப்படியாக அவளுக்குக் கல்வியறிவை ஊட்டவேண்டும். பொறுமை, அன்பு என்னும் இரண்டையும் கையாண்டு அவளைச் சிறந்த இல்லாளாக்க வேண்டும்; அவள் மனம் மகிழும்படி நடந்து கொள்ளுதல் வேண்டும்; அவளைத் தன் பாதியாக எண்ணிச் சம நிலையை அவளுக்கு வழங்கவேண்டும். சுருங்கக் கூறின், அவள் அறியாத எந்த இரகசியமும் கணவனிடம் இருத்தல் ஆகாது. இன்ப வாழ்க்கைக்குச் சிறந்த அடிப்படை இதுவேயாகும். இந்

நெறி தவறி, கணவன்மார் பலர் மனைவிக்குத் தெரியாமல் பல இடங்களில் கடன் வாங்கியிருப்பர்; மனம்போன போக்கெல்லாம் சென்று ஒழுக்கம் தவறி அல்லல்படுவர். இறுதியில் ஒழுக்கங்கெட்ட இக்கணவன்மாரால் ஒழுக்கம் மிகுந்த மனைவிகள் துன்புறுதலைக் காண்கிறோம். இத்தகைய கேடுகள் நேராமல் குடும்பத்தைக் காத்து வளர்ப்பவனே உயரிய கணவனாவான்.

## குடும்பப் பொறுப்பு

கணவனும் மனைவியும் சேர்ந்ததே குடும்பம். குடும்பப் பொறுப்பு இருவரையும் சார்ந்தது. இந்த உண்மையை இருவரும் நினைந்து, திறந்த உள்ளத்தின ராய்க் குடும்பம் பற்றிய ஒவ்வொரு செய்தியையும் கலந்து ஆலோசித்து நடத்துதல் வேண்டும். அவரவர் குற்றங் களை எடுத்துக் கூறித் திருத்தம் பெறுதல் வேண்டும்; மன ஒற்றுமை இருந்தால் குடும்ப வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக மலரும்.

## படியாத மனைவி

கணவன் படித்தவன்; மனைவி படியாதவள், அல்லது சிறிது படித்தவள். இந்நிலையில் அறிவுள்ள கணவன் தன் மனைவிக்குக் கல்வியறிவை ஊட்ட வேண்டும். தன் குடும்ப நிலைமை, குடும்பக்கணக்குப் பார்த்தல், செய்தித் தாள்களைப் படித்து உலகச் செய்திகளை அறிதல், இல் வாழ்க்கைபற்றிப் பல விவரங்களை அறிதல், சிறந்த தாயாக விளங்குதற்குத் தன்னைத் தயாரித்துக் கொள்ளுதல் முதலிய துறைகளில் அவள் அறிவு பெறத்தக்க முறையில் பயிற்சி அளித்தல் வேண்டும். அவளை மணந்து கொண்ட அன்று முதலே அவள் உடல் என்பதையும், தான் உயிர் என்பதையும் கணவன் மறத்தலாகாது. இங்ஙனம் கருத் தோடு கணவனால் கவனிக்கப்படும் மனைவி விரைவில்

கல்வியறிவைப் பெறுவாள்; கணவனுக்கேற்ற காரிகை யாக விளங்குவாள். அந்நிலையில் அவர்தம் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இலங்கும்.

## மக்களும் மனைவாழ்க்கையும்

மக்களை வளர்த்தல் எளிய செயல் அன்று. பெற்றோர் தம் மக்களைக் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் ஏற்ற நன் மக்களாகும் முறையில் வளர்க்கவேண்டும்; அவர்களுக்கு நல்லொழுக்கம் படியத்தகும் முறையில் பெற்றோர் நடந்து கொள்ளுதல் வேண்டும். வீரம், உண்மை யுடைமை, உழைப்பு, முயற்சி, ஊக்கம் உடைமை முதலிய நற்பண்பு கள் பிள்ளைப் பருவத்திலிருந்தே வளரும்படி செய்வதே பெற்றோர் கடமையாகும். தீய பிள்ளைகளோடு சேரவிட லாகாது; தீய சொற்களைச் சொல்ல விடலாகாது; தீய எண்ணங்கள் மனத்தில் படியாதபடி பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் சிறந்த குறிக்கோளை உணர்த்தி, அக்குறிக்கோளை அடையத்தகும் முறையில் அவர்களைச் செலுத்துதல் பெற்றோரது சிறந்த கடமை யாகும். நல்லார் நட்பு, நாடறிந்த நன்மக்களின் வரலாறு களில் தெளிந்த அறிவு, உயர்ந்த எண்ணங்கள், மனிதப் பண்பு இவையே மக்களை நன்கு வளர்ப்பவை. தம் மக்களிடம் இவை நன்கு வளரப் பாடுபடுதல் பெற்றோரது பெருங்கடமையாகும்.

இங்ஙனம் நன்முறையில் வளர்க்கப்படும் நன்மக்க ளால் சமுதாயம் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அறிவு வளர்ச்சியையும் அடையும். சமுதாயம் இவர்களால் சீர் படுமாயின், ஒவ்வோர் இல்லமும் இன்பந்தரும் இனிய வீடாக மாறும். அந்நிலையில் மனித வாழ்க்கை மாண் புடையதாகுமன்றோ?

**முடிவுரை**

"காதலர் இருவர் கருத்து ஒருமித்து வாழ்தலே இன்பம்" என்பது பெரியோர் வாக்கு. இருவர் கருத்தும் ஒருமித்தலுக்கு ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்; இருவரிடத்தும் உண்மை அன்பு வேண்டும்; களங்கமற்ற காதல் தேவை; இல்வாழ்க்கைக்கு ஏற்ற பிற எல்லா நலங்களும் தேவை. இவை இன்னவை என்று மேலே விரித்துக் கூறப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் கவனித்து ஒழுகும் கணவனும் மனைவியும் இன்பவாழ்வில் திளைப்பர் என்பது திண்ணம்.